யார் இந்த ஷீஆக்கள்?

M.B.M. **இஸ்மாயில் (மதனி)** M.A.(cey)
Dip.in. psycho social intervention (ippsw-s)

வெளியீடு:

அஸ்ஸபா சமூக நலன்புரிச் சங்கம்,
ஹெம்மாதகம - இலங்கை.

புத்தக விபரத்தொகுப்பு...

பெயர்: யார் இந்த ஷீஆக்கள்?// ஆசிரியர்:M.B.M.இஸ்மாயில் (மதனி) M.A.(cey)// மொழி: தமிழ்// முதல் பதிப்பு: 2014. // 8ஆம் பதிப்பு: 2017// பதிப்புரிமை: ஆசிரியருக்கு // பிரதிகள்:1000 // பக்கங்கள்: 226 // வெளியீடு: அஸ்ஸபா சமூக நலன்புரிச் சங்கம், ஹெம்மாதகம – இலங்கை.

விலை: 250/=

ISBN: 978-955-51897-7-4 **Bar Code:** 9 789555 189774

ALL CEYLON JAMIYYATHUL ULAMA

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் பொதுச் செயலாளர் அஷ்ஷைக் எம்.எம். அஹ்மத் முபாறக் வழங்கிய மதிப்புரை.

ஈரான் நாட்டு புரட்சித் தலைவர் ஆயதுல்லாஹ் கொமேனியின் இஸ்லாமியப் புரட்சி என்ற பேரில் கிளம்பிய புயல் மிகவும் தீவிரமாக அமைந்துவிட்டது. அதன் தாக்கம் உலகின் எல்லா சந்து பொந்துகளிலும் நுழைந்துவிட்டது. இஸ்லாமியப் புரட்சி என்ற பெயரில் வெளிப்பட்ட அது ஒரு பெரும் புற்றுநோய் என்பது அப்போது புரியப்படவில்லை. 1978 களில் ஈரானில் நிகழ்ந்த புரட்சி இஸ்லாமியப் புரட்சி என்ற பேரில் வாலிபர்களையும் பாமரர்களையும் நன்கு கவர்ந்துவிட்டது. அதன் பேராக அதனை ஆதரிப்போர் பெருகிவிட்டனர். முஸ்லிம்களது ஒற்றுமையே பெரிய பலம் என்ற கோஷத்தின் தொடராக ஒற்றுமை வாரம் என்று ஒன்று பிரகடனப்படுத்தப்பட்டது. அம்மாநாடு நடைபெற்ற நாளன்றே ஷீஆயிஸத்தின் நச்சு மரம் நடப்பட்டது.

இலங்கையை பசுந்தரையாகக் கண்ட ஷீஆக்கள் மிகவும் கச்சிதமாக தம் வேலையை மேற்கொண்டனர். முதலில் அரபு நாடுகளின் தலைவர்களை வசைபாடினர். அடுத்து மாநாடுகளுக்கு ஆளனுப்பினர். உலமாக்கள், அரசியல்வாதிகள், பத்திரிகையாளர்கள் என்று பலரையும் அனுப்பி மக்கள் மனங்களிலே இடம் பிடித்தனர். பத்திரிகைகள் வாயிலாகப் போட்டிகள், பாத்திமா நாயகி

தினம்,குத்ஸ் தினம், முஹர்ரம் தினம் என்பவற்றோடு, ஹஜ்ஜுக்காக சிலர் அனுப்பப்பட்டனர். இவ்வாறே இந்த பசுந்தரையை செப்பனிட்டனர்.

உலக ஒற்றுமை நிறுவனத்தின் இலங்கைக் கிளையின் ஏற்பாட்டில், 1982ம் ஆண்டு நடைபெற்ற ஒற்றுமை வாரம் Unity Week) என்ற மாநாடு விசேஷமாக அமைந்தது. இம்மாநாட்டில் செய்யப்பட்ட தீர்மானங்களில் பிரதானமானது, இன்று வழக்கில் உள்ள ஸுன்னீ மத்ஹபுகள் நான்குடன் ஜ:.பரீ, ஸைதீ ஆகிய இரண்டு மத்ஹபுகளையும் இணைத்து ஆறாக அங்கீகரிக்க வேண்டும் என்பதாகும்.

இலங்கைக்கு இஸ்லாம் வந்தது முதல் இங்கு அஹ்லுஸ்ஸுன்னத் மக்களே வாழ்ந்து வருகின்றனர். எனவே ஷீஆக் கொள்கை புதிதாக இங்கு உள்நுழையத் தேவையில்லை என்று அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா முடிவெடுத்து பகிரங்கப்படுத்தியது. ஷீஆ மத்ஹபுகளில் காணப்படும் அகீதா சம்பந்தமான அடிப்படை முரண்பாடுகளை மாற்றிக் கொள்ளாதவரை அஹ்லுஸ்ஸுன்னாவும் ஷீஆவும் இணைய முடியாதென அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா அறிக்கை வெளியிட்டது. அந்நேரம், ஏன் ஷீஆக்களை பிரிக்க வேண்டும்? எங்கள் நாட்டில் அவர்கள் இல்லை தானே?என்றெல்லாம் சிலர் கூறினர். முஸ்லிம் உலகில் மலரப்போகும் ஒற்றுமையைக் கெடுக்கின்றனர் எனவும் குற்றம்சாட்டினர்.

புற்றுநோய்க்கு பலவிதமான பரிகாரங்கள் மேற்கொள்ளப்படுவது போல் பலரும் ஷீஆக்கள் பற்றி பல புத்தகங்களை எழுதினர். 1982ல் மௌலவி ஏ.ஆர்.எம் ரூஹுல்ஹக் அவர்கள் இஹ்ஸான்

இலாஹி ழுஹீர் என்பவரது ‘‘ஷீஆவும் ஸுன்னாவும்’’ என்ற நூலை தமிழில் மொழிபெயர்த்தார். அது பலமுறை பதிப்பிக்கப்பட்டு இன்றும் சந்தையில் உள்ளது.

இறுதி நபித்துவத்தை மறுக்கும் காதியானிகளை அடையாளம் கண்டு முஸ்லிம்கள் ஒதுக்கியதால் தம்மைப் பாதுகாத்து கொண்டனர். இருப்பினும் அவர்களது புனித பூமி ரப்வாவுக்கு சில வாலிபர்கள் புலமைப் பரிசில் பெற்று சென்றனர். பஹாயிஸமும் அவ்வாறே இங்கு முஸ்லிம்களிடம் இடம் பிடிக்காவிட்டாலும் சிலர் அவர்களோடு சேர்வதில் ஆர்வம் காட்டினர். ஆனால் ஷீஆக்களின் ஊடுருவல் யஹூதிகளையும் மிஞ்சிவிட்டது. தம் தீய வழியை யாரும் புரிந்து கொள்ளா வண்ணம் ஈமானில் தெளிவில்லாத மக்களை நோக்கிச் செல்கின்றது. ஷீஆக்கள் பாடசாலைகளில் ஹிஜாப் விநியோகம் செய்தனர். நம்நாட்டு மக்கள் பண்டுதொட்டு ஹஸன், ஹுஸைன், பாத்திமா (ரழி) மீதுகொண்டுள்ள அன்பை அதிகரிக்கச் செய்யும் வேலைகளில் ஈடுபட்டனர். ஷீஆக் கொள்கை என்றொன்று பற்றி எந்த அவதானமும் இன்றி வீரமிக்க முஸ்லிம்கள் அவர்களே என்ற எண்ணத்தை மக்கள் மனதில் ஊட்டினர்.பல்வேறு கூட்டங்களில் நாரே தக்பீர் அல்லாஹு அக்பர் கொமைனி றஹ்பர் என்றும் லா ஷர்க்கிய்யா, லா கர்பிய்யா, கிழக்கும் வேண்டாம் மேற்கும் வேண்டாம் என்று சப்தமிடுவதை வாலிபர்கள் மிகவும் விரும்பினர். ஷீஆக்கள் நம்நாட்டில் நுழைந்த வாயில்களில் இதுவும் ஒன்றாகும்.

நல்லெண்ணம் கொண்டோரது உள்ளங்களில் இடம்பிடித்த ஷீஆக்கள் நாட்டில் பல பாகங்கங்களிலும் தம் கொள்கையை நிலைநாட்டிக்கொண்டனர். அரபுக் கல்லூரிகளுக்கு உதவி

செய்வதென்ற பேரில் அரபுக் கல்லூரிகளை நிறுவி இறுதியாக பல்கலைக்கழகமொன்றையே நிறுவியுள்ளனர்.

இந்த நாட்டிலே உள்ள முஸ்லிம்கள் அஹ்லுஸ் ஸுன்னாவினரே. இப்படியிருக்கையில் ஸஹாபாக்களை தூற்றவும் குர்ஆனிலே குறை காணவும், கலீபாக்களை மோசமாக விமர்சிக்கவும் செய்பவன் இஸ்லாத்தை விட்டும் தூரமானவனாவான் என்ற நிலையில், அந்த ஷீஆக் கொள்கையை நம் நாட்டில் பரப்புவதற்கான அவசியம் என்ன? காதியானிகளை, அவர்கள் இறுதி நபித்துவத்தை மறுப்பதன் காரணமாக காபிர்கள் என்று சர்வதேசமே தீர்ப்பு வழங்கியுள்ளதை இங்கு நாம் நினைவிற் கொள்ள வேண்டும்.

இந்த வகையில் தான் அஷ்-ஷைக் இஸ்மாயீல் ஸலாமி மதனி தொகுத்துள்ள "யார் இந்த ஷீஆக்கள்" என்ற நூல் வெளிவருகிறது. இதில் அவர் ஷீஆக்களின் வரலாற்றோடு அவர்களின் கொள்கைகளை தோலுரித்துக் காட்டியுள்ளார். சிறு பிள்ளைகளுக்கும் விளங்கும் "ஷீஆயிஸம்" எனும் கொள்கையை பிரபல உலமாக்களும் படித்தோரும் விளங்காதிருப்பது ஏனோ? இன்னும் விளங்காதிருப்போர் இந்த நூலின் மூலமாயினும் தெளிவு பெற பிரார்த்திக்கின்றேன். எமது அகீதாவுக்கு பெரும் சவாலான ஷீஆக் கொள்கை சமூகத்திலிருந்து ஒழிக்கப்பட வேண்டும்.

23.02.2012ஈரான் தூதுவரைஅகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் தூதுக்குழு சந்தித்த போது பின்வரும் செய்தியை அவருக்குத் தெரிவித்தது. அதாவது, "இந்த நாட்டு முஸ்லிம்கள் அனைவரும் அஹ்லுஸ் ஸுன்னாவைச் சேர்ந்தவர்கள். எனவே இந்தநாட்டில் ஷீஆக் கொள்கை பரவுவதை நாம்

அங்கீகரிக்கமாட்டோம். உங்கள் நாடு எமது நாட்டுக்கு செய்யும் உதவிகளை பாராட்டும் அதே நேரம் மார்க்க விடயங்களில் ஷீஆக்களின் ஊடுருவலை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது” என தூதுக்குழு தெளிவாக கூறியது. தூதுவரும் இதனை ஏற்றுக்கொண்டது போல் பேசினார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந் நூலாசிரியர் மிகவும் சிரமத்தோடு ஆதாரபூர்வமாக எழுதியுள்ள இந்த நூலை வாசித்து சகலரும் பயன்பெற துஆச் செய்கின்றேன். ரஸுல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் குடும்பத்தவரையும் ஸஹாபாக்களையும் அன்பு வைப்போராகவும் அவர்கள் மத்தியில் வேறுபாடு காட்டி நடக்காதிருக்கவும் எல்லாம் வல்ல அல்லாஹ் நல்லருள் புரிவானாக. இன்னும் பல நூல்களை எழுத இவ்வாசிரியருக்கு தவ்பீக். செய்வானாக.

வஸ்ஸலாம்.

அஷ்-ஷைக் எம்.எம். அஹ்மத் முபாறக்
பொதுச் செயலாளர்
அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா

அணிந்துரை.

A.L. பீர் முஹம்மத் (காஸிமி) B.A. Hons (cey), M.A (India)
கலாச்சார உத்தியோகத்தர்.
பிரதேச செயலகம் ஓட்டமாவடி,
பொதுத்தலைவர்:
ஜம்மிய்யதுத் த∴வதில் இஸ்லாமிய்யா-கல்குடா.

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்.

ஸலாவாத்தும் ஸலாமும் அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் மீதும், அவரைப் பின்பற்றியோர், பின்பற்றுவோர் அனைவர் மீதும் உண்டாவதாக.

தாருஸ்ஸலாம் கலாபீடத்தின் அதிபர்M.B.M. இஸ்மாயில் (மதனி) அவர்களின் "யார் இந்த ஷீஆக்கள்? " என்ற நூலுக்கு எனது அணிந்துரையை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஷீஆ மதம் தொடர்பாக இதுவரை முழுமையானதொரு நூல் தமிழ் மொழியில் வெளிவரவில்லை என்ற குறைபாடு நீண்டகாலமாக தமிழ் பேசும் உலகில் இருந்து வந்தது. அக்குறைபாட்டை இந்நூல் நிவர்த்திசெய்யும் என்ற முழு நம்பிக்கை எனக்குண்டு.

ஷீஆஇஸம் இலங்கையில் அண்மைக்காலமாக துளிர்விட்டு வருவதை யாரும் மறுக்க முடியாது. இஸ்லாத்திற்கு விரோதமான இந்த யூதக் கொள்கையை இஸ்லாம் என்ற பெயரில் பரப்புவதில் இவர்கள் ஓரளவுக்கு வெற்றி கண்டுள்ளனர். ஷீஆ இஸத்தின் இலங்கைக்கான ஆணி வேர் எமது ஊரிலேயே ஊன்றியுள்ளது என்பதை மன வேதனையுடன் கூறுவதைத்தவிர வேறுவழியில்லை. அவர்களது தகிய்யா நடிப்பில் மயங்கிப்போன இவ்வூர்த் தலைவர்களும் அற்ப பணத்துக்கு விலைபோன சில

உல(க)மாக்களும்தான் இப்பிரதேசத்தில் ஷீஆ விச மரம் வேரூன்றக் காரணமானவர்கள். அன்று எவ்வளவோ நாம் அடித்துச் சொல்லியும் ஷீஆவுக்கெதிரான எமது போராட்டங்களுக்கு போதிய ஒத்துழைப்பை இவ்வூரின் உத்தமர்கள் வழங்கவில்லை. இதனால் இன்று தலையில் கை வைத்துக்கொண்டு புலம்பிக்கொண்டிருக்கிறார்கள்.

இத்தகைய சூழ்நிலையில் ஷீஆ இஸம் குறித்த முழுத் தகவல்களையும் மக்களிடம் சென்றடையச் செய்து அவர்களை இந்நாசகாரக் கொள்கையிலிருந்து காப்பாற்றுவது கற்றறிந்த உலமாக்களின் கடமையாகும். இப்பணியை நிறைவு செய்த M.B.M. இஸ்மாயில் (மதனி) அவர்களுக்கு எனது உளம் நிறைந்த பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மௌலவி அவர்கள் இத்துறையில் நிபுணத்துவம் உடையவர் மட்டுமன்றி ஷீஆ இஸம் தொடர்பில் நடைபெற்ற தேசிய, சர்வதேச கருத்தரங்குகளில் கலந்துகொண்ட அனுபவமும் உடையவர் இத்தகைய ஒருவரின் மூலம் இந்நூல் வெளிவந்திருப்பது இரட்டிப்பு மகிழ்ச்சியை அளிக்கின்றது.

இஸ்மாயில் (மதனி) அவர்களின் ஆக்கப்பணி மேலும் தொடரவும் மேலும் பல இத்தகைய பெறுமதி வாய்ந்த நூல்களை இஸ்லாமிய உலகுக்கு வழங்கவும் பிரார்த்திக்கின்றேன்.

வாழ்த்துரை. 01

எம்.டி.எம். றிஸ்வி (மஜீதி)
BA (Hons), MA, MPhil, PGDE
விரிவுரையாளர். இஸ்லாமிய கற்கைகள் துறை,
கிழக்குப் பல்கலைக் கழகம்.

அல்லாஹ்வின் பெயர்கூறி அவன் புகழ் சொல்லி, நபி (ஸல்) அவர்கள் மீதும் அவர்களது குடும்பத்தவர்கள், தோழர்கள் மீதும் ஸலவாத்தும் ஸலாமும் கூறுகிறேன்.

காலத்துக்குக் காலம் முஸ்லிம் சமூகத்திற்குள் வழிகெட்ட கொள்கைகள் ஊடுருவுவது போல் அண்மைக் காலமாக இலங்கையிலும் 'ராபிழா' எனும் ஈரானிய ஷீஆக்கள் எழுச்சி பெற்று வருகின்ற அபாயத்தை காணமுடிகிறது. இன்று ஈரானுக்கும் இலங்கைக்குமிடையில் ஏற்பட்டிருக்கின்ற அரசியல் ரீதியான நெருக்கத்தைச் சாதகமாகப் பயன்படுத்தி ஷீஆக்கள், பல்வேறு பொதுப் பணிகள் ஊடாக மிக நுட்பமாக தமது வழிகெட்ட கொள்கைகளை முஸ்லிம்களிடையே விதைத்து அவர்களை வழிகெடுக்க முயற்சித்து வருவதை எவரும் கண்டுகொள்ளாமல் இருக்க முடியாது.

மீலாத் போட்டி நிகழ்ச்சிகள், ஷீஆக்களுக்குரிய விழாக்களில் பங்கேற்க வைத்தல், ஹஜ் உம்ரா கருத்தரங்குகள், ஈரானுக்கான புலமைப் பரிசில்கள் வழங்குதல், மஸ்ஜித், மத்ரஸாக்களுக்கு உதவி செய்தல், ரமழான் கால காரிமார்களின் வருகை, ஈரானிய திரைப்பட விழாக்கள், தனியார் கல்வி நிறுவனங்கள், மற்றும் தூது போன்ற சஞ்சிகைகள் என பல்வேறு அணுகுமுறைகள் ஊடாக தமது சிந்தனைகளை சமூக மயப்படுத்த இவர்கள் எடுக்கும் முயற்சியில் ஷீஆக்கள் குறித்து தெளிவில்லாத

அப்பாவி பொதுமக்களும், பழுத்த சில புத்திஜீவிகளும், ஊடகவியலாளர்களும், இஸ்லாமிய அகீதா பற்றிய போதிய தெளிவற்ற உலமாக்களும்கூட இந்த ஷீஆக்களின் வலையில் சிக்கிவிடுகின்றனர்.

இத்தகைய அபாயத்திலிருந்து முஸ்லிம் சமூகத்தை பாதுகாக்க வேண்டிய பொறுப்புணர்வோடு எம்.பி.எம். இஸ்மாயில் (மதனி) அவர்கள் எடுத்துள்ள இம்முயற்சி சாதாரணமானதன்று.

ஷீஆக்களின் வழிகெட்ட கொள்கைகள் பற்றிய பல்வேறு நூல்களை எழுதியுள்ள இவர், இந்த நூலில் ''ஷீஆக்களை'' யார் இவர்கள், இவர்களது கொள்கைகள் யாவை, எந்த வகையில் இஸ்லாமிய ஷரீஆவின் வரம்புகளை மீறி வழி கெட்டுச் செல்கின்றார்கள் என்பவற்றை மிகத் தெளிவாக வெளிச்சத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

தெளிவான அகீதாவில் வாழ்ந்து மரணிக்க விரும்பும் ஒவ்வொரு முஸ்லிமும், வாசிக்க வேண்டிய ஒரு நூலாக இதனை நான் பார்க்கின்றேன். வாழ்த்துகிறேன். அல்லாஹ் இவரது அறிவையும், மார்க்க விளக்கத்தையும் அதிகரிக்கச் செய்வானாக என பிரார்த்திக்கின்றேன்.

நேர்வழி எம்மை சுவனம் சேர்க்கும்,
வழிகேடு நரகில் சேர்க்கும்.

வாழ்த்துரை. 03

SHM. இஸ்மாயில் (ஸலபி) B.A. Hons. (cey)
ஆசிரியர்,
'உண்மை உதயம்' மாத இதழ்,
தலைமையகம், பரகஹதெனிய - வேஉட, இலங்கை.

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் ஆரம்பிக்கின்றேன்.

ஸலவாத்தும் ஸலாமும் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும் அவர்களது உற்றார், உறவினர், உத்தம தோழர்கள் அனைவர் மீதும் என்றென்றும் நின்று நிலவட்டுமாக!

நபி (ஸல்) அவர்கள் போதித்த சத்திய மார்க்கத்திற்குள் சதி வலை விரித்து நுழைந்த கொள்கை வெறியர்களே ஷீஆக்களாவார்கள். அஹ்லுஸ்ஸுன்னாவினர்க்கு நேர் எதிரான இவர்கள், அலி (ரழி) அவர்கள் மீதான நேசம், அஹ்லுல் பைத் மீதான நேசம் என்ற வேசத்தை அணிந்து முஸ்லிம் சமூகத்திற்கும் நாசம் விளைவித்து வந்தனர்.

அண்மைக்காலமாக உலக நாடுகளிலெல்லாம் இந்த ஷீஆக்களின் ஊடுறுவல் பரவலாக முடுக்கிவிடப்பட்டுள்ளது. இலங்கையும் இதற்கு விதிவிலக்கன்று.

ஷீஆக்களின் கொள்கைகளைத் தெளிவுபடுத்தும் பல நூற்கள் தமிழ் மொழியிலும் வந்து கொண்டிருக்கின்றன. அத்துடன் இலங்கையிலிருந்து பல மாணவ மாணவியர்கள் உயர் கல்விப் புலமைப் பரிசில் பெற்று ஈரான் செல்கின்றனர். அவர்கள் ஷீஆக்களால் மூளைச் சலவை செய்தே அனுப்பப்படுகின்றனர். இவ்வாறே பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள்,

ஊடகவியலாளர்கள் போன்றவர்களைத் தமது வலையில் வீழ்த்தக் கூடிய செயற்றிட்டங்களை வகுத்து ஷீஆக்கள் இயங்கி வருகின்றனர்.

எனவே, ஷீஆக்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது காலத்தின் கட்டாயமாகும். இந்த வகையில் இந்நூல் ஷீஆக்களின் வழிகேடுகள் பற்றி விரிவாகப் பேசுகின்றது. ஷீஆக்கள் பற்றி விரிவாக அறிந்து கொள்ள ஆசைப்படுபவர்களுக்கு இந்நூல் பெரிதும் உதவலாம்.

இந்நூலைத் தொகுத்த அஷ்ஷெய்க் இஸ்மாயில் ஸலாமி அவர்கள் ஷீஆக்கள் பற்றி ஏற்கனவே இரு நூற்களை வெளியிட்டுள்ளார்.

ஒரு மனிதன் சந்திக்கும் சவால்கள்தான் அவனை ஒரு துறையில் உந்தித் தள்ளுகின்றது. அஷ்ஷெய்க் இஸ்மாயில் ஸலாமியின் ஊரில் ஷீஆக்கள் பலமாகக் காலூன்றியுள்ளனர். அங்கு அவர்களுக்கு ஒரு மத்ரஸாவும் உள்ளது. அவர்களது தீய பிரச்சாரமே இவரை ஷீஆக்கள் பற்றிய ஆய்வின் பக்கம் உந்தித் தள்ளியிருக்கின்றது.

இந்தப் பகுதியில் ஷீஆக்களுக்கு எதிராக பிரச்சாரத்தை ஆரம்பித்த போது மக்கள் எம்மைத்தான் எதிர்த்தார்கள். இப்போது ஷீஆக்கள் ஆழமாக வேர்விட்டு, கிளைவிட்டு வளர்ந்துவிட்டனர்.

இப்போதாவது ஷீஆ இனத்தின் கோர முகத்தை அறிந்து அதற்கு எதிரான பிரச்சாரத்தை முன்னெடுக்காவிட்டால் பாகிஸ்தான், ஈராக் போன்ற பகுதிகளில் ஷீஆ, சுன்னி மோதல் ஏற்படுவதைப் போன்று இலங்கையிலும் எதிர்காலத்தில் நடக்கலாம். நஊது பில்லாஹி மின்ஹா ஷீஆக்கள் எவ்வளவு கொடியவர்கள் என்பதை ஷீஆக்களின் கொடூரங்கள் உணர்த்தி வருகின்றன.

எனவே, ஷீஆக்களின் கோர முகத்தை மக்கள் புரிந்து கொள்ள இது நல்ல சந்தர்ப்பமாகும். இந்த சந்தர்ப்பத்தில் இது போன்ற நூற்கள் வெளிவருவது, சத்தியம் தெளிவுபடுத்தப்பட பெரிதும் உதவியாக அமையும். அஷ்ஷெய்க் இஸ்மாயில் ஸலாமி அவர்கள் மூலம் இது போன்ற இன்னும் பல நூற்கள் வெளிவர அல்லாஹ்வைப் பிரார்த்திக்கின்றேன்.

இவண்,
அஷ்ஷெய்க் இஸ்மாயில் (ஸலபி)
ஆசிரியர் – 'உண்மை உதயம்' இஸ்லாமிய மாத இதழ்.
20.08.2013

பதிப்புரை.

அல்லாஹ்வின் பெயரால் ஆரம்பிக்கின்றேன், ஸலவாத்தும் ஸலாமும் நபி (ஸல்) அவர்கள் மீதும் அவரைப்பின்பற்றிய ஸஹாபாக்கள், தாபிஈன்கள், மறுமை வரை அவரை பின்பற்றுவோர் அனைவர் மீதும் உண்டாவதாக.

இஸ்லாம் என்ற போர்வையில் இஸ்லாத்திற்கு எதிராக செயற்படும் இயக்கங்களில் இன்று உலகலவில் முஸ்லிம்களுக்கு மிகப்பெரும் பாதிப்புக்களையும் அழிவுகளையும் ஏற்படுத்திய ஒரு கூட்டமாகவே ஷீஆக்கள் காணப்படுகின்றனர்.

முஸ்லிம்கள் மத்தியில் மத்தியில் இவர்கள் சுன்னத் வல் ஜமாஅத்தை சேர்ந்தவர்கள் என இணங்காட்டிக்கொண்டு, நேர்வழி வந்த கலீபாக்களை, ஸஹாபாப்பெருமக்களை இழிவபடுத்துகின்றனர். விசுவாசிகளின் தாய்மார்களை அவமானப்படுத்துகின்றனர். முஸ்லிம்கள் அனைவரையும் அவமதிப்பதுடன் அவர்களுக்கு எதிராகப் போர்தொடுக்கின்றனர். இவை அத்தனையும் செய்துவிட்டு தங்களை முஸ்லிம்கள் என்று அழைத்துக் கொள்கின்றனர், மற்றவர்கள் தங்களின் கொள்கைகளையும் உண்மை முகத்தையும் தெரிந்துகொள்ளாத விதத்தில் இடத்திற்கு ஏற்ப நடித்து வாழ்கின்றனர்.

எனவே, இவர்களின் இம்மார்க்க விரோதச் செயற்பாடுகளை முஸ்லிம்கள் மத்தியில் தெளிவுபடுத்த வேண்டியது ஒவ்வொரு முஸ்லிமின் மீதுள்ள கடமையாகும்.

இந்த வகையில் எமது ஹெம்மாதகம அஸ்ஸபா சமூக நலன்புரிச் சங்கம் மேற்கொண்டுவரும் முயற்சிகளில் ஒன்றாக அஷ்-ஷெய்க் M.B.M. இஸ்மாயில் (மதனி) M.A அவர்கள் எழுதி வெளியிட்ட “யாரிந்த ஷீஆக்கள்?” என்ற நூலை மறுபிரசுரம் செய்ய தீர்மானித்துள்ளோம். அல்ஹம்துலில்லாஹ்.

எளிய நடையில் அனைவருக்கும் விளங்கும் விதத்தில் தொகுக்கப்பட்டிருக்கும் இந்நூல் அனைவருக்கும் பிரயோசனமாக இருக்கும் என்பதில் எந்தவிதமான ஐயமுமில்லை. எனவே, வாசகர்கள் இதை வாசிப்பதனூடாக ஷீஆக்களின் உண்மை முகத்தைத் தெரிந்துகொள்வதோடு, அவர்களின் நாடகங்கள், இஸ்லாத்திற்கும் அவர்களுக்கும் இடையில் உள்ள தொடர்பு என்பவற்றை தெளிவாக அறிந்துகொள்ள முடியும் என நம்புகின்றேன்.

எனவே, இந்நூலை வாசிக்கும் நீங்கள் இதன் மூலம் முழுமையான பயனைப் பெறுவதுடன், மற்றவர்களுக்கும் அதை எற்றி வைக்குமாறு வேண்டுகின்றேன்.

எல்லாப்புகழும் அல்லாஹ் ஒருவனுக்கே
அல்ஹம்துலில்லாஹ்.

ஆ.ஞு.ஆ. றிஸ்மி ஜுனைத்,
அஸ்ஸபா சமூக நலன்புரிச் சங்கம்.
ஹெம்மாதகம, இலங்கை.
06.05.2017

முன்னுரை.

அளவற்ற அருளாளன் நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் திருப்பெயரால்.
அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் எமது தலைவர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களது உத்தமத் தோழர்கள், குடும்பத்தார், உலகம் அழியும் வரை இந்த சமுதாயத்தில் வாழும் அத்தனை இறை விசுவாசிகள் மீதும் உண்டாவதாக. ஆமீன்.

அல்லாஹ் அருள்மறை அல்-குர்ஆனிலே: “நன்மையை ஏவுகின்ற தீமையைத் தடுக்கின்ற ஒரு கூட்டம் உங்களில் இருக்கட்டும் அவர்கள்தான் வெற்றியாளர்கள்” என்று குறிப்பிடுகிறான்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “நிச்சயமாக மார்க்கத்தைக் கற்றறிந்தவர்கள் நபிமார்களின் வாரிசுகளவர், நிச்சயமாக நபிமார்கள் தீனாரையோ, திர்ஹத்தையோ அனந்தரச் சொத்தாக விட்டுச் செல்லவில்லை அவர்கள் விட்டுச்சென்றதெல்லாம் அறிவைத்தான்.” (புஹாரி)

வேறொரு ஹதீஸிலே: “நிச்சயமாக இஸ்லாம் அறிமுகமில்லாத நிலையிலேயே தோற்றம் பெற்றது. அதே நிலைக்கு அது மீண்டும் வரும். அந்தநேரத்தில் மனிதர்கள் எதில் சீர்கெட்டுள்ளார்களோ அதைச் சீர்படுத்துகின்ற அறிமுகமற்ற மனிதர்களுக்கு இறைவனின் சுபசோபனம் உண்டாவதாக” என்று கூறினார்கள். (திர்மிதி)

இந்த வகையிலே இஸ்லாமியப் பிரச்சாரம் காலத்தின் தேவையாக மாறியிருக்கின்றது நன்மையை ஏவுகின்ற தீமையைத்தடுக்கின்ற அதேவேளை, திரைமறைவில் இந்த சமுதாயத்தை வழிகெடுக்க நினைப்பவர்களையும் அதற்காக பாடுபடுபவர்களையும் இனங்காட்டுவது இன்றியமையாததாகும். ஏனெனில், இஸ்லாத்தின் எதிரிகள் எப்போதும் வெளியிலிருந்துதான் எம்மைத்தாக்குவர் என்று நாம் எதிர்பார்க்க முடியாது.

“ஒரு மனிதர் தொழுகிறார், நோன்பு வைக்கிறார், இ∴திகாப் இருக்கிறார், இன்னொரு மனிதர் இஸ்லாத்திற்கு முரணான கூட்டங்களைப் பற்றிப் பேசுகிறார், இவர்கள் இருவரிலும் உங்களுக்கு மிகவும் விருப்பமானவர் யார்? ” என்று இமாம் அஹ்மதுப்னு ஹம்பல் (ரஹ்) அவர்களிடம் கேட்க்கப்பட்டது. அதற்கு இமாமவர்கள்: “தொழுகையும், நோன்பு நோற்பதும் அவருக்குரியது, ஆனால், வழிதவறிய அந்தக் குழுக்களைப் பற்றிப் பேசுவது ஏனைய முஸ்லிம்களுக்குரியது. எனவே, இதுவே மிகவும் சிறந்ததாகும்.”

இந்த அடிப்படையில் ஷீஆக்கள் பற்றியும், அவர்களின் கொள்கைகள் பற்றியும் எமது சமுதாயத்திற்கு தெளிவுபடுத்துவது காலத்தின் தேவையாகும். அவர்கள் முஸ்லிம்களாக நடித்து முஸ்லிம்களுக்குள் இருந்துகொண்டு அவர்களின் கொள்கைப் பிடிப்பை சிதைப்பதையும், முஸ்லிம்களின் எதிரிகளின் இலட்சியங்-களை அடைந்துகொள்வதற்கு உதவுவதையுமே இலக்காகக் கொண்டு செயற்படுகின்றனர். விசயத்தின் பாரதூரம் தெரியாத சில அப்பாவி மக்களும் படித்தவர்களும்கூட இந்த வலைக்குள் வீழ்ந்து கிடக்கின்றனர்.

வழி தவறிய எந்தவொரு கொள்கையாக இருப்பினும் அவர்கள் தங்களின் கொள்கைக்கு ஆதாரமாக அல்குர்ஆனின் ஏதாவதொரு வசனத்தையோ அல்லது ஒரு ஹதீஸையோ சொல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். ஷீஆக்களும் இந்த வழிமுறைையக கையாளுகின்றனர். இதனால் அவர்களின் கொள்கைகள் பற்றி தெளிவுபடுத்த வேண்டியது அவசியமாகும்.

ஷீஆக்களின் கொள்கைகள் பற்றி முழுமையாக இந்த நூலில் எழுதப்படவில்லை என்றாலும், அவர்களின் பிரதானமான கொள்கைகள் பற்றி முடிந்தவரை விரிவாக அவர்களின் நூல்களிலிருந்து ஆதாரங்களைக் குறிப்பிட்டு எழுதியுள்ளேன். இந்த நூலை நான் எழுதும்போது இலங்கையில் உள்ள ஷீஆக்களிடமும் இந்த நம்பிக்கைகள் இருக்கின்றனவா என்றதொரு

கேள்வி எனக்குள் எழுந்தது இதனால், இலங்கையில் ஷீஆக்களால் வெளியிடப்பட்டிருக்கும் நூல்களை வாசிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆரம்பகாலங்களில் ஷீஆக்களால் எழுதப்பட்ட நூல்களைவிட, தற்காலத்தில் எழுதப்படும் நூல்களில் அவர்களின் கொள்கைகளை ஓரளவு தெளிவாகக் குறிப்பிடுகின்றனர். 2013.02ஆம் மாதமளவில் இலங்கையைச் சேர்ந்த ஒரு ஷீஆ அறிஞரின் 27சொற்பொழிவுகளை உள்ளடக்கிய ஓர் இறுவட்டு எனக்குக் கிடைத்தது. அதை நான் செவியுற்றபோது ஆச்சரியமாக இருந்தது காரணம், ஷீஆக்களின் பிரதானமான நூல்களில் வரும் செய்திகளை அவர் குறிப்பிட்டு, ஷீஆக்களின் கொள்கைகளை பகிரங்கமாக பிரச்சாரம் செய்வதைக் கண்டேன். இந்த நூல்அவருக்கும் அவரைப் போன்ற சகோதரர்களுக்கும், ஏனைய முஸ்லிம்களுக்கும் தங்களின் தூய கொள்கையைப் பாதுகாப்பதற்குரிய ஒரு சாதனமாக இருக்கவேண்டும் என்பதே எனது நோக்கமாகும். அல்லாஹ் இம்முயற்சியைப் பொருந்திக்கொள்வானாக. ஆமீன்.

2008ம் ஆண்டிலிருந்தே இவ்வாறானதொரு நூலை எழுதவேண்டும் என்ற ஆசை இருந்தபோதிலும், வேலைப்பழு காரணமாக தாமதமாகிக்கொண்டே இருந்தது. என்றாலும் இக்காலப்பகுதியில் இதை எழுதி முடிப்பதற்கு துணை செய்த அல்லாஹ்வுக்கு முதலில் நன்றி செலுத்துகின்றேன். அடுத்ததாக இந்நூலை அச்சிட்டு வெளியிடுகின்ற இலங்கை,

இந்நூலைத் திருத்தி ஆக்கப்படுத்தியோர், அனைவருக்கும் அல்லாஹ் அருள் புரிவானாக. இறுதியாக இந்த நூலை வாசிக்கும் உங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டு இதில் ஏதாவது தவறுகளிருப்பின் தயவுசெய்து அதைச் சுட்டிக்காட்டுங்கள் என வேண்டி விடைபெறுகின்றேன்.

அல்லாஹ் நமது பணிகளை அங்கீகரித்து அருள்புரிவானாக.

MBM. இஸ்மாயில் (மதனி)
அதிபர் தாறுஸ்ஸலாம் அரபுக்கலாபீடம்.
தியாவட்டுவான், வாழைச்சேனை, இலங்கை.
2013.03.04 (செவ்வாய்)

பொருளடக்கம்.

பதிப்புரை.
அணிந்துரை.
வாழ்த்துரைகள்.
முன்னுரை.
பதவிளக்கம்.||01
தோற்றமும் வளர்ச்சியும். ||03
சேவைகளும் சாதனைகளும்.||09
ஷீஆக்கள் அன்றும் இன்றும். ||17
முரண்பாடும் பிரிவினைகளும்.||19
முக்கிய கொள்கைகள்.||21
அடிப்படை மூலாதாரங்கள்.||22
அத்தகிய்யா/அத்துக்யா. ||29
அல்லாஹ் பற்றிய ஷீஆக்களின் நம்பிக்கை.||42
இமாம்கள் பற்றிய நம்பிக்கை.||56
ரஸூல் (ஸல்) அவர்கள் பற்றிய நம்பிக்கை.||84
அல்குர்ஆன்.||89
அஸ்ஸுன்னா பற்றிய ஷீஆக்களின் நம்பிக்கை.||114
ஸஹாபாக்கள் பற்றிய நம்பிக்கை.||128
அல்பதா.˙..||146
அர்ரஜ்ஆ.||150
அல்முத்ஆ.||155
அல்-ஹுமுஸ்.||163
ஏனைய முஸ்லிம்கள் பற்றிய நம்பிக்கை.||168
எதிர்பார்க்கப்படும் மஹ்தி (12வது இமாம்). ||178
புனையப்பட்ட புனித மண்.||190
புகழ்பெறும் நகரங்கள்.||194
நூலின் சாரம். ||197
உங்கள் கருத்துக்களுக்காய்... ||204

பதவிளக்கம்.

“ஷீஆ” என்ற பதம் அரபு மொழியில் பின்பற்றுபவர்கள், உதவி செய்வோர் எனும் கருத்தில் பயன்படுத்தப்படுகின்றது. இவ்வாறு பயன்படுத்தப்பட்டாலும் அலி (ரழி) மற்றும் அவரின் குடும்பத்தில் வந்த சிலரை பின்பற்றுவதாகக் கூறிக்கொண்ட பிரிவினருக்கு உரித்தான பெயராக இது மாறிவிட்டது என்று மொழித்துறை அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

இப்பதம் அல்குர்ஆனில் 12இடங்களில் வந்துள்ளது. இமாம் இப்னுல் ஜவ்ஸி (ரஹ்) அவர்கள், “தப்ஸீர் கலை அறிஞர்கள் ஷீஆ என்ற பதம் அல்குர்ஆனில் 04கருத்துக்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது” என்று குறிப்பிடுகின்றார்:

01. பிரிவுகள்: (06:59), (15:10), (28:04), (30:32)
02. குடும்பம், பரம்பரை: (28:15)
03. ஒரு மதத்தைச் சார்ந்தவர்கள்: (19:69), (54:51), (34:54)
04. பல்வேறுபட்ட யோசனைகள்: (06:65) (நுஸ்ஹதுந்நாழிர்)

ஷீஆ என்ற வாசகம் பெரும்பாலும் அல்குர்ஆனிலே இழிவான கருத்தின் அடிப்படையிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது என்று இமாம் இப்னுல் கையிம் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். (பதாயிஉல் பவாயித்)

ஷீஆ என்ற பதத்திற்கு பரிபாசையில் பலரும் பலவிதமான வரைவிலக்கணங்களை வழங்கியுள்ளனர். இமாம் அஷ்அரி அவர்களின் கூற்று மிகவும் சுருக்கமானதாக உள்ளது. “அவர்கள் அலி(ரழி) அவர்களை சார்ந்திருந்ததாலும், நபி(ஸல்) அவர்களின் தோழர்கள் எல்லோரிலும் அலி(ரழி) அவர்களை முற்படுத்தியத -னாலுமே அவர்களுக்கு ஷீஆ என்று சொல்லப்பட்டது” (மகாழாதுல் இஸ்லாமிய்யீன்) இவ்வாறு சுருக்கமாக கூறப்பட்டாலும், ஷீஆக்களைப் பொறுத்தவரை கொள்கை, வணக்கவழிபாடுகளில் முஸ்லிம்களுக்கு முற்றிலும் முரண்படுகின்ற பல கொள்கைகளை உருவாக்கிக் கொண்டனர். மேலும் எந்தவொரு சிறிய விடயமாக இருப்பினும் பெரிய விடயமாக இருப்பினும் மற்றவர்களுக்கு முரண்படுவது அவர்களின் மதத்தின்படி அவர்களது கடமையாகும். இவற்றையெல்லாம் அலி(ரழி) அவர்களின் பிள்ளைகள் சிலரின் பெயரால் செய்துவருகின்றனர் அவர்கள் இந்த ஷீஆக்களைவிட்டும் அவர்களின் கொள்கைகளை விட்டும் வானம் பூமியைப் போல தூரமானவர்கள்.

தோற்றமும் வளர்ச்சியும்.

ஷீஆக்கள் எப்போது தோற்றம் பெற்றார்கள் என்பதில் மூன்று விதமான கருத்துக்கள் உள்ளன:

01. நபி(ஸல்) அவர்களுக்கு முன்பிருந்தே ஷீஆக்கள் இருக்கிறார்கள். இது தவறான கருத்து என்பதை விளக்க வேண்டிய அவசியமில்லை.

02. நபி(ஸல்) அவர்களின் வருகையுடன் ஷீஆக்களின் தோற்றமும் ஆரம்பிக்கிறது. இதுவும் தவறான கருத்தாகும். ஏனெனில் நபி(ஸல்) அவர்கள் இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்ய அனுப்பப்பட்டார்களே தவிர ஆபாசங்களும், அசிங்கங்களும் நிறைந்த ஷீஆ மதத்தை அல்ல.

இந்த இரண்டு கருத்துக்களும் வரலாற்று அடிப்படையில் மற்றவர்களிடம் நற்பெயரை வளர்ப்பதற்காக ஷீஆக்கள் உருவாக்கிக் கொண்ட கருத்துக்களாகும்.

03. அலி (ரலி) மற்றும் முஆவியா (ரலி) இருவருக்கும் இடையில் ஏற்பட்ட பிளவின்போது இப்பெயர் தோற்றம் பெற்றது. இது ஒரு சாராரில் இருந்து மற்ற சாராரை இனங்காட்டுவதற்கான ஒரு அடையாளமாகவே இருந்தது. கொள்கை, சிந்தனை, வணக்கவழிபாடுகளில் எந்த வித்தியாசமும் அவர்களிடம் இருக்கவில்லை. எல்லோரும் மற்றச் சாராரை சகோதரர்களாகவே கருதினர், சகோதரத்துவ வாஞ்சையுடன் தங்கள் தொடர்பாடல்களை அமைத்துக்கொண்டனர். உஸ்மான் (ரழி) அவர்களைக் கொலை

செய்த கும்பலுக்கு உடனுக்குடன் பழிதீர்ப்பதா? இல்லையா? என்பதில்தான் கருத்து முரண்பாடு கண்டார்கள். மற்ற மார்க்க ரீதியான எந்த விடயங்களிலும் அவர்களிடம் கருத்து முரண்பாடு இருக்கவில்லை என்பது முக்கியமான ஒரு விடயமாகும்.

இதனால்தான், பிற்பட்ட காலத்தில் அவர்கள் பிரச்சினையை மறந்தார்கள். ஒருவருக்கொருவர் மற்ற தரப்பாருடன் திருமணம் செய்துகொண்டனர். ஒரு சாரார் மற்றவர்களை காபிர்கள் என்று நினைத்திருந்தால் இவ்வாறு திருமணம் செய்வது சாத்தியமாகி இருக்காது.

அதுபோலவே, அலி (ரழி) அவர்களின் மரணத்தின் பின்பு முஆவியா (ரழி) அவர்களின் ஆட்சியில் உமைய்யாக்களின் தலைமையின் கீழ் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஓரணியாகினர். இவர்கள் அனைவருமாகச் சேர்ந்து இஸ்லாமிய உலகில் பல வெற்றிகளைக் கண்டனர். நிச்சயமாக கொள்கை அடிப்படையில் பிரிந்திருக்கும் இரு சாராரினால் இவ்வாறான வெற்றிகளை ஈட்டுவது கடினம்.

உமைய்யாக்களுக்கும் நபியவர்களின் குடும்பத்தினருக்கும் இடையில் நெருக்கமான ஒரு தொடர்பு இருந்திருக்கிறது. நபியவர்களின் குடும்பத்திற்கு அதிகம் நன்கொடை வழங்குபவர் களாக உமைய்யாக்கள் இருந்திருக்கிறார்கள் இதை ஏற்றுக் கொள்பவர்களாக அஹ்லுல் பைத்தினர் இருந்தனர். நிச்சயமாக பெரும் பிளவுள்ள இரு சாரார் இவ்வாறு நடந்துகொள்வது கடினமானது.

நபியவர்களின் குடும்பத்தினர் ஸஹாபாக்களைத் திட்டவில்லை மாறாக அவர்களை திட்டுபவர்களுக்குத் தண்டனை வழங்குபவர்களாக இருந்தார்கள். ஸஹாபாக்களின் பெயர்களைத் தங்கள் செல்லக் குழந்தைகளுக்கு சூட்டுவதில் மகிழ்ச்சி கண்டனர். அலி(ரழி) அவர்களுக்கு அபூபக்ர், உமர், உஸ்மான்

என்ற பெயரில் குழந்தைகள் இருந்திருக்கின்றனர். அதுபோல் ஹஸன் (ரழி) அவர்களும் தனது பிள்ளைகளில் இருவருக்கு அபூபக்ர், உமர் என்று பெயர் சூட்ட ஹுஸைன் (ரழி) அவர்களும் தனது மக்களில் ஒருவருக்கு அபூபக்ர் என்று பெயர் வைத்திருந் -தார்கள். இது நபியவர்களின் குடும்பத்தின் பாரம்பரியங்களில் ஒன்றாக பின்வந்தோரால் பின்பற்றப்பட்டு வந்திருக்கிறது. நிச்சயமாக நபியவர்களின் குடும்பத்தினர் ஸஹாபாக்களை நேசிக்காதிருந்தால் இவ்வாறு பெயர் வைத்திருக்க முடியாது.

தனியான சிந்தனைகளைக்கொண்ட பிரிவாக எப்படி மாற்றம் பெற்றது:

உஸ்மான் (ரழி) அவர்களைக் கொன்றவர்களைப் பழிதீர்ப்பதில் பிரச்சினை ஏற்பட்டது. பிறகு அது முடிவுற்று சுமூகமான நிலையில் பேணப்பட்ட இந்த உறவு முறை, பிற்பட்ட காலத்தில் எவ்வாறு தனியான கொள்கைகள் கோட்பாடுகளைக் கொண்ட பிரிவாகத் தோற்றம் பெற்றது என்பது முக்கியமான ஒரு விடயமாகும்.

யூதர்கள் மற்றும் இஸ்லாத்திற்கு எதிரான சக்திகள் ஆயுத ரீதியாக முஸ்லிம்களை எதிர்க்க முடியாது என்று கண்டபோது, சிந்தனை ரீதியாக முஸ்லிம்களை பலவீனப்படுத்தவும் குர்ஆன், சுன்னாவை விட்டும் அவர்களைத் தூரமாக்கவும் முனைந்தனர் அத்தகைய முயற்சிகள் ஆரம்பகாலத்திலிருந்தே எடுக்கப்பட்டன. ஸஹாபாக்களின் காலத்தில் இவ்வாறானதொரு பிரிவு ஏற்பட்டபோது இஸ்லாத்தின் எதிரிகள் அதை நாசூக்காகப் பயன்படுத்திக்கொள்வதற்கான நீண்டகாலத் திட்டங்களை வகுத்தனர். இதன்படி அலி (ரழி) மற்றும் முஆவியா (ரழி) இருவரின் தரப்பிலும் நுழைந்தனர். இரண்டு சாராரையும் மூட்டி விடுவதற்கும், பரஸ்பரம் மோசமான கருத்துக்களை உருவாக்கவும் முனைந்தனர்.

முஆவியா (ரழி) அவர்களின் தரப்பில் இருந்தவர்களிடம் இந்த எதிரிகளின் பிரச்சாரம் பெரிதாக எடுபடவில்லை. காரணம், அவர்கள் இஸ்லாத்தில் உறுதியுடையவர்களாகவும், தலைமைத்துவக் கட்டுப்பாடு மற்றும் வாக்குறுதியை நிறைவேற்றும் பண்பு போன்றவற்றைப் பெற்றவர்களாகவும் இருந்தனர்.

ஆனால், அலி (ரழி) அவர்களின் தரப்பில் நிலைமை இதற்கு முற்றிலும் மாற்றமானதாக இருந்தது. அலி (ரழி) அவர்கள் தனது ஆட்சியின் தலைமையகமாக கூபாவை தேர்வு செய்திருந்தார்கள். இஸ்லாமிய வரலாற்றில் கூபா வாசிகள் உறுதியான ஒரு கொள்கை உடையவர்களாக இருந்ததில்லை, தலைமைத்துவக் கட்டுப்பாட்டை அவர்களிடம் எதிர்பார்க்க முடியாது, கூபா வாசி என்றால் அவன் வாக்குறுதியை நிறைவேற்றமாட்டான் என்பது பிரபல்யமான ஒரு விடயம், அலி (ரழி) அவர்களின் தரப்பில் ஷீஆக்களின் ஸ்தாபகராகக் கருதப்படும் அப்துல்லாஹ் பின் ஸப.:. இருந்தான். இதனால் அவனது அணி பலம் பொருந்தியதாக இருந்தது. எனவே, இவ்வாறான நிலையில் இருக்கும் ஒரு கூட்டத்தில் மாற்றுத் தரப்பார் நுழைந்து வேலை செய்வதும் அவர்களின் இலட்சியங்களை அடைந்து கொள்வதும் இலகுவான ஒரு விடயம். இதன் காரணமாக அலி(ரழி) அவர்களின் தரப்பில் இருந்தவர்களிடம் இஸ்லாத்திற்கு எதிரான கருத்துக்கள் படிப்படியாக திட்டமிட்ட அடிப்படையில் பரப்பப்பட்டன. இதன் விளைவாக அந்த சிந்தனைகள் காலப்போக்கில் தனியொரு மதமாகப் பரிணமித்தது.

ஷீஆக்களின் ஸ்தாபகராக ஷீஆ அறிஞர்கள், ஏனைய அறிஞர்களால் இனங்காட்டப்படுபவன் அப்துல்லாஹ் பின் ஸப.:. எனும் யூதனாவான். இவன் யெமன் பிரதேசத்தைச் சேர்ந்தவன். உஸ்மான் (ரழி) அவர்களின் காலத்தில் தன்னை ஒரு முஸ்லிமாக இனங்காட்டிக்கொண்டான். இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும்

எதிராக சதிசெய்வதை தனது முழுப்பணியாகக் கொண்டிருந்தான். இவனே இஸ்லாமிய வரலாற்றில் முதன் முதலாக அலி(ரழி)தான் எல்லோரைவிடவும் சிறந்தவர்; அவரே ஆட்சிப்பதவிக்குத் தகுதியானவர்; மற்றவர்கள் எல்லோரும் அவருக்கு அநியாயம் செய்துவிட்டனர் என்ற கருத்தைச் சொன்னான். அலி(ரழி) அவர்கள் கடவுள் தன்மை பொருந்தியவர் என்று வாதிட்டான். மேலும், அவருக்கு முந்தைய கலீபாக்களை சபிப்பதையும், ஸஹாபாக்களுக்கு எதிரான விரோதத்தையும் பிரச்சாரம் செய்தான் என ஷீஆக்களின் முக்கிய அறிஞர்களில் ஒருவரான கிஷ்ஷி என்பவர் தனது ரிஜால் எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இதை அறிந்துகொண்ட அலி (ரழி) அவர்கள் அவனுக்கும் அவனைப் பின்பற்றியவர்களுக்கும் தண்டனை வழங்கினார்கள். இவ்வாறு ஸஹாபாக்களின் காலத்தில் ஆரம்பித்த இக்குழுவே இஸ்லாமிய வரலாற்றில் முஸ்லிம்களுக்குள் உருவான முதல் பிரிவினையாகும்.

எனவே, அவனால் உருவாக்கப்பட்ட இந்த சிந்தனைகள் அவனது மரணத்தின் பின்பு ஏனைய இஸ்லாத்தின் எதிரிகளால் முன்னெடுக்கப்பட்டது. இஸ்லாத்திற்கு முரணான பல கொள்கைகளும் சிந்தனைகளும் அஹ்லுல் பைத்தின் பெயரில் முஸ்லிம்களுக்கு மத்தியில் பிரச்சாரம் செய்யப்பட்டது.

இதனால்தான் இமாம் ஜஃபர் ஸாதிக் (ரஹ்) அவர்கள் குறிப்பிடுகிறார்கள்:

“நாம் அஹ்லுல் பைத்தினர், எம் ஒவ்வொருவர் மீதும் பொய் சொல்லும் ஒருவர் இருந்துகொண்டே இருக்கிறார். அவர் எம்மீது பொய்யை இட்டுக்கட்டுகிறார். இதனால் நாம் சொல்லும் உண்மையான செய்திகள் மக்களிடம் வீழ்த்தப்படுகின்றன.” (ரிஜாலுல் கிஷ்ஷி)

இவ்வாறு தோற்றம் பெற்ற ஆரம்பகால ஷீஆக்கள் ஸபஇய்யா என்ற பெயரால் அழைக்கப்படுகின்றனர். ஆனாலும், பல குழுக்களாகப் பிரிவதை தங்கள் வழமையாக்கிக் கொண்டனர். ஒவ்வொருவரும் தாங்கள் மதிப்பவர்களை இமாம் என்று வாதிட்டு பிரிந்தனர், ஒவ்வொரு இமாம் மரணித்த பின்பும் அடுத்த இமாமைத தீர்மானிப்பதில் அவர்களுக்கு மத்தியில் முரண்பாடு தோன்றுவது வழமையாக இருந்தது. இவ்வாறு தோற்றம் பெறும் குழுக்கள் அடுத்த குழுவை கடுமையாக விமர்சிப்பவைகளாகவும் காபிர் என்று சொல்பவைகளாகவும் இருந்தன.

அல்லாஹ் சொல்கின்றான்: ''நிச்சயமாக அல்லாஹ் அல்லாதவரிடமிருந்து வந்திருந்தால் அதிலே அதிகமான முரண்பாடுகளைக் கண்டிருப்பீர்கள்.'' (15:1)

இவ்வாறு பல குழுக்களாகப் பிரிந்தபோதிலும் 'அஹ்லுல் பைத்தைக் கேடயமாகப் பயன்படுத்தி இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் அழிப்பது என்பதே அவர்களின் குறிக்கோளாக இருந்தது. சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் இதை நிறைவேற்றுவதற்கு அவர்கள் தயங்கவில்லை.

தற்போது ஈரானின் ஆட்சிக்குரிய மதமாக ஷீஆ காணப்படுவதுடன் ஸிரியா, ஈராக், ஆப்கானிஸ்தானின் ஆட்சியையும் அது கையகப்படுத்தியுள்ளது பஹ்ரைனில் பெரும்பான்மையாக ஷீஆக்கள் வாழ்ந்து வருவதுடன், மத்திய கிழக்கின் எல்லா நாடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர். பாகிஸ்தான், இந்தியா போன்ற ஏனைய நாடுகளிலும் தங்களின் இருப்பை ஸ்திரப்படுத்துவதற்கான அதிகார ரீதியான முயற்சிகளும் பிரச்சாரங்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாறு எவ்வளவு பரவலாக்கம் மேற்கொள்ளப்பட்டாலும்
இஸ்லாத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை அல்லாஹ்
ஏற்றிருக்கிறான், யார் சூழ்ச்சிகள் செய்தாலும் அவனது
மார்க்கத்தை அவன் பாதுகாத்தே தீருவான்.
அல்ஹம்துலில்லாஹ்.

சேவைகளும் சாதனைகளும்.

இஸ்லாமிய வரலாற்றில் இஸ்லாத்திற்காக ஷீஆக்கள் ஒரு கண் நிலத்தையேனும் கைப்பற்றவில்லை அதற்காக ரத்தம் சிந்தவுமில்லை. இன்றளவும் இஸ்லாத்தின் எதிரிகளுக்கு எதிராக பல நாடுகளில் போராட்டம் நடக்கிறது. இப்போராட்டங்களில் ஷீஆக்களின் பங்கு என்ன என்றால் நிச்சயம் அந்தப் போராட்டத்தை ஒடுக்குவதற்காக எதிரிகளுடன் இணைந்துகொண்டு சதிசெய்வதாகவே இருக்கும், இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்யும் வழியில் தங்கள் உயிர்களையோ ஒரு ரூபாவையோ அவர்கள் இழந்ததில்லை.

ஆனாலும், அவர்களின் பார்வையில் இஸ்லாமிய வரலாற்றில் முஸ்லிம்களுக்கு பல சேவைகளையும், சாதனைகளையும் செய்திருக்கின்றனர். அவற்றில் சிலவற்றை இங்கு சுருக்கமாக அவதானிப்போம்.

01. உமர் (ரழி) அவர்களின் கொலை:

உமர்(ரழி) அவர்களின் கொலைக்கும் ஷீஆக்களுக்கும் நேரடியான தொடர்பில்லை. ஆனாலும் உமர்(ரழி) அவர்களைக் கொலை செய்த நெருப்பு வணங்கி அபூ லுஃலுஆ பாரசீகத்தைச் சேர்ந்தவன் என்றும், அவன் தங்கள் இனம் என்றும் ஷீஆக்கள் போற்றுகின்றனர். மேலும், அவனுக்கென்று ஈரானின் காஸான்

எனும் பகுதியில் பெரியதொரு கப்ரடி உருவாக்கப்பட்டிருக்கிறது. மிகவும் அதிகமான அலங்காரங்களுக்கு உட்பட்டுள்ள அந்த கப்ரில் வருடாந்தம் விசேட நிகழ்ச்சிகள் நடாத்தப்படுகின்றன. இங்கு வருவோர் அபூலுஃலுஆவின் பாவத்தை மன்னிக்குமாறு இறைவனிடம் பிரார்த்திப்பதுடன் அவனுடன் எங்களையும் (ஷீஆக்களையும்) எழுப்புவாயாக என்றும் பிரார்த்திக்கின்றனர். (அல்லாஹ் எம்மைப் பாதுகாப்பானாக)

இன்னும் உமர்(ரழி) அவர்கள் கொலை செய்யப்பட்ட அந்த நாளுக்கு அவர்களிடம் 70க்கும் மேற்பட்ட சிறப்புப்பெயர்கள் உண்டு "சந்தோசகரமான நாள், பாவி அழிந்த நாள், துக்கத்திலிருந்து விடுபட்ட நாள், கஸ்டங்கள் நீங்கிய நாள்..." என்பன அவைகளில் சிலவாகும்.

02. உஸ்மான் (ரழி) அவர்களின் கொலை:

உஸ்மான் (ரழி) அவர்களின் கொலை ஷீஆக்களின் நேரடியான பங்களிப்புடனே நடைபெற்றது. குறிப்பாக ஷீஆக்களின் தாபகர் அப்துல்லாஹ் பின் ஸபஃவின் பிரச்சாரமே இதற்கு அடிப்படையாக இருந்தது. உஸ்மான்(ரழி) அவர்களை சபித்தல், அஹ்லுல் பைத்தின் சிலர் விடயத்தில் எல்லை மீறிய கருத்துக்களைப் பரப்புதல் என்பவற்றின் மூலம் இச்சாதனையை அவர்கள் நிகழ்த்தியுள்ளார்கள்.

03. அலி (ரழி) அவர்களின் கொலை:

அலி(ரழி) அவர்களின் கொலையிலும் ஷீஆக்களுக்கு நேரடியாக பங்கில்லை என்றபோதிலும், உஸ்மான்(ரழி) அவர்களின் கொலையினால் ஏற்பட்ட குழப்பத்தினால்தான் அவர்கள் கொலை செய்யப்பட்டார்கள் என்பது உண்மை. இந்தக் குழப்பத்திற்கு காரணமாக இருந்தவர்கள் ஷீஆக்கள் என்பதனால் இக்கொலைக்கு ஏதோவொரு அடிப்படையில் அவர்களும் பங்களிப்புச் செய்தவர்களாகக் கருதப்படுகின்றனர்.

04. ஹஸன் (ரழி) அவர்களின் கொலை:

அலி(ரழி) அவர்களின் மரணத்தின் பின்பு, ஹஸன் (ரழி) அவர்கள் முஆவியா (ரழி) அவர்களுடன் போர்தொடுக்கும் நோக்கத்துடன் இருக்கவில்லை. ஈராக் வாசிகள் பற்றி அவர் நன்றாக அறிந்திருந்தார். என்றாலும், அவர்கள் அவரை விட்டபாடில்லை. அவருக்கு பைஅத் செய்தனர். அவர்களின் பாணியில் இதை அவர்களுக்கு தெளிவுபடுத்த முனைந்த ஹஸன் அவர்கள் சுமார் 12000பேரை அழைத்துக்கொண்டு முஆவியாவுக்கு எதிராக படையெடுத்துச் சென்றார்கள். இதை அறிந்த முஆவியா அவர்களும் பதிலுக்கு படைதிரட்டி வருகிறார்கள் இருவரும் ஓரிடத்தில் கூடாரமிடுகிறார்கள்.

அன்றிரவே ஈராக்வாசிகளிடம் பிரச்சினை தோன்றுகின்றது. அவர்களின் பண்பு வெளிப்படுகிறது. ஒவ்வொருவரும் ஹஸனின் தரப்பை விட்டு விட்டு ஓடிவிட்டனர். பிரச்சினை அதிகரித்தது ஹஸன் (ரழி) அவர்களின் சொத்துக்கள் அனைத்தையும் திருடினர். அவர் அமர்ந்திருந்த விரிப்பைக்கூட அவர்கள் விடவில்லை அதனையும் பறித்துக்கொண்டு சென்றனர். முஹ்தாருத்தகபி என்பவன் ஹஸன் (ரழி) அவர்களைப் பிடித்து ரகசியமாக முஆவியாவிடம் ஒப்படைத்துவிட்டு பணம் சம்பாதிக்க ஆசைப்பட்டான்.

இவைகளைக் கண்ணுற்ற ஹஸன் (ரழி) அவர்கள் சொல்கிறார்கள்: “அல்லாஹ்வின் மீது ஆணையாக என்னை நேசிப்பதாகச் சொல்லும் இந்த ஷீஆக்களைவிட முஆவியா எனக்கு மிகவும் சிறந்தவர் என்று நான் நினைக்கிறேன். இவர்கள் (ஷீஆக்கள்) என்னைக் கொலை செய்யப்பார்த்தார்கள். என் பொருளாதாரத்தை சூரையாடினர். அல்லாஹ்வின் மீது ஆணையாக அவர்கள் என்னைக் கொலை செய்து நபியவர்களின் குடும்பமும் எனது குடும்பமும் வீணாவதை விட, முஆவியாவிடம் எனக்கும் எனது குடும்பத்திற்குமுரிய பாதுகாப்பைப் பெறுவது சிறந்தது.

அல்லாஹ்வின் மீது ஆணையாக முஆவியாவுடன் நான் போரிட்டிருந்தால் இவர்கள் (ஷீஆக்கள்) என் கழுத்தைப் பிடித்து பிரச்சினையில்லாமல் என்னை முஆவியாவிடம் ஒப்படைத்திருப்பார்கள். எனவே, ஒரு கைதியாக என்னை அவர்கள் கொலை செய்வதைவிட கண்ணியமானவனாக, நல்லவனாக அவருடன் சமாதானம் செய்து கொள்வது எனக்கு மிகவும் சிறந்ததாகும்." (ஷீஆக்களின் முக்கிய அறிஞரான தப்ரஸி என்பவரின் அல் இஹ்திஜாஜ் எனும் நூல்)

இவ்வாறு ஹஸன் (ரழி) அவர்கள் முஆவியா (ரழி) அவர்களுடன் சமாதானம் செய்துகொண்டதை ஷீஆக்கள் விமர்சித்தனர். இதனால் ஹஸன் (ரழி) அவர்களை வசைபாடினர், இதன் பின்னணியிலேயே நஞ்சூட்டிக்கொலை செய்யப்பட்டார்கள்.

05. ஹுஸைன் (ரழி) அவர்களின் கொலை:

முஆவியா (ரழி) அவர்களின் மரணத்தின் பின்பு மக்காவில் இருந்த ஹுஸைன் (ரழி) அவர்களுடன் கூபாவில் வாழ்ந்த ஷீஆக்கள் தொடர்புகளை வலுப்படுத்தினர். மற்றத் தலைவர்களுடன் சேர்ந்து ஜும்ஆத் தொழுகையில் கூடப் பங்கெடுக்காமல் 12000பேர் உங்களின் தலைமைத்துவத்தில் ஒன்று சேர்வதற்கு காத்திருக்கிறோம் என்று பல முறை அவரை கூபாவிற்கு வருமாறு கட்டாயப்படுத்தினர். அவர்களின் தொடர்ச்சியான முயற்சியின் பயனாக கூபாவிற்கு செல்வதற்கு ஹுஸைன் (ரலி) அவர்கள் முடிவு செய்தார்கள். இதை அறிந்த மூத்த ஸஹாபாக்கள் மற்றும் உறவினர்கள் ஹுஸைன் (ரழி) அவர்களைத் தடுத்தார்கள். அவரின் தந்தைக்கும் சகோதரனுக்கும் நடந்த செய்தியை நினைவுபடுத்தினர். என்றாலும், ஹுஸைன் (ரழி) அவர்கள் எவருடைய பேச்சையும் கேட்காமல் வெளியேறிச் சென்றார்கள். ஆனாலும், அவருடைய தந்தையோடும் சகோதரனோடும் நடந்து கொண்டதைப் போலவே இவர்கள் அவருடனும் நடந்து கொண்டார்கள்.

ஹுஸைன் (ரழி) அவர்கள் ஈராக்கை வந்தடைந்தபோது, அதன் பிரதிநிதியாக இருந்த உபைதுல்லாஹ் பின் ஸியாதின் படையுடன் சேர்ந்துகொண்டு ஹுஸைன் (ரழி) அவர்களையும் அவருடைய குடும்பத்தாரையும் கொலை செய்தார்கள். இதனால் அவர்களுக்கு எதிராக ஹுஸைன் (ரழி) அவர்கள் பிரார்த்தனை செய்தார்கள்: "இறைவா! எங்களுக்கு உதவி செய்வதாக எங்களை அழைத்து கொலை செய்த இந்தக் கூட்டத்தாருக்கும் எங்களுக்கும் மத்தியில் தீர்ப்பளிப்பாயாக." (தாரீஹுத் தபரீ)

ஷீஆக்களின் முக்கிய அறிஞரான தப்ரஸீ என்பவருக்குரிய "இ∴லாமுல் வரா" எனும் நூலில் ஹுஸைன் (ரழி) அவர்கள் ஷஹீதாவதற்கு சற்று முன்னர் பின்வருமாறு பிரார்த்தனை செய்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது:

"இறைவா! அவர்களை நீ வாழவைத்தால் அவர்களை பல குழுக்களாகப் பிரிப்பாயாக. அவர்களின் தலைவர்களை ஒருபோதும் பொருந்திக்கொள்ளாதே. ஏனெனில், அவர்கள் எமக்கு உதவிசெய்வதாக எம்மை அழைத்தார்கள், பின்பு எங்களுக்கு எதிராக அத்துமீறினார்கள், எங்களைக் கொலை செய்தார்கள்."

06. கொலையை கொள்கையாக்கிய அமைச்சர்:

அப்பாஸிய்யாக்களின் ஆட்சிக்காலத்தில் அஹ்லுல் பைத்தை நேசிப்பதாகச் சொன்ன ஷீஆக்களுக்கு அதிகமான சலுகைகள் வழங்கப்பட்டன. அவர்களில் சிலர் அமைச்சர்களாகவும் இருந்தனர். இவ்வாறு ஹாரூன் அர்ரஷீதுக்கு அமைச்சராக இருந்தவர்களில் ஒருவன்தான் அலியிப்னு யக்தீன் என்பவன். இவன் அஹ்லுஸ்ஸுன்னாக்களைக் கொலை செய்வதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தான். ஒரு தடவை தன்னிடம் அடைக்கலம் பெற்றிருந்த ஐநூறு அஹ்லுஸ்ஸுன்னத் வல் ஜமாஅத்தினரைக் கொலை செய்துவிட்டு, ஒரு ஷீஆ அறிஞரிடம் இவ்வாறு தான் கொலை செய்துவிட்டதாகவும், இதற்கு என்ன தீர்ப்பு என்றும் கடிதம்

எழுதினான். அதற்கு அவர் பதில் எழுதுகிறார். “நீ கொலை செய்வதற்கு முன்னால் என்னிடம் அனுமதி கோரியிருந்தால் உனக்கு எந்தக் குற்றமும் வந்திருக்காது. நீ முன்னனுமதி பெறாமல் கொலை செய்திருக்கிறாய் என்பதனால், கொலை செய்யப்பட்ட ஒவ்வொருவருக்காகவும் ஓர் ஆட்டுக்குட்டி வீதம் பலி கொடுப்பாயாக நிச்சயமாக ஆட்டுக்குட்டி அவர்களைவிடவும் சிறந்தது.” (அல் அன்வாருந்நு.ஃ.மானிய்யா, ஹகீகதுஷ்ஷீஆ)

அஹ்லுஸ்ஸுன்னாக்களை கொலை செய்வது இக்கூட்டத்திடம் எந்தளவிற்கு இலகுவான காரியம் என்று பாருங்கள்.

07. ஹஜ்ஜாஜிகளைக் கொலை செய்தமை:

க.ஃ.பதுல்லாவோ அதில் ஹஜ் செய்வதோ ஷீஆக்களுக்கு விருப்பமான காரியம் கிடையாது. இதனால் ஹஜ்ஜில் பிரச்சினைகளை உருவாக்குவதற்கும் ஹஜ்ஜாஜிகளைக் கொலை செய்வதற்கும் அவர்கள் முயற்சித்திருக்கின்றனர். இஸ்லாமிய வரலாற்றில் அதிகமாக ஹஜ்ஜாஜிகளைக் கொலை செய்த பெருமையும், அவர்களின் பொருளாதாரத்தை அதிகம் சூறையாடிய பெருமையும் ஷீஆக்களின் குழுவான கராமிதாக்களையே சாரும்.

08. ஹஜருல் அஸ்வத் கல்லை திருடியமை:

ஷீஆக்களின் ஒரு பிரிவினரான கராமிதாக்கள் க.ஃ.பதுல்லாஹ்வுக்கு எதிராக படைதிரட்டினர். க.ஃ.பாவின் சீலையைக் கிழித்து அதில் சிதைவை ஏற்படுத்தினர். ஹஜருல் அஸ்வத் கல்லை அதிலிருந்து கழற்றச் சென்றனர், சுமார் 22ஆண்டுகள் அவர்களிடமே ஹஜருல் அஸ்வத் கல் இருந்ததாகவும், தங்களுக்கு ஏற்றவிதத்தில் அவர்கள் அதைப் பங்குபோட்டுக்கொண்டதாகவும், பின்பு அது மீட்கப்பட்டு மீண்டும் க.ஃ.பாவில் வைக்கப்பட்டதாகவும் வரலாறு சொல்கிறது. (பார்க்க: அல்பிதாயா வந்நிஹாயா)

09. தாத்தாரியர்களைக் கொண்டுவந்தமை:

இஸ்லாமிய வரலாற்றில் அது சந்தித்த மிகப்பெரிய யுத்தம் தாத்தாரியர்களின் படையெடுப்பு. இந்தப் படையெடுப்பு நடப்பதற்கு காரணமாக இருந்தவர்கள் கலீபா மு.ஃதஸிம் பில்லாவின் அமைச்சர் இப்னுல் அல்கமீ மற்றும் அவருக்கு மிகவும் நெருக்கமாகவிருந்த நஸீருத்தீன் அத்தூஸி எனும் இரண்டு ஷீஆக்களாவர். இவர்கள் இருவரையும் கொமைனி தனது 'அல்ஹுகூமா அல் இஸ்லாமிய்யா' எனும் நூலில் வீரர்கள் என்றும் அவர்களுக்கு அல்லாஹ் அருள் புரியவேண்டும் என்றும் பிரார்த்திக்கிறார்.

இந்தப் போராட்டத்தில் 80000முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டதாக ஒரு அறிவிப்பிலும் இரண்டு இலட்சம் பேர் வரை கொலை செய்யப்பட்டதாக இன்னுமொரு அறிவிப்பிலும் இருப்பதாக இமாம் இப்னு கதீர் அவர்கள் தனது பிதாயா வந்நிஹாயா எனும் நூலில் குறிப்பிடுகிறார்கள். அவர் மேலும் குறிப்பிடும்போது:

முஸ்லிம்களின் வரலாற்றுப் பொக்கிசங்கள் அனைத்தும் இதில் அழிக்கப்பட்டன, முஸ்லிம் அறிஞர்கள், மற்றும் தலைவர்கள் எல்லோரும் ஷீஆக்களினால் கொலை செய்யப்பட்டார்கள். முஸ்லிம்களின் அனைத்து மையங்களும் ஆள் நடமாட்டமில்லாத பகுதிகளாக பல மாதங்கள் காட்சியளித்தன. ஈராக்கின் கருவூலங்கள் அனைத்தும் எதிரிகள் வசமயின, பிணவாடையினால் வளிமண்டலம் நாசமடைந்து அயல் நாடுகளில் தொற்றுநோய் பரவியது. இதற்கும் மேலாக இந்த இரண்டு ஷீஆக்களினாலும் கலீபா முஸ்த.ஃஸிமி பில்லாஹ் தாத்தாரியர்களின் உதவியுடன் கொலை செய்யப்படுகிறார்.

இத்தனை கைங்கரியங்களையும் செய்ததன் பின்பு இந்த இருவரும் தாத்தாரிய ஆட்சியாளர்களின் முக்கிய ஆலோசகர்களாகவும் அமைச்சர்களாகவும் தொழிற்பட்டனர். எமது சமூகத்தில் தாத்தாரியர்களின் படையெடுப்பைப் பற்றி அதிகமாகப் பேசும்

சகோதரர்கள், அது பற்றி எழுதும் சகோதரர்கள் அதற்கான மூல காரணங்களை எழுத மறந்து விடுகின்றனர் அல்லது மறுத்துவிடுகின்றனர்.

ஹி.658ல் தாத்தாரியர்கள் ஸிரியாவுக்குள் நுழைந்தார்கள் அங்கும் அவர்களுடன் இணைந்து கொண்டு ஷீஆக்கள் முஸ்லிம்களைக் கொலை செய்யும் பணியில் ஈடுபட்டனர்.

ஷீஆக்களைத் தங்களின் நெருக்கமான ஸஹாக்களாக வைத்திருக்கும் முஸ்லிம் தலைவர்களுக்கும் ஏனையவர்களுக்கும் ஞாபகமூட்டப்படாத ஒரு விடயமாக இன்றளவும் இது திகழ்கின்றது.

10. மக்காவில் குண்டு வைத்தல்:

அண்மைக்காலத்தில் ஷீஆக்கள் மக்காவில் குண்டு வைத்தமையும் ஷீஆக்களின் மிகப் பெரிய சாதனைகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

இவைகள் தவிர, முஸ்லிம்களின் படைத் தளபதிகளைக் கொலை செய்தமை, பைதுல் மக்திஸின் வீழ்ச்சியில் முக்கிய பங்காற்றியமை, உஸ்மானிய ஹிலாபத்தை வீழ்த்துவதற்கு முஸ்லிம்களின் எதிரிகளுடன் இணைந்து செயற்பட்டமை, முஸ்லிம்களின் அடிப்படைகளை அழிப்பதில் ஈடுபட்டமை, சமகாலத்தில் இஸ்லாமிய நாடுகளின் வீழ்ச்சி மற்றும் அந்த நாடுகளில் தற்போது நடைபெறும் அதிக விடயங்களில் பிரான்ஸூடன் இணைந்து பணியாற்றியமை, பணியாற்றுகின்றமை போன்ற பல விடயங்களை தங்களின் சாதனைகளாக இஸ்லாமிய உலகுக்கு வழங்கியிருக்கின்றனர். இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் காலங்களில் “இஸ்லாமிய வரலாற்றில் ஷீஆக்கள்” எனும் தலைப்பில் தனியான ஒரு நூலாக அவற்றை நாம் தருவதற்கு முயற்சிக்கின்றோம்.

ஷீஆக்கள் அன்றும் இன்றும்.?

இவ்வாறான விடயங்களை வரலாற்று ரீதியாக நாம் எடுத்துச் சொல்லும்போது, முஸ்லிம்களின் ஒற்றுமையில் அதிக அக்கறை கொண்டிருக்கும் சில சகோதரர்கள், இவையெல்லாம் சென்ற காலத்தில் நடந்தவை. ஆனால், தற்போது எமக்கிருக்கும் சதிகளையும் பிரச்சினைகளையும் முறியடிப்பதென்றால் நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டும் என்று குறிப்பிடுகின்றனர். இவர்களின் இந்தக் கருத்துக்கள் முற்றிலும் முரணானவை. வெறுமனே உணர்வுகளுக்கு அடிமைப்பட்டவை, ஆய்வின் அடிப்படையில் பெறப்பட்டவையல்ல. நிதானமான சிந்தனையுள்ள ஒருவரின் கருத்தாகவும் இது இருக்க முடியாது. இதை இன்னும் தெளிவுபடுத்தும் விதத்தில் ஷீஆக்களுடன் அதிக தொடர்புகளை பேணிய எமது அறிஞர்களின் சில கருத்துக்களை இங்கே தருகின்றோம்.

கலாநிதி. அஹ்மத் அல்ஆப்கானி: “நான் ஈராக், ஈரான், ஸவூதி, லெபனான் போன்ற நாடுகளில் வாழும் ஷீஆக்களுடன் உரையாடுபவனாகவும், விவாதிப்பவனாகவும் எட்டு ஆண்டுகள் வாழ்ந்துள்ளேன். எனது அனுபவத்தில் தற்போதைய ஷீஆக்களுக்கும் முந்திய ஷீஆக்களுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. அவர்களது நூல்களில் ஷீஆக்கள் பற்றி விபரிக்கப்பட்டிருப்பதற்கு ஏற்பவே வாழ்கிறார்கள்.” (பார்க்க: ஸிர்தாபுன் பீ ஈரான்)

கலாநிதி முஸ்தபா அஸ்ஸிபாஇ: ‘‘கெய்ரோவில் ஷீஆக்களுக்கும் ஸுன்னாக்களுக்கும் இடையில் நெருக்கத்தை ஏற்படுத்துவதற்காக ஒரு மையம் திறக்கப்பட்டது. ஆனால் நஜப், கும் போன்ற அவர்களின் அறிவகங்களில் வினைத்திறன் மிக்க இவ்வாறான செயற்பாடுகள் திறக்கப்படுவதை அவர்கள் நிராகரித்துவிட்டனர். ஏனெனில் ஒற்றுமை எனும் இந்த வாதத்தின் மூலம் அவர்களின் கொள்கையின் பால் எம்மை நெருக்கவும் ஏற்றுக்கொள்ளச் செய்யவுமே விரும்புகின்றனர்.’’ (பார்க்க: அஸ்ஸுன்னா வ மகானதுஹா பித்தஷ்ரீஇல் இஸ்லாமி)

முரண்பாடும் பிரிவினைகளும்.

சில அடிப்படைக் கொள்கைகளைத் தவிர ஷீஆக்களுக்கென்று அறுதியான கொள்கைகள் சிந்தனைகள் கிடையாது. அவர்களின் மதம் இன்று வரை முற்றுப்பெறாத மதமாகவே இருந்து கொண்டிருக்கின்றது. இதனால் அவர்களுக்குள் கருத்து முரண்பாடுகள் அதிகம். சிறிய விடயங்கள் பெரிய விடயங்கள் என்று அனைத்திலும் அவர்களிடம் கருத்துமுரண்பாடுகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. ஒரே விடயத்தில் ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்களை ஒருவரே சொல்வது அவர்களின் வழமையாக இருந்தது, இருக்கின்றது.

இஸ்லாமிய வரலாற்றில் தோன்றிய குழுக்களில் அதிகமான உட்பிரிவினைகளைக்கொண்ட குழுவாக ஷீஆ இனங்காட்டப்படு -கின்றது. சுமார் 70க்கும் அதிகமான பிரிவுகளாக பிரிந்துள்ளனர். ஒவ்வொரு இமாம் மரணிக்கும்போதும் அடுத்த இமாமைத் தேர்வு செய்வதில் பல குழுக்களாகப் பிரிவது அவர்களுக்கு கைவந்த கலை. ஒருவர் இமாமாக ஏற்றவரை மற்றவர் ஏற்பதில்லை. அத்தோடு நின்று விடாமல் ஷீஆக்களின் ஒவ்வொரு குழுவும் தன்னைத்தவிர மற்றக் குழுக்களை காபிர்கள் என்று சொல்வதுடன் இஸ்லாத்தின் வட்டத்தை விட்டும் வெளியேற்றிவிடுகின்றது. மேலும் மிகவும் இழிவான வார்த்தைகளால் அவர்களை விமர்சிக்கவும்

செய்கின்றது. சிறிய சிறிய விடயங்களுக்கெல்லாம் அவர்களிடம் பிரிவினைகள் உருவாகி இருப்பதை வரலாற்றில் காணமுடியும். இத்தகைய பிரிவுகளில் ஆரம்பமானது ஸபஇய்யா என்பதாகும். அப்துல்லாஹிப்னு ஸப∴. எனும் யூதனை தங்கள் வழிகாட்டியாகக் கொண்டவர்களே இவர்களாவர். இவ்வாறு தோற்றம்பெற்ற பல குழுக்கள் அழிந்து போனாலும், அவர்களின் சிந்தனைகளும் கருத்துக்களும் இன்றிருக்கும் குழுக்களிடம் பரவிக்கிடக்கின்றன. இஸ்மாயீலிய்யா, ஸைதிய்யா, நுஸைரிய்யா, ராபிழா, போரா என்பன இன்றிருக்கும் ஷீஆப்பிரிவுகளில் சிலவாகும்.

இவர்களில் ராபிழா எனும் குழுவே அதிகமான அங்கத்தவர்களையும் பெரும் அதிகாரத்தையும் பொருளாதார வளத்தையும் கொண்ட ஒரு குழுவாகக் காணப்படுகின்றது. இவர்கள் இமாமிய்யா இஸ்னா அஸரிய்யா என்றும் அழைக்கப்படுகின்றார்கள். தற்காலத்தில் ஷீஆ என்று சொல்லப்பட்டால் அது ராபிழாக்களையே குறிக்கும் என்று சில அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். இந்நூலில் நாம் ஷீஆக்களின் எல்லாப்பிரிவுகளின் கொள்கைகளையும், அது அல்குர்ஆன் அஸ்ஸுன்னாவுக்கு முரண்படும் விதத்தையும் விளக்கப்போவதில்லை. மாறாக ராபிழாக்களின் கொள்கைகளை அவர்களின் நூல்களிலிருந்து விளக்குவதற்கு முயற்சிக்கின்றோம். இன்ஷா அல்லாஹ்.

முக்கிய கொள்கைகள்.

ராபிழாக்களிடம் இஸ்லாத்திற்கு முரணான ஏராளமான கொள்கைகள் இருந்த போதிலும் பின்வரும் விடயங்களில் அவர்களின் கருத்துக்களை அவதானிப்பது அவர்களை விளங்கிக்கொள்ளப் போதுமானதாகும்.

01. அடிப்படை மூலாதாரங்கள்.
02. அல்லாஹ் பற்றிய அவர்களின் நம்பிக்கை.
03. இமாம்கள்.
04. ரஸூல் (ஸல்) அவர்கள் பற்றிய நம்பிக்கை.
05. அல்-குர்ஆன்.
06. அஸ்-ஸுன்னா.
07. ஸஹாபாக்கள்.
08. அல்-பதா..
09. அர்ரஜ்ஆ.
10. அத்தகிய்யா.
11. அல்-முத்ஆ.
12. அல்-ஹுமுஸ்.
13. அஹ்லுல்பைத்.
14. ஏனைய முஸ்லிம்கள்.
15. எதிர்பார்க்கப்படும் மஹ்தி.

இனி இத்தலைப்புக்கள் பற்றி விரிவாக ஆராய்வோம்.

அடிப்படை மூலாதாரங்கள்.

முஸ்லிம்களாகிய நாம் எமது அடிப்படை மூலாதாரங்களாக அல்குர்ஆன், அல்ஹதீஸ் என்பவற்றைக் குறிப்பிடுகின்றோம். இன்னும் இவை இரண்டுக்கும் முரண்படாத இஜ்மா, கியாஸ் போன்றவற்றையும் சேர்த்துக்கொள்ள முடியும் என இஸ்லாமிய அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். எவரும் சந்தேகிக்க முடியாதவாறு அல்குர்ஆன் எம்மிடம் பாதுகாப்பாக உள்ளது, ஹதீஸ்களை நாம் புஹாரி, முஸ்லிம், அபூதாவுத், திர்மிதி, நஸஈ, இப்னுமாஜா, அஹ்மத், ஹாகிம் போன்ற அடிப்படையான பல ஹதீஸ் நூல்களிலிருந்து பெற்றுக்கொள்கின்றோம் (ஹதீஸ்கள் நம்பகமானது, நம்பகமற்றது என்ற அடிப்படையில் ஆய்வு செய்தே ஏற்றுக்கொள்ளப்படுகின்றது) ஆனால், ஷீஆக்களைப் பொறுத்தவரை அவர்களின் அடிப்படை நூல்களும் மூலாதாரங்களும் எம்மிலிருந்து முற்றிலும் முரண்பட்டதாகவே உள்ளது.

ஷீஆக்களின் அடிப்படை நூல்களாக 08நூல்களைக் குறிப்பிடுகின்றனர். அதில் நான்கு முற்காலத்தில் வாழ்ந்த ஷீஆக்களின் அறிஞர்களுக்குரியது. மற்றையது பிற்காலத்தில் வந்தவர்களுக்குரியது. இவற்றில் உள்ளவை அனைத்தும் நம்பகமானவை என ஷீஆ அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஷீஆக்களின் முக்கிய அறிஞர்களில் ஒருவரான ஹாயிரி என்பவர் பின்வருமாறு சொல்கிறார்: ''ஷீஆக்களின் நம்பகமான நூல்களைப்பொருத்தவரை 08ஆகும்.''
(الوحـــدة الإســـلامية ــــ موضـــوع المقالـــة منهـــاج عملـــي للتقريـــب)

அந்த நூல்கள் பின்வருமாறு:

01.அல்காபி (الكـــــافي):

ஷீஆக்களிடம் மிகவும் நம்பகமான நூலாகக் கருதப்படும் இது முஹம்மது பின் ய∴கூப் என்பவரால் எழுதப்பட்டதாகும். இவர் இந்நூலை எழுதியதன் பின்பு 1200ஆண்டுகளாக உயிர் வாழ்ந்து கொண்டிருப்பவர் என்று ஷீஆக்கள் சொல்லக்கூடிய அவர்களின் 12வது இமாம் முஹம்மத் பின் ஹஸனிடம் காட்டினாராம். அவர்: இந்நூலைப் பார்த்துவிட்டு ''இது எமது ஷீஆக்களுக்கு போதுமானது'' என்றாராம். (مقدمــة أصــول الكــافي)

ஷீஆக்களிடம் உள்ள நூல்களில் மிகவும் நம்பகமானதும் நம்பகமான அறிவிப்பாளர் வரிசைகளைக் கொண்டதுமாக இந்நூல் இருக்கிறது என்பதில் ஷீஆ அறிஞர்கள் ஒருமித்த கருத்தில் உள்ளனர். ஷீஆக்கள் தங்களின் கொள்கை சார்ந்த விடயங்கள், வணக்கம், பண்பாடு போன்றவற்றுக்கெல்லாம் இந்நூலையே பிரதானமான ஆதாரமாகக் கொள்கின்றனர். ஷீஆக்களின் வரலாற்றில் இன்றுவரை அவர்களுக்கென்று இதுபோன்ற ஒரு நூல் கோர்வை செய்யப்படவில்லை என்பது அவர்களின் கருத்து

ஷீஆக்களிடம் முதன்மையானதாகக் கணிக்கப்படும் இந்நூலில் என்ன இருக்கிறது என்று ஆய்வு செய்தால் நபி (ஸல்) அவர்கள் மீதும், அவரின் குடும்பத்தினர் மீதும் பல விடயங்கள் இட்டுக்கட்டப்பட்டுள்ளன, அல்லாஹ் மீது அத்துமீறியிருக்கிறார்கள், இஸ்லாத்தைப் பற்றிய தப்பான பல கருத்துக்கள் உள்ளன, ஸஹாபாக்களை இஸ்லாத்தின் விரோதிகளாகக் காட்டப்படுகிறது,

அல்லாஹ்வின் வேதத்தில் கூட்டல், குறைத்தல், தவறான வார்த்தைகள் இருப்பதாக இந்நூல் சொல்கிறது.

இதில் வரும் அதிகமான செய்திகளுக்கு அறிவிப்பாளர் வரிசைகள் இல்லை, (பொதுவாக ஷீஆக்களிடம் உள்ள எந்த அறிவிப்பாளர் வரிசையும் பலமானது அல்ல என்பது தனி விடயம்) அதுபோல் நபி(ஸல்) அவர்கள் சொன்னதாக வரும் செய்திகள் மிகக் குறைவு, எல்லா செய்திகளும் பெரும்பாலும் இமாம் ஜ.்.பர் ஸாதிக் சொன்னதாகவே இருக்கும், மேலும் நபி (ஸல்) அவர்கள் சொன்னதாக வரும் செய்திகளில் பெரும்பான்மையானவை மற்றவர்களின் கருத்துக்களையும் சேர்த்து இரண்டறக்கலந்ததாக காணப்படுகின்றது.

மேலும் ஷீஆக்களின் இமாம்கள் பற்றி விளக்கும் இந்நூல் பின்வரும் தலைப்புக்களின் கீழ் விளக்கியுள்ளது. தலைப்புக்களை வாசிப்பது மாத்திரமே இந்நூலின் தன்மையை புரிந்துகொள்ளப் போதுமானது என்பதனால் அதில் வரும் சில தலைப்புக்களை மாத்திரம் இங்கே தருகிறேன்.

“இமாம்கள் அறிய நினைத்தால் அறிந்துவிடுவார்கள்.”

“நிச்சயமாக இமாம்கள் எப்போது மரணிக்கிறார்கள் என்பதை அறிகிறார்கள் அவர்களின் சுயதேர்வின் அடிப்படையிலே அன்றி அவர்கள் மரணிப்பதில்லை.”

“நிச்சயமாக இமாம்கள் என்ன நடந்தது என்ன நடக்கிறது என்ன நடக்கும் என்பதை எல்லாம் அறிவார்கள் அவர்களின் (அறிவுக்கு) எதுவும் மறைந்துவிடாது”

இவைகள்தான் ஒரு முஸ்லிமின் கொள்கைகளா? என்பதை சிந்தித்தாலே இந்நூலின் சீத்துவம் நமக்குத் தெளிவாகிவிடும்.

அன்புக்குரியவர்களே! ஷீஆக்களிடம் மிகவும் சிறந்த நூலாகிய இதுவே இந்த நிலையென்றால் மற்றையதை கேட்கவா வேண்டும்.?

02. மன்ழா யஹ்ழுருஹுல் பகீஹ்(من لا يحضره الفقيه):

ஷீஆக்களின் முக்கிய நூல்களில் இரண்டாம் இடத்தைப் பிடித்திருக்கும் இந்நூல் ஸதூக் என்ற சிறப்புப்பெயரைப் பெற்றுள்ள முஹம்மத் பின் அலி அல்கும்மி என்பவரினால் எழுதப்பட்டதாகும். மிகவும் அதிகமாக இவரைப் புகழ்ந்துள்ள ஷீஆக்கள் இவருக்கு 300க்கும் அதிகமான புத்தகங்கள் இருப்பதாகக் குறிப்பிடுகின்றனர். ஷீஆக்களின் சட்டம் சார்ந்த விடயங்களுக்கு இந்நூல் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

03, 04. தஹ்தீபுல் அஹ்காம், அல்இஸ்திப்ஸார் (تهذيب الأحكام ، الإستبصار فيما اختلف من الأخبار):

அல்-இஸ்திப்ஸார் என்பது தஹ்தீபுல் அஹ்காம் என்ற நூலின் சுருக்கமாகும். இதன்படி பார்த்தால் இரண்டும் ஒரு நூலாகவே கணிக்கப்படவேண்டும். ஆனாலும் ஷீஆக்கள் இவற்றை இரண்டு நூல்களாகவே குறிப்பிடுகின்றனர். இந்நூல்கள் அபூஜ.ஃபர் முஹம்மத் அத்தூஸி என்பவருக்குரியது. தங்களின் ஷெய்ஹ் என்று ஷீஆக்கள் இவரைப் புகழ்கின்றனர். ஹி385ல் பிறந்து 460ல் மரணித்த இவர் ஷீஆக்களின் அதிகமான அறிஞர்களால் புகழப்பட்டவர். இவருக்கு அதிகமான நூல்கள் இருப்பதாக ஷீஆக்கள் குறிப்பிடுகின்றனர்.

மேலே நாம் குறிப்பிட்ட மூன்று அல்லது நான்கு புத்தகங்களும் முற்காலத்தில் வாழ்ந்தவர்களுக்குரியது. அன்று முதல் இன்று வரை இந்த நான்கு நூல்களும் ஷீஆக்களிடம் பிரதானமான நூல்களாகவே கருதப்படுகின்றன என்று ஷீஆ அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

05. அல்-வாபி(F) الوافي :

மேலே குறிப்பிடப்பட்டுள்ள நான்கு நூல்களையும் ஒன்று சேர்த்து இந்நூல் எழுதப்பட்டுள்ளது. அந்நூல்களில்தெளிவற்றிருக்கும்

விடயங்கள் இதில் தெளிவுபடுத்தப் பட்டுள்ளன. எனவே இதைத் தனியொரு நூலாகக் குறிப்பிட முடியாது. ஆனால் ஷீஆக்கள் இதையே தங்களின் ஐந்தாவது நூலாகக் குறிப்பிடுகின்றனர். இது முஹ்ஸினுல் காஸானி என்று அழைக்கப்படும் முஹம்மது இப்னுல் முர்தழா என்பவரால் எழுதப்பட்டது. இவர் ஒரு ஹதீஸ் கலை, சட்டக்கலை மேதை என்றும், மிகச்சிறந்த அறிஞர் மற்றும் கவிஞர் என்றும், நிறைய நூல்கள் எழுதி இருப்பதாகவும் ஷீஆக்களின் முக்கிய அறிஞரான அல்-ஹுர்ருல் ஆமிலி குறிப்பிடுகின்றார் (أمل الآمل)

06. பிஹாருல் அன்வார் (بحـــار الأنـــوار) :

இது முஹம்மது பாகிர் அல்-மஜ்லிஸி என்பவருக்குரியது. ஹி.1110ல் பிறந்த இவர் பல நூல்களை இயற்றியுள்ளார். ஷீஆ வரலாற்றில் மிகப்பெரும் மேதையாக வர்ணிக்கப்படும் இவர், இறுதியாக வந்த முஜ்தஹித் என்று ஷீஆ அறிஞர் அர்தபீலி அவர்கள் தன்னுடைய ஜாமிஉர்ருவாத் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

07. வஸாயிலுஷ்ஷீஆ (وســـائل الشـــيعة فـــي تحصـــيل مســـائل الشـــريعة) :

முஹம்மத் பின் ஹஸன் அல்-ஹுர்ருல் ஆமிலி என்பவருக்குரியது இந்நூல். இவரும் பாகிருல் மஜ்லிஸியும் சம காலத்தில் வாழ்ந்தவர்கள். மஜ்லிஸி மரணித்து சில வருடங்களில் இவர் மரணித்தார். இவரது கப்ரு இன்று வரை தரிசிக்கப்படும் இடமாக உள்ளது. இவர் மிகப்பெரும் அறிஞராகவும் ஹதீஸ்கலை, சட்டக்கலை மேதையாகவும் ஷீஆக்களால் வரணிக்கப்படுகின்றார்.

08. முஸ்தத்ரகுல் வஸாயில் (مســـتدرك الوســـائل):

வஸாயிலுஷ்ஷீஆ எனும் 07ம் நூலின் சுருக்கமே இந்நூலாகும். எனவே, இதை தனியான ஒரு நூலாக குறிப்பிட முடியாது. ஆனால் ஷீஆக்கள் தங்களின் எட்டாவது நூலாக இதைக் குறிப்பிடுகின்றனர். முஹம்மதுல் ஹுஸைன் அந்நூரி அத்தப்ரஸி என்பவரே இந்நூலின் ஆசிரியராவார். இவர் ஹி.1320ல் மரணித்தார். ஷீஆ அறிஞர்களால் அதிகமாகப் புகழப்படும் இவர் ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் வாழ்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே, சரியாகச் சொன்னால் ஷீஆக்களின் அடிப்படை நூல்கள் ஐந்து என்றே சொல்ல வேண்டும், ஆனால் தங்களிடம் அதிகமான நூல்கள் இருப்பதைப்போல காட்டவேண்டும் என்பதற்காக 08நூல்கள் என்று ஷீஆக்கள் குறிப்பிடுகின்றனர். அதுபோன்று தற்போது ஷீஆ மதம்பற்றி எழுதும் ஷீஆ அறிஞர்கள் ஏராளமான நூல்கள் தங்களிடம் இருப்பதைப்போன்று காட்டுவதற்காக அடிப்படை நூல்கள் அல்லாத நூல்களையே அடிப்படை நூல்களாக குறிப்பிடுகின்றனர். இது பொதுமக்களை ஏமாற்றுவதற்கான முயற்சியாகும். அவர்கள் குறிப்பிடும் நூல்கள் பெரும்பாலும் இந்த 08நூல்களில் ஏதாவதொன்றில் வருவதாகவே குறிப்பிடுவர். எனவே, நாம் அந்த 08நூல்களையே (அல்லது 05நூல்களையே) ஷீஆக்களின் அடிப்படை நூல்களாக காணமுடிகின்றது.

முக்கிய குறிப்பு:

அன்புக்குரிய சகோதரர்களே! நாம் பின்பற்றும் இஸ்லாம் 1400ஆண்டுகளுக்கு முன்னால் நபி (ஸல்) அவர்களால் கொண்டுவரப்பட்டது எந்தவொரு மார்க்கமாயினும் அது உருவாகிய காலத்திலிருந்து எழுதப்பட்டவைகள் அல்லது அந்தக் காலத்திற்கு மிகவும் நெருக்கமான காலத்தில் எழுதப்பட்டவைகளே அதன்

நம்பகத்தன்மைக்கு சான்று பகர்வதாக இருக்கும். அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஅத்தினராகிய நம்மைப் பொறுத்தவரை நபியவர்களின் காலத்திலிருந்து எழுதப்பட்டவைகள் நமது கொள்கைகளுக்கு சான்று பகர்வதாக உள்ளனஅல்ஹம்துலில்லாஹ்.

இங்கே, ஷீஆக்களின் முக்கிய நூல்கள் நபியவர்கள் மரணித்து 250ஆண்டுகள் சென்றதன் பின்பே ஆரம்பிக்கின்றன. இது இக்கொள்கையின் நம்பகத் தன்மைக்கு விழும் மிகப்பெரும் அடியாகவுள்ளது. அதுபோல் நபியவர்கள் மரணித்து 1000ஆண்டுகள் சென்றதன் பின்பு வந்து ஷீஆக்களின் கொள்கைகளைப் பற்றி நூல்கள் எழுதப்படுகின்றன. பின்பு இவைகள் ஷீஆக் கொள்கையின் முக்கிய அடிப்படை நூல்களாக மாறுகின்றன. உண்மையில் பிற்பட்ட காலத்தில் வாழ்ந்தவர்கள் முன்சென்றவர்களிடமிருந்தே மார்க்க விடயங்களைப் பெறவேண்டும். ஆனால், அந்த நிபந்தனைகள் ஷீஆக்களிடம் இல்லை முன்சென்றவர்களுக்குத் தெரியாத பல மார்க்கவிடயங்களையும் பின்னால் வருபவர்கள் அறிவிக்க முடியும். இதனால்தான் தற்காலத்தில் எழுதப்படும் நூல்களும் அவர்களின் மத விடயங்களுக்கு ஆதாரங்களாகக் காட்டப்படுகின்றன. அல்லாஹ் போதுமானவன்.

அத்தகிய்யா/அத்துக்யா.

இந்நூலை வாசிக்கும் சிலர் இதில் குறிப்பிடப்படும் ஷீஆக்களின் கொள்கைகளை வாசிக்கும்போது ஆச்சரியத்தின் உச்சிக்கே சென்றுவிடலாம் அதனால் இதைப் பொய்ப்பிக்கவும் வாய்ப்பிருக்கிறது. சாதாரண மனிதன் கூட யோசிக்காத இது போன்ற விடயங்களை எம்மோடு பழகுகின்ற தொப்பி அணிந்த தாடி வைத்திருக்கக்கூடிய, ஜூப்பா அணியக்கூடிய, சிரித்துக் கதைக்கக்கூடிய, தலைப்பாகை அணியக்கூடிய இவர்கள் சொல்வார்களா? நிச்சயமாக இருக்காது இது ஏதோ ஒரு விரோதத்தின் காரணமாகவே இப்படி எழுதப்பட்டிருக்கிறது என்று நினைக்கலாம். நிச்சயமாக அவ்வாறு நினைப்பவர்களுக்கு பதிலாகவே இத்தலைப்பு இருக்கும். அதனால், இதை முதலில் சொல்வது பொருத்தம் என நினைக்கின்றேன்.

ஷீஆக்கள் பற்றி நாம் அவதானிக்கும்போது தகிய்யா எனப்படும் கொள்கை பற்றியும் ஷீஆக்களிடம் அதன் ஆழம் பற்றியும் முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். ஏனெனில் இஸ்லாத்திற்கு முற்றிலும் முரணான பல கொள்கைகளை ஷீஆக்கள் கொண்டிருந்த போதிலும், அக்கொள்கைகளை மற்றவர்களுக்கு அவர்கள் பகிரங்கப்படுத்துவதில்லை இப்போதும் அவர்கள் தங்கள் மதத்தின் பல அபாயகரமான கொள்கைகளைப் பிரச்சாரம் செய்கிறார்கள்; அது தொடர்பாக எழுதுகிறார்கள். ஆனால், அவைகள் எல்லாம் ஷீஆக் கொள்கையை ஏற்றுக்

கொண்டவர்களிடமே செய்யப்படுகிறது. இக்கொள்கையைப் பரப்புவதற்கு முனையும் போது, எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அடிப்படையில் பொதுவான விடயங்களையே பேசுகின்றனர். இது அவர்கள் எல்லோரிடமும் காணப்படும் ஒரு விடயம். இதனால், ஷீஆக்களைப் பற்றி இந்த சமுதாயத்திற்கு அறிமுகப்படுத்துவது கடினமான விடயம். அவர்களைப் பற்றி அவர்களின் நூல்களின் ஆதாரங்களுடன் நாம் தெளிவுபடுத்தும்போது பொதுமக்கள் மற்றும் இந்தத் துறையில் சரியான பரிச்சயம் இல்லாதவர்கள் எம்மைப் பொய்ப்பிக்கத் தலைப்படுவர். இதனால், அவர்களது கொள்கைகளைப் பற்றித் தெரிந்துகொள்வதற்கு முன்னால் இந்தக் கொள்கைகள் அனைத்தையும் அவர்கள் மறைத்துக்கொண்டு இந்த சமுதாயத்தில் நல்லவர்களாக எப்படி வாழ்கிறார்கள் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். இதனாலேயே இத்தலைப்பு இங்கு முற்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வளவு வழிகெட்ட கொள்கைகளையும் சிந்தனைகளையும் ஷீஆக்கள் வைத்துக்கொண்டு முஸ்லிம் சமூகத்திற்கு மத்தியில் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்களா? நல்லவர்களாக உலா வருகிறார்களா? இல்லை இது எதிர்ப்பாளரின் பொறாமையின் காரணமாக பழிவாங்கும் எண்ணத்தினால் அல்லது தங்களை இந்த சமுதாயத்தில் நிலை நிறுத்திக்கொள்ள நினைப்பவர்களின் கைங்கரியமா? என்ற சந்தேகங்களுக்கும் இத்தலைப்பு ஒரு ஒத்தணமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

ஷீஆக்கள் தங்களது அத்தனை வழிகெட்ட சிந்தனைகளையும் மறைப்பதற்கு நடிப்பதையும் பொய்யுரைப்பதையும் தங்கள் மதத்தின் முக்கிய கொள்கையாகக் கொண்டுள்ளனர். பொதுமக்களுக்கு தங்களுடைய கொள்கைகள் தெரியாதவகையில் நடித்தும், பொய்சொல்லியும் வாழ்கின்ற அதே நேரம், தங்கள் கொள்கையை ஏற்றுக்கொண்டவர்களுக்கு அக் கொள்கையை கற்பிப்பதை விடுத்து, வேறு துறைகளுடன் சேர்த்து படிப்படியாக தங்கள் கொள்கைகளைப்

போதிக்கின்றனர். தங்களின் அடிப்படை நூல்கள் எல்லோரது கரங்களுக்கும் சென்றுவிடாத வண்ணம் பார்த்துக்கொள்கின்றனர்.

தனக்கு ஏற்படப்போகும் உயிராபத்திலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக, சத்தியத்தை நம்பிக்கொண்டு அதற்கு எதிரான கருத்தை வெளிப்படுத்துதல் என்று தகிய்யாவை வரைவிலக்கணப்படுத்தலாம். இவ்வாறு செய்வது இஸ்லாமிய வழக்கில் தப்பன்று. ஆனால் இதுவே வாழ்க்கையன்று. தற்காலிகமாக அந்த நேரத்தில் ஏற்படும் நிகழ்வே அது. இதை இஸ்லாம் கடமையாக்கவில்லை. அதைத் தூண்டவுமில்லை. தகிய்யா இல்லாமலும் இருக்கலாம் அதுதான் உயர்ந்த நிலை, ஆனால் ஷீஆக்களிடம் இவ்வாறில்லை. நடிப்பதே அவர்களின் மதமாகும். அவர்களின் மதத்தின் பிரதான விடயமே நடிப்பாகக் கருதப்படுகின்றது.

இந்த நடிப்புக்கொள்கையும் பொய்யும் ஷீஆக்களின் உயர்மட்ட உறுப்பினர் தொடக்கம் அடிமட்ட உறுப்பினர் வரை ஆதிக்கம் செலுத்துகின்றன. உலகத்தில் நடிப்புக்காக ஒரு சமுதாயத்திற்கு பரிசு கொடுக்கவேண்டும் என்றால் ஷீஆ சமூகத்தைத் தவிர வேறு எவருக்கும் அதை வழங்க முடியாது. நடிப்பு அவர்களின் இரத்தத்தோடு கலந்திருக்கிறது. இதனால்தான் நீங்கள் எந்தவொரு ஷீஆவுடன் பேசினாலும் வேகமாக அவர் உங்களைக் கவர்ந்து -விடுவார். அவரது தொடர்பாடல் அந்தளவுக்கு கவர்ச்சியானதாக இருக்கும். தேன் வடியும் வார்த்தைகளையும், பாசம் கலந்த பாசாங்குகளையும் அதிகமாகப் பயன்படுத்துவார்.

இந்தளவுக்கு ஒவ்வொரு ஷீஆவிடமும் அது ஆழமாகப் பதிந்திருப்பதற்கு காரணம் அவர்களது மதத்தில் அந்தளவுக்கு தகிய்யா வலியுறுத்தப்பட்டிருப்பதாகும். இது தொடர்பாக அவர்களின் நூல்களில் வரும் சில அறிவிப்புக்களைப் பாருங்கள்.

ஷீஆக்களின் முக்கிய அறிஞர் முஹம்மத் ஜவாத் சொல்வதாகச் சொல்கிறார்கள்: "தகிய்யா என்றால் உனது உயிருக்கும், பொருளாதாரத்திற்கும் வரும் பாதிப்புக்களைத் தவிர்ப்பதற்காகவும் உனது கௌரவத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்காகவும், நீ நம்பியிருப்பதற்கு மாற்றமாக செய்தல் அல்லது சொல்லுதல்."

ஷீஆக்களின் முக்கியமான அறிஞர்களில் ஒருவரான முபீத் என்பவர் பின்வருமாறு சொல்கிறார்: "தகிய்யா என்பது ஷீஆக்கள் அல்லாதவர்களிடம் சத்தியத்தையும் அதை நம்பியிருப்பதையும் மறைத்தல்" (தஸ்ஹீஹுல் இ∴திகாத்)

எனவே, இந்த வரைவிலக்கணத்தின்படி, ஒருவர் தன் மானத்தைப் பாதுகாப்பதற்காக தனக்கு இருக்கும் கௌரவத்தைப் பாதுகாப்பதற்காக பொய்யுரைக்க முடியும் என்று சொல்லப்படுகிறது. இதை வைத்துத்தான் ஷீஆக்கள் தாங்கள் வாழும் பகுதிகளில் தங்களின் கொள்கையை வெளிப்படுத்தினால் தங்களின் கௌரவம் கெட்டுவிடும் என்பதற்காக நடித்து வாழ்கின்றனர்.

தங்கள் கௌரவத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்காக பொய்சொல்லி நடித்து வாழ்வதன் முக்கியத்துவம், அதன் சிறப்புப் பற்றி ஷீஆக்களின் நூல்களில் வந்திருக்கும் அறிவிப்புக்களைப் பாருங்கள்.

"நடித்து வாழ்வது ஒரு மு∴மினின் மிகவும் சிறந்த அமலாகும்." (தப்ஸீருல் ஹஸன் அல்அஸ்கரி)

சகோதரர்களே! பொய்யாக வாழ்வதையே தங்களின் சிறந்த அமலாக ஷீஆக்கள் சொல்வதைப் பார்த்தீர்களா?

"பொய்சொல்லி நடித்து வாழ்தல் இல்லை என்றால் எமது தோழர்களிலிருந்து எமது எதிரிகள் அறியப்பட்டிருக்கமாட்டார்கள்." (தப்ஸீருல் ஹஸன் அல்அஸ்கரி)

எனவே பொய் சொல்வதும், நடித்து வாழ்வதும் ஷீஆக்கள் தங்களுக்குள் தங்களை இனங்காட்டிக் கொள்வதற்கான வழிமுறை என்பது தெளிவாகிறது.

உண்மையில் ஒருவர் நடிக்காதவராக இருந்தாலே அவரின் உண்மை நிலையை அறிந்துகொள்ள முடியும். ஆனால் இங்கே ஷீஆக்களின் அறிவிப்பு அறிவுக்கு பொருத்தமற்றதாகும்.

“அல்லாஹ்வின் மீது ஆணையாக: தகிய்யாவைக் (நடிப்பைக்) கொண்டு அல்லாஹ் வணங்கப்பட்டதைப்போல மிகவும் விருப்பமானது அவனுக்கு எதுவுமில்லை.” (வஸாயிலுஷ்ஷீஆ)

உலகத்தில் ஈரான் சினிமா நன்றாக இருப்பதற்கு இதற்குமேல் உங்களுக்கு காரணம் தேவைப்படாது என்று நினைக்கிறேன். நடிப்பையே தங்களின் வணக்கமாகவும், முழு வாழ்க்கையாகவும் ஆக்கிக் கொண்டவர்களிடம் நிச்சமாயக அது இருக்கும்.

“யாரிடம் நடிப்பு இல்லையோ அவனிடம் ஈமான் இல்லை” (உஸூலுல் காபி)

அல்லாஹ் இந்த வழிகெட்ட கும்பலிலிருந்து எம்மைப் பாதுகாப்பானாக.

இவர்களின் கொமைனி சொல்கிறார்: “நிச்சயமாக நபிமார்களை ஏனைய படைப்புக்களை விட அல்லாஹ் சிறப்பித்தது அவர்கள் மனிதர்களிடம் நடித்து வாழ்ந்ததினால் ஆகும்.” (அல்மகாஸிப் அல்முஹர்ரமா)

ஸுப்ஹானல்லாஹ் சத்தியத்தைச் சொல்வதற்காகவும் மற்றவர்கள் அதைப் பின்பற்றவேண்டும் என்பதற்காகவும் பல இன்னல்களைத் தாங்கிக் கொண்டு தங்களின் உயிரையும் துச்சமாக மதித்து இறைபாதையில் உண்மைக்காக உயிர் நீத்த நபிமார்கள் பற்றி இப்படிச் சொல்வதற்குஇவர்களைப் போன்ற கொமைனிகளால்தான் முடியும்.

நபிமார்கள் நடித்து மற்றவர்களுடன் பொய் சொல்லி வாழ்ந்தார்கள் என்றால் ஏன் கொலை செய்யப்பட்டார்கள்? ஏன் துரத்தப்பட்டார்கள்? ஏன் துன்புறுத்தப்பட்டார்கள்? ஏன் நபியவர்கள் கல்லெறிபடவேண்டும் இதெல்லாம் யூதப்பரம்பரைக்கு எங்கே விளங்கப்போகிறது?

அன்புக்குரிய சகோதரர்களே, இஸ்லாம் ஆரம்பகாலத்தில்தான் பெரும் சக்திமிக்க ஒன்றாக இருந்தது. அந்தக்காலத்தில் வாழ்ந்த அவர்களது அறிஞர்கள் இஸ்லாத்தை மறைத்து வாழவேண்டும் என்று சொல்கிறார்கள் என்றால், நிச்சயமாக அவர்கள் இஸ்லாம் என்று சொன்னது இஸ்லாத்திற்கு முரணானதாக இருந்திருக்கிறது என்பதைத்தானே விளங்க முடியும்.

சரி இந்த நடிப்புக்கொள்கையை விடுவதால் என்ன ஆபத்து. ஷீஆக்களின் நூல்கள் அதையும் தெளிவுபடுத்துகின்றன.

“தகிய்யாவை விட்டவன் தொழுகையை விட்டவன் போன்றாவான்.” (மன்லா யஹ்லுருஹுல் பகீஹு, வஸாயிலுஷ்ஷீஆ)

“தகிய்யாவை விடுவது ஒருவனை நரகத்தின் தீயில் தள்ளிவிடும் அளவு அவனை அழிக்கும் விடயமாகும், அது நபித்துவத்தை நிராகரிப்பதற்கும் அல்லாஹ்வை நிராகரிப்பதற்கும் சமனாகும்.” (குமைனிக்குரிய அல் மகாஸிப் அல்முஹர்ரமா)

சகோதரர்களே! தகிய்யாவை நிராகரிப்பவருக்கு அல்ல தகிய்யாவை விடுபவருக்கு இத்தகைய ஆபத்துக்கள் இருக்கின்றன என்றால்... பொய்யான வாழ்க்கையை தங்களின் மதமாக ஷீஆக்கள் அறிமுகப்படுத்துகிறார்கள். அல்லாஹ் எம்மைப் பாதுகாப்பானாக.

“மார்க்கத்தின் தொண்ணூறு வீதமான விடயங்கள் அதை மறைத்து நடித்து வாழ்வதிலேயே தங்கியுள்ளது. தகிய்யாவை விட்டவன் மார்க்கத்தை விட்டவனாவான்.” (உஸூலுல் காபி)

எனவே, ஷீஆக்களின் கொள்கை அதை மறைப்பதில்தான் உயிர்வாழ்கிறது என்பது இங்கே தெளிவாகிறது.
“நிச்சயமாக தகிய்யாவை விடுவது ஒருபோதும் மன்னிக்கப்படாத ஒரு குற்றமாகும்.” (பிஹாருல் அன்வார்)

ஷீஆக்களின் இமாம்களில் ஒருவர் சொல்கிறார்: “நிச்சயமாக நீங்கள் ஒரு மார்க்கத்தில் இருக்கிறீர்கள். யார் அதை மறைத்தானோ அவனை அல்லாஹ் கௌரவிப்பான், யார் அதை வெளிப்படுத் -தினானோ அல்லாஹ் அவனை இழிவுபடுத்துவான்.” (அல் காபி)

“தகிய்யாவை விட்டவன் காபிராவான்” (உஸூலுல் காபி, அல் இ.ஃ.திகாதாத்)

ஸுப்ஹானல்லாஹ்! பொய்யுரைப்பதில் ஷீஆக்களுக்கு நிகர் அவர்களேதான்.

முக்கிய குறிப்பு:

அன்புக்குரிய சகோதரர்களே! இத்தகைய அறிவிப்புக்களால் எங்களுக்கு ஒரு உண்மையை தெளிவுபடுத்துகின்றனர். நிச்சயமாக ஷீஆ அறிஞர்கள் பொதுமக்களைவிட்டும் அவர்களது மதத்தில் இருக்கும் நிறைய விடயங்களை மறைத்திருக்கிறார்கள், அவற்றை மறைப்பது கடமை எனவும் கருதியிருக்கிறார்கள்.

இதனால் ஷீஆ என்ற போர்வையில் இருக்கும் பொதுமக்களுக்கு சில விடயங்களைக் கேள்விப்படும்போது ஆச்சரியமாக இருக்கலாம். ஆனால் அதுதான் உண்மையானது.

இது பற்றி ஷீஆ இமாம்களில் ஒருவரிடத்தில் ஒருவர் கேட்கிறார், “எங்களில் பொய்யன் என்று அறியப்பட்டவன் ஒருவன் வருகிறான். அவன் நீங்கள் சொன்னதாக ஒரு செய்தியைச் சொல்கிறான். அதை நாம் வெறுக்கிறோம்!! அதற்கு இமாம் சொல்கிறார்: அவன் வந்து உன்னிடம் நான் பகலை இரவு என்றும் இரவைப் பகல் என்றும் சொன்னேன் என்று சொல்கிறானா? அதற்கு வந்தவர், இல்லை என்கிறார். தொடர்ந்து இமாமவர்கள் சொல்கிறார்கள்: அவ்வாறு

நான் சொன்னேன் என்று சொன்னாலும் அதை நீ பொய்ப்பிக்காதே ஏனெனில் அது என்னைப் பொய்ப்பிப்பதாகும்." (பஸாயிறுத்தரஜாத்)

இந்த அறிவிப்புக்கள் எல்லாம் ஷீஆ அறிஞர்கள் சொல்லும் விடயங்களை வெறுக்கின்ற ஷீஆக்களும் இருக்கிறார்கள் என்பதைச் சொல்கின்றன. ஆனாலும், அவர்களை கிணற்றுத் தவளைகளாக அவர்களது அறிஞர்கள் கட்டிப்போட்டிருக்கிறார்கள் என்பது தெரிகிறது.

சரி இந்த நடிப்பு எங்கெல்லாம் செய்ய வேண்டும் என்று ஷீஆக்கள் சொல்லும்போது.

முஸ்லிம்கள் வாழும் நாடுகளில் தகிய்யா கடமையாகும். (ஜாமிஉல் அஹ்பார், பிஹாருல் அன்வார்)

யார் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் ஈமான் கொண்டிருக்-கிறாரோ! அவர் முஸ்லிம்கள் வாழும் நாடுகளில் தகிய்யாவுடனே அன்றி பேசவேண்டாம். (ஜாமிஉல் அஹ்பார், பிஹாருல் அன்வார்)

தகிய்யாவுடன் அஹ்லுஸ்ஸுன்னாக்களை சேர்ந்து வாழ்வது கடமையாகும். (வஸாயிலுஷ்ஷீஆ)

இந்த நடிப்பு எதுவரை? அதையும் ஷீஆக்களின் நூல்கள் சொல்கின்றன.

"யார் நாம் எதிர்பார்த்திருக்கும் மஹ்தி வருவதற்கு முன்னால் தகிய்யாவை விட்டானோ அவன் எம்மைச் சார்ந்தவன் அல்ல" (அஃலாமுல் வலா, இக்மாலுத்தீன்)

எதற்காக மஹ்தி வரும்வரை இப்படி இருக்கவேண்டும்? அவர்களது முக்கியமான அறிஞர் முஹம்மத் பாகிர் ஸத்ர் தெளிவுபடுத்துகிறார்: "தகிய்யாவை விடுவது மஹ்தி வெளியாகுவதற்கு தேவையான தூய்மையான கலப்படமற்ற போதியளவு ஷீஆக்கள் உருவாகுவ-தற்கு தடையாக அமைந்துவிடும்." (தாரீஹுல் கைபா அல்குப்ரா)

உண்மை என்ன.?

உண்மையில், ஷீஆக்களின் கொள்கைகளை நம்பியவர்கள் மரணிக்கும்வரை அதிலேயே இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் மஹ்தி வரும்வரை இந்த தகிய்யா இருக்க வேண்டும் என்ற ஒரு கொள்கையை உருவாக்கியிருக்கிறார்கள். ஏனெனில் ஷீஆக்கள் சொல்லும் மஹ்தி உலகம் அழிந்தாலும் வரப்போவதில்லை. ஏனெனில், உலகத்தில் பிள்ளை இல்லாத ஒருவருக்கு பிள்ளை இருந்ததாகவும், இன்றுவரை 1170ஆண்டுகளுக்கும் மேலாக எவருடைய கண்ணிலும் படாமல் உயிர்வாழ்வதாகவும், அவரே மஹ்தியாக வருவார் என்றும் குறிப்பிடுகின்றனர். இது நடக்கும் காரியமா? ஊசி முனையில் ஒட்டகம் புகுந்த கதையல்லவா இது. ஏமாறும் ஷீஆக்கள் உள்ளவரை ஏமாற்றும் அவர்களின் அறிஞர் கூட்டம் உயிர் வாழ்ந்துகொண்டே இருக்கும்.

பொய்யை மார்க்கமாக்கிக்கொண்ட பெருங்குடியார்.

அன்புக்குரிய சகோதரர்களே, ஏன் இவ்வாறான ஒரு கொள்கையை ஷீஆக்கள் உருவாக்கிக் கொண்டார்கள் என்ற ஒரு கேள்வி உங்களுக்குள் எழலாம்.

ஷீஆக்களைப் பொறுத்தவரைக்கும் அவர்கள் முஸ்லிம்களுக்கு மத்தியில் யூத சிந்தனைகளை விதைத்து அல்குர்ஆன் அஸ்ஸுன்னாவிலிருந்து முஸ்லிம்களைத் தூரமாக்குவதற்காக இஸ்லாமியராக நடிப்பவர்கள். இதனால் யூதர்களுக்கு எதிரான முஸ்லிம்களின் போக்கைத் தணிப்பதும் அவர்களின் இன்னுமொரு குறிக்கோள்.

எனவே, இந்தக்கொள்கைகளை முஸ்லிம்களிடம் சொன்னால் நிச்சயமாக அவர்கள் ஷீஆக்களை எதிர்க்கவும் இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் குழப்ப முயற்சிக்கும் இவர்களுக்கு முடியுமான தண்டனைகளை வழங்குவதற்கும் முயற்சிப்பார்கள் என்பது யாவரும் ஏற்றுக்கொள்ளும் விடயமாகும்.

இதுவே இஸ்லாமிய வரலாற்றில் ஷீஆக்களுக்கு நடந்தது. இஸ்லாத்திற்கு எதிரான கருத்துக்களை இஸ்லாம் என்ற போர்வையில் முஸ்லிம்களுக்கு மத்தியில் அவர்கள் முன்வைத்தபோது அவர்கள் தண்டிக்கப்பட்டார்கள். எனவே, எதிர்காலத்திலும் இவ்வாறு நடந்துவிடாமல் ஷீஆ இனம் தொடர்ந்தும் வாழ்வதற்காக இந்த நடிப்புக்கொள்கையை அவர்களது மதத்தின் பிரதானமான ஒன்றாக மாற்றிக்கொண்டார்கள்.

இவர்களது இந்தக்கொள்கைக்கும் இஸ்லாத்திற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. சகோதரர்களே, நபியவர்கள் இந்தக்கொள்கையைப் பின்பற்றியிருந்தால் இந்த மார்க்கம் உலகத்தில் பரவியிருக்குமா? அவர்கள் மக்காவிலும் தாயிபிலும் கஸ்டங்களை அனுபவிக்க வேண்டுமா? ஸஹாபாக்கள் இதைப் பின்பற்றியிருந்தால் ஏன் அவர்கள் துன்புறுத்தப்படவேண்டும்? ஏன் அவர்கள் நாட்டை விட்டும், சொத்து, குடும்பம் அத்தனையையும் விட்டு விட்டு செல்ல வேண்டும்? அவர்கள் உண்மையில் தகிய்யாவுடன் இருந்திருந்தால் நாம் குர்ஆனை ஹதீஸை எப்படி இன்றைக்கு படிப்பது.?

இவைகளெல்லாம் ஷீஆக்களின் கொள்கை முற்று முழுதாக இஸ்லாத்திற்கு முரணானது என்பதை எடுத்துக்காட்டுகின்றன.

தன் உயிருக்கு ஆபத்து வரும்போது இஸ்லாத்தை மறைத்து குப்ரை வெளிப்படுத்துவதை அல்குர்ஆனிலே அல்லாஹ் ஆகுமாக்கியிருக்கிறான். அதைக் கடமையாக்கவில்லை. அல்குர்ஆன் சொல்லும் கொள்கைக்கும் ஷீஆக்களின் இந்தத் தகிய்யாவிற்கும் எந்த தொடர்புமில்லை.

அல்லாஹ் இந்த யூத கும்பலிலிருந்து எம்மையும் எம் சமூகத்தையும் பாதுகாப்பானாக.

நடித்துக்கொண்டு மற்றையவர்களுடன் சேர்ந்து அமல் செய்யலாமா?

தங்களின் பேச்சில் பொய் சொல்வதற்கு ஷீஆக்களுக்கு அனுமதி இருக்கிறது. இதுபோல் மற்றவர்களுடன் சேர்ந்துநடித்துக்கொண்டு அவர்கள் ஈடுபடும் அதே அமல்களில் ஈடுபட முடியுமா என்று கேட்டால், அவ்வாறு செய்வதற்குத் தூண்டுவதுடன் அதற்கு பல நன்மைகள் இருப்பதாகவும் அவர்களது நூல்கள் குறிப்பிடுகின்றன.

யார் நடித்துக்கொண்டு அவர்களுடன் முதல் வரிசையில் நின்றுகொண்டு தொழுகிறானோ அவன் நபியவர்களுடன் முன் வரிசையில் நின்று கொண்டு தொழுதவன் போன்றாவான். (பிஹாருல் அன்வார்)

நடித்துக்கொண்டு தொழுவதற்கு இவ்வளவு நன்மையா? இதைச் சொன்னவன் நிச்சயம் இறைவனை அஞ்சியவனாக இருக்கமுடியாது. அல்லாஹ் எம்மை இத்தகைய சிந்தனையிலிருந்து பாதுகாப்பானாக.

“யார் முனாபிக்குகளுக்குப் பின்னால் (ஷீஆ அல்லாதவருக்குப் பின்னால்) நடித்துக்கொண்டு தொழுகிறானோ அவன் இமாம்களுக்குப் (ஷீஆக்களின் இமாம்களுக்குப்) பின்னால் தொழுதவன் போன்றாவான்.” (ஜாமிஉல் அஹ்பார்)

ஏன் இந்த தகிய்யா?

இந்தளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக ஏன் ஷீஆக்கள் தகிய்யாவை மாற்றிக்கொண்டார்கள்? பொய் சொல்லி நடித்து வாழ்வதற்கு இவ்வளவு சிறப்புக்களை ஏன் உருவாக்கிக் கொண்டார்கள்? அதனால் இவர்களுக்கு என்ன இலாபம் என்பதை ஆய்வு செய்யும்போது பின்வரும் விடயங்களைக் குறிப்பிடலாம்.

ஷீஆக்களின் கொள்கை முன்பின் முரண்பாடுகளைக்கொண்டது. எந்தவொரு கொள்கையை எடுத்துக்கொண்டாலும் அதற்கு முரண்படும் கொள்கையை அவர்களது மத்ஹபில் சொல்லியிருக் -கிறார்கள்.

இவ்வாறு ஒன்றுக்கொன்று முரண்படும் பல செய்திகள் ஷீஆக்களின் நூல்களில் இருக்கின்றன என்பதை அவர்களது அறிஞர்களே ஏற்றுக்கொள்கின்றனர். அதை ஒரு பெரும் இழிவாகவும் கருதுகிறார்கள். தகிய்யா என்ற இந்தக் கொள்கையின் மூலம் குறித்த ஒரு நேரத்தில் குறிப்பிடும் கருத்துக்கு எதிராக வரும் செய்தியை தகிய்யாவின் அடிப்படையில் சொல்லப்பட்டது. உண்மையானது இதுதான் என்று முரண்பாடுகளை மூடிமறைக்கின்றனர்.

இது இஸ்லாமிய சமுதாயத்திற்கு மத்தியில் பிளவை ஏற்படுத்தும் ஒரு சாதனமாகப் பயன்படுத்தப்படுகின்றது. ஷீஆ மத்ஹபில் அஹ்லுஸ்ஸுன்னாக்களுக்கு ஒத்துப்போவதைப்போல வரும் அனைத்து செய்திகளையும் இது தகிய்யாவின் அடிப்படையில் சொல்லப்பட்டது என்று கூறி இரண்டு குழுக்களுக்கும் மத்தியில் தொடர் பிரிவினையையும் வளர்க்கின்றனர்.

அதுபோல் தங்களின் இமாம்களிடம் ஏற்படும் தவறுகளை மறைப்பதற்கும், தங்களில் ஏற்படும் தவறுகளை மறைப்பதற்கும் தகிய்யாவைப் பயன்படுத்திக்கொள்கின்றனர்.

ஷீஆக்கள் தங்களின் இமாம்களாகக் குறிப்பிடும் அஹ்லுல் பைத்தினருக்கும் ஷீஆக்களின் கொள்கைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இதனால் அலி(ரழி) அவர்களும் ஷீஆக்களுக்கு தண்டனை வழங்கினார்கள். இவ்வாறு அஹ்லுல் பைத்தைச் சேர்ந்தவர்கள் இருந்ததினால் ஷீஆக்களின் கொள்கைகளுக்கு எதிராக அஹ்லுல் பைத் இமாம்கள் பேசியிருக்கிறார்கள்.

இதையெல்லாம் ஒரு வார்த்தையில் ஷீஆக்கள் மறுக்கிறார்கள். அதாவது அஹ்லுஸ்ஸுன்னாவுக்கு உடன்படுவதைப்போல வந்திருக்கும் அஹ்லுல் பைத்துகளின் கருத்துக்கள் அனைத்தும் ‘‘தகிய்யா’’வின் அடிப்படையில் அவர்கள் செய்தது என்று கூறிவிடுகின்றனர். இதனால் இந்த தகிய்யா இவர்களிடம் முக்கியமானதாக இருக்கிறது.

ஷீஆக்களின் முக்கிய அறிஞரான முபீத் என்பவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: “ தகிய்யாவின் அடிப்படையில் அவர்கள் சொன்னது, அமல் செய்வதற்காக சொன்னவற்றைவிட குறைவாகவே உள்ளது.” என்று குறிப்பிடுகின்றார். (தஸ்ஹீஹுல் இ∴.திகாத்)

அதுபோல் மற்றவர்களை கொலை செய்வதற்கு அவர்களுடன் சேர்ந்து வாழவும் இந்த நடிப்புக்கொள்கை அவர்களுக்கு உதவி செய்கிறது.

எனவே, ஷீஆ மதத்தைப் பொறுத்தவரை தகிய்யா இன்றியமையாத ஒன்றாகத் தொழிற்பட்டு வருகின்றது.

அல்லாஹ் பற்றிய ஷீஆக்களின் நம்பிக்கை.

இஸ்லாத்தின் நம்பிக்கைக் கோட்பாடுகளில் முக்கியமானதும் முதன்மையானதும் அல்லாஹ் பற்றிய நம்பிக்கையாகும். இந்த நம்பிக்கையில் மக்கள் எப்போதெல்லாம் தவறினார்களோ அப்போதெல்லாம் இறைத்தூதர்கள் அனுப்பப்பட்டார்கள் என்று குர்ஆன் சொல்கிறது. அனைத்து செயற்பாடுகளுக்கும் இதுவே அடிப்படையானதாகும். அனைத்து நபிமார்களும் முதலிலே இதைத்தான் பிரச்சாரம் செய்தார்கள். இஸ்லாம் சொல்லும் அல்லாஹ் பற்றிய நம்பிக்கையை தெளிவாக விளங்கிக் கொள்வதற்கு அதனை மூன்று வகையாகப் பிரித்து நோக்கலாம். அல்குர்ஆன் அஸ்ஸுன்னாவில் அல்லாஹ் பற்றி வரும் எந்த செய்தியாக இருந்தாலும் இதற்குள் அடக்க முடியும்.

அவையாவன:

01. அல்லாஹ்வின் செயற்பாடுகள் பற்றிய நம்பிக்கை. (அர்ருபூபிய்யா)
02. அல்லாஹ்வின் பெயர்கள் பண்புகள் பற்றிய நம்பிக்கை. (அல் அஸ்மாஉ வஸ்ஸிபாத்)
03. வணக்க வழிபாடுகள் அனைத்தையும் அவனுக்கே செலுத்த வேண்டும் என்று நம்புவதுடன், அவனுக்கே செலுத்துதல். (அல்உலூஹிய்யா)

அல்லாஹ்வின் செயற்பாடுகள் பற்றிய நம்பிக்கை:

அல்லாஹ்வின் செயற்பாடுகள் பற்றிய நம்பிக்கையில் அல்லாஹ் தவிர்ந்த அனைத்தையும் அவனே படைத்தான் என்றும். அவனே காப்பவன். அழிப்பவன் என்றும், அவன் செய்வதாக அல்குர்ஆனும் நபிகளார் (ஸல்) அவர்கள் சொன்னவை அனைத்தையும் அவனே செய்கிறான் என்றும் நாம் நம்ப வேண்டும். இச்செயற்பாடுகளில் அவனுக்கு உதவியாளர்களோ, நிகரானவர்களோ எவரும் இல்லை என்றும் நம்பவேண்டும். இது முஸ்லிம் அல்லாத காபிர்களிடமும் இருக்கின்ற நம்பிக்கை என்று அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது. நபி (ஸல்) அவர்களை எதிர்த்த மக்கா வாசிகளிடம் இந்நம்பிக்கை காணப்பட்டதாக அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.

“வானங்கள் பூமி அனைத்தையும் யார் படைத்தார் என்று நபியே நீர் அவர்களிடம் கேட்டால் நிச்சயமாக அவர்கள் அல்லாஹ் என்று சொல்வார்கள்.” (31:25)

“பூமி வரண்டு போனதன் பின்பு வானத்தில் இருந்து மழையை இறக்கி அதில் புற்பூண்டுகளை முளைக்கச் செய்பவன் யார் என்று அவர்களிடம் நீ கேட்டால் அதற்கு அல்லாஹ் என்று நிச்சயம் அவர்கள் சொல்வார்கள். அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் என்று நபியே நீர் சொல்லும். ஆனாலும் அவர்களில் அதிகமானவர்கள் சிந்திக்கிறார்கள் இல்லை.” (29:63)

“அவர்களைப் படைத்தது யார் என்று நபியே! நீர் அவர்களிடம் கேட்டால் நிச்சயமாக அல்லாஹ் என்று அவர்கள் சொல்வார்கள்.” (43:87)

“வானத்திலிருந்தும் பூமியிலிருந்தும் உங்களுக்கு உணவளிப்பவன் யார்? அல்லது பார்வைகளையும் கேள்வியையும் சொந்தமாக்கிக் கொண்டிருப்பவன் யார்? உயிரற்றதிலிருந்து உயிருள்ளதையும்,

உயிருள்ளதிலிருந்து உயிரற்றதையும் வெளியாக்குபவன் யார் என்று அவர்களிடம் நபியே நீர் கேட்டால், நிச்சயமாக அல்லாஹ் என்று அவர்கள் சொல்வார்கள். நீங்கள் அவனை அஞ்சக்கூடாதா என்று அவர்களிடம் நீர் கேட்பீராக.'' (10:31)

இவ்வாறு அல்குர்ஆன் பல இடங்களில் மக்காவாசிகள் அல்லாஹ்வின் செயற்பாடுகள் விடயத்தில் வைத்திருந்த நம்பிக்கையைக் குறிப்பிடுகின்றது. மக்காவாசிகளிடம் காணப்பட்ட இத்தகைய நம்பிக்கையில் கூட ஷீஆக்கள் அல்குர்ஆனுக்கும் அஸ்ஸுன்னாவிற்கும் முரண்படுகின்றனர். அல்லாஹ்வுக்கு எத்தகைய செயற்பாடுகள் எல்லாம் இருக்கின்றன என்று அல்குர்ஆனும் அஸ்ஸுன்னாவும் சொல்கிறதோ, அவை அத்தனையும் தங்களின் இமாம்களுக்குரியதாக ஷீஆக்கள் தங்களின் நூல்களில் பதிவு செய்துள்ளனர்.

இத்தகைய அறிவிப்புக்கள் அவர்களின் நூல்களில் ஏராளமாகக் காணப்படுகின்றன. உதாரணத்திற்காக அவைகளில் சிலவற்றை இங்கே தருகின்றேன்.

ஷீஆக்களின் அறிஞர்களில் ஒருவர் தன் மாணவனுக்குச் சொல்கின்றார்: ''மறுமையும் இந்த உலகமும் இமாமுக்குரியது என்பது உனக்குத் தெரியாதா? அவர் விரும்பிய விதத்தில் அதை வைக்கிறார், விரும்பியவரிடம் அதைக்கொடுக்கிறார்.'' (அல்காபி)

ஷீஆக்களின் இமாம்களில் ஒருவர் பற்றிப் பின்வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது: ''நிச்சயமாக அஹ்லுல் பைத்தான எங்களிடம் உலகம் இப்படி இருக்கிறது என்று சொல்லிவிட்டு தனது கையைப் பத்துப்போல சுருட்டிக்காட்டினார்.'' (அல் இஹ்திஸாஸ்)

பத்துப்போன்று எப்படி வைப்பது என்பதற்கு இன்னுமொரு ஷீஆ அறிஞர் விளக்கம் சொல்கிறார்: ''ஆட்காட்டி விரலின் நுனியை

பெருவிரலின் மடிப்பில் இரண்டும் ஒன்றாகச்சேர்ந்து ஒரு வளையம் போல உருவாகும் விதத்தில் வைப்பதாகும். அதாவது இந்த உலகம் இமாமிடத்தில் இந்த வளையம் போன்றது, அவர் அதில் விரும்பியதை நிகழ்த்துவார்.'' (அல்இஹ்திஸாஸ் எனும் நூலின் அடிக்குறிப்பு மஜ்லிஸி என்பவருக்குரியது.)

அலி (ரழி) அவர்கள் பெயரில் ஷீஆக்கள் சொல்லும் இன்னுமொரு அறிவிப்பைப் பாருங்கள்: ஒரு முறை கூபாவின் மிம்பரிலே அலி (ரழி) அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள்: அப்போது ''உங்கள் பெற்றோருக்கு உபகாரம் செய்யுங்கள்'' எனும் அல்குர்ஆன் வசனத்திற்கு ''நானும் நபி (ஸல்) அவர்களும் என்பதுதான், **பெற்றோர்** என்பதன் விளக்கம் என்று சொன்னார்கள். அப்போது, ஒரு மனிதர் எழுந்து அபூதாலிபின் மகனே! நீ ஹிஜாஸ் வாசிகளை மயக்கிவிட்டாய். குர்ஆனுக்கு இப்படி நீ விளக்கம் சொல்வதன் மூலம் இங்கே ஈராக் வாசிகளுக்கும் சூனியம் செய்யவா வந்திருக்கிறாய்.? என்று கேட்டார்.

அவனை அலி அவர்கள் ஓரக்கண்ணால் பார்த்தார்கள். அவன் காகமாக மாறி மக்களில் இருந்து பறந்து பள்ளியின் கூரையில் இருந்து கொண்டு கரைந்து கொண்டிருந்தான். இதை மக்கள் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.'' (ஸலூனி கப்ல அன் தப்கிதூனி)

அதே நூலில் வரும் மற்றொரு அறிவிப்பில் பின்வருமாறு உள்ளது: ஒரு தடவை அலி அவர்கள் கூபாவின் மிம்பரில் உரை நிகழ்த்திக்கொண்டிருந்தாராம். அப்போது அங்கிருந்த மக்களைப் பார்த்து, 'மக்களே என்னை இழப்பதற்கு முன்னால் என்னிடம் கேட்டுக்கொள்ளுங்கள். இந்த உலகின் பாதைகளை நான் அறிவதைவிட வானத்தின் வாயில்களையே அறிகின்றேன்' என்றார்:

உடனே, அங்கிருந்தவர்களில் ஒருவர் எழுந்து அமீருல் முஃ. மினீனே! வானவர் ஜிப்ரில் தற்போது எங்கிருக்கிறார்? என்று கேட்டார்: அதற்கு அலி (ரழி) அவர்கள்: விடு. நான் பார்க்கிறேன்

என்று கூறிவிட்டு, மேலேயும் பார்த்தார், பூமியையும் பார்த்தார் மேலும், வலது இடது பக்கங்களையும் பார்த்தார், பின்பு கேட்ட மனிதரைப் பார்த்து நீதான் ஜிப்ரீல் என்றார். உடனே அவர் கூட்டத்திலிருந்து தனது இறக்கையால் பள்ளியின் கூரையைப் பிழந்து கொண்டு பறந்து சென்றார். பின்பு அலி (ரழி) அவர்கள் கூறினார்கள்: நான் வானத்தைப் பார்த்தேன். அர்ஸின் மேல் வரை பார்த்தேன். பூமியைப் பார்த்தேன். ஏழு பூமி, அதன் ஆழம் வரை எனது பார்வை சென்றது, வலப்புறம் பார்த்தேன். இடப்புறம் பார்த்தேன். படைக்கப்பட்ட எல்லாவற்றையும் கண்டேன். அந்தப் படைப்பினங்களில் ஜிப்ரீலைக் காணவில்லை. எனவே, கேட்டவர்தான் ஜிப்ரீல் என்பதை உணர்ந்துகொண்டேன்.''

அலி(ரழி) அவர்கள் கூபாவின் மிம்பரிலே ஒரு நாள் உரையாற்றினாராம் அதில் பின்வருமாறு சொன்னாராம்: ''அல்லாஹ்வின் மீது ஆணையாக! நிச்சயமாக நான்தான் மறுமை நாளில் மனிதர்களுக்கு கணக்குத் தீர்ப்பவன். நரகம் சுவர்க்கத்தைப் பிரிப்பவன்'' (துப்ஸீரு புராத் அல் கூபி)

அலி (ரழி) அவர்கள் பெயரில் சொல்லப்படும் இன்னுமொரு அறிவிப்பைப் பாருங்கள். பனீ மஹ்ஸூம் கோத்திரத்தைச் சேர்ந்த ஒருவர் வந்து பின்வருமாறு கூறினார்: எனது மாமாவே, எனது சகோதரன் மரணித்துவிட்டான். அவன் மீது நான் அதிக கவலை அடைகின்றேன். அதற்கு அலி அவர்கள் நீ அவனைக் காண விரும்புகின்றாயா? என்று கேட்டார். ஆம், என்று அந்த இளைஞன் சொல்ல அவரின் கப்ரை எனக்குக் காட்டு என்று அலி சொன்னார். நபி (ஸல்) அவர்களின் போர்வையை அணிந்துகொண்டு வெளியேறினார். கப்ரிடம் சென்றடைந்தபோது அவருடைய உதடுகள் முனுமுனுத்தன பின்பு அவருடைய காலினால் குத்தினார். (மரணித்த) அவர் பாரசீக மொழியைப் பேசிக்கொண்டு வெளியில் வந்தார். அவரிடம் நீ அரபு மொழி பேசுபவனாகத்தானே மரணித்தாய்! என்று அலி (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கவர்

நான் அபூபக்ரினதும் உமரினதும் வழிமுறையில் மரணித்தேன். அதனால் எனது மொழி மாறிவிட்டது என்றார்.'' (அல்காபி, பிஹாருல் அன்வார்)

“ஷீஆக்கள் இமாமாக மதிக்கும் மூஸா பின் ஜஃபர் ஒரு தடவை மினாவில் அழுதுகொண்டிருந்த ஒரு பெண்ணைக்கடந்து சென்றார்களாம். அந்தப் பெண்ணைச் சூழ அவளின் குழந்தைகளும் அழுதுகொண்டிருந்தனர். அவளது ஒரு மாடு செத்திருந்தது. மூஸா அவர்கள் அந்தப்பெண்ணிடம் இறைவனின் அடிமையே உங்களுக்கு அந்த மாட்டை நான் உயிர்ப்பித்துத் தரட்டுமா? என்று கேட்டார்கள். அதற்கவள் ‘ஆம்’ என்றதும், அவர் மாட்டை சத்தமிட்டு அழைத்தார். அதைப் பலமாகக் குத்தினார். அது பூமியின் மேலே எழுந்து நின்றது. உடனே அந்தப்பெண் அல்லாஹ்வின் மீது ஆணையாக மர்யமின் மகன் இவர்தான் என்று கூச்சலிட்டாள்.'' (அல்காபி)

“ஒவ்வொரு வாரமும் இரண்டு தடவைகள் அல்லாஹ்வின் நேசரான அலியிடம், வானவர்கள் மக்களின் செயற்பாடுகளை எடுத்துக்காட்டுகின்றனர்.” “நிச்சயமாக இந்தப்பூமி ஒரு இமாமிடத்தில உங்கள் ஒருவரின் கையிலிருக்கும் திர்ஹம் போன்றது. அதை அவர் விரும்பும் விதத்தில் புரட்டுகிறார்.'' (கலிமதுல் இமாமில் மஹ்தி பில் ஹாமிஸ். ஹஸன் ஸீராஸிக்குரியது)

ஸூம்ரா சொல்கிறார்: இந்த மின்னல் இடி எல்லாம் உங்கள் தோழரின் வேலைதான் என்று அபூ அப்தில்லாஹ் அவர்கள் கூறினார்கள். அதற்கு நான் எங்கள் தோழர் என்றால் யார்? என்று கேட்டேன். அமீருல் முஃமினீன் (அலி) தான் என்று அவர் கூறினார். (பஸாயிருத்தரஜாத்)

இங்கே குறிப்பிட்ட அறிவிப்புக்களில் எல்லாம் ஷீஆக்கள் இறைவனின் செயற்பாடுகள் அனைத்தையும் தங்களின் இமாம்களுக்கு வழங்கியிருப்பதைக் காணமுடிகின்றது.

அல்லாஹ்வின் பெயர்கள் பண்புகள் பற்றிய நம்பிக்கை. (அல் அஸ்மாஉ வஸ்ஸிபாது).

அல்லாஹ்வுக்கென்று அழகிய பெயர்களும் பண்புகளும் இருக்கின்றன. அவன் கேட்பவனாகவும் பார்ப்பவனாகவும் இருக்கின்றான். இது போன்று அல்லாஹ்வும் நபியவர்களும் அல்லாஹ்வுக்கு இருப்பதாகக் கூறிய பெயர்கள் பண்புகள் அனைத்தையும் எந்த மாற்றங்கள், திருத்தங்கள், கருத்துச்சிதைவுகளும், ஒப்புவமையுமின்றி நம்புவது நமது கடமையாகும். அவை அனைத்தும் இறைவனின் வல்லமைக்கும் சக்திக்கும் ஏற்ப எப்படி இருந்தால் அவனுக்குப் பொருந்துமோ அப்படி இருக்கிறது என்று நம்புவதே ஓர் இறை விசுவாசியின் பண்பாகும்.

இந்த விடயத்தில் ஷீஆக்கள் அல்குர்ஆனுக்கும் அஸ்ஸுன்னாவுக்கும் முரண்படுகின்றனர். அல்லாஹ்வுக்கு பெயர்களும் இருக்கின்றன பண்புகளும் இருக்கின்றன. ஆனால் அவற்றுக்கு அர்த்தங்கள் இல்லை என்று சொல்கின்றனர். அதாவது பார்ப்பவன் என்று அல்லாஹ்வுக்கு பெயர் உள்ளது ஆனால் அவன் பார்ப்பதில்லை. உதவி செய்பவன் என்று அவனுக்கு பெயர் உள்ளது ஆனால் அவன் உதவி செய்வதில்லை. அவைகளை இமாம்களே செய்கிறார்கள் என்பது ஷீஆக்களின் கருத்து. இது தொடர்பாக அவர்களது நூல்களில் ஏராளமான செய்திகள் பதிவாகியுள்ளன. உதாரணத்திற்கு ஒன்றை மாத்திரம் இங்கே தருகிறேன். இமாம்கள் பற்றிய ஷீஆக்களின் நம்பிக்கை என்ற தலைப்பில் இதை விரிவாக அவதானிக்கலாம்.

“அலிதான் இந்த சமுதாயத்தின் கணக்குத்தீர்ப்பவர், அதன் சாட்சியாளரும் கேள்விகணக்குக் கேட்பவரும் அவர்தான்.... அல்லாஹ்வின் பார்க்கும் கண்ணும் கேட்கும் காதும், தனது படைப்பினங்களுக்கு மத்தியில் பேசும் நாவும் அவர்(அலி)தான். மேலும் தனது அடியார்கள் மீது அருளாக விரிக்கப்பட்டிருக்கும் கரமும், வானங்கள் பூமியில் உள்ள அவனது முகமும், வெளிப்படையான வலப்பக்கமும் அவர்(அலி)தான். (கிதாபு ஸலீம் பின் கைஸ்)

இங்கே ஷீஆக்கள் அல்லாஹ்வை இகழ்வதை நாம் அவதானிக்கலாம். எனவே, இந்த நம்பிக்கையிலும் முற்றுமுழுக்க ஷீஆக்கள் இஸ்லாத்திற்கு முரண்பட்டே உள்ளனர்.

வணக்க வழிபாடுகள் அனைத்தையும் அவனுக்கே செலுத்த வேண்டும் என்று நம்புவதுடன், அவனுக்கே செலுத்துதல். (அல் உலூஹிய்யா).

இறைவனுக்கு மாத்திரமே எமது வணக்க வழிபாடுகளைச் செலுத்தவேண்டும் என்று நம்புவதும் அவ்வாறு செலுத்துவதும் எமது கடமையாகும். இதை அல்குர்ஆனும் அஸ்ஸுன்னாவும் தெளிவாக விபரிக்கின்றன. முதலில் குறிப்பிட்ட இரண்டையும் இதனையும் உள்ளடக்கிய இறைவன் பற்றிய நம்பிக்கையே இஸ்லாத்தின் மிகவும் பிரதானமான கொள்கையாகும். இந்த மூன்றில் ஒன்றில் பிரச்சினை ஏற்பட்டாலும் அவன் இறைவனை நம்பவேண்டிய விதத்தில் நம்பியவனாகக் கருதப்படமாட்டான். மக்காவாசிகளிடம் இறைவனுடைய செயற்பாடுகள் விடயத்தில் தெளிவான நம்பிக்கையிருந்த போதிலும் அவர்கள் தங்களின் வணக்க வழிபாடுகளை இறைவன் அல்லாதவர்களுக்குச் செலுத்தினார்கள் என்ற காரணத்தினால் அல்லாஹ் அவர்களை முஷ்ரிக்குகள், காபிர்கள் என்று குறிப்பிடுகின்றான்.

இந்த விடயத்திலும் ஷீஆக்கள் அல்குர்ஆன் அஸ்ஸுன்னாவுக்கு முரண்படுகின்றனர். வணக்கவழிபாடுகள் அனைத்தையும் தங்களின இமாம்களுக்குச் செலுத்துகின்றனர். இறைவனுக்கு மாத்திரம் செலுத்துவது எம்மை அழித்துவிடும் செயல் என்றும் குறிப்பிடுகின்றனர்.

ஷீஆக்களிடம் தவ்ஹீத் (இறைவனுக்கு மாத்திரம் வணக்கங்களை செலுத்துதல்) என்பது அவர்களின் இமாம்களை ஈமான் கொள்வதாகும். ஷிர்க் இணைவைப்பு என்பது அவர்களின்

இமாம்களுக்கே சொந்தமான ஆட்சி அதிகாரத்தில் இன்னுமொருவரை சேர்ப்பதைக் குறிக்கும். இமாம்களை ஏற்றுக்கொள்வதினாலேயே பிழைகள் பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்படும், இமாம்களின் உதவியில்லாமல் அல்லாஹ்வை நெருங்க முடியாது, இமாம்களின் மூலமே தங்களின் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியும், நபிமார்கள் கூட இமாம்களிடம் பிரார்த்தித்துத்தான் வெற்றியடைந்தார்கள். என்றெல்லாம் குறிப்பிடும் ஷீஆக்கள் அல்குர்ஆனில் தவ்ஹீத் மற்றும் இணைவைப்பு தொடர்பாக வந்துள்ள வசனங்களை தங்களின் கொள்கைக்கு ஏற்ப மாற்றிக்கூறுகின்றனர்.

இது தொடர்பாக ஷீஆக்களின் முக்கிய நூல்களில் வந்துள்ள சில அறிவிப்புக்களை அவதானிப்போம்.

“நிச்சயமாக உனக்கும் உனக்கு முன்னர் இருந்தவர்களுக்கும் வஹி அறிவிக்கப்பட்டதெல்லாம்: நீ இணைவைத்தாலும் உனது அமல்கள் வீணாகிவிடும். நிச்சமாக நீ நஸ்டவாளியாக மாறிவிடுவாய்.” எனும் இறைவசனத்திற்கு விளக்கம் சொல்லும் போது ‘நீ இணைவைத்தால்’ என்பது நீ ஆட்சியில் அலியுடன் இன்னுமொருவரை கூட்டுச்சேர்த்தால் என்று கருத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த வசனம் இறங்கியதற்கான காரணத்தை ஷீஆ அறிஞர்கள் விளக்கும்போது. “அல்லாஹுதஆலா அலி (ரழி) அவர்களை அத்தாட்சியாக மக்களுக்கு முன் நிறுத்துமாறு நபியவர்களுக்கு கட்டளையிட்டபோது, முஆத் பின் ஜபல் நபியவர்களிடம் வந்து அலியுடைய ஆட்சியில் அபூபக்ர், உமரையும் சேர்த்துச் சொல்லுங்கள். அப்போதுதான் மனிதர்கள் அமைதியடைவாகள், உங்களை உண்மைப்படுத்துவார்கள் என்று கூறினாராம், பின்பு நபியவர்களுக்கு “நபியே உனக்கு உனது இரட்சகனிடமிருந்து இறக்கி வைக்கப்பட்டதை எத்தி வைப்பாயாக” என்ற வசனம்

இறங்கியபோது நபியவர்கள் ஜிப்ரீல் (அலை) அவர்களிடம் ‘‘நிச்சயமாக மனிதர்கள் என்னைப் பொய்ப்பிப்பார்கள், என்னை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்’’ என்று முறையிட்டாராம். அப்போதுதான் அல்லாஹ்: ‘‘நபியே நீர் இணைவைத்தால்..’’ என்ற வசனத்தை இறக்கினான் என்று சொல்லப்பட்டுள்ளது. (அல்காபி)

ஆனால், குறித்த வசனத்தின் தொடர்ச்சியை முழுமையாக அவதானித்தால் ஷீஆக்களின் பொய் அம்பலமாகிவிடும்.

நபியவர்கள் சொன்னார்களாம்: ‘‘என்னை நபியாக அனுப்பியவன் மீது ஆணையாக, உங்களில் ஒருவர் மலைகள் போன்று அமல் செய்துகொண்டு நாளை மறுமையில் வருவார். ஆனால் அவர் அலியின் ஆட்சியில் நம்பிக்கையில்லாதவராக இருந்தால் அவரை அல்லாஹ் நரகத்தில் முகங்குப்புறத் தள்ளுவான்.’’ (அமாலிஷ் ஷெய்ஹ் அத்தூஸி)

‘‘ஓர் அடியான் நாளை மறுமையில் 70நபிமார்கள் செய்த அமலுடன் வந்தாலும் அலியின் ஆட்சியையும் அஹ்லுல் பைத்தின் ஆட்சியையும் ஏற்காதவரை அல்லாஹ் அவனுடைய அமல்களை ஏற்கமாட்டான்.’’ (பிஹாருல் அன்வார்)

ஷீஆக்களின் இமாம்களில் ஒருவர் சொல்கிறாராம்: ‘‘அல்லாஹ் சொல்கிறான்: நிச்சயமாக அல்லாஹ்விடமிருந்தல்லாத அநியாயக்கார ஆட்சியாளர்களை ஏற்றுக்கொண்ட ஒவ்வொரு அடியானையும் அவன் நன்மை செய்திருந்தாலும் தக்வாவுடன் இருந்தாலும் அவனைத் தண்டிப்பேன். அதுபோல் அல்லாஹ்விடமிருந்து வந்த நீதியான ஒவ்வொரு ஆட்சியாளர்களையும் ஏற்றுக்கொண்ட எவராகிலும் அவர் அநியாயம் செய்திருந்தாலும் மோசமாக நடந்திருந்தாலும் அவரை நான் மன்னிப்பேன்.’’ (நு.ஃமானி என்பவருக்குரிய அல்ஙைபா)

அநியாயக்கார ஆட்சியாளர்கள் என்று ஷீஆக்கள் சொல்வது அபூபக்ர் (ரழி), உமர் (ரழி), உஸ்மான் (ரழி) போன்றவர்கள், நீதியான ஆட்சியாளர்கள் என்று கூறுவது அலி (ரழி) மற்றும் ஷீஆக்கள் ஏற்றுக்கொள்ளும் இமாம்கள்.

நபி (ஸல்) சொன்னார்களாம்: "யார் லாஇலாஹ இல்லல்லாஹ் என்று சொன்னானோ அவன் சுவனம் நுழைவான்" அப்போது அங்கிருந்த மனிதர்களில் ஒருவர் நாங்கள் லாஇலாஹ இல்லல்லாஹ் என்று சொல்கிறோம் நாம் சுவனம் நுழைவோமா? என்று கேட்டார் அதற்கு நபியவர்கள் அலியின் தலையில் கையை வைத்து கலிமா இவரின் ஊடாகவும் இவரது அணியின் ஊடாகவுமே ஏற்றுக்கொள்ளப்படும் என்றார்களாம்." (பிஹாருல் அன்வார்)

"12 இமாம்களும்தான் அல்லாஹ்வின் வாயில்கள். அவனிடம் செல்வதற்கான வழியும் அவர்கள்தான். அவனை அறிவிப்பவர்களும் அவர்கள்தான். நிச்சயமாக அவர்கள் நூஹ் (அலை) அவர்களின் கப்பல் போன்றவர்கள். யார் ஏறினாரோ அவர் வெற்றி பெற்றார் யார் ஏறவில்லையோ அவர் வெள்ளத்தில் மூழ்கி அழிந்துபோனார்." (அகாயிதுல் இமாமிய்யா)

ஷீஆக்களின் அடிப்படை நூல்களில் ஒன்றான பிஹாருல் அன்வார் எனும் நூலின் ஆசிரியர் மஜ்லிஸி என்பவர் தனது நூலில் பின்வரும் தலைப்பை இடுகிறார்: "நிச்சயமாக மனிதர்கள் இமாம்களின் மூலமே நேர்வழி பெறுவார்கள், அல்லாஹ்வுக்கும் மனிதர்களுக்கும் இடையில் உள்ள தரகர்கள் இமாம்கள்தான், நிச்சயமாக இமாம்களை அறிந்தவனே சுவனம் நுழைவான்"

ஷீஆக்களின் இமாம்களில் ஒருவர் பின்வருமாறு சொல்கிறார்: மனிதர்களின் சோதனை மிகவும் பெரியது. அவர்களை நாம் அழைத்தால் எம்மை அவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. ஆனால்

அவர்களை நாம் விட்டால் எங்களை விட்டு விட்டு அவர்களால் நேர்வழியைப் பெறவும் முடியாது.'' (அமாலி அஸ்ஸதூக்)

ஷீஆக்களின் இமாம்கள் சொல்கிறார்களாம்: "யார் எங்களைக் கொண்டு அல்லாஹ்வை அழைத்தானோ. அவன் வெற்றி பெற்றான் யார் மற்றவர்களைக் கொண்டு அல்லாஹ்வை அழைத்தானோ அவன் வழிகெட்டான். வழிகேட்டைத் தேடிக்கொண்டான்.'' (வஸாயிலுஷ்ஷீஆ)

''நிச்சயமாக நபிமார்களின் பிரார்த்தனைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டதெல்லாம் இமாம்களின் உதவியினாலும் அவர்களின சிபாரிசினாலுமே ஆகும்.'' (வஸாயிலுஷ்ஷீஆ)

ஷீஆக்களின் இமாம்களில் ஒருவர் சொன்னதாக ஷீஆக்கள் பின்வருமாறு பதிவுசெய்துள்ளனர்: "நூஹ் (அலை) அவர்கள் கப்பலில் ஏறிய போது அது மூழ்கப் பார்த்தது. அவர் எங்களைக் கொண்டு அல்லாஹ்வை அழைத்தார். அல்லாஹ் அவரைப் பாதுகாத்தான், இப்றாஹீம் (அலை) அவர்கள் நெருப்பில்எறியப் பட்டபோது எங்களைக் கொண்டு அல்லாஹ்வை அழைத்தார். அல்லாஹ் நெருப்பை குளிராக்கினான். மூஸா (அலை) அவர்கள் கடலில் அடித்தபோது எங்களைக்கொண்டு அல்லாஹ்வை அழைத்தார். அல்லாஹ் அதைப் பாதையாக்கினான். ஈஸா (அலை) அவர்களை யூதர்கள் கொலை செய்யப்பார்த்த போது அவர் எங்களைக்கொண்டு அல்லாஹ்வை அழைத்தார் அல்லாஹ் அவரை அதிலிருந்து பாதுகாத்து அவரை உயர்த்தினான்.'' (பிஹாருல் அன்வார்)

இவ்வாறு நூற்றுக்கணக்கான அறிவிப்புக்களை ஷீஆக்கள் பதிவு செய்து வைத்துள்ளனர்.

இதுபோல் இமாம்களுக்காக அறுத்துப்பலியிடுவதும், அவர்களிடம் பிரார்த்திப்பதும், நேர்ச்சை செய்வதும் அவர்களிடம் மலிந்துகிடக் -கின்ற மிகவும் முக்கியமான விடயங்களாகும்.

ஷீஆக்களின் பிரதான நூல்களில் ஒன்றான 'பிஹாருல் அன்வார்' எனும் நூலில்: இமாம்கள் மிகப்பெரும் நோய் நிவாரணியாகும், அவர்களைக்கொண்டு நோய் நிவாரணத்தை வேண்டுவோருக்கு மருந்தாகவும் அவர்கள் இருக்கிறார்கள் என்று வந்துள்ளது. மேலும் அதே நூலின் இன்னுமொரு அறிவிப்பில், "உனக்கு ஏதாவது அல்லாஹ்விடம் தேவையிருப்பின் அல்லாஹ்வின் அருளால் ஒரு துண்டை எழுது. நீ விரும்பினால் அதை இமாம்களின் கப்ருகளில் ஏதாவது ஒரு கப்ரில் போடு, அதை மடித்துக் கட்டி தூய்மையான களிமண்ணைக் குழைத்து அதற்குள் வைத்து ஓடும் ஒரு நதியில் அல்லது ஒரு ஆழமான கிணற்றில் அல்லது ஒரு நீர்த் தொட்டியில் போடு. நிச்சயமாக அது இமாமவர்களைப் போய்ச் சேரும். அவராகவே முன்னின்று உனது தேவையை நிறைவேற்றுவார்."

இந்த இமாம்களை வணங்குவதே ஷீஆக்களிடம் மிகப்பெரும் இபாதத்தாகக் கருதப்படுகின்றது.

"இமாம் ஹுஸைனுடைய கப்ரை தரிசிப்பது இருபது ஹஜ்ஜுக்கு நிகராகும். மேலும் இது உம்ரா ஹஜ்ஜை விடவும் சிறப்புக்குரியதாகும்." (அல்காபி)

"அபூ அப்தில்லாஹ் அவர்களின் கப்ரை யார் தரிசித்தானோ அவனுக்கு 80 ஏற்றுக்கொள்ளப்பட்ட ஹஜ்ஜுகள் செய்த நன்மை எழுதப்படும்." (வஸாயிலுஷ்ஷீஆ)

அதுபோல் உலகில் இறைவனின் முதல் ஆலயமும் எல்லோரும் நோக்கும் இல்லமுமான க.்.பதுல்லாஹ்வில் அமல் செய்வதை விடவும் ஷீஆக்களிடம் கர்பலாவில் அமல்செய்வதே சிறந்தது என்றும் அதுவே உலகின் மிகவும் சிறந்த இடம் என்றும் அவர்களது நூல்களில் எழுதி வைத்துள்ளனர். ஷீஆக்களின் பின்வரும் அறிவிப்பை நிதானமாக வாசியுங்கள்:

“க.்.பா அமைத்திருக்கும் அந்த நிலம் ஒரு முறைஎன்னைப்போன்று (உலகில்) யார் இருக்கிறார் அல்லாஹ்வின் (முதல்) ஆலயம் என்னில்தான் கட்டப்பட்டுள்ளது, உலகின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் என்னை நோக்கியே வருகிறார்கள், நான் அல்லாஹ்வின் ஹரமாகவும் (இரட்சிக்கப்பட்ட) இடமாகவும் ஆக்கப்பட்டுள்ளேன் என்று சொன்னதாம். அதற்கு அல்லாஹு தஆலா அந்த நிலத்திடம் பின்வருமாறு சொன்னானாம்: மௌனமாக இரு அமைதியாக இரு, கர்பலா அமைந்திருக்கும் இடத்தின் சிறப்புடன் உனது சிறப்பை ஒப்பிடும்போது கடலில் ஒரு ஊசியை நுழைத்து எடுக்கும்போது அதன் முனையில் வரும் நீர் அளவுதான் உள்ளது. மேலும் அந்த கர்பலா மண் இல்லையென்றால் உன்னை நான் சிறப்பித்திருக்கமாட்டேன்,கர்பலா பொதிந்திருக்கின்ற எதுவும் அதில் இல்லையென்றால் உன்னை நான் படைத்திருக்க மாட்டேன், நீ பெருமைப்படும் அந்த இல்லத்தையும் (க.்.பாவையும்) நான் படைத்திருக்கமாட்டேன், எனவே கர்பலா நிலத்துக்கு பெருமை அடிக்காமலும் அதை நையப்புடைக்காமலும் அதற்கு முற்றிலும் அடிபணிந்து பணிவானதாக நீ மாறிவிடு. அமைதியாக இரு, அவ்வாறு நீ செய்யவில்லையென்றால் உன்னை நான் கோபிப்பேன் உன்னை ஜஹன்னம் எனும் நரகத்தில் போடுவேன்.”

இவ்வாறான பல அறிவிப்புக்கள் ஷீஆக்களின் நூல்களில் இருப்பதால்தான் ஷீஆக்கள் ஹஜ் உம்ரா செய்வதை பெரிதுபடுத்துவதில்லை. மாறாக எப்படியாவது ஹுஸைனின் கப்ரை தரிசித்துவிடவேண்டும் என்பது அவர்களின் வாழ்நாள் இலட்சியமாக உள்ளது.

இஸ்லாத்தின் பெயரால் எப்படியெல்லாம் நடக்கிறது பார்த்தீர்களா? அல்லாஹ் எம்மனைவரையும் இந்த நாசகாரக் கும்பலிலிருந்து பாதுகாப்பானாக.

இமாம்கள் பற்றிய நம்பிக்கை.

ராபிழாக்களிடம் அல்லாஹ் பற்றிய நம்பிக்கைக்கு சற்றும் குறையாத அல்லது அதைவிட முக்கியமான ஒரு நம்பிக்கையாக இமாம்கள் பற்றிய நம்பிக்கை உள்ளது. இமாம்கள் பற்றிய நம்பிக்கையே அவர்களின் அனைத்துக் கொள்கைகளினதும் அச்சாணியாகத் திகழ்கின்றது. நாம் மேலே 'அல்லாஹ்வைப் பற்றிய ஷீஆக்களின் நம்பிக்கை' எனும் தலைப்பில் குறிப்பிட்ட சில அறிவிப்புக்கள் இமாம்கள் விடயத்தில் ராபிழாக்கள் எந்தளவுக்கு எல்லை மீறிய நம்பிக்கையைக் கொண்டிருக்கின்றனர் என்பதை தெளிவுபடுத்துகின்றது. இமாம்கள் பற்றிய நம்பிக்கையே ஷீஆக்களிடம் ஒருவன் முஸ்லிமா இல்லையா என்பதை தீர்மானிப்பதாகவுள்ளது. இமாம்கள் விடயத்தில் ஷீஆக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை என்ன என்பதை தெளிவுபடுத்துவதற்கு முன்னால், அவர்கள் தங்களின் இமாம்களாகக் குறிப்பிடுபவர்கள் யார் என்பதை சுருக்கமாக நோக்குவோம். அலி (ரழி) அவர்களுடன் அவரது பரம்பரையில் வந்த 12 பேரையே ராபிழாக்கள் தங்களின் இமாம்கள் என்று குறிப்பிடுகின்றனர். இதனாலேயே அவர்கள் இமாமிய்யா என்றும் இத்னா அஸரிய்யா என்றும் அழைக்கப்படுகின்றனர்.

அவர்களின் பெயர்கள் பின்வருமாறு.

01. அலி (ரழி) அவர்கள் (மரணம் ஹி:40)
02.அலி (ரழி) அவர்களின் மகன் ஹஸன் (ரழி) (பி:3 – ம:50)
03. அலி (ரழி) அவர்களின் மற்றொரு மகன் ஹுஸைன் (ரழி) (பி: 4 – ம: 61)
04. ஹுஸைன் (ரழி) அவர்களின் மகன் அலி (ரஹ்) (பி:38 – ம:95)
05. அலி (ரஹ்) அவர்களின் மகன் முஹம்மத் (ரஹ்) (பி: 57 – ம: 114)
06. முஹம்மத் (ரஹ்) அவர்களின் மகன் ஜ.ஃ.பர் (ரஹ்) (பி: 83 – ம: 148)
07. ஜ.ஃ.பர் (ரஹ்) அவர்களின் மகன் மூஸா (ரஹ்) (பி:128 – ம: 183)
08. மூஸா (ரஹ்) அவர்களின் மகன் அலி (ரஹ்) (பி:148 – ம:202)
09. அலி (ரஹ்) அவர்களின் மகன் முஹம்மத் (ரஹ்) (பி: 195 – ம: 220)
10.முஹம்மத் (ரஹ்) அவர்களின் மகன் அலி (ரஹ்) (பி: 212 – ம:254)
11. அலி (ரஹ்) அவர்களின் மகன் ஹஸன் (ரஹ்) (பி:232 – ம: 260)
12. ஹஸன் (ரஹ்) அவர்களின் மகன் முஹம்மத் (?)

(256தொடக்கம் காணாமல் போன இவர் இன்று வரை உயிர் வாழ்வதாக ஷீஆக்கள் குறிப்பிடுகின்றனர்.)

குறிப்பு: மேலே நாம் குறிப்பிட்டுள்ள ஆண்டுகள் அனைத்தும் ஹிஜ்ரி ஆண்டுகளாகும்.

அஹ்லுஸ்ஸுன்னா அறிஞர்களின் பார்வையில் ஷீஆக்கள் தங்களின் இமாம்களாகக் குறிப்பிடுவோர் 04பகுதியினராகக் காணப்படுகின்றனர்.

முதலாவது பகுதியினர்: ஸஹாபாக்களாகும் முதல் மூவரும் இதற்குள் அடங்குவர்.

இரண்டாவது பகுதியினர்: தாபிஈன்கள் மற்றும் அவர்களுக்குப் பின்வந்த தபஉத்தாபிஈன்களில் உள்ள அஹ்லுஸ்ஸுன்னாக்களின் முக்கிய அறிஞர்களாகும். இதில் நான்கு தொடக்கம் ஒன்பது வரையுள்ளவர்கள் அடங்குவர்.

மூன்றாவது பகுதியினர்: இவர்கள் பற்றி அஹ்லுஸ் ஸுன்னாக்களின் நூல்களில் குறிப்பிடப்படவில்லை மற்றும் அவர்கள் அறிஞர்கள் என பிரபல்யம் அடைந்தவர்களுமல்லர். இதில் பத்து, பதினொன்று இருவரும் அடங்குவர்.

நான்காவது பகுதியில்: வருபவர் உலகில் பிறக்கவே இல்லை. அவர் இன்றளவும் உயிர் வாழ்ந்து கொண்டிருப்பதாக ஷீஆக்கள் நம்புவது அவர்களின் முட்டாள்தனமாகும். உலகத்தில் பிறக்காமல் உயிர்வாழும் பெரியாராக இவர் இன்றளவும் ஷீஆக்களால் மதிக்கப்படுகிறார். இவர் பற்றிய மேலதிக விளக்கங்களை ஷீஆக்களின் மஹ்தி பற்றி குறிப்பிடும்போது அவதானிக்கலாம்.

ஏன் முரண்பாடு?

நாம் மேலே குறிப்பிட்டதன் அடிப்படையில் ஷீஆக்கள் இமாம்களாக ஏற்றுக்கொள்பவர்களில் பெரும்பான்மையானவர்கள் அஹ்லுஸ் ஸுன்னாக்களின் முக்கிய அறிஞர்களாக இருக்கின்றனர். இவ்வாறு இருக்கும் போது ஏன் நாம் அவர்களுடன் முரண்படவேண்டும் என்றொரு கேள்வி எழுவது யதார்த்தமானதாகும்.

இஸ்லாத்தின் எதிரிகளான யூதர்கள் தங்களின் கொள்கையை முஸ்லிம்களிடம் விதைக்க முஸ்லிம்களிடம் மதிப்பும் மரியாதையும் பெற்றிருந்த நல்ல மனிதர்களின் பெயர்களைப் பயன்படுத்திக் கொண்டனர். தங்களின் இமாம்கள் என்று முஸ்லிம்களின் நற்பெயர் பெற்றிருந்த சிலரைக் குறிப்பிட்டு அவர்களின் பெயரில் கற்பனைக்கு எட்டாத பல கொள்கைகளையும் உருவாக்கினர். தங்களுக்குத் தோன்றிய கருத்துக்கள் எல்லாவற்றையும் குறித்த நபர்களின் பெயர்களில் குறிப்பிட்டனர். எனவே தங்களின் இமாம்கள் என்று ஷீஆக்கள் குறிப்பிடுவோருக்கும் அவர்கள் பெயரால் ஷீஆக்கள் குறிப்பிடும் செய்திகளுக்கும் எந்தத்தொடர்புமில்லை. இதனாலேயே ஷீஆக்கள் இமாம்களாகக் குறிப்பிடுவோர் ஷீஆக்களுக்கு எதிராக பேசியிருப்பதை நாம் அவதானிக்கலாம்இதை விரிவாக அவதானிக்க விரும்புவோர் “இமாம்களின் பார்வையில் ஷீஆக்கள்” என்ற எனது நூலை வாசிக்கவும்.

எனவே, ஷீஆக்கள் சொல்லும் கொள்கைக்கும் அவர்களின் இமாம்கள் என்று சொல்பவர்களுக்கும் எந்த சம்பந்தமுமில்லை. அந்த சங்கைமிக்க இமாம்களின் பெயரைப் பயன்படுத்தி மக்களை வழிகெடுப்பதற்கு அவர்கள் விரும்புகிறார்கள். அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஅத்தினர் இந்த உண்மையை உலகறியச்செய்ய முயற்சிக்கிறார்கள். இதன் மூலம் குறித்த இமாம்களின் சிறப்புக்களைப் பாதுகாப்பதுடன், அவர்களுக்கு எதிரானவர்களை சரியாக இனங்காட்டவும் பாடுபடுகின்றனர். முஸ்லிம்கள் எப்போது தங்களின் எதிரியை சரியாக இனங்காண்கிறார்களோ அப்போதே அவர்களின் எதிர்காலத்தை திட்டமிடவும், சென்ற காலத்திலிருந்து படிப்பினை பெறவும் அவர்களால் முடியும்.

சங்கைமிக்க எமது அறிஞர்கள் செய்த முயற்சியின் ஒரு துளியையாவது இவ்வாய்வின் மூலம் செய்வதற்கு நாம் முயற்சிக்கின்றோம்.

எல்லாம் வல்ல அல்லாஹ் நமது பணிகளை ஏற்றுக்கொண்டு அருள் புரிவானாக.

இமாம்கள் விடயத்தில் ஷீஆக்களின் நம்பிக்கை:

இனி இமாம்கள் விடயத்தில் ஷீஆக்கள் சொல்லும் நம்பிக்கைகளை நாம் சுருக்கமாக அவதானிப்போம்.

01. ஈமானின் அடிப்படை அம்சங்களில் ஒன்று:

இமாம்கள் பற்றிய ஷீஆக்களின் நம்பிக்கை ஈமான் கொள்ள வேண்டிய அடிப்படை அம்சங்களில் ஒன்று என்று அவர்களின் நூல்களில் குறிப்பிட்டுள்ளனர்.

அவர்களது நூல்களில் மிக முக்கியமான நூலான 'காபி' இல் வரும் அறிவிப்பைப் பாருங்கள்: "தொழுகை, ஸகாத், நோன்பு, ஹஜ், இமாமத் எனும் ஐந்து தூண்களில் இஸ்லாம் நிறுவப்பட்டுள்ளது"

ஆனால் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிடும் செய்தியில் அல்லாஹ்வை நம்புதல், தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ் எனும் ஐந்து தூண்களில் நிறுவப்பட்டுள்ளது என்று வந்துள்ளது.

ஷீஆக்கள் அல்லாஹ் பற்றிய நம்பிக்கைக்குப் பதிலாக இமாம்கள் பற்றிய நம்பிக்கையை சேர்த்துள்ளதை இங்கே அவதானிக்கலாம்.

எனவே அவர்களின் நம்பிக்கைப்படி இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றாக இது திகழ்கின்றது.

02. இமாமத் பற்றிய நம்பிக்கை இல்லையென்றால் மற்றையதால் எந்தப்பயனும் இல்லை:

அலி(ரழி) அவர்கள் சொல்வதாக "பிஹாருல் அன்வார்" எனும் நூலில் பின்வருமாறு உள்ளது: "(நபியவர்களுக்குப்பிறகு)

நான்தான் தலைவர் என்பதை யார் ஏற்றுக்கொள்ளவில்லையோ அவர் நபி (ஸல்) அவர்களை ஏற்றுக்கொண்டதால் எந்தப்பயனும் இல்லை.''

எனவே, இமாம்கள் பற்றி நம்பாமல் அல்லாஹ்வையும் ரஸூலையும் மட்டும் நம்புவதால் எந்தப்பயனும் ஏற்படாது என்பது ஷீஆக்களின் நிலைப்பாடாகும்.

03. பர்ளுகளை விட இமாமத் பற்றிய நம்பிக்கையே முக்கியமானது.

மேலே குறிப்பிடப்பட்ட ஐம்பெரும் கடமைகளில் உள்ள பர்ளுகளை விடவும் இமாம்கள் பற்றிய நம்பிக்கையே முதன்மையானதாக திகழ்கின்றது என்று ஷீஆக்கள் குறிப்பிடுகின்றனர். அவர்களின் நூல்களில் வரும் ஒரு அறிவிப்பு பின்வருமாறு சொல்கிறது.

“நபி (ஸல்) அவர்கள் 120தடவைகள் மி∴ராஜ் சென்றார்கள். ஒவ்வொரு தடவையும் அல்லாஹ் அவருக்கு வஹி அறிவித்தான். அல்லாஹ் அவருக்கு வஹி அறிவிக்கும் ஒவ்வொரு தடவையும் கடமைகள் பற்றி சொன்னதைவிட அதிகமாக அலி (ரழி) அவர்களின் ஆட்சி (இமாமத்) பற்றியும் அவருக்குப் பிறகு அவரைத் தொடர்ந்து வரும் இமாம்களின் ஆட்சி பற்றியுமே வஹி அறிவித்தான்” இது பொய்யானது என்பதை நான் சொல்லியே நீங்கள் விளங்கிக் கொள்வீர்கள் என்பதில்லை.

04. நபியவர்களுக்குப்பின் இமாம்களே ஆட்சியாளர்கள்:

நபியவர்கள் மரணித்த பின்பு அபூபக்ர் (ரழி) அவர்கள் முஸ்லிம்களின் தலைவராகிறார், அதன் பின்பு உமர் (ரழி), பிறகு உஸ்மான் (ரழி), பிறகு அலி (ரழி) என்று முஸ்லிம்களின் தலைவர்கள் வருகிறார்கள். இது ஸஹாபாக்கள் மற்றும் அக்காலத்தில் வாழ்ந்த முஸ்லிம்களால் எடுக்கப்பட்ட முடிவாக இருந்தது.

ஆனால், ஷீஆக்களிடம் இருக்கும் நம்பிக்கைப்படி நபியவர்கள் மரணித்த பின்பு ஆட்சிப்பொறுப்பை ஏற்கத்தகுதியானவர்கள் இமாம்களே என்பதாகும். மார்க்க ரீதியான மற்றும் உலக ரீதியான தலைமைத்துவங்கள் அவர்களுக்கே உரித்தானவை. இந்த விடயத்தில் மற்றவர்கள் எல்லோரும் இமாம்களுக்கு அநியாயம் செய்துவிட்டனர் என்று குறிப்பிடுகின்றனர். நபியவர்களின பின்பு தலைமைத்துவம் அலிக்கே செல்ல வேண்டும் என்று நபியவர்கள் தான் வாழும் போதே வலியுறுத்தியிருந்தார்கள் என்று ஷீஆக்கள் குறிப்பிடுகின்றனர். இதற்கு ஆதாரமாக கதீர் கும் எனும் இடத்தில் நடந்ததாக சொல்லப்படும் ஒரு செய்தியைக் குறிப்பிடுகின்றனர்.

ஷீஆக்கள் தங்களின் பிரச்சாரத்தின்போது பயன்படுத்துகின்ற மிகவும் முக்கியமான ஆதாரம் இது. பிற்காலத்தில் உருவான பிரச்சினைகளுக்கு அடித்தளமிட்டது ஆரம்பத்தில் நடந்த இந்த அநியாயம்தான் என்றும் குறிப்பிடுகின்றனர். கதீர் கும்மில் நடந்தது என்ன, ஏன் நபியவர்கள் அங்கு நின்றார்கள், அது ஹஜ்ஜாஜிகள் எல்லோரும் ஒன்றுகூடும் இடமா? நபிக்குப்பிறகு முஸ்லிம்களின் தலைவர் யார்? போன்ற பல்வேறு தகவல்களை "இஸ்லாத்தின் பார்வையில் ஸஹாபாக்கள்" என்ற எனது நூலில் 'நபிக்குப்பிறகு கலீபா யார்?' என்ற தலைப்பின் கீழ் விரிவாக எழுதியுள்ளேன். தெளிவைப் பெற விரும்புவோர் அந்நூலை வாசிக்கவும்.

நபி (ஸல்) அவர்கள் தனது வாழ்நாளில் தனக்குப் பிறகு இவர்தான் கலீபா என்பதைத் தெளிவாக விபரிக்கவில்லை. ஆனால், தான் உயிர்வாழும்போது தனக்குப்பிறகு அபூபக்ர் (ரழி) அவர்கள்தான் கலீபா என்பதை மற்றவர்கள் யூகித்துக்கொள்ளும்விதத்தில் நபியவர்களின் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன. நபியவர்களின் மரணத்தின் பின்பு அலி(ரழி) அவர்கள் உட்பட எல்லா ஸஹாபாக்களினதும் ஏகோபித்த முடிவினடிப்படையில் அபூபக்ர் (ரழி) அவர்கள் முஸ்லிம்களின் தலைவரானார்கள். எனவே இதில்

அநியாயம் என்பதற்கு எந்த வாய்ப்புமில்லை, அலி (ரழி)கிலாபத் விடயத்தில் தனக்கு அநியாயம் இழைக்கப்பட்டதாக ஒருபோதும் கூறியதில்லை. அவரை வைத்து குளிர்காய நினைப்பவர்களின் வாதங்களாகவே அவை அமைந்திருக்கின்றது.

05. இமாம் அனைத்திலிருந்தும் பாதுகாக்கப்பட்டவர்:

இமாம்கள் மறதி, தவறு, சிறிய பாவம், பெரிய பாவம், மானக்கேடான மற்றும் வெறுக்கத்த காரியங்கள் அனைத்திலிருந்தும் பாதுகாகக்கப் பட்டவர்கள் என ஷீஆக்கள் குறிப்பிடுகின்றனர்.

ஷீஆக்களின் பிரதான நூலான பிஹாருல் அன்வார், தஸ்ஹீஹுல் இ.ஃ.திகாத் போன்ற நூல்களில் பின்வருமாறு உள்ளது "வேண்டு மென்றோ, தவறுதலாகவோ, மறதியினாலோ இமாம்களிடம் சிறிய பெரிய பாவங்கள் எதுவும் நிகழாது. பிறப்பு முதல் இறப்பு வரை அவர்கள் எல்லாப் பாவங்களிலிருந்தும் பாதுகாக்கப்பட்டிருக்கிறார்க்ள்.'

கொமைனி சொல்கிறார் "மறதி, தவறு என்பவற்றை இமாம்கள் விடயத்தில் கற்பனை கூட செய்ய முடியாது" (அல்ஹுகூமா அல் இஸ்லாமிய்யா)

ஷீஆக்களின் முக்கியமான அறிஞர்களில் ஒருவரான முழப்பர் குறிப்பிடுகின்றார்: "இமாம் என்பவர் நபியைப் போலவே என்று நாம் நம்புகின்றோம். அவரின் சிறிய வயதிலிருந்து மரணிக்கும் வரை மறைவான மற்றும் வெளிப்படையான மானக்கேடான வெறுக்கத்தக்க காரியங்கள் அனைத்திலிருந்தும் அவர் பாதுகாக்கப்பட்டிருப்பது அவசியமானதாகும். இது மறதியினாலோ அல்லது வேண்டுமென்றோ அவரிடம் நிகழக்கூடாது." (அகாயிதுல் இமாமிய்யா)

இப்னு பாபவைஹி என்று சொல்லப்படும் ஷீஆக்களின் முக்கிய அறிஞர் தனது "அல்இ.ஃ.திகாதாத்" எனும் நூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: "நிச்சயமாக அவர்கள் (இமாம்கள்)

அனைத்திலிருந்தும் பாதுகாக்கப்பட்டவர்கள், அவர்கள் அனைத்து அழுக்குகளிலிருந்தும் தூய்மைப்படுத்தப்பட்டவர்கள், மேலும் அவர்கள் சிறிய, பெரிய பாவங்கள் எதனையும் இழைக்கமாட்டார்கள். அல்லாஹ் ஏவியதற்கு அவர்கள் மாறுசெய்யமாட்டார்கள், அவர்களுக்கு ஏவப்பட்டதைச் செய்வார்கள், இவ்வாறு அவர்கள் (இமாம்கள்) இல்லை என்று யார் சொல்கிறானோ அவன் இமாம்கள் பற்றிய அறிவு இல்லாதவன், யாருக்கு அவர்களை பற்றிய அறிவில்லையோ அவன் காபிராவான்.''

எம் உயிரிலும் மேலான நபியவர்களுக்கு மறதி ஏற்பட்டிருப்பதாகவ்ும தவறு நடந்திருப்பதாகவும் அல்குர்ஆனிலும் ஹதீஸிலும் நாம் அவதானிக்கலாம் இங்கே ஷீஆக்கள் கூறும் இமாம்கள் நமது நபியையும் மிஞ்சியவர்களாக இருக்கும் ஆச்சரியத்தைப் பாருங்கள். உலகத்தாரில் சிறந்தவராகிய நபியவர்களை விடவும் சிறப்புக்குரியவர்களாக தங்களின் இமாம்களை ஷீஆக்கள் சித்தரிப்பதிலிருந்தே அவர்களின் கொள்கை வழிகேடானது என்பதை எம்மால் புரிந்துகொள்ள முடியும். அவர்களது பார்வையில், அல்லாஹ்வை விடவும் சிறப்புக்குரியவர்களான இமாம்களை நபியை விடவும் சிறப்புக்குரியவர்கள் என்று சொல்வதில் என்ன ஆச்சரியம்? அல்லாஹ் எம்மனைவரையும் இத்தகைய நம்பிக்கையிலிருந்து பாதுகாப்பானாக.

06. மறைவானவற்றை அறிகிறார்:

மறைவான விடயங்கள் பற்றிய அறிவு அல்லாஹ்வைத் தவிர வேறு எவருக்கும் இல்லை என்பதே அல்குர்ஆனும் அஸ்ஸுன்னாவும் சொல்கின்ற கருத்தாகும். இது ஒவ்வொரு முஸ்லிமும் வைத்திருக்கின்ற நம்பிக்கையுமாகும். ஆனால் ஷீஆக்களோ தங்களின் இமாம்கள் நடந்தது, நடப்பது, நடக்க இருப்பது போன்ற முக்காலமும் பற்றிய அறிவைப்பெற்றவர்கள் என்று குறிப்பிடுகின்றனர்.

இது தொடர்பாக ஷீஆக்கள் தங்களது நூல்களில் குறிப்பிடுபவற்றை இங்கே எழுதினால் பல நூறு பக்கங்கள் தேவைப்படும். என்றாலும் அவர்களின் பிரதானமான நூல்களில் வரும் சில தலைப்புக்களை மாத்திரம் இங்கே குறிப்பிடுகிறேன்.

''அவர்கள் (இமாம்கள்) நபிமார்களைவிட அறிந்தவர்கள்'' (அல்காபி)

''வானத்தில் இருப்பவை பூமியில் இருப்பவை அனைத்தினதும் அறிவு அவர்களிடம் உள்ளது. மேலும் நடந்தது, நடக்க இருப்பது, இரவில் நடப்பது, பகலில் நடப்பது, ஒவ்வொரு காலத்திலும் நடப்பது பற்றிய அறிவுகள் எல்லாம் அவர்களிடம் (இமாம்களிடம்) உள்ளது. அவர்களிடம் நபிமார்களின் அறிவும் அதற்கு மேலதிமாகவும் உள்ளது'' (அல்காபி)

''நிச்சயமாக இமாம்கள், மனிதர்களில் யார் உண்மையாக ஈமான் கொண்டவர்கள் அவர்களில் யார் நடிப்பவர்கள்என்பதையெல்லாம் அறிவார்கள். மேலும் அவர்களிடம் ஒரு புத்தகம் உள்ளது அதில் சுவர்க்கவாதிகளின் பெயர்களும் இமாம்களைப் பின்பற்றும் ஷீஆக்களின் பெயர்களும் அவர்களின் எதிரிகளின் பெயர்களும் உள்ளன.'' (பிஹாருல் அன்வார்)

''இமாம்கள் ஒரு விடயத்தை அறியவேண்டும் என்று நினைத்தால் அறிந்துவிடுவார்கள். அல்லாஹ் நாடும் இடமாக அவர்களின் உள்ளங்கள் உள்ளன. அல்லாஹ் ஏதாவது ஒரு விடயத்தை நினைத்தால் அவர்களும் நினைத்துவிடுவார்கள்.'' (அல்காபி)

''இமாம்கள் எப்போது மரணிப்பார்கள் என்பதை அவர்கள் அறிவார்கள். அவர்களின் சுய விருப்பப்படியே அவர்கள் மரணிக்கிறார்கள்.'' (அல்காபி)

''இமாம்கள் மற்றவர்களின் உள்ளங்களில் இருப்பவற்றை அறிகிறார்கள்.'' (பிஹாருல் அன்வார்)

"அலி (ரழி) அவர்கள் இல்லை என்றால் ஜிப்ரீல் அவரது இரட்சகனை அறிந்திருக்கமாட்டார். மேலும் அவரைக் கூட அவர் அறிந்திருக்க மாட்டார்." (ஷரஹுஸ்ஸியாததில் ஜாமிஅதில் கபீரா)

"மனிதர்கள், பறவை, மிருகங்கள், மற்றும் உயிருள்ள எதுவாக இருப்பினும் அவர்களில் எவரின் பேச்சும் இமாமுக்கு தெரியாமல் இருப்பதில்லை." (அர்ராபிழது வ பிழாஅதுஹும் பில் ஜரஹி வத்த.ீதீல்)

அலி (ரழி) சொல்வதாக ஷீஆக்கள் இட்டுக்கட்டியுள்ள அறிவிப்பைப் பாருங்கள் "அல்லாஹ் என்னை அவனது அறிவுக்கு தேர்ந்தெடுத்தான். நான் பன்னிரண்டு தடவைகள் எனது இரட்சகனிடம் சென்றுள்ளேன். ஒவ்வொரு முறையும் அவனாக எனக்கு தன்னை அறிமுகப்படுத்தினான் மறைவானவற்றின் திறவுகோல்களை என்னிடம் கொடுத்தான்." (தப்ஸீரு புராத்)

அலி(ரழி) சொல்வதாக ஷீஆக்கள் இட்டுக்கட்டியுள்ள இன்னுமொரு அறிவிப்பில்: "வானம் பூமியில் உள்ளவற்றை நிச்சயமாக நான் அறிகிறேன், சுவர்க்கம் நரகத்தில் இருப்பவற்றையும் அறிகிறேன், நடந்தது நடக்க இருப்பவற்றையும் நான் அறிகிறேன்."

"சில அடியார்களின் உள்ளங்களில் இருந்தவற்றை இமாம்கள் அறிந்தார்கள். அவர்கள் உருவாகுவதற்கு முன்பே அவர்கள் எப்படி இருப்பார்கள் என்பதையும் இமாம்கள் அறிவார்கள்" (அவாயிலுல் மகாலாத்)

இதைவிடக்கூடுதலாகவும் வாசிக்க ஆசைப்படுகிறீர்களா? ஷீஆக்களின் நூல்களில் இமாமத் எனும் தலைப்பை வாசியுங்கள். இஸ்லாத்திற்கும் அவர்களுக்குமுள்ள இடைவெளி புரியும்.

07. சர்வ சக்தியும் பெற்றவர்:

எல்லா ஆற்றல்களும் பெற்றவன் அல்லாஹ் மாத்திரம்தான் என்று நம்புவதே ஒரு முஸ்லிமின் பண்பாகும். அதுவே

அல்குர்ஆன் அஸ்ஸுன்னாவின் கொள்கையுமாகும். ஆனால் ஷீஆக்களோ தங்களின் இமாம்களே எல்லா ஆற்றலும் சக்தியும் பெற்றவர்கள் என்று சொல்கின்றனர்.

கொமைனி அவர்கள் தன்னுடைய 'அல்-ஹுகூமா அல்இஸ்லாமிய்யா' எனும் நூலில் சொல்கிறார்: "இந்த உலகில் உள்ள அனைத்துப் படைப்பினங்களும் அடிபணியக்கூடிய ஆட்சி அதிகாரமும் தலைமைத்துவமும் எமது இமாம்களுக்கு வழங்கப்பட்டுள்ளன."

இவர்கள்தான் ஷீஆக்களின் இமாம்கள் என்றால் இந்துக்களைவிட ஷீஆக்கள் மோசமான நம்பிக்கையைக் கொண்டவர்கள் என்பதை எம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. ஏனெனில் நாம் இறைவனுக்கு இருப்பதாகச் சொல்லும் அத்தனை வல்லமைகளும் தங்களின் கடவுள்களுக்கு இருப்பதாக இந்துக்கள் குறிப்பிடுகின்றனர். அதுபோலவே ஷீஆக்களும் தங்களின் இமாம்களுக்கு இருப்பதாகச் சொல்கிறார்கள்.

08. அவர்களுக்கு வஹி இறங்குகின்றது:

வஹி என்பது இறைவனின் தூதருக்கு மட்டுமே இறங்கும் என்பது அல்குர்ஆன், அல்-ஹதீஸ் எமக்குப் போதிக்கும் விடயமாகும். சிலவேளைகளில் உண்மையான கனவுகளில் சில விடயங்கள் இறைவிசுவாசிகளுக்கு தெரியவரும். இதை அவர்கள் மார்க்கம் என்று பிரச்சாரம் செய்ய முடியாது. ஆனால் ஷீஆக்களின் இமாம்கள் வஹியைத் தவிர வேறு எதனையும் பேசமாட்டார்களாம்.

இது தொடர்பாக பிஹாருல் அன்வார் எனும் நூலில் இடம்பெற்றுள்ள செய்தியில்: "நிச்சயமாக இமாம்கள் வஹியையே பேசுவார்கள்" என்றுள்ளது.

ஷீஆக்களின் இமாம்களில் ஒருவர் சொல்வதாக மேற்சொன்ன அதே நூலில் வரும் இன்னுமொரு செய்தி பின்வருமாறு உள்ளது: "நிச்சயமாக எங்களின் காதில் போடப்படுபவர்களும் உள்ளனர்.

மற்றும் சிலருக்கு அவருடைய கனவில் வஹி அறிவிக்கப்படுகிறது மற்றும் சிலருக்கு மணி ஓசை போன்று வந்ததன் பின்பு வஹி அறிவிக்கப்படுகின்றது, மற்றும் சிலருக்கு மீகாயில், ஜிப்ரீல் போன்றவர்களைவிட பெரிய ஒருவரால் வஹி அறிவிக்கப்படுகின்றது."

"அல்-ஹராயிஜ் வல் ஜராயிஹ்" எனும் ஷீஆக்களின் மற்றுமொரு நூலில் அவர்களின் இமாம்களுக்கு வஹி வருவது தொடர்பாக வந்துள்ள அறிவிப்பைப் பாருங்கள்:

"நாங்கள் (இமாம்கள்) பயணிக்கும்போது எங்களிடம் மலக்குகள் இறங்குகிறார்கள், எங்கள் விரிப்புகளில் எங்களுடன் உருளுகிறார் -கள், நாங்கள் அடக்கப்படும் நேரம் அவர்கள் முகமளிக்கிறார்கள். ஒவ்வொரு தொழுகையிலும் எங்களுடன் தொழுவதற்காக அவர்கள் வருகிறார்கள், எங்களைக்கடக்கும் ஒவ்வொரு பகலிலும இரவிலும் பூமியில் என்ன நடந்தது? என்ன நடக்கிறது? என்பதை எல்லாம் எங்களுக்கு அவர்கள் அறிவிக்கிறார்கள்."

ஷீஆக்கள் என்றால் யார்? என்பதை இப்போதாவது புரிந்து கொண்டீர்களா? அவர்களுக்கும் இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகளுக்கும் இடையிலுள்ள தொடர்பு விளங்கிவிட்டதா?

09.கப்ரிலே முதலாவது கேட்கப்படுவது இமாம்கள் பற்றித்தான்:

நாம் மரணித்ததும் கப்ரிலே கேட்கப்படும் முதலாவது கேள்வி தொழுகையைப் பற்றியதுதான் என்பது முஸ்லிமாக இருக்கும் சிறுவர்களுக்கே தெரிந்த விடயம். ஆனால், ஷீஆக்களின் நம்பிக்கையோ வேறுவிதமானது. கப்ரில் கேட்கப்படும் முதலாவது கேள்வி அவர்களின் இமாம்களைப்பற்றியது என்று குறிப்பிடுகிறார்கள இந்த நாசகார கூட்டத்திலிருந்து அல்லாஹ் எம்மைப்பாதுகாப் -பானாக.

‘‘(கப்ரில்) ஓர் அடியான் முதலில் கேட்கப்படுவது: அஹ்லுல் பைத்துகள் விடயத்தில் அவன் வைத்திருந்த நேசம் பற்றித்தான்.’’ (பார்க்க: உயூனு அஹ்பாரிர் ரிழா)

‘‘(கப்ரில்) அவனிடம் இரண்டு மலக்குகள்: (ஷீஆக்களின்) இமாம்களில் ஒருவர் பின் ஒருவராகக் காட்டி, அவர்கள் விடயத்தில் அவன் வைத்திருந்த நம்பிக்கை பற்றிக்கேட்பார்கள். அந்த இமாம்களில் ஒருவரையேனும் முரண்பட்டால் அல்லது ஏற்றுக்கொள்ளாமல் போனால், இரண்டு மலக்குகளும் நெருப்பினால ஆன ஒரு பெரும் தடியால் அவனைத் தாக்குவார்கள், மறுமை நாள் வரை அவனது கப்ரு நெருப்பினால் நிரம்பியிருக்கும்.’’ (பார்க்க: மஜ்லிஸி என்பவருக்குரிய இ.ஃ.திகாதாத் எனும் நூல்)

10.மறுமையில் அடியார்களை விசாரிப்பது இமாம்களே:

மறுமையில் அல்லாஹ்தான் அரசன், அவன்தான் அனைத்து அடியார்களையும் விசாரிப்பவன் என்பது இஸ்லாம் எமக்குப்போதிக்கும் பாடமாகும். ஆனால் ஷீஆக்களோ எல்லாவற்றிலும்போல அதையும் தங்களின் இமாம்கள் செய்வதாகவே சொல்கிறார்கள்.

‘‘மறுமையில் உள்ள பாலம் எங்களுக்கு உரியது. மேலும் மீஸான் எனும் தராசும் எங்களுக்கு உரியது, எங்கள் ஷீஆக்களை விசாரிப்பதும் எங்களுக்குரியதே (அதாவது அவற்றில் நினைத்தவற்றை செய்வதற்கு அவர்கள் சக்திபெற்றவர்கள்)’’ என்று ஷீஆக்களின் இமாம்களில் ஒருவர் சொல்வதாக கிஷ்ஷி எனப்படும் ஷீஆக்களின் முக்கிய அறிஞர் அவரது ‘ரிஜால்’ எனும் நூலில் பதிவு செய்துள்ளார்.

அல்-ஹுர்ருல் ஆமிலி அவர்கள் தனது ‘‘அல்புஸூலுல் முஹிம்மா பீ உஸூலில் அஇம்மா’’ எனும் நூலில் பின்வருமாறு பதிவு செய்துள்ளார்: ‘‘நிச்சயமாக மறுமையில் அனைத்துப் படைப்பினங்களிடமும் கேள்வி கணக்குக் கேட்பது இமாம்களின்

பொறுப்பே என நம்புவது இமாம்கள் பற்றிய நம்பிக்கையின் அடிப்படை விடயங்களில் ஒன்றாகும்.''

11. சுவர்க்கம் நரகம் அவர்களினாலேயே வழங்கப்படும்:

சுவர்க்கத்தையும் நரகத்தையும் வழங்குவது இறைவனின் பணியாகும், எனது அமல்களால் அன்றி இறைவனின் அருளாலேயே நானும் சுவர்க்கத்தில் நுழைவேன் என்று எம்பெருமானார் நபி(ஸல்) அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

ஆனால், ஷீஆக்களின் அறிவிப்புக்களோ முற்றிலும் இஸ்லாத்திற்கு முரண்பட்டதாகவுள்ளது அவர்களின் இமாம்களே அனைத்தையும் செய்வதாக அவர்கள் நம்புகின்றார்கள், சுவர்க்கத்திற்கும் நரகத்திற்கும அடியார்களை அனுப்புவது தங்களின் இமாம்களே என்று அவர்களது நூல்களில் பதிவு செய்துள்ளனர். அல்லாஹ் இத்தகைய நம்பிக்கையிலிருந்து எம்மைப் பாதுகாப்பானாக.

நபி (ஸல்) அவர்கள், அலி (ரழி) அவர்களுக்குச் சொன்னதாக இட்டுக்கட்டப்பட்ட ஒரு செய்தி ஷீஆக்களின் முக்கிய நூல் ஒன்றில் பின்வருமாறு உள்ளது: ''அலியே நீதான் நாளை மறுமையில் சுவர்க்கத்திற்குரியவர்களையும் நரகத்திற்குரியவர்களையும் பிரிப்பது. இது எனக்குரியது, இது உனக்குரியது என்று நரகத்தைப் பார்த்து நீ சொல்வாய்.'' (பார்க்க: உயூனுல் அஹ்பார்)

''மறுமை நாள் வந்துவிட்டால் மனிதர்கள் அனைவரும் பார்க்கும் விதத்தில் ஒரு மிம்பர் வைக்கப்படும். அதில் ஒரு மனிதர் ஏறுவார். அவரின் வலப்புறத்தில் ஒரு மலக்கு நிற்பார், அவரின் இடப்புறத்தில் ஒரு மலக்கு நிற்பார், படைப்பினங்களே! இதோ அபூதாலிபின் மகன் அலி, தான் விரும்புபவர்களை சுவர்க்கத்தில் நுழைவிப்பார் என்று வலப்புறத்தில் இருக்கும் மலக்கு மக்களுக்கு சொல்வார். இடப்புறத்தில் இருக்கும் மலக்கு: மக்களே இதோ அபூ தாலிபின் மகன் அலி, தான் விரும்பியவர்களை நரகத்தில்

நுழைவிப்பார்.'' என்று சொல்வார் என ஷீஆக்களின் இமாம்களில் ஒருவர் சொல்வதாக ''பஸாயிருத்தரஜாத், இலலுஸ்ஸராயி.'.'' எனும் நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

12. அல்லாஹ்விற்கும் அடியார்களுக்கும் இடையில் உள்ள தரகர்கள்:

ஷீஆக்களின் இமாம்கள் அல்லாஹ்வையும் அடியார்களையும் இணைத்துவைக்கும் பாலம் போன்றவர்களாம். அல்லாஹ்விடம் பிரார்த்திக்க நினைக்கும் ஒருவர், இமாமிடமே கேட்க வேண்டுமாம் அவ்வாறு கேட்பதனால்தான் அவருடைய தேவைகள் விரைவாக பூர்த்தி செய்யப்படுமாம்.

''நிச்சயமாக மனிதர்கள் அவர்களைக்கொண்டே நேர்வழி பெறுகிறார்கள், இமாம்களே அல்லாஹ்வுக்கும் அடியார்களுக்கும் இடையில் உள்ள தரகர்கள். அவர்களை அறிந்தவர்களே சுவர்க்கம் நுழைவார்கள்.'' (பிஹாருல் அன்வார்)

''இமாம்களின் பெயர்களைக் கூறிப் பிரார்த்திப்பதினாலேயே துஆக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.'' (வஸாயிலுஷ்ஷீஆ)

''எங்களைக் கொண்டு யார் அல்லாஹ்வை அழைத்தானோ அவன் வெற்றியடைந்தான் எங்களை விட்டுவிட்டு வேறு நபர்களைக்கொண்டு யார் அல்லாஹ்வை அழைத்தானோ அவன் அழிந்தான். அழிவைத்தேடிக்கொண்டான்.'' (பஷாரதுல் முஸ்தபா லி ஷீஆதில் முர்தழா)

ஷீஆக்களின் அறிஞர்களில் ஒருவர் அவர்களின் ஒரு இமாமிடத்தில் ''நிச்சயமாக ஒரு மனிதன் தன் இமாமிடம் செல்வதற்கு விரும்புகிறான், தன் இரட்சகனிடம் செல்வதற்கு விருப்பமில்லாமல் இருக்கிறான்'' இது பற்றி என்ன சொல்கிறீர்கள் என்று ஒரு கடிதத்தை எழுதினாராம், அதற்கு பதில் அனுப்பிய இமாம் ''உனக்கு எதுவும் தேவைகள் இருந்தால் உனது இரு

உதடுகளையும் அசைப்பாயாக உனக்கு பதில் கிடைக்கும்'' என்றாராம். இத்தனையும் அந்த இமாம் மரணித்ததற்குப் பிறகுதான் நடந்திருக்கிறது. (பிஹாருல் அன்வார்)

இமாம்களைக் கொண்டு உதவிதேடுவதும் அவர்களிடம் பிரார்த்தனை செய்வதும் ஷீஆக்களின் ஒவ்வொருநிகழ்ச்சிகளிலும் அரங்கேறும் விடயமாகும், அவர்களின் அதிகமான நூல்களில் இது பதிவு செய்யப்பட்டுள்ளது. ஷீஆக்களை பற்றி சிறிதளவு அறிவுள்ளவருக்குக்கூட இந்த விடயங்கள் தெரிந்தவை.

13. மரணித்தவர்களை உயிர்ப்பித்தல்:

மரணித்தவர்களை உயிர்ப்பிக்கும் அதிகாரம் அல்லாஹ்வுக்கு மாத்திரமே இருக்கிறது. இது நாம் யாவரும் அறிந்த உண்மை. முஸ்லிம்களின் சிறிய பிள்ளைகளின் உள்ளங்களில் கூட இது பதிவாகியிருக்கிறது. ஆனால், ஷீஆக்களின் நிலையோ இதில் வித்தியாசமானது. எல்லாவற்றிலும் அவர்கள் வித்தியாசமான கொள்கைகளைக் கொண்டிருப்பதைப்போல, இதிலும் அல்குர்ஆன் அஸ்ஸுன்னாவிற்கு முரண்பாடான கொள்கையையே கொண்டுள்ளனர். அவர்கள் நம்பும் அவர்களது இமாம்களுக்கு உயிர்ப்பிக்கச் செய்யும் அதிகாரம் இருப்பதாக நம்புகின்றனர். இது தொடர்பாக அவர்களது நூல்களில் வந்திருக்கும் சில அறிவிப்புக்களைப் பாருங்கள்:

ஷீஆக்கள் முதல் இமாம் என்று குறிப்பிடும் அலி(ரழி) அவர்கள் மீது நேசம் கொண்டு அதில் பைத்தியமாகிய உம்மு பர்வா என்று சொல்லக்கூடிய ஒரு பெண் மரணித்தாராம். அலி (ரழி) அவர்கள் அந்த நேரம் வெளியில் சென்றிருந்தார்கள். அவர் மீண்டு வந்ததும் அந்தப் பெண்ணின் கப்ருக்கு சென்றார்கள் வானத்தை நோக்கி தன் தலையை உயர்த்தி பின்வருமாறு கூறினார்கள்:

“மரணித்த பின் ஆத்மாக்களை உயிர்ப்பிக்கின்றவனே, மரணித்த பின் உக்கிப்போன எலும்புகளை சீர்செய்து உயிர்ப்பிக்கும் இரட்சகனே, எங்களுக்காக நீ உம்மு பர்வாவை உயிப்பிப்பாயாக. மேலும் உனக்கு மாறு செய்தவர்களுக்கு ஒரு படிப்பினையாக அதை ஆக்குவாயாக. அந்த நேரம் ஒரு அழைப்பு வந்தது. அமீருல் மு.ஃ.மினீனே நீங்கள் கேட்டதை நிறைவேற்றுங்கள் என்று அது சொன்னது. அப்போது அலி அவர்கள் தன் காலால் அவளது கப்ரில் அடித்து அல்லாஹ்வின் அடிமையே! இறைவனின் அனுமதியுடன நீ எழும்புவாயாக என்று கூறினார்கள். உம்மு பர்வா கப்ரிலிருந்து எழும்பினாள். மேலும் அவள் அழுதுகொண்டு கூறினாள்: உனது ஒளியை அவர்கள் அனைத்துவிட நாடினார்கள் அல்லாஹ் அதை மேலும் ஒளிமயமானதாக ஆக்கிவைத்தான் நிராகரித்தவர்கள் வெறுத்தபோதிலும் உமது நினைவு உயர்வதையே அவன் நாடினான். (என்று கூறினாள்) அமீருல் மு.ஃ.மினீன் அவர்கள் அவளை அவளது கணவனிடத்தில் அனுப்பிவைத்தார்கள். அதற்குப்பிறகு அவள் இரண்டு பிள்ளைகளைப் பெற்றாள். அமீருல் மு.ஃ.மினீனுக்குப் பிறகு 06 (ஆறு) மாதங்கள் உயிர்வாழ்ந்தாள்.” (மதீனது மஆஜிஸில் அஇம்மா, அத்தாகிப் பில் மனாகிப்)

ஷீஆக்களின் அறிவிப்பாளர்களில் ஒருவரான அஸ்ப.ஃ. என்பவர் அறிவிக்கிறார்: அலி அவர்கள் ஒரு மையவாடியைக் கடந்து சென்றார்கள். அப்போது கப்ருகளைப் பார்த்தார்கள். (என்னிடம்) ‘அல்லாஹ்வின் அனுமதியால் அவனது அத்தாட்சிகளில் ஒன்றை பார்க்க விரும்புகிறாயா?’ என்று கேட்டார்கள்: அதற்கு நான் ‘ஆம்’ என்றேன். உடனே அவர் ஒரு கப்ரின் பால் தனது கையை நீட்டி ‘மையித்தே எழும்பு’ என்றார். ஒரு வயோதிபர் எழும்பினார். மு.ஃ.மீன்களின் தலைவரே, அகிலத்தின் இரட்சகன் அல்லாஹ்வின் பிரதிநிதியே உங்கள் மீது சாந்தி உண்டாவதாக என்று கூறினார். அதற்கு அலி அவர்கள், நபியவர்கள் மீதும் அவரின் குடும்பத்தின் மீதும் இறைவனின் சாந்தி உண்டாவதாக என்று கூறிவிட்டு

'வயோதிபரே நீங்கள் யார்?' என்று கேட்டார். அதற்கு வயோதிபர், 'நான் அம்ர் பின் தீனார் அல்ஹமதானி. நான் அம்பார் போரில் அதன் தலைவருடன் கொலைசெய்யப்பட்டேன். என்னை முஆவியாவின் படை கொலை செய்தது' என்றார்.

அதற்கு அலி அவர்கள்: "நீ உனது குடும்பத்திடமும் உனது பிள்ளைகளிடமும் செல். நீ கண்டதை அவர்களுக்கு சொல், மேலும் அல்லாஹ்வின் அனுமதியால் அலி என்னை உயிர்ப்பித்து உங்களிடம் அனுப்பிவைத்தார் என்று சொல்லு." என்றார்கள். (மதீனது மஆஜிஸில் அஇம்மா, அத்தாகிப் பில் மனாகிப்)

அலி(ரழி) அவர்கள் சொன்னதாக பிஹாருல் அன்வார் எனும் நூலில் வரும் ஒரு செய்தியைப் பாருங்கள்: "நான்தான் அல்லாஹ்வின் முகம், நான் அல்லாஹ்வின் விலாப்புறம், நானே முதலானவன், மேலும் நானே இறுதியானவன், நானே வெளிப்படையானவன், நானே மறைமுகமானவன், நான் ஒவ்வொரு விடயங்கள் பற்றியும் அறிவேன், மேலும் நானே உயிர்ப்பிக்கின்றேன், மேலும் நானே மற்றவர்களை மரணிக்கச் செய்கின்றேன், நான் உயிரானவன். மரணிக்கமாட்டேன்."
இத்தகைய சிந்தனைகளிலிருந்து அல்லாஹ் எம்மனைவரையும் பாதுகாப்பானாக.

14. இமாம்களை ஏற்றுக்கொண்டவர்களுக்காகவே சுவர்க்கம் படைக்கப்பட்டுள்ளது:

அல்லாஹ்வை ஏற்றுக்கொண்டவர்களுக்காக அல்லாமல் இமாம்களை ஏற்றுக்கொண்டவர்களுக்கே சுவர்க்கம் படைக்கப்பட்டிருப்பதாகவும் அவர்களை ஏற்றுக்கொள்ளாதவர்களுக்காகவே நரகம் படைக்கப்பட்டிருப்பதாகவும் ஷீஆக்கள் நம்புகிறார்கள்.

"அஹ்லுல் பைத்துகளுக்கும் அவர்களை ஏற்றுக்கொண்டவர் களுக்காகவுமே சுவர்க்கம் படைக்கப்பட்டுள்ளது. நரகம்

அவர்களை நிராகரித்தவர்களுக்காகப் படைக்கப்பட்டுள்ளது.'' (பார்க்க: அல்மஆலிம் அஸ்ஸுஃல்பா)

‘‘ஏனைய மனிதர்களை விட 80ஆண்டுகளுக்கு முன்னால் ஷீஆக்கள் சுவர்க்கத்தில் நுழைந்து விடுவார்கள்.' (பார்க்க: அல்மஆலிம் அஸ்ஸுஃல்பா)

இஸ்லாத்தின் அடிப்படைக்கோட்பாடுகளைத் தகர்த்தெறிவதற்காக இஸ்லாத்தின் எதிரிகளால் உருவாக்கப்பட்ட சிந்தனைதான் ஷீஆக்களின் கொள்கைகள் என்பதற்கு இதுவும் நல்லதொரு சான்று

15. மலக்குகள் அவர்களின் சேவகர்கள்:

மலக்குகளை அல்லாஹ் தன் ஏவல்களுக்கு வழிப்படும் ஒரு குழுவாகப் படைத்திருப்பதாகக் குறிப்பிடுகின்றான், அவர்களுக்கு சுயதேர்வு வழங்கப்படவில்லை அல்லாஹ் சொல்வதை நடைமுறைப்படுத்துவதே அவர்களின் வேலை. ஆனால் ஷீஆக்கள் சொல்லும் இமாம்களின் சேவகர்களாக மலக்குகள் இருக்கிறார்களாம்.

‘‘இக்மாலுத்தீன் வ தமாமுந்நி.ஃ.மா'' என்ற நூலில் வரும் ஒரு செய்தியில்: ‘‘நிச்சயமாக இமாம்கள் அவர்களின் தாயின் கருவறையில் இருக்கும்போதே பேசுகிறார்கள். மேலும் குர்ஆனை ஓதுவார்கள், தங்களின் தாயின் வயிற்றில் இருந்துகொண்டே இறைவனை வழிப்படுகின்றார்கள், பால்குடிக்கும்வேளையில், அவர்கள் (இமாம்கள்) சொல்வதற்கு மலக்குகள் வழிப்படுகிறார்கள், அவர்களிடம் (இமாம்களிடம்) காலையிலும் மாலையிலும் (மலக்குகள்) இறங்குகிறார்கள்.''

16. நபிமார்கள், ரஸூல்மார்கள், மலக்குகளை விடவும் உயர்வானவர்கள்:

இந்த உலகில் அல்லாஹ்வை மிகவும் அஞ்சி வாழ்ந்தவர்களும் சிறப்புக்குரியவர்களும் ரஸூல்மார்கள், நபிமார்கள்தான். மலக்குகளுக்கு சுயதேர்வு கிடையாது. அவர்கள் அல்லாஹ் சொல்வதை நிறைவேற்றுவார்கள். எனவே அவர்களிடமிருந்து பாவங்கள் நிகழ வாய்ப்பில்லை. இதுவே இஸ்லாம் நமக்குச் சொல்லும் பாடமாகும். ஆனால் ராபிழாக்களோ புதிய கதை சொல்கிறார்கள்.

ராபிழாக்களிடம் அவர்களின் இமாம்களைத்தவிர உயர்ந்த ஒரு சக்தியோ, சிறப்புமிக்கவர்களோ கிடையாது. தங்களின் இமாம்கள் நபிமார்கள், ரஸூல்மார்கள், மலக்குகள் எல்லோரையும் விட சிறப்புக்குரியவர்கள் என்று அவர்களது நூல்கள் குறிப்பிடுகின்றன.

“அல்லாஹ்வின் மீது ஆணையாக, அல்லாஹ் தன் கரத்தினால் ஆதத்தைப் படைத்ததும் தனது ரூஹிலிருந்து அவரில் ஊதியதும் அலியின் ஆட்சி அதிகாரத்தைக் கொண்டேயாகும். மேலும், அல்லாஹ் மூஸா (அலை) அவர்களுடன் பேசியதும் அலியின் ஆட்சி அதிகாரத்தைக் கொண்டேயாகும். மேலும் ஈஸா (அலை) அவர்களை இந்த உலகத்தாருக்கு ஒரு அத்தாட்சியாக நிலை நாட்டியதும் அவர் அலி அவர்களுக்கு அடிபணிந்ததினாலாகும்.” (பிஹாருல் அன்வார்)

கொமைனி சொல்கிறார்கள் “எங்களது இமாம்களுக்கு அல்லாஹுதஆலாவிடம்: நெருக்கமான எந்தவொரு மலக்கோ, ரஸூலோ அடைய முடியாத சிறப்பு (படித்தரம்) இருக்கிறது என்று நம்புவது எங்களுடைய மதத்தில் தவிர்க்க முடியாத முக்கியமான விடயமாகும்.” (அல்ஹுகுமா அல்இஸ்லாமிய்யா)

17. நபிமார்கள், ரஸூல்மார்கள் தங்களுக்கு ஏதாவது துன்பம் ஏற்பட்டால் அதை ஷீஆக்களின் இமாம்களின் ஊடாகவே தீர்த்துக்கொண்டார்களாம்.

ஷீஆக்களின் இமாம்களில் ஒருவர் சொல்வதாக அவர்கள் குறிப்பிடுகின்றார்கள், ‘‘நூஹ் நபி வெள்ளப்பிரளயத்தில் மூழ்கப்பார்த்தபோது, எங்களின் பொருட்டால் உதவி தேடினார். அதிலிருந்து பாதுகாக்கப்பட்டார், இப்ராஹீம் நெருப்புக்குள் தூக்கிவீசப்பட்ட போது எங்களின் பொருட்டால் உதவி தேடினார். அவர் மீது நெருப்பை சாந்தமானதாகவும் குளிரானதாகவும் அல்லாஹ் ஆக்கினான்’’ (பிஹாருல் அன்வார்)

ஷீஆக்களின் இமாம்களில் ஒருவர் ஒரு ஷீஆக் குழுவுடன் பேசிக்கொண்டிருந்தாராம் அப்போது அவர்களிடம்: “எம்மை யாரும் கண்காணிக்கிறார்களா? என்று கேட்டார். அவருடன் இருந்தவர்கள் சொல்கிறார்கள்: நாம் வலப்புறமும் இடப்புறமும் பார்த்தோம் எவரையும காணவில்லை, அப்போது நாம் இமாமிடத்தில்: இல்லை எம்மை எவரும் கண்காணிக்கவில்லை என்றோம். பிறகு அவர் மூன்று முறை அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்துவிட்டு நான் மூஸா(அலை) அவர்களுக்கும் ஹிழ்ரு(அலை) அவர்களுக்கும் மத்தியில் இருந்திருந்தால் அவர்கள் இருவரையும்விட அறிந்தவன் நான் என்று அவர்களுக்கு அறிவித்திருப்பேன். மேலும் அவர்களுக்குத் தெரியாத பல விடயங்களை அவர்கள் இருவருக்கும் அறிவித்திருப்பேன். ஏனெனில் மூஸா(அலை), ஹிழ்ர் (அலை) இருவருக்கும் நடந்ததைப் பற்றிய அறிவுதான் இருந்தது. நடக்க இருப்பது, மற்றும் மறுமை நாள் வரைக்கும் நடப்பது பற்றிய அறிவு அவர்களுக்கு வழங்கப்படவில்லை. நாம் அதை நபியவர்களிடமிருந்து அனந்தரமாகப் பெற்றோம்.” (தலாயிலுல் இமாமா)

ஷீஆக்களின் இமாம்களில் ஒருவர் சொல்வதாக ஷீஆக்களின் பிரதானமான நூல்களில் ஒன்றான ‘பஸாயிருத் தரஜாத்’ எனும் நூலில் பின்வருமாறு பதியப்பட்டுள்ளது:

“நிச்சயமாக அல்லாஹ், ரஸூல்மார்களில் உலுல் அஸ்மகளைப் படைத்தான். அவர்களை அறிவைக் கொண்டு சிறப்பித்தான் நாம் அவர்களது அறிவையும் சிறப்பையும் பெற்றுள்ளோம் மேலும் அவர்களுக்கு தெரியாதவற்றை நபியுடைய அறிவிலிருந்து பெற்றுள்ளோம், மேலும் முஹம்மத் நபியின் அறிவும் உலுல் அஸ்மகளின் அறிவும் எமக்கு வழங்கப்பட்டுள்ளது.”

ஷீஆக்களின் இமாம்களில் ஒருவர் சொல்வதாக “தலாயிலுல் இமாமா” எனும் ஷீஆக்களின் நூலில் பின்வரும் செய்தி பதியப்பட்டுள்ளது: “நெருக்கமான மலக்கோ, அனுப்பப்பட்ட நபியோ அறியாத செய்திகளை நிச்சயமாக நாம் அறிவோம்.”

“யூனுஸ் (அலை) அவர்கள் இமாம்களின் சிறப்பையும் அவர்களின் தலைமைத்துவத்தையும் மறுத்தார்கள். அவர் அதை ஏற்றுக் கொள்ளும்வரை அல்லாஹ் அவரை மீனின் வயிற்றில் சிறைவைத்தான்.” (பார்க்க: பிஹாருல் அன்வார்)

18. அவர்கள் இறைவனின் குமாரர்கள்:

அல்லாஹ் எம்மைப் பாதுகாப்பானாக. ஷீஆக்கள் தங்களின் இமாம்கள் விடயத்தில் எல்லை மீறியது அவர்களை எங்கே கொண்டு சென்றிருக்கிறது என்று பாருங்கள். இறைவனுக்கு சந்ததிகள் இல்லை. அவன் தனித்தவன் என்பது இஸ்லாத்தின் அடிப்படை. இது எம்மில் சிறிய பிள்ளைக்கும் தெரிந்த விடயம். இங்கே ஷீஆக்களின் நம்பிக்கையைப் பாருங்கள், தங்களின் இமாம்கள் மனித பிறவிகளாக இருந்தபோதிலும் அவர்கள் இறைவனின் குமாரர்கள் என்று குறிப்பிடுகிறார்கள். அல்லாஹ் எம்மனைவரையும் இக்கொள்கையிலிருந்து பாதுகாப்பானாக.

ஷீஆக்களின் சமகால அறிஞர்களில் ஒருவரான அப்துல் ஹுஸைன் அல்அமீனி அந்நஜபி என்பவர் தனது “அல்-கதீர்” எனும் நூலில் குறிப்பிடுகிறார்: “நிச்சயமாக இமாம்கள் அலியின்

முள்ளந்தண்டிலிருந்து வந்தாலும் அவர்கள் அல்லாஹ்வின் குமாரர்களாகும்'' அல்லாஹ் எம்மைப்பாதுகாப்பானாக.

19. அவர்களின் கப்ருகளைத் தரிசிப்பது கடமை, மிகப்பெரிய கூலிகளைப் பெற்றுத்தரும்:

ஷீஆக்களின் இமாம்களின் கப்ருகளைத் தரிசிப்பது கடமையாம். அவ்வாறு தரிசிக்காமல் வேண்டுமென்று விடுவது நிராகரிப்புக்கு இட்டுச்செல்லுமாம் (நஊது பில்லாஹி மின்ஹா).

ஷீஆக்களின் பிரதான நூல்களில் ஒன்றான 'வஸாயிலுஸ்ஷீஆ' என்ற நூலில் ஷீஆக்களின் இமாம்களில் ஒருவர் சொன்னதாக இடம்பெறும் அறிவிப்பில்: ''எந்தவொரு காரணமும் இல்லாமல் வேண்டுமென்று ஹுஸைனின் கப்ரை தரிசிப்பதை விடும் ஒருவரைப்பற்றி இமாமவர்களிடம் கேட்கப்பட்டது அதற்கு அவர் அவன் நரகவாதி'' என்று கூறினார்.

ஷீஆக்கள் தங்கள் இமாம்களின் கப்ருகளை தரிசிப்பதற்கு சொல்லும் ஒழுங்குகளைப் பாருங்கள் இஸ்லாத்தின் நிறைய கடமைகளுக்கு இல்லாத பல ஒழுங்குகளை கப்ருகளை தரிசிப்பதற்கு குறிப்பிட்டுள்ளனர்.

கப்ரடியில் நுழைவதற்கு முன்னால் குளித்துக்கொள்ள வேண்டும்.
பொறுப்பாளரிடம் நுழைவதற்கு அனுமதி கேட்டல், அதற்காக பொறுமையுடன் நிற்றல்.
பயபக்தியுடனும், அச்சத்துடனும் வருதல்.
புதிய சுத்தமான ஆடை அணிந்திருத்தல்.
கப்ரடியில் நின்று ஹஜருல் அஸ்வதை முத்தமிடுவதைப்போல அதை (கப்ரை) முத்தமிடுதல்.
கன்னத்தை கப்ரில் வைத்தல்.
அந்தக் கப்ரை தவாப் செய்தல் (வலம் வருதல்).
கப்ரை முன்னோக்குதல். அதன்போது கிப்லாவை பின்னோக்கி -யிருந்தாலும் சரியே!

கடமையான இரண்டு ரக்அத்துக்களையும் கப்ரை நோக்கித் தொழுதல்.
(பார்க்க: பிஹாருல் அன்வார், இலலுஷ்ஷராயி∴, காமிலுஸ்ஸியாராத், உம்ததுஸ்ஸாயிர், மகாலதுஷ்ஷீஆ)

இவ்வாறு தரிசிப்பது பல நன்மைகளைப் பெற்றுத்தருமாம். இதனால் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன, நரகத்திலிருந்து பாதுகாக்கப்படுவதற்கும், சுவர்க்கத்தில் நுழைவதற்கும், சுவர்க்கத்தில் அந்தஸ்துகள் உயர்த்தப்படுவதற்கும், பிரார்த்தனைகள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கும் இது காரணமாக இருக்குமாம். (பார்க்க: பிஹாருல் அன்வார்)

வானவர்களை அல்லாஹ் ஹுஸைனின் கப்ரடியில் அழுமாறு பணித்திருப்பதாகவும் ஷீஆக்கள் குறிப்பிடுகின்றார்கள். “அல்லாஹ் ஹுஸைனின் கப்ரடியில் நான்காயிரம் மலக்குகளை பொறுப்பாக்கி யிருக்கிறான். அவர்கள் மறுமை நாள் வரை அவருக்காக அழுதுகொண்டே இருப்பார்கள்.” (வஸாயிலுஷ்ஷீஆ)

ஹுஸைனின் கப்ரை தரிசிப்பதைவிட வானவர்களுக்கு வேறு எந்தப்பொறுப்புக்களும் இல்லையாம்.

‘‘வானத்தில் இருக்கும் அமரர்களுக்கு ஹுஸைனின் கப்ரை தரிசிப்பதற்கு அல்லாஹ்விடம் அனுமதி கோருவதைத்தவிர வேறெதுவும் இல்லை. ஒரு கூட்டம் இறங்க மற்றவர்கள் வானத்தை நோக்கி ஏறுவார்கள்.’’ (பார்க்க: தஹ்தீபுல் அஹ்காம்)

“யார் ஹுஸைனின் கப்ரை தரிசிக்கிறாரோ அவருக்கு நபியவர்கள் செய்ததைப்போல எழுவது ஹஜ்ஜுகள் செய்த நன்மை எழுதப்படும்.” (வஸாயிலுஷ்ஷீஆ)

‘‘யார் ஹுஸைனின் கப்ரை தரிசித்தாரோ அவருக்கு பன்னிரண்டாவது இமாமுடன் ஓர் இலட்சம் ஹஜ்ஜு செய்த

நன்மையும், நபியுடன் ஒரு இலட்சம் உம்ரா செய்த நன்மையும் கிடைக்கும்.'' (வஸாயிலுஷ்ஷீஆ)

"யார் ஆஷூரா (முஹர்ரம் பத்தாம் நாள்) தினத்தில் ஹுஸைனுக்கு செய்ய வேண்டிய கடமைகளை தெரிந்த நிலையில் அவரைத் தரிசிக்கிராரோ, அவர் அல்லாஹ்வை அவனது அர்ஷில் சந்தித்தவர் போன்றாவார்.'' (முஸ்தத்ரகுல் வஸாயில், பிஹாருல் அன்வார்)

இந்த ஷைத்தானியத்தான கொள்கையிலிருந்து இறைவன் எம்மனைவரையும் பாதுகாப்பானாக.

20. இமாம்களை ஏற்பதும் அவர்களுக்காக பணிவிடை செய்வதும் வானவர்களின் கடமை இதற்கு மறுத்தோர் இறைவனால் தண்டிக்கப்பட்டனர்:

சுய தேர்வு இன்றி இறைவனை மாத்திரம் வணங்கி வழிபட்டுக் கொண்டிருக்கும் வானவர்கள் கூட ஷீஆக்களின் இமாம்களை ஏற்கவேண்டுமாம் அவர்களைப் புகழுவதும், அவர்களுக்கு பணிவிடை செய்வதுமே அவர்களின் வேலையாம்.

''மலக்குகளுக்கு உண்பதோ, குடிப்பதோ இல்லை. அலி (ரழி) அவர்கள் மீதும் அவரை நேசிப்பவர்கள் மீதும் ஸலவாத்துச் சொல்வதும் அலியை ஏற்றுக்கொண்டு பாவம் செய்தவர்களுக்காக பாவமன்னிப்புக்கோருவதுமே அவர்களின் வேலை.''
(பார்க்க: பிஹாருல் அன்வார், ஜாமிஉல் அஹ்பார்)

''இமாம்களை ஏற்றுக்கொள்ளாதவர்கள் இறைவனால் தண்டிக்கப்பட்டபோதிலும் மலக்குகளில் நெருக்கமான ஒரு கூட்டமே இமாம்களை ஏற்றுக்கொண்டது, வானவர்களில் ஒருவர் ஏற்றுக் கொள்ளாததன் காரணமாக அவருடைய இறக்கைகள் உடைக்கப்பட்டன, அவர் ஹுஸைனின் கப்ரில் உருண்டு புரண்டு அந்த மண்ணைத் தடவிய பின்பே அது சரி செய்யப்பட்டது.''
(பார்க்க: பஸாயிருத் தரஜாத் அல் குப்ரா)

21. 12இமாம்களில் ஒருவரை ஏற்காமல் விடுவதும் நிராகரிப்பாகும்:

ஷீஆக்கள் விளக்கும் கற்பனைக்கும் எட்டாத பல அதிகாரங்களுக்கு சொந்தக்காரர்களாக இருக்கும் அவர்களின் இமாம்களில் ஒருவரையேனும் நிராகரித்தால் அவர் காபிராகிவிடுவார் என்று ஷீஆக்கள் குறிப்பிடுகின்றனர். மேலும், அவர் நரகத்தில் நிரந்தரமாக இருப்பார் என்றும் தங்களது நூல்களில் ஏராளமான இடங்களில் பதிவுசெய்துள்ளனர்.

ஸதூக் எனும் புனைப்பெயரால் அழைக்கப்படும் இப்னு பாபவைஹி அல்கும்மி எனப்படும் ஷீஆக்களின் முக்கியமான அறிஞர் குறிப்பிடுகின்றார்: ''அலி(ரழி) அவர்களின் இமாமத்தையும் அவர்களுக்குப் பின்னால் வந்த (ஷீஆக்களின்) இமாம்களின் தலைமைத்துவத்தையும் மறுக்கின்றவர்: நபிமார்கள் எல்லோரையும் நிராகரித்து விட்டார் என்பது எமது நம்பிக்கை. மேலும் அலி (ரலி) அவர்களை ஏற்றுக்கொண்டு அவருக்குப் பின்னால் வந்த (ஷீஆக்களின்) இமாம்களில் ஒருவரை நிராகரித்தவர், எல்லா நபிமார்களையும் ஏற்றுக்கொண்டு முஹம்மது நபி (ஸல்) அவர்களை நிராகரித்தவர் போன்றாவார் என்பது எமது நம்பிக்கையாகும்.'' (ரிஸாலதுன் பில் இ.்.திகாத்)

ஷீஆக்களின் பிரதானமான அறிஞர்களில் ஒருவரான முபீத் என்பவர் ஷீஆக்களின் இமாம்களை மறுக்கின்றவர்களைப் பற்றிச் சொல்லும்போது பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: ''(ஷீஆக்களின் இமாம்களில் ஒருவரை நிராகரிக்கின்றவர், மேலும் அல்லாஹ் கடமையாக்கிய (இமாம்களுக்கு) கட்டுப்படுதல் என்ற விடயத்தில் முரண்படுகின்றவர், வழிகெட்டவராவார். மேலும் காபிராவார். அவர் நரகத்தில் நிரந்தரமாகத் தங்கியிருப்பார். இது ஷீஆக்களின் ஏகோபித்த முடிவாகும்.''

(பிஹாருல் அன்வார்)

விடைபெறுமுன்:

அன்புக்குரிய சகோதரர்களே! அலி (ரழி) அவர்களும் அவரது பிள்ளைகளும் எங்களைப்போன்ற சாதாரண மனிதர்கள்தான் என்பது நாம் யாவரும் அறிந்த உண்மை. அவர்கள் விடயத்தில் எத்தகைய நம்பிக்கைகளை ஷீஆக்கள் உருவாக்கியிருக்கிறார்கள் பாருங்கள். நிச்சயமாக, இந்த நம்பிக்கைகளுக்கும் நபியவர்களின் குடும்பத்தினராகிய அந்த மனிதர்களுக்கும் எந்த சம்பந்தமுமில்லை. இவைகளுக்கு முதல் எதிரிகளாக அவர்கள் திகழ்ந்திருக்கிறார்கள், திகழ்கிறார்கள்.

ஒரு தனிமனிதன் விடயத்தில் சொல்லப்பட்டிருக்கும் இத்தகைய சிந்தனைகள் யூத, கிறிஸ்தவ, இஸ்லாத்திற்கு எதிரான சக்திகளின் சிந்தனைகளாகும். அவை அத்தனையும் நபியவர்களின் குடும்பத்தின் பெயரால் ஷீஆ, அஹ்லுல் பைத் என்ற போர்வையில் பரப்பப்படுகிறது. இதற்குப்பின்னால் இஸ்லாத்திற்கு எதிரான பல சக்திகள் வேலை செய்தன. வேலை செய்கின்றன. அவைகளெல்லாம் எல்லோருக்கும் தெரியாது. அப்படித்தெரிந்தால்தான் நாம் ஏற்றுக்கொள்வோம் என்றால் உலகில் பல விடயங்களை எம்மால் நம்பவும் முடியாது.

அல்குர்ஆன் அஸ்ஸுன்னாவிற்கு முற்றிலும் முரண்படுகின்ற இத்தகைய நம்பிக்கைகளிலிருந்து நம்மை நாம் பாதுகாத்துக் கொள்வதுடன், எமது சகோதரர்களையும் பாதுகாப்பதற்கு நம்மால் முடியுமான முயற்சிகளை நாம் செய்வது காலத்தின் கட்டாயமாகும்.

ரஸூல் (ஸல்) அவர்கள் பற்றிய நம்பிக்கை.

அல்லாஹ் இவ்வுலகத்தைப் படைத்து அதில் மனித சமுதாயத்தை உருவாக்கியதிலிருந்து மனிதர்கள் வழிகெட்டுச் சென்றபோதெல்லாம அந்த வழிகேட்டிலிருந்து அவர்களை மீட்டு இறைவனை ஏற்றுக்கொண்டு, அவனை மாத்திரம் வணங்கும் புனிதர்களாக அவர்களை உருவாக்குவதற்காக ஒவ்வொரு காலத்திற்கும் பல தூதர்களை அனுப்பிவைத்தான். அவ்வாறு அனுப்பப்பட்ட தூதர்களில் இறுதியானவரும் இறுதி வேதம் கொடுக்கப்பட்டவருமாக நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் திகழ்கிறார்கள். அவர்கள் அனைத்து மக்களுக்கும் பொதுவாக அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அவருக்கு வழங்கிய போதனைகளை மறுமை நாள் வரை அனைவரும் பின்பற்றுவது கடமையாகும். இவ்வாறே நாம் நபியவர்கள் மீது நம்பிக்கை வைக்கவேண்டும் என்று குர்ஆன் சொல்கிறது. ஆனால், நபியவர்கள் பற்றிய ஷீஆக்களின் நம்பிக்கை அல்குர்ஆன் அஸ்ஸுன்னாவின் கருத்துக்களுக்கு முற்றிலும் முரண்படுகின்றது.

01. நபி (ஸல்) அவர்கள் உண்மையான தூதர் அல்ல:

ஷீஆக்களில் ஒரு குழுவினர் உண்மையான தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்ல. அலி (ரழி) அவர்கள்தான். ஆனால் ஜிப்ரீல் தவறுதலாக நபியவர்களுக்கு வஹியை கொடுத்துவிட்டு சென்றார் என்று குறிப்பிடுகின்றனர். அதாவது அலி(ரலி)

அவர்களும் நபியவர்களும் ஒரு காகம் மற்ற காகத்திற்கு எப்படி ஒப்பாக இருக்குமோ அப்படி ஒன்றாக இருப்பார்களாம். இதனால் ஜிப்ரீல் அவர்களுக்கு இனந்தெரியாமல் அலியிடம் கொடுக்குமாறு சொன்ன வஹியை முஹம்மதிடம் கொடுத்துவிட்டு சென்றுவிட்டார் என்று குறிப்பிடுகின்றனர். இதனால் ஜிப்ரீல் அவர்களை சபிக்கின்ற கூட்டமாக அல்குராபிய்யா எனும் ஷீஆக்களின் குழுவினர் இருக்கின்றனர்.

அல்லாஹ் அல்குர்ஆனின் 49வது அத்தியாயத்தில் முஹம்மதுதான் அல்லாஹ்வின் தூதர் என்று குறிப்பிடுகின்றான்.

02. நபியவர்களின் பொறுப்பு:

மார்க்கத்தை மக்களுக்கு மறைக்காமல் எத்தி வைப்பதே நபியவர்களின் பொறுப்பு என அல்குர்ஆன் எமக்குச் சொல்கின்றது. ஆனால் ஷீஆக்களின் நூல்களோ நபி (ஸல்) அவர்களின் பொறுப்பும் அவர்களுக்கு முன் வந்த நபிமார்களின் பொறுப்பும் முஹம்மத் (ஸல்) அவர்களின் பிறகு மார்க்கவிடயத்திற்கும் ஆட்சி அதிகாரத்திற்குமான தலைவர் அலி (ரழி) அவர்கள்தான் என்பதை ஏத்தி வைப்பதாகவே இருந்தது என குறிப்பிடுகின்றன.

இக்கொள்கை பிழையானது என்பதை நம் குழந்தைகளும் அறிவார்கள் இல்லையா? பாவம் ஷீஆக்களுக்குத் தெரியவில்லை. அல்லாஹ் தண்டிப்பதற்கென்று நாடிவிட்டால் யாராலும் அதைத் தடுக்கமுடியாது.

03. நபியவர்களிடமிருந்து செய்திகளைப் பெறுவது அலி (ரழி) அவர்களே:

நபி (ஸல்) அவர்கள் இந்த உலகத்தார் அனைவருக்கும் அருட்கொடையாக அனுப்பிவைக்கப்பட்டார்கள் என்பதுதான் இஸ்லாத்தின் கருத்தாகும்.

“உலகத்தாருக்கு அருளாகவே அன்றி உன்னை நாம் அனுப்பி வைக்கவில்லை.” (21: 102)

‘‘மனிதர்கள் அனைவருக்கும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவும், நன்மாராயம் கூறுபவராகவுமே அன்றி நாம் உன்னை அனுப்பிவைக்கவில்லை. ஆனால் மனிதர்களில் அதிகமானவர்கள் இதை அறிந்துகொள்ளமாட்டார்கள்.” (34:28)

ஆனால், ஷீஆக்களின் நம்பிக்கைப்படி நபி (ஸல்) அவர்கள் அவருக்கு அறிவிக்கப்படும் செய்திகள் அனைத்தையும் அலி(ரழி) அவர்களிடம் அறிவிக்க வேண்டும் பின்பு அலி அவர்களே மக்களுக்கு அந்த செய்திகளை அறிவிப்பார் என்று குறிப்பிடுகின்றனர். இங்கே நபியவர்கள் உலகத்தாருக்கன்றி அலி (ரழி) அவர்களுக்கே அனுப்பிவைக்கப்பட்டதைப் போலவும், அலி அவர்களே உலகத் தாருக்கு மார்க்கம் சொல்லும் பொறுப்பு வழங்கப்பட்டவர் போலவும் உள்ளது.

இதற்கு இட்டுக்கட்டப்பட்ட ஒரு செய்தியை ஆதாரமாகக் கொள்கின்றனர்: “நான் அறிவின் பட்டணமாக உள்ளேன். அலி அதன் வாயிலாகவுள்ளார்” என்று நபியவர்கள் கூறினார்களாம். அதாவது நபியின் அறிவைப்பெற விரும்புவோர் அலி ஊடாகத்தான் அதைப் பெற வேண்டுமாம். அல்லாஹ் இத்தகைய நம்பிக்கை -யிலிருந்து எம்மைப் பாதுகாப்பானாக.

04. முஹம்மத் (ஸல்) அவர்கள் மார்க்கத்தை முழுமையாக எத்திவைக்கவில்லை:

முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் மார்க்கத்தில் எந்தவொன்றையும் மறைக்காமல் முழுமையாக எத்திவைத்தார்கள் என்பதே இஸ்லாத்தின் போதனையாகும்.
“இன்றைய தினம் உங்களுடைய மார்க்கத்தை உங்களுக்கு நான் பூரணமாக்கிவிட்டேன்.” (5:3)

நபியவர்கள் தனது இறுதி ஹஜ்ஜின்போது ஸஹாபாக்களைப் பார்த்துக் கேட்டார்கள். "நான் உங்களுக்கு எத்திவைத்துவிட்டேனா? அதற்கு ஸஹாபாக்கள் "ஆம்" என்று கூறினார்கள். நபி (ஸல்) அவர்கள் "இறைவா! நீயே இதற்கு சாட்சி" என்று கூறினார்கள். (புஹாரி)

நபியவர்கள் மார்க்கத்தை முழுமையாக எத்திவைத்ததினால் அதில் இல்லாத புதிதாக உருவாக்கப்படும் வணக்கவழிபாடுகள் ஒவ்வொன்றும் பித்அத் என்று குறிப்பிட்டார்கள்.

"யார் எமது இந்த மார்க்கத்தில் இல்லாத ஒன்றை உருவாக்கினானோ அது நிராகரிக்கப்படும்" (புஹாரி)

ஆனால், ஷீஆக்களோ நபியவர்கள் தனக்கு வழங்கப்பட்ட மார்க்கத்தை முழுமையாக எத்திவைக்கவில்லை என்று வாதிடுகின்றனர்.

ஷீஆக்களின் முக்கிய அறிஞர்களில் ஒருவரான ஷிஹாபுத்தீன் அந்நஜபி என்பவர் குறிப்பிடும்போது: "நிச்சயமாக நபியவர்களின் காலம் மிகவும் குறைவாக இருந்தது. இதனால் மார்க்கத்தின் அனைத்து விடயங்களையும் கற்றுக்கொடுப்பதற்கு அவருக்கு காலாவகாசம் இருக்கவில்லை... அவரின் அதிகமான நேரங்கள் போராட்டத்தில் கழிந்துவிட்டது... அத்தோடு மக்கள் எல்லாக் காலங்களுக்கும் தேவையான அனைத்தையும் நபியவர்களிடமிருந்து கற்றுக்கொள்வதற்கும் தயாராக இருக்கவில்லை." (ஷிஹாபுத்தீன் அந்நஜபி வ த.்.லீகாதுஹூ அலா இஹ்காகில் ஹக்.)

கொமைனி சொல்கிறார்: "நிச்சயமாக நபிமார்கள் அவர்கள் அனுப்பப்பட்ட நோக்கங்களை சரியாக நடைமுறைப்படுத்த வில்லை. நிச்சயமாக அல்லாஹ் இறுதிக்காலத்தில் ஒரு மனிதரை அனுப்புவான். அவரே நபிமார்களின் போதனைகளை நடைமுறைப்படுத்துவார்." (மஸ்அலதுல் மஹ்தி)

05. நல்ல தோழர்கள் அவருக்கு இருக்கவில்லை:

பெரியதொரு மாற்றத்தை உண்டு பண்ண நினைக்கும் எவருக்கும் உயிரையும் துச்சமாக மதித்துப் பாடுபடக்கூடிய ஆட்பலம் மிகவும் முக்கியமானதாகும். இதை நபி (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் கொடுத்திருந்தான். உலகமே கண்டு வியக்குமளவு பாசத்தை, மரியாதையை நபியவர்கள் மீது அவர்கள் வைத்திருந்திருந்தார்கள். அவரின் ஒரு சொல்லுக்காக ஆயிரக்கணக்கானோர் வேண்டுமானாலும இறக்க தயாராக இருந்தார்கள்.

“நிச்சயமாக முஹம்மத் அல்லாஹ்வின் தூதராவார், அவருடன் இருப்பவர்கள் நிராகரிப்பாளருக்கு கடுமையானவர்களாகவும், அவர்களுக்கு மத்தியில் நேசம் கொள்பவர்களாகவும் இருக்கிறார்கள்.” (48: 29)

மாற்றார்களே நபியவர்களின் தோழர்களின் விசுவாசத்தைப் பாராட்டியிருக்க கல்நெஞ்சங்கொண்ட சீச்சீ அதைவிடக் கொடூரமான உள்ளம் கொண்ட ஷீஆக்களோ நபியவர்களை உண்மையாக நேசிக்கும் தோழர்கள் 10பேருக்கு உட்பட்டவர்களே இருந்ததாக கதையளக்கின்றனர். உயிர்த்தியாகம் செய்தவர்களும், பொருளை தியாகம் செய்தவர்களும் நடித்துக்கொண்டே நபியவர்களுடன் வாழ்ந்ததாக நாக்கூசாமல் ஸஹாபாக்களை திட்டுகின்றனர். அல்லாஹ் இக்கொள்கையிலிருந்து எம்மைனை -வரையும் காப்பாற்றுவானாக. ஸஹாபாக்கள் விடயத்தில் ஷீஆக்களின் நம்பிக்கைகளை தனியான ஒரு தலைப்பில் விரிவாக அவதானிப்போம். இன்ஷா அல்லாஹ்.

அல்குர்ஆன்.

இவ்வுலகில் வாழும் மக்களை நல்வழிப்படுத்தி அவர்களை சுவனவாதிகளாக மாற்றுவதற்காக இறைவனால் வழங்கப்பட்ட வேதங்களில் இறுதிவேதமாக அல்-குர்ஆன் திகழ்கின்றது. முந்தைய வேதங்களின் போதனைகளை உள்ளடக்கியிருக்கும் அதேவேளை மற்ற எல்லா வேதங்களையும் மாற்றிய வேதமாகவும் இது காணப்படுகின்றது. நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு வரும் ஒவ்வொருவரும் அதையே பின்பற்றவேண்டும். அது ஒவ்வொன்றும் இறைவனின் வார்த்தையாகவும் அற்புதக் கருத்துக்கள் நிறைந்ததாகவும் காணப்படுகின்றது. 1400க்கும் அதிகமான ஆண்டுகளாக எந்த மாற்றமுமில்லாமல் நிலைத்திருக்கும் ஒரு நூலாக அல்குர்ஆன் காணப்படுகின்றது. உலகம் அழியும் வரை அனைவரும் இம்மறையைப் பின்பற்ற வேண்டும் என்பதால் அவர்களுக்காக இதைப் பாதுகாக்கும் பொறுப்பை இறைவன் ஏற்றுக்கொண்டான். எனவே, இது இறைவனின் பாதுகாப்பில் இருந்து வருகின்றது. இவ்வாறே ஒரு முஸ்லிம் சுருக்கமாக குர்ஆன் பற்றி நம்பியிருக்க வேண்டும்.

அல்-குர்ஆன் தவறானது என்று ஒருவர் சொல்லிவிட்டால் பிறகு அவர் இஸ்லாம் என்று சொல்வதற்கு ஏதுமிருக்காது. ஏனெனில் நம்முடைய மார்க்கத்தின் எந்த விடயமாக இருந்தாலும் அது அல்குர்ஆனை அடிப்படையாகக்கொண்டே இருக்கின்றது. எவர்

தற்போது நமது கரங்களிலிருக்கும் அல்குர்ஆன் பாதுகாக்கப் பட்டிருக்கிறது என்பதை நம்பவில்லையோ அல்லது அதில் தவறுகள் இருப்பதாகச் சொல்கிறாரோ அதற்குப் பிறகு அவரால் முஸ்லிமாக இருக்க முடியாது. இதனால்தான் இஸ்லாமிய வரலாற்றில் அல்குர்ஆனைப் பொய்ப்பிப்பதற்கு இஸ்லாத்தின் எதிரிகள் அதிகமாக முயன்றிருக்கிறார்கள். ஆனாலும் அல்லாஹ் அவர்களின் முகத்திரையைக் கிழித்து அவர்களை இந்த சமுதாயத்திற்கு இனங்காட்டினான். அல்குர்ஆன் விடயத்தில் தப்பான கொள்கையுடைய ஒரு கூட்டமாகவே ஷீஆக்கள் காணப்படுகின்றனர்.

பாவம்! இஸ்லாத்தின் எதிரிகளால் முஸ்லிம் பெயர்களில் எழுதப்பட்ட பல செய்திகளை உண்மையென உறுதியாக நம்பிப் பின்பற்றுகிறார்கள் ஷீஆக்கள். இவர்கள் அல்குர்ஆன் விடத்தில் கொண்டுள்ள கருத்துக்களை இனி அவதானிப்போம்.

01. நபிக்கு இறங்கவில்லை:

அல்குர்ஆன் அல்லாஹ்வினால் ஜிப்ரீல் (அலை) அவர்களினூடாக 23ஆண்டுகளில் நபி (ஸல்) அவர்களுக்கு இறக்கிவைக்கப்பட்டது என நாம் நம்புகின்றோம். ஆனால் குறாபிய்யா எனப்படும் ஷீஆக்களின் ஒரு பகுதியினர்: அல்குர்ஆன் அலி (ரழி) அவர்களுக்கே இறங்கியது. ஆனால் ஜிப்ரீல் அதை தவறாக நபி (ஸல்) அவர்களுக்கு கொடுத்துவிட்டார் என்று குறிப்பிடுகின்றனர். (பார்க்க: அல்-முன்யா வல் அமல்)

02. அல்குர்ஆன் மனித கையாடல்களுக்கு உட்பட்டிருக்கிறது:

இறைவனால் இறக்கிவைக்கப்பட்ட அல்குர்ஆன் மனித கையாடல்களுக்கு உட்படாமல் இறங்கியதைப்போலவே நிலைத்திருக்கிறது என்று நம்புவதே ஒரு மு∴மினின் பண்பாகும்.

ஆனால் ஷீஆக்கள் அல்குர்ஆன் மனித கையாடல்களுக்கு உட்பட்டிருப்பதாக குறிப்பிடுகின்றனர்.

03. அல்குர்ஆனில் உள்ள வசனங்களை மாற்றும் அதிகாரம் இமாமுக்கு உண்டு:

அல்குர்ஆனில் முதலில் இறங்கிய சில வசனங்களை பின்னால் வந்த சில வசனங்கள் மாற்றியுள்ளன, அதுபோல் பொதுப்படையாக வந்த சில வசனங்களை மற்றும் சில வசனங்கள் குறிப்பாக்கியுள்ளன. அல்குர்ஆனின் சுருக்கமான கருத்துக்களை தெளிவுபடுத்துபவராக நபி(ஸல்) அவர்கள் திகழ்ந்தார்கள். இவ்வாறான விடயங்கள் எல்லாம் நபியின் மரணத்துடன் முடிவடைந்துவிட்டது. இதுவே இஸ்லாத்தின் நிலைப்பாடாகும். நபியின் மரணத்திற்குப் பிறகு அல்குர்ஆனிய வசனங்களை எவராலும் மாற்ற முடியாது. ஆனால் இவைகள் எல்லாவற்றையும் தங்களின் இமாம்களால் செய்ய முடியும் என நம்புகின்றனர் ஷீஆக்கள். (பார்க்க: அஸ்லுஸ்ஷீஅதி)

அல்குர்ஆனுக்கான விளக்கமாக இமாம்களே திகழ்கிறார்கள் என்பது ஷீஆக்களின் நம்பிக்கையாகும். அலி(ரழி) அவர்கள் சொல்வதாக ஷீஆக்கள் குறிப்பிடும் ஒரு செய்தியில்: “இதோ பேசாத அல்லாஹ்வின் வேதம், நான் பேசும் அல்லாஹ்வின் வேதமாக உள்ளேன்.” (வஸாயிலுஷ்ஷீஅதி)

இதைவிடவும் ஒரு படி மேலே சென்று அல்லாஹ்வின் பேச்சும் இமாம்களின் பேச்சும் ஒன்றே என்கின்றனர் ஷீஆக்கள்: “நிச்சயமாக தூய்மையான (எம்) இமாம்கள் ஒவ்வொருவரின் கூற்றும் அல்லாஹ்வின் கூற்றே, அல்லாஹ்வின் கூற்றில் எவ்வாறு முரண்பாடு இல்லையோ அதுபோல் இமாம்களின் கூற்றிலும் முரண்பாடு இல்லை.” (ஷரஹுன் ஜாமிஉன் அலல்காபி)
எனவே இதன் மூலம் ஷீஆக்கள் தங்களின் இமாம்களினால் ஒரு மதத்தை உருவாக்க விரும்புகிறார்கள் என்பது தெளிவாகின்றது.

04. மறைவான அர்த்தம், வெளிப்படையான அர்த்தம்:

அல்குர்ஆனின் ஒவ்வொரு வசனங்களுக்கும் வெளிப்படையில் ஒரு கருத்தும் மறைமுகமாக பல கருத்துக்களும் இருப்பதாக ஷீஆக்கள் குறிப்பிடுகின்றனர்.
''நிச்சயமாக அல்-குர்ஆனுக்கு வெளிப்படையான அர்த்தமும் மறைவான அர்த்தமும் உள்ளது'' எனும் ஒரு தலைப்பின் கீழ் ஷீஆக்களின் மிகப்பெரும் அறிஞர்களில் ஒருவரான மஜ்லிஸி அவர்கள் தனது பிஹாருல் அன்வார் எனும் நூலில் இது தொடர்பாக விளக்கியுள்ளார்.

ஆரம்பத்தில் அல்குர்ஆனுக்கு வெளிப்படையான ஒரு கருத்தும் மறைமுகமான மற்றொரு கருத்தும் இருப்பதாக ஷீஆக்கள் சொன்னாலும் பிறகு மறைமுகமான கருத்துக்களின் எண்ணிக்கை தேவைக்கு ஏற்ப வளர்ச்சியடைந்திருக்கிறது.

''நிச்சயமாக அல்-குர்ஆனுக்கு வெளிப்படையான ஒரு கருத்துள்ளது. மறைமுகமாகவும் ஒரு கருத்துள்ளது அந்த மறைமுகமான கருத்தில் 07அர்த்தங்கள் உள்ளன.'' (தப்ஸீருஸ் ஸாபி பீ தப்ஸீரில் குர்ஆன்)

இதைவிடவும் ஒரு படி மேலே சென்று: அல்குர்ஆனுக்கு வெளிப்படையாக ஒரு கருத்தும் மறைமுகமாக 07-70 கருத்துக்களும் உள்ளது என்கிறது ஷீஆக்களின் இன்னுமொரு அறிவிப்பு. (பார்க்க: மிர்ஆதுல் அன்வார் வ மிஷ்காதுல் அஸ்ரார்)

இவ்வாறு வெளிப்படையில் ஒரு வசனத்திற்கு ஒரு அர்த்தம் இருந்தபோதிலும், மறைமுகமாக பல அர்த்தங்கள் இருக்கின்றன என்று சொல்லும் ஷீஆக்கள் அந்த அர்த்தங்கள் பற்றிச் சொல்லும்போது அவை. தங்கள் இமாம்கள், அவர்களின் சிறப்பு, அவர்களின் தலைமைத்துவம், அவர்களின் எதிரிகள், அவர்களுக்கான தண்டனைகள் பற்றிப் பேசுவதாகச்

சொல்கின்றனர். வெளிப்படையான அர்த்தம் மக்களுக்குத் தேவையான சட்டங்கள், தவ்ஹீத் என்பன பற்றிச் சொல்வதாகவும் குறிப்பிடுகின்றனர். (பார்க்க: மிர்ஆதுல் அன்வார்)

ஷீஆக்களின் முக்கிய நூல்களான தப்ஸீருல் அய்யாஸி, பிஹாருல் அன்வார், அல்புர்ஹான், அஸ்ஸாபி போன்ற நூல்களில் பதியப்பட்டுள்ள ஒரு செய்தியில்: அல்குர்ஆனில் உள்ள எந்தவொரு வசனத்திற்கும் உள்வாரியான ஒரு கருத்தும், வெளிப்படையான ஒரு கருத்தும் உள்ளது என்று சொல்லிவிட்டு வெளிப்படையான கருத்து, உள்வாரியான அல்லது மறைமுகமான கருத்து என்பதைப் பற்றி விபரிக்கும்போது: அதாவது அல்குர்ஆனின் எந்தவொரு வசனத்திற்கும் வெளிப்படையான ஒரு விளக்கமும், மறைமுகமான ஒரு விளக்கமும் உள்ளது என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

எனவே, இதை வைத்துப் பார்க்கும்போது இஸ்லாத்தில் இல்லாத ஒரு விடயத்திற்கு இஸ்லாத்திலிருந்தே ஆதாரம் தேடுவதற்காக அல்குர்ஆன் வசனங்களுக்கு இரு அர்த்தங்கள், பல அர்த்தங்கள் உள்ளன எனும் கொள்கையை இவர்கள் தோற்றுவித்திருக்கிறார்கள் என்பது தெளிவாகின்றது.

இந்தக்கொள்கை ஒவ்வொருவரும் அல்குர்ஆன் வசனத்திற்கு தான் நினைத்த விதத்தில் அர்த்தம் சொல்வதற்கு வழிவகுக்கின்றது. ஏனெனில் ஒருவர் ஒரு வசனத்தை ஓதிவிட்டு தனக்கு சாதகமான கருத்தைச் சொல்வார் இந்த வசனத்தில் அப்படியில்லையே என்றால் வெளிப்படையில் இல்லை ஆனால் இதன் உள்வாரியான கருத்து இதுதான் என்பார். இதுதான் ஷீஆக்களின் கைங்கரியம்.

05. வசனங்களின் எண்ணிக்கை:

எம்முடைய அல்குர்ஆன் ஆறாயிரத்தி அறுநூற்றிச் சொச்சம் வசனங்களைக்கொண்டுள்ளது. ஆனால், ஷீஆக்களின் குர்ஆன்

அவ்வாறில்லையாம். பதின் ஏழாயிரம் (17000) வசனங்கள் கொண்டதாம். எனவே தற்போதுள்ள குர்ஆன் உண்மையான குர்ஆனின் மூன்றிலொரு பகுதியாம் (அல்லாஹ் எம்மனைவரையும் பாதுகாப்பானாக.)

குலைனி அவர்கள் தன்னுடைய நூலில் பதிவு செய்துள்ள ஒரு செய்தியில் ஹிஸாம் பின் ஸாலிம் என்பவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: “நிச்சயமாக ஜிப்ரீல் (அலை) அவர்கள் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு கொண்டுவந்த குர்ஆன் 17000வசனங்களை உடையதாகும்.” (அல்காபி)

இந்த அறிவிப்பு நம்பகமானது என்று ஷீஆக்களின் ஹதீஸ் கலை மேதை என்று வர்ணிக்கப்படும் மஜ்லிஸி என்பவர் தனது ‘மிர்ஆதுல் உகூல்’ எனும் நூலில் பதிவு செய்துள்ளார்.

06. இல்லாதது இணைந்தும், இருந்தது நீங்கியும் உள்ளது:

அல்குர்ஆன் நபியவர்களின் காலத்தில் இருந்ததைப்போலவே இன்றும் எந்த மாற்றமுமில்லாமல் இருக்கிறது என்றே ஒரு முஸ்லிம் நம்பவேண்டும். அதுவே அவன் இறைவனின் வாக்குறுதியை நம்பியிருக்கிறான் என்பதற்கும், மு.ஃ.மினாக இருக்கிறான் என்பதற்கும் ஆதாரமாக இருக்கும்.
ஆனால், இஸ்லாத்தை விட்டு வெகு தூரம் சென்றுவிட்ட ஷீஆக்களிடம் அந்த நம்பிக்கையை நாம் எதிர்பார்க்க முடியாது. அல்குர்ஆனில் கூட்டல் குறைத்தல்கள் நடந்திருப்பதாகவும் மனிதனின் வார்த்தைகள் அதில் நுழைந்திருப்பதாகவும், அதன் தூய தன்மை கெடுக்கப்பட்டிருப்பதாகவும், இறைவனின் வாக்குறுதி பொய்ப்பிக்கப்பட்டிருப்பதாகவும் அவர்கள் கூறுகின்றனர். (அல்லாஹ் எம் அனைவரையும் இந்நம்பிக்கையிலிருந்து பாதுகாப்பானாக.)

அல்குர்ஆன் மாற்றப்பட்டுள்ளது எனும் கருத்தை ஷீஆக்களுக்குள் முதலில் சொன்னவர்: ஹிஷாம் பின் ஹகம் அல் ஜஹ்மி என்பவரே,

இவர் உஸ்மான் (ரழி) அவர்களின் காலத்தில் அல்குர்ஆன் இட்டுக்கட்டப்பட்டதாகவும், உண்மையான குர்ஆன் ஸஹாபாக்கள் மதம்மாறியபோது (அவருடைய நம்பிக்கைப்படி) வானத்திற்கு உயர்த்தப்பட்டுவிட்டதாகவும் குறிப்பிடுகின்றார்.

(பார்க்க: அத்தன்பீஹ் வர்ரத்து)

ஷீஆக்களின் மூத்த அறிஞரான ஸுலைம் பின் கைஸ் என்பவராலேயே அல்குர்ஆனில் மாற்றமுள்ளது என்பது பற்றிய முதல் நூல் எழுதப்பட்டது. இந்நூலைப்பற்றி ஷீஆக்களின் முக்கிய அறிஞர்கள் பலரும் பாராட்டி எழுதியிருக்கிறார்கள். இதுவே ஷீஆக்களிடம் இந்தக்கொள்கை வேரூன்றியிருக்கிறது என்பதற்குரிய சான்றுகளிலொன்றாகும். ஷீஆக்களின் முக்கிய அறிஞர்களில் ஒருவரான மஜ்லிஸி என்பவர்: “இந்நூல் ஷீஆக்களின் அடிப்படை நூல்களில் ஒன்றாகும், இஸ்லாத்தின்ஆரம்பகாலத்தில் எழுதப்பட்ட நூலுமாகும்.” என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் இந்நூலை ஷீஆக்களின் இமாம்களில் ஒருவரான அலி பின் ஹுஸைனிடம் வாசித்துக் காட்டியபோது: ‘‘ஸுலைம் உண்மையே சொல்லியிருக்கிறார்’’ என்று சொன்னாராம். (பார்க்க: பிஹாருல் அன்வார், வஸாயிலுஸ்ஷீஆ)

ஷீஆக்களின் பிரபல்யமிக்க முக்கிய அறிஞர்களில் ஒருவரான அலி பின் இப்றாஹீம் அல்கும்மி என்பவர் குறிப்பிடுகின்றார்: “அல்-குர்ஆனில் மாற்றியதும் மாற்றப்பட்டதும் உள்ளது, அதில் கருத்துமாற்றம் செய்யப்பட்டதும், திரிபுபடுத்தப்பட்டதும் உள்ளது, அல்லாஹ் இறக்கியதற்கு மாற்றமானதும் அதில் உள்ளது.” (தப்ஸீருல் கும்மி)

பிஹாருல் அன்வார், தப்ஸீருல் அய்யாஸி போன்ற நூல்களில் வந்துள்ள ஒரு செய்தியில்: “அல்குர்ஆனில் அதிகரிப்புக்களும், குறைத்தல்களும் நடக்கவில்லை என்றால் எமது உரிமைகள் அதிலிருந்து மறைந்திருக்காது.’’

அல்குர்ஆன் மாற்றப்பட்டுள்ளது. அதில் இல்லாதது இணைந்தும், இருந்தது நீக்கப்பட்டும் உள்ளது என்ற விடயம் ஷீஆக்களின் எல்லா நூல்களிலும் பரவிக்கிடக்கின்றது. எல்லாவற்றையும் தொகுத்தால் அதற்கே தனியொரு நூல் எழுத வேண்டும். அதனால் ஷீஆக்களில் இந்தக்கொள்கையைச் சொன்ன முக்கிய அறிஞர்களையும் அவர்கள் அதைச் சொல்லியிருக்கும் நூல்களையும் கீழே தருகிறேன்.

01. ஹாஜிப் பின் லைத், **நூல்:** றியாலுல் உலமா
02. முஹம்மத் பின் ஹஸன் அஷ்ஷய்பானி
நூல்: நஹ்ஜுல் பயான் அன் கஷ்பி மஆனில் குர்ஆன்.
03. அஹ்மத் பின் முஹம்மத் அல்பர்கி
நூல்: அல் மஹாஸினுல் முஸ்தமில்
04. முஹம்மத் பின் ஹாலித். **நூல்:** கிதாபுத்தன்ஸீல் வத்த.்யீர்.
05. அலியிப்னு ஹஸன் பழால்
நூல்: கிதாபுத்தன்ஸீல் மினல் குர்ஆனி வத் தஹ்ரீபி
06. முஹம்மத் பின் ஹஸன் அஸ்ஸய்ரனி
நூல்: கிதாபுத்தஹ்ரீபி வத்தப்தீலி
07. ஹஸன் பின் ஸுலைமான் அல்ஹில்லி
நூல்: அத்தன்ஸீல் வத்தஹ்பீபு
08. இப்னுல் ஹிஜாம் முஹம்மத் இப்னுல் அப்பாஸ்
நூல்: கிராஅது அஹ்லில் பைத் (அலை)
09. அபூதாஹிர் அல் கும்மி
நூல்: கிராஅது அமீருல் மு.்.மினீன் (அலை) வஹுரூபிஹி
10. அய்யாஷீ (முஹம்மத் பின் மஸ்ஊத் அஸ்ஸுலமி)
நூல்: பிஹாருல் அன்வார், தப்ஸீருல் அய்யாஷீ
11. முஹம்மத் பின் ஹஸன் அஸ்ஸப்பார்
நூல்: பஸாயிருத்தரஜாத் அல்குப்ரா
12. ஹாஸிம் பின் ஸுலைமானில் பஹ்ரானி
நூல்: முகத்திமது தப்ஸீரில் புர்ஹான்
13. அல்முபீத்.
நூல்: அவாயிலுல் மகாலாத் பில் மதாஹிபில் முஹ்தாராத்

14. அல் ஆமிலி

நூல்: மிர்ஆதுல் அன்வார் வ மிஷ்காதுல் அஸ்ரார்.

15. அல் மஜ்லிஸி **நூல்:** ஹயாதுல் குலூப்

16. அந்நூரி அத்தப்ரஸீ

நூல்: பஸ்லுல் ஹிதாப் பீ இத்பாதி தஹ்ரீபி கிதாபி ரப்பில் அர்பாப்

17. அபுல் காஸிம் அலி பின் அஹ்மத் அல் கூபி

நூல்: அல் இஸ்திகாதா

18. நி.ஃ.மதுல்லாஹ் அல்ஜஸாயிரீ

நூல்: அல் அன்வாருன்னு.ஃ.மானிய்யா

19. அபுல் காஸிம் அல்மூஸவி அல்ஹூயி

நூல்: அல்பயான் பீ தப்ஸீரில் குர்ஆன்.

20. அப்துல்லாஹ் ஸிப்ர்

நூல்:மஸாபீஹுல் அன்வார் பீ ஹல்லி முஸ்கிலாதில் அஹ்பார்.

21. அல்குலைனி. **நூல்:** அல்காபி

இவர்களில் முபீத் என்பவர் ஷீஆக்கள் அல்குர்ஆனில் மாற்றங்கள் நடந்துள்ளது என்பதில் ஏகோபித்த கருத்தில் (இஜ்மா) உள்ளனர் என்று குறிப்பிடுகின்றார். (அவாயிலில் மகாலாத், அல் இர்ஷாத்)

''மேலும் எங்களது கரங்களுக்கு மத்தியில் இருக்கும் இந்தக்குர்ஆனில் நிறைய மாற்றங்களும், மனித கையாடல்களும் நடந்திருக்கிறது என்பது சந்தேகமற நம்பவேண்டிய விடயமாகும். இதையே எமது நூல்களில் வந்துள்ள அதிகமான செய்திகள் உணர்த்துகின்றன'' என்று குறிப்பிடுகின்றார் ஷீஆக்களின் மூத்த அறிஞர் ஹாஸிம் அல் பஹ்ரானி (பார்க்க: தப்ஸீருல் புர்ஹான்)

பதின்மூன்றாம் நூற்றாண்டில் வந்த அந்நூரி அத்தப்ரஸீ என்பவர் அல்குர்ஆன் மாற்றப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்யும் விதத்தில் ஷீஆ அறிஞர்களின் அறிவிப்புக்களைத் திரட்டி "பஸ்லுல் கிதாப் பீ இத்பாதி தஹ்ரீபி கிதாபி ரப்பில் அர்பாப்'' என்று ஒரு நூலை எழுதியுள்ளார். இது இப்போதும் ஈரானில் அச்சிடப்பட்டுக் கொண்டே இருக்கிறது.

குர்ஆன் மாற்றப்பட்டுள்ளது என்பது தொடர்பில் ஷீஆ அறிஞர்களின் கருத்துக்கள் 2000த்தையும் தாண்டுவதாக நி.்.மதுல்லாஹ் அல்ஜஸாயிரி என்பவர் குறிப்பிடுகின்றார்.

ஆனால் சம காலத்தில் வாழும் ஷீஆக்களில் பலர் சமூகத்திடம் இந்தக்கொள்கையை சொன்னால் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் மற்றும் நாம் (ஷீஆக்கள்) யூதர்கள்தான் என்பதை சந்தேகமற விளங்கிவிடுவார்கள் என்பதனால் ஷீஆக்களிடம் இக்கொள்கை இல்லை என்றும் இது அவர்களுக்கு எதிரானவர்களால் சுமத்தப்படும் கட்டுக்கதை என்றும் குறிப்பிடுகின்றனர். ஷீஆக்கள் இந்த விடயத்தில் உண்மையாளர்களாக இருந்தால் அல்குர்ஆன் பற்றிய மோசமான கருத்துக்களைச் சொல்பவர்களை மதம்மாறியவர்கள் என்று சொல்லி அவர்களின் நூல்களை அச்சிடாமல் இருக்கவேண்டும். ஆனால், இந்த இரண்டில் எதையும் அவர்கள் செய்யவில்லை. அப்படிச் செய்யவுமாட்டார்கள், அவ்வாறு செய்தால் அவர்களின் மதத்திற்கு அடையாளமே இல்லாமல் அழிந்துபோகும். ஏனெனில் அவர்களின் மதத்தைப் பேசிய எல்லோரும் அல்குர்ஆனில் தவறு உள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள். (அல்லாஹ் இந்த யூத கூட்டத்திலிருந்து எம்மையும் எம்மைப் போன்றவர்களையும் காப்பாற்றுவானாக)

07. குர்ஆனுக்கான விரிவுரைகள்:

ஷீஆக்களின் நம்பிக்கைப்படி அல்குர்ஆனை ஒரு இமாமைத்தவிர வேறு எவராலும் விளக்க முடியாது. அல்குர்ஆனுக்கான அவர்களின் (ஷீஆக்களின்) விரிவுரைகள் முற்றிலும் இஸ்லாத்திற்கு முரணான அமைப்பில் காணப்படுகின்றன. இங்கே அவர்கள் அல்குர்ஆனின் ஒவ்வொரு வசனத்திற்கும் வழங்கியிருக்கும் விளக்கங்களைக் குறிப்பிட முடியாது. அவ்வாறு குறிப்பிட்டால் பல வல்யூம்கள் எழுத வேண்டி வரும். சுருக்கமாகச் சொல்வதானால் ஷீஆக்கள் அல்குர்ஆனை தங்கள் இமாம்களின் புகழ்பாடுகின்ற ஒரு

நூலாகவும், அவர்களை ஏற்றுக்கொள்ளாதவர்களை வசைபாடும் ஒரு நூலாகவும் சித்தரிப்பதற்கு என்ன விளக்கங்களைக் கூற முடியுமோ அத்தனை விளக்கங்களையும் கூறியுள்ளார்கள்.

உதாரணத்திற்காக அவர்கள் அல்குர்ஆனுக்கு வழங்கும் சில விளக்கங்களை அவதானிப்போம்:

“அல்லாஹ் வானங்கள் மற்றும் பூமியின் பிரகாசமாக இருக்கிறான், அவனுடைய பிரகாசத்திற்கு உதாரணம்: அதில் விளக்கு இருக்கும் ஒரு மாடம் போன்றதாகும்: அவ்விளக்கு கண்ணாடியினுள் இருக்கிறது: நிச்சயமாக அக்கண்ணாடி பிரகாசிக்கும் ஒரு நட்சத்திரத்தைப் போன்றதாகும் (அது) பாக்கியம் பெற்ற ஜைத்தூன் மரத்தி (ன் எண்ணெயி) னால் எரிக்கப்படுகிறது. (அது) கீழ்திசையைச் சேர்ந்ததுமன்று: மேல் திசையைச் சேர்ந்ததுமன்று: அதன் எண்ணெயை நெருப்பு தொடாவிடினும் பிரகாசிக்கவே முற்படும். (இவையாவும் இணைந்து) ஒளிக்குமேல் ஒளியாகும்: அல்லாஹ் தான் நாடியவர்களைத் தன் பிரகாசத்தின் பால் செலுத்துகிறான்: மேலும், மனிதர்களுக்கு அல்லாஹ் இத்தகைய உதாரணங்களைக் கூறுகிறான். அல்லாஹ், ஒவ்வொரு பொருளைப் பற்றியும் நன்கறிந்தவன். (24:35)

இந்த வசனத்திற்கு விளக்கமளிக்கும் ஷீஆ அறிஞர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றனர்:

“மாடம்” - பாத்திமா
“விளக்கு” - ஹஸன்
“கண்ணாடி” - ஹுஸைன்
“அக்கண்ணாடி பிரகாசிக்கும் ஒரு நட்சத்திரத்தைப் போன்றதாகும்” - நிச்சயமாக பாத்திமா உலகத்துப் பெண்களில் பிரகாசிக்கும் ஒரு நட்சத்திரம் போன்றவராகும்.
“(அது) பாக்கியம் பெற்ற ஜைத்தூன் மரத்தி (ன் எண்ணெயி) னால் எரிக்கப்படுகிறது” - இங்கே பாக்கியம் பெற்ற மரம் என்பது இப்றாஹீம் (அலை) அவர்கள்.

“(அது) கீழ்திசையைச் சேர்ந்ததுமன்று: மேல் திசையைச் சேர்ந்ததுமன்று” - அது யூதத்தைச் சேர்ந்ததுமன்று கிறிஸ்தவத்தைச் சேர்ந்ததுமன்று.

“அதன் எண்ணெயை நெருப்பு தொடாவிடினும் பிரகாசிக்கவே முற்படும்” - அவரிடம் (பாத்திமாவிடம்) அறிவு வெடித்துச் சிதறப் பார்க்கிறது.

“ஒளிக்குமேல் ஒளியாகும்” - அதிலிருந்து ஒரு இமாமுக்குப் பின் இன்னொரு இமாம் வருகிறார்.

“அல்லாஹ் தான் நாடியவர்களைத் தன் பிரகாசத்தின் பால் செலுத்துகிறான்” - அல்லாஹ் தான் நாடியவர்களை இமாம்களின் பால் செலுத்துகின்றான். (பார்க்க: அல்காபி)

அல்லாஹ்வுக்கு இணைவைத்தல் தொடர்பில் வரும் வசனங்கள் அனைத்தையும் அலிக்கு சொந்தமான ஆட்சி அதிகாரம், தலைமைத்துவத்தில் இன்னுமொருவருக்கு பங்கு கொடுப்பதைச் சொல்வதாகக் குறிப்பிடுகின்றனர்.

“நிச்சயமாக உனக்கும் உனக்கு முன்னால் இருந்தவர்களுக்கும் வஹி அறிவிக்கப்பட்டதெல்லாம்: நீ இணைவைத்தால் உனது நல்லறன்கள் எல்லாம் அழிந்துவிடும். நிச்சயமாக நீ கைசேதப்படுபவர்களில் நின்றும் ஆகிவிடுவாய்” (39:65)

இந்த வசனத்தை விளக்கும் ஷீஆக்கள் சொல்வதைப் பாருங்கள்:

நிச்சயமாக உனக்கும் உனக்கு முன்னால் இருந்தவர்களுக்கும் வஹி அறிவிக்கப்பட்ட விடயம்தான்: நீ அலிக்கு சேரவேண்டிய தலைமைத்துவத்தில் அவருடன் வேறு ஒருவருக்கும் கொடுக்குமாறு ஏவினால், உனது நல்லறன்கள் வீணாகிவிடும் நிச்சயமாக நீ கைசேதப்படுபவர்களில் நின்றும் ஆகிவிடுவாய்.

(பார்க்க: தப்ஸீருல் புர்ஹான், பிஹாருல் அன்வார்)

மேலும்: “நிச்சயமாக அல்லாஹ் அவனுக்கு இணைவைக்கப்படு -வதை மன்னிக்கமாட்டான் அவை அல்லாதவற்றை தான் நாடியவர்களுக்கு மன்னிப்பான்.” (4:48) எனும் வசனத்தை விளக்க முனைந்த ஷீஆ அறிஞர்,

நிச்சயமாக யார் அலியின் ஆட்சி அதிகாரம், தலைமைத்துவத்தை நிராகரிக்கின்றானோ அவனை அல்லாஹ் மன்னிக்கமாட்டான் அவை அல்லாதவற்றை அவரை(அலியை) ஏற்றுக்கொண்டவர்களுக்கு மன்னிப்பான். (பார்க்க: தப்ஸீருஸ்ஸாபி, தப்ஸீருல் அய்யாஷி, நூருத்தகலைன்)

அல்லாஹ்வை மட்டும் வணங்குதல் அவன் அல்லாதவற்றை தவிர்ந்து கொள்ளுதல் என்பவற்றை ஏவும் வசனங்களை: இமாம்களின் தலைமைத்துவத்தை ஏவுதல் அவர்களை ஏற்றுக்கொள்ளாதவர்களை விட்டும் நீங்குதல் என்று விளக்கப்படுகின்றது.

“அல்லாஹ்வை மட்டும் வணங்குமாறும் அவன் அல்லாத தாகூத்களை தவிர்க்குமாறும் நிச்சயமாக நாம் ஒவ்வொரு சமுதாயத்திலும் ஒரு தூதரை அனுப்பினோம், அவர்களில் அல்லாஹ் நேர்வழி காட்டியவர்களும் உள்ளனர், அவர்களில் வழிகேடு உறுதியாகிவிட்டவர்களும் உள்ளனர்.” (16:36)

இந்த வசனம்: இமாம்களை மாத்திரம் ஏற்றுக்கொள்ளுமாறும் அவர்கள் அல்லாமல் தலைவர்களாக ஏற்றுக்கொள்ளப்படுபவர் - களை தவிர்க்குமாறும், இமாம்களை ஏற்றுக்கொள்ளாததினால் வழிகேடு ஏற்படுவதாகவும் சொல்வதாக விளக்குகின்றனர். (பார்க்க: தப்ஸீருல் அய்யாஸி)

“இரண்டு கடவுள்களை நீங்கள் எடுத்துக்கொள்ளாதீர்கள் என்று அல்லாஹ் சொல்கிறான், நிச்சயமாக ஒரே கடவுள்தான், எனவே என்னை அஞ்சி வாழுங்கள்” (16:51)

இந்த வசனத்தை விளக்கும்போது: இரண்டு இமாம்களை (தலைவர்களை) நீங்கள் எடுத்துக்கொள்ளாதீர்கள், நிச்சயமாக ஒரு இமாம்தான் எனவே அவருக்கே அஞ்சி வழிப்படுங்கள். என்று விளக்குகின்றனர். (பார்க்க: தப்ஸீருஸ்ஸாபி, தப்ஸீருல் புர்ஹான்)

அல்லாஹ்வின் அழகிய திருநாமங்கள் என்பது இமாம்களின் பெயர்களாகும்.

“நிச்சயமாக அல்லாஹ்வுக்கு அழகிய பெயர்கள் உள்ளன. அதைக்கொண்டு அவனை அழையுங்கள்.” (7:180)

இந்த வசனத்தில் வரும் அழகிய திருநாமங்கள் என்பது ஷீஆக்ள ஏற்றுக்கொண்டிருக்கும் இமாம்களின் பெயர்களாகும். அவற்றைக் கொண்டு அல்லாஹ்வை அழைத்தாலே அல்லாஹ் பதிலளிக்கிறான். (பார்க்க: பஸாயிருத்தரஜாத், அல்வாபி)

காபிர்கள், நயவஞ்சகர்கள் பற்றி வந்துள்ள அல்குர்ஆன் வசனங்கள் அனைத்தும் பெரும் பெரும் ஸஹாபாக்களைப் பற்றி இழிந்து பேசுவதாக விளக்குகின்றனர்.

“நிராகரிப்போர் (அந்நாளில் அல்லாஹ்விடம்) எங்கள் இரட்சகனே! ஜின்களிலிருந்தும் மனிதர்களிலிருந்தும், எங்களை வழிகெடுத்த இரு சாராரையும் எங்களுக்கு நீ காண்பிப்பாயாக! அவ்விருவரும் தாழ்ந்தோரில் ஆகிவிடுவதற்காக அவ்விருவரையும் நாங்கள் எங்கள் பாதங்களுக்குக் கீழ் ஆக்குவோம் என்று கூறுவார்கள்.” (41:29)

இந்த வசனத்தை விளக்கும்போது: இந்த இருவரும் அபூபக்ரும், உமருமாகும் என்று குறிப்பிடுகின்றனர். (பார்க்க: புரூஉல் காபி பி ஹாமிஸி மிர்ஆதில் உகூல்)

“(நிராகரிப்பாளர்கள்) ஜிப்தையும் தாகூதையும் ஈமான்கொள்கிறார்கள்” (4:51) என்ற வசனத்தை விளக்கும்போது: ஜிப்த், தாகூத் என்பது அபூபக்ரும், உமருமாகும். என்று குறிப்பிடுகின்றனர். (பார்க்க: தப்ஸீருல் புர்ஹான், தப்ஸீருஸ்ஸாபி, அல் இஹ்திஸாஸ்)

அல்குர்ஆனில் குறிப்பிடப்படும் வானவர்களின் பெயர்கள் எல்லாம் ஷீஆக்களின் பன்னிரண்டு இமாம்களைக் குறிப்பதாக ஷீஆக்களின் நூல்கள் குறிப்பிடுகின்றன. (பார்க்க: அல்காபி, பிஹாருல் அன்வார்)

08. அல்-குர்ஆனை நடைமுறைப்படுத்த முடியாது:

இவ்வளவு பிரச்சினைகளும் மிக்க இந்தக்குர்ஆனை நடைமுறைப்படுத்தவோ இறைவனின் வேதம் என்று நம்பவோ முடியாது என்பது ஷீஆக்களின் வாதமாகும். ஷீஆக்களின் அல்குர்ஆன் விளக்கவுரையாளர்களில் மிகவும் முக்கியமானவர் பைழுல் காஸானி என்பவர். அவர் தனது “தப்ஸீருஸ்ஸாபி” எனும் அல்குர்ஆன் விளக்கவுரை நூலில், அல்குர்ஆன் மனித கையாடல்களுக்கு உட்பட்டிருக்கிறது. பல அருவருக்கத்தக்க மோசமான வார்த்தைகள் அதில் உள்ளன என்று விபரித்துவிட்டு பின்வருமாறு சொல்கிறார்:

“எனவே, அல்-குர்ஆனில் எந்தவொன்றையும் நாம் நம்ப முடியாது. ஏனெனில், அதன் ஒவ்வொரு வார்த்தையிலும் மாற்றங்களும், கருத்துத்திரிபுகளும் ஏற்பட்டிருப்பதற்கு வாய்ப்புள்ளது, மேலும் அல்லாஹ் இறக்கியதற்கு மாற்றமாக இருப்பதற்கும் வாய்ப்புள்ளது, எனவே, குர்ஆனை நாம் ஆதாரமாகவே எடுக்க முடியாது. அதனால், எமக்கு எந்தப்பலனும் இல்லை. அதைப்பின்பற்றுமாறு ஏவுவதினாலோ அதைப் பற்றிப்பிடிக்குமாறு வேண்டுவதினாலோ எந்தப்பிரயோசனமும் இல்லை.”

அல்லாஹ் எம்மையும் எம் சந்ததியையும் இக்கொள்கையிலிருந்து பாதுகாப்பானாக.

09. எத்தனை குர்ஆன்கள்:

மேலே நாம் சொன்னவை அனைத்தும் தற்போது எம்மிடமுள்ள குர்ஆன் விடயத்தில் ஷீஆக்கள் வைத்திருக்கும் நம்பிக்கை. இது அல்லாத பல குர்ஆன்கள் ஷீஆக்களிடம் உள்ளதாகவும்

அவைகள் இதுவரைக்கும் பிறக்காத பன்னிரண்டாவது இமாமிடம் இருப்பதாகவும் அவர் வரும்போது அவைகளைக்கொண்டு வருவார் என்றும் ஷீஆக்கள் குறிப்பிடுகின்றனர். அந்தக் குர்ஆன்கள் என்னவென்று பார்ப்போமா?

1. முஸ்ஹபு அலி:

நபியவர்கள் மரணித்த பின்பு அலி(ரழி) அவர்கள் உண்மையான குர்ஆனைத் தொகுத்தார்களாம் இதையே ஷீஆக்கள் முஸ்ஹபு அலி என்று சொல்கின்றனர். நபியவர்கள் மரணித்தபின்பு ஆறு மாதங்களாக அலி (ரழி) குர்ஆனைத்தொகுக்கும் பணியில் ஈடுபட்டதாகவும் பின்பு அதை தனது மக்களிடமும் அதை அவர்கள் அவர்களது மக்களிடமும் கொடுத்து இவ்வாறு பரம்பரையாக வழங்கப்பட்டு வந்ததாகவும், தற்போது அது பன்னிரண்டாவது இமாமிடம் இருப்பதாகவும் அவர் வரும்போது அதைக்கொண்டு வருவார் என்றும் ஷீஆக்கள் நம்புகின்றனர். (பார்க்க: உஸூலுல் காபி, அல்-இஹ்திஜாஜ்)

2. முஸ்ஹபு பாத்திமா:

ஷீஆக்களின் முக்கிய அறிஞர்களில் ஒருவரான ஹாயிரி என்பவர் குறிப்பிடுகின்றார்: “முஸ்ஹபு பாத்திமாவைப் பொறுத்தவரை அது உங்களின் குர்ஆனைப்போன்று மூன்று மடங்காகும். அதை அல்லாஹ அவருக்கு சொன்னான். மேலும் அதை அவருக்கு வஹியாக இறக்கிவைத்தான்.” (அத்தீனு பைனஸ்ஸாயிலி வல் முஜீப்)

1986.3.2 ஞாயிற்றுக்கிழமை ஈரானில் பெண்களுக்கான பெருநாள் (ஈதுல் மர்ஆ) தினத்தன்று கொமைனி அவர்கள் ஆற்றிய உரையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

“பாத்திமா ஸஹ்ரா அவர்கள் தனது தந்தையின் இறப்பிற்குப் பிறகு 75நாட்கள் இருந்தார்கள். அந்த நாட்களை துக்கத்துடனும் கவலையுடனும் கழித்தார்கள். இந்த நாட்களில் ஜிப்ரீல் அவர்கள்

பாத்திமாவுக்கு ஆறுதல் சொல்வதற்காகவும், எதிர்காலத்தில் நடக்க இருக்கும் விடயங்களை அறிவிப்பதற்காகவும் வந்து செல்பவராக இருந்தார். இந்த அறிவிப்பின் மூலம் ஜிப்ரீல் அதிகமாக இந்த தினங்களில் பாத்திமாவிடம் வந்து செல்பவராக இருந்திருக்கிறார் என்பது தெரிகிறது. இது போன்ற அறிவிப்புக்கள் சங்கைமிக்க நபிமார்கள் தவிர்ந்த வேறு மனிதர்களுக்கு வந்திருக்கும் என்று நான் நம்பவில்லை.

இமாம் அலி அவர்கள் ஜிப்ரீலிடமிருந்து பாத்திமாவுக்கு வரும் விடயங்களை எழுதிக்கொண்டிருந்தார்கள். இவ்வாறுஅறிவிக்கப்பட்ட விடயங்களில் ஈரானின் விடயமும் அறிவிக்கப்படுவதற்கு சாத்தியமிருக்கிறது. ஆனால் இதை எழுதிக்கொண்டிருந்த அலி அவர்களை நபியவர்களுக்கு வந்த வஹியை எழுதியவரைப்போல வஹியை எழுதியவர் என்று சொல்வதா என்று எமக்குத் தெரியவில்லை. நிச்சயமாக இந்தச் சிறப்பு நபிமார்களுக்குப் பிறகு பாத்திமதுஸ் ஸஹ்ராவிற்கே கிடைத்துள்ளது. இது அவருக்கு மாத்திரம் உரிய தனிச்சிறப்பாகும்.'' (பார்க்க: ஹகீகதுஸ்ஸீஅதி ஹல் யும்கினு தகாருபுஹும் மஅ அஹ்லிஸ்ஸுன்னா)

வேறு ஒரு இடத்தில் கொமைனி சொல்கிறார்: “பாத்திமதுஸ் ஸஹ்றாவிற்கு அல்லாஹ் வஹியாக அறிவித்த முஸ்ஹபு பாத்திமா எனும் வேதத்தைக்கொண்டு நாம் பெருமையடைகின்றோம்.” இதற்கு ஆதாரமாக பிரதானமான ஷீஆ அறிஞர் குலைனி அவர்கள் குறிப்பிட்டிருக்கும் ஒரு அறிவிப்பைச் சொல்கிறார்: “நபி (ஸல்) அவர்களின் மரணத்தின் பின்பு ஜிப்ரீல் அவர்கள் பத்திமாவிடம் வருபவராக இருந்தார் மறைவான விடயங்களைப்பற்றி அவருக்கு (பாத்திமாவுக்கு) அறிவிப்பார் அதை அமீருல் மு.ஃ.மினீன் அலி அவர்கள் பதிவு செய்து கொள்வார்கள். இதுவே முஸ்ஹபு பாதிமா '' (பார்க்க: வஸிய்யதுல் குமைனி, கஸ்புல் அஸ்ரார்) “முஸ்ஹபு பாத்திமா உங்கள் குர்ஆன் போன்று மூன்று மடங்கு ஆகும். அல்லாஹ் மீது ஆணையாக உங்கள் குர்ஆனில் இருக்கும் ஒரு எழுத்துக்கூட அதில் இல்லை.'' (உஸூலுல் காபி)

3. அல்-ஜிப்ர்:

ஜிப்ர் என்பது ஷீஆக்கள் சொல்லும் மிகப்பெரிய குர்ஆனாக கருதப்படுகின்றது. இது இரண்டு வகைப்படும் ஜிப்ருல் அப்யழ், ஜிப்ருல் அஹ்மர், ஷீஆக்களின் இமாம்களில் ஒருவர் அவரின் தோழர்களுக்கு எங்களிடம் ஜிப்ருல் அப்யழ் இருக்கிறது என்றார்: அதற்கு அவர்கள் அதில் என்ன இருக்கிறது என்று கேட்கிறார்கள். இமாம் சொல்கிறார்: ‘‘அதிலே தாவூத் (அலை) அவர்களின் ஸபூர் வேதமும், மூஸா (அலை) அவர்களின் தவ்ராத் வேதமும், ஈஸா(அலை) அவர்களின் இன்ஜீல் வேதமும், இப்றாஹீம்(அலை) அவர்களின் ஸுஹுபும், ஹலால், ஹராம் என்பனவும் உள்ளன. மேலும் அதில் முஸ்ஹபு பாத்திமா உள்ளது. அதில் தற்போதுள்ள குர்ஆன் இருப்பதாக நான் கருதவில்லை, அதில் மனிதர்களுக்குத் தேவையான அனைத்தும் உள்ளது... மேலும் எங்களிடம் ஜிப்ருல் அஹ்மரும் இருக்கிறது... ’’ என்று அதைப்பற்றியும் விளக்குகிறார். அதையும் மொழிபெயர்த்து உங்கள் நேரத்தை வீணடிக்க நான் விரும்பவில்லை. (பார்க்க: பஸாயிருத்தரஜாத்).

4. அல்ஜாமிஆ:

ஷீஆக்களின் மத விவகாரங்களுக்கான பிரதான நூலாகவும், ஷீஆக்களின் அனைத்து அறிஞர்களாலும் மிகவும் நம்பகமானது என்று புகழப்பட்டதுமான அல்காபி எனும் நூலில் பின்வரும் செய்தி பதிவுசெய்யப்பட்டுள்ளது:

‘‘எங்களிடம் அல்-ஜாமிஆ உள்ளது. அல்ஜாமிஆ என்றால் என்னவென்று தெரியுமா... அதன் நீளம் நபியவர்களின்முழம்போல 70முழமாகும். நபியவர்கள் தன் வாயினால் அதைச்சொன்னார்கள் அலி அவர்கள் தன் வலக்கரத்தினால் அதை எழுதினார்கள், அதிலே அனைத்து ஹலால்களும் அனைத்து ஹராம்களும், மற்றும் மனிதர்களுக்குத் தேவையான அனைத்து விடயங்களும் உள்ளன,...மேலும் எங்களிடம் ஜிப்ரும் உள்ளது.. அது ஆதம்

நபியிடம் இருந்து வந்த ஒரு பையாகும் அதில் நபிமார்களின் அறிவும் அவர்களுக்குப் பிறகு அவர்களின் பணிப்பின்பேரில் தலைமைத்துவத்தை வகித்தவர்களின் அறிவும், பனூஇஸ்ர வேலர்களில் (யூத கிறிஸ்தவர்களில்) இருந்த அறிஞர்களின் அறிவும் உள்ளது. மேலும், எங்களிடம் முஸ்ஹபு பாதிமாவும் உள்ளது, முஸ்ஹபு பாத்திமா என்றால் அவர்களுக்கு என்ன தெரியும், நிச்சயமாக அது உங்களுடைய குர்ஆன் போல மூன்று மடங்கு, ஆனால் உங்களிடம் இருக்கும் குர்ஆனின் எந்தவொரு எழுத்தும் அதில் இல்லை.. நிச்சயமாக எங்களிடம் கடந்தகாலம் பற்றிய அறிவும், நிகழ் காலம் பற்றிய அறிவும், மறுமை நாள் வரை நடக்க இருப்பது பற்றிய அறிவும் உள்ளது.''

5. 12 (பன்னிரண்டு) ஸஹீபாக்கள்:

ஷீஆக்கள் தங்களுக்கு வானத்திலிருந்து பன்னிரண்டு மோதிரங்களும், 12(பன்னிரண்டு) ஸஹீபாக்களும் இறங்கியதாகவும் ஒவ்வொரு மோதிரத்திலும் ஒவ்வொரு இமாமின் பெயர் பொறிக்கப்பட்டிருந்ததாகவும், ஸஹீபாவில் அவர் பற்றிய விடயங்கள் இருந்ததாகவும் குறிப்பிடுகின்றனர். (பார்க்க: கமாலுத்தீனி வ தமாமுந்நி·.மா)

6. நபியவர்களின் மரணத்திற்கு சற்று முன்னர் இறங்கிய வேதம்:

''நிச்சயமாக அல்லாஹ் நபியவர்கள் மரணிப்பதற்கு முன்னர் அவருக்கு ஒரு வேதத்தை இறக்கிவைத்தான், அதை ஜிப்ரீல் கொண்டு வந்து, 'முஹம்மதே இது உனது குடும்பத்தில் உனது வஸிய்யத்தைப்பெற்ற தலைவருக்கு உரியது' என்றார். நபியவர்கள் எனது குடும்பத்தில் உள்ள அந்தத் தலைவர் யார்? என்றார்கள்: ஜிப்ரீல்: அலி பின் அபீதாலிப் என்று கூறினார். அந்த வேதத்தில் தங்கத்தினாலான பன்னிரண்டு முத்திரைகள் இருந்தன. நபியவர்கள் அதை அலி அவர்களிடம் கொடுத்து அதில்

உள்ள ஒரு முத்திரையை உடைத்து அதில் உள்ளவற்றை நடைமுறைப்படுத்துமாறு ஏவினார்கள். அலி அவர்கள் அதில் ஒரு முத்திரையை உடைத்தார்கள். அதில் உள்ளவற்றை நடை முறைப்படுத்தினார்கள் பின்பு அதை ஹஸனிடம் கொடுத்தார்கள் ஹஸனும் ஒரு முத்திரையைக்கிழித்து அதில் உள்ளவற்றை நடைமுறைப்படுத்தினார்... அவ்வாறே பன்னிரண்டாம் இமாம்வரை சென்றது.'' (பார்க்க: உஸூலுல் காபி)

7. லவ்ஹு பாதிமா:

இந்த வேதம் இறைவனால் நபியவர்களுக்கு இறக்கிவைக்கப் பட்டது என்றும், அதை நபியவர்கள் பாத்திமா அவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கினார்கள் என்றும் ஷீஆக்கள் குறிப்பிடுகின்றார்கள். (பார்க்க: அல்காபி)

8. ஸுஹுபு அலி:

இது ஒரு ஏடாக இருந்த போதிலும் இதற்குள் பத்தொன்பது ஏடுகள் உள்ளதாம். இதை நபியவர்கள் இமாம்களுக்கு வழங்க ஒவ்வொரு இமாமும் அவர்களுக்குப் பின்னால் வந்த இமாம்களிடம் வழங்கினார்களாம்.(பார்க்க:பிஹாருல்அன்வார், மஸாயிருத்தரஜாத்.)

9. ஸஹீபது பாத்திமா:

இது அல்லாஹ்வினால் இறக்கப்பட்ட இன்னுமொரு வேதமென்று ஷீஆக்களின் நூல்கள் குறிப்பிடுகின்றன.
அபூ அப்துல்லாஹ் பின் ஜாபிர் சொல்வதாக 'அல்-இஹ்திஜாஜ், உயூனு அஹ்பாரிர் ரிழா, இக்மாலுத்தீன் வ தமாமுந் நி.'.மா' போன்ற ஷீஆக்களின் முக்கியமான நூல்களில் பதிவுசெய்யப் பட்டுள்ள ஒரு அறிவிப்பு பின்வருமாறு சொல்கிறது:

"ஹஸன் பிறந்ததற்காக வாழ்த்துச் சொல்வதற்கு எனது தலைவி முஹம்மத் (ஸல்) அவர்களின் மகள் பாதிமாவிடம் நுழைந்தேன், அப்போது அவருடைய கரத்திலே மிகவும் வெண்மையான ஒரு

ஏட்டைக் கண்டேன். அது என்ன என்று விசாரித்தேன். அதற்கவர்கள்: இதில் என்னுடைய பிள்ளைகளிலிருந்து வரும் பன்னிரண்டு இமாம்களின் பெயர்களும் இருக்கிறது என்றார்கள். அதை, நான் பார்ப்பதற்காக தருமாறு வேண்டினேன். அதற்கு: ஜாபிரே! ஒரு நபி அல்லது நபியினால் வஸிய்யத் செய்யப்பட்டவர் அல்லது நபியின் குடும்பத்தினர் தவிர்ந்த ஏனையவர்கள் இதைத் தொடுவது தடைசெய்யப்பட்டுள்ளது. அவ்வாறில்லை யென்றால் நான் உங்களுக்குத் தந்திருப்பேன் என்று கூறினார்கள்.''

10. ஸஹீபது துஆபதிஸ்ஸைப்:

நபி (ஸல்) அவர்களின் வாளில் ஒரு சிறிய ஏடு இருந்ததாம். அந்த ஏட்டில் சில வார்த்தைகள் இருந்ததாம். அந்த ஒவ்வொரு வார்த்தையிலிருந்தும் ஆயிரம் அர்த்தங்கள் பிறக்குமாம். ஷீஆக்களின் இமாம்களில் ஒருவரான அபூஅப்தில்லாஹ் என்பவர் சொல்கிறார்: அந்த வார்த்தைகளில் இன்றுவரை இரண்டுதான் திறந்திருக்கிறது. மற்றவைகள் இன்னமும் மூடியே இருக்கின்றன. (பார்க்க: பிஹாருல் அன்வார், பஸாயிருத்தரஜாத்)

11.ஸஹீபதுந் நாமூஸ்:

ஷீஆக்களின் இமாம்களில் ஒருவர் பெயரில் பஸாயிருத் தரஜாத் எனும் நூலில் வரும் ஒரு அறிவிப்பு பின்வருமாறு உள்ளது: ''நிச்சயமாக எங்களைப் பின்பற்றுபவர்களின் பெயர்களும், அவர்களின் பெற்றோர்களின் பெயர்களும் அதில் எழுதப்பட்டுள்ளன.. நிச்சயமாக எங்களையும் எங்களைப் பின்பற்றுபவர்களையும் தவிர மறுமைநாள் வரைக்கும் வேறு எவரும் இஸ்லாத்தில் இருக்க மாட்டார்கள்.''

12. ஸஹீபதுல் அபீதா:

அலி(ரழி) அவர்கள் சொன்னார்களாம், என்னிடம் அதிகமான ஸஹீபாக்கள் உள்ளன. அதில் ஒன்றுதான் அபீதா என்று

சொல்லப்படும் ஸஹீபா. அதைவிட அரபிகள் விடயத்தில் மிகவும் கடுமையான ஒன்று வரவில்லை, அரபியர்களில் இழிவான அறுபது கோத்திரங்களின் பெயர்கள் அதிலே உள்ளன, அவர்களுக்கு அல்லாஹ்வின் மார்க்கத்தில் எந்தப் பங்கும் இல்லை. (பார்க்க: பஸாயிருத்தரஜாத், பிஹாருல் அன்வார்.)

சகோதரர்களே! இவை எல்லாவற்றையும் நம்பியவர்களை இனியும் உங்கள் சகோதரர்கள் என்று ஏற்றுக்கொண்டு அவர்கள் பிரச்சினையில்லாதவர்கள் என்று சொல்லப்போகிறீர்களா? இவர்கள்தான் எங்களின் உண்மையான பயங்கரமான விரோதிகள் என்பதை ஏற்றுக்கொள்கிறீர்களா? (அல்லாஹ் போதுமானவன்.)

10. உண்மையான குர்ஆன் தற்போது எங்கே?

இத்தனையையும் நீங்கள் வாசித்ததற்குப்பிறகும் உங்கள் உள்ளங்களில் ஒரு சந்தேகம் எழலாம். இவைகள் சில நேரம் ஷீஆக்கள் மீது இட்டுக்கட்டப்பட்டவைகளாக இருக்கலாம். ஏனெனில் ஷீஆக்கள் இன்றும் நாம் வைத்திருக்கும் குர்ஆனைத்தானே ஓதுகிறார்கள். அவர்களிடம் வேறு குர்ஆன்கள் இல்லையே என நீங்கள் நினைக்கலாம் அதற்கு ஷீஆக்களே விளக்கம் சொல்கிறார்கள்.

அவர்கள் சொல்லும் இந்த குர்ஆன்கள் எல்லாம் அவர்கள் எதிர்பார்த்திருக்கும் பன்னிரண்டாம் இமாமிடத்தில் இருக்கிறதாம். அவர் வரும்போதுதான் அவைகளை எல்லாம் கொண்டுவருவாராம். அதற்குப் பிறகு அவர் உண்மையான குர்ஆனை இந்த உலகத்தாருக்கு அறிமுகம் செய்து அதையே ஓதுமாறு பணிக்க உலகில் உள்ளவர்கள் அந்தக் குர்ஆனை பின்பற்றுவார்களாம். அதுவரைக்கும் ஷீஆக்கள் மற்ற மக்களிடம் இருக்கின்ற குர்ஆனையே ஓதவேண்டுமாம். என்ன கொள்கை பார்த்தீர்களா?

பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டிவிடுகிறார்கள் இல்லையா? இனி அது தொடர்பாக அவர்களது நூல்களில் பதிவு செய்துள்ள சில அறிவிப்புக்களைப் பார்ப்போம்.

நபி (ஸல்) அவர்கள் மரணித்ததன் பின்பு அலி (ரழி) அவர்கள் அல்குர்ஆனை ஒன்று சேர்த்தார்கள். பின்பு மக்களிடம் அதைக்கொண்டுவந்தார்கள். மக்கள் அதைப் புறக்கணித்தனர். அப்போது அலி அவர்கள் உங்களிடம் இதைக்காட்ட வேண்டும் என்பதற்காகவே நான் கொண்டு வந்தேன். இந்தக் குர்ஆனை மலக்குகளும் என்னுடைய பிள்ளைகளுமே தொடுவார்கள் என்றார். அதற்கு உமர் (ரழி) அவர்கள் இந்தக்குர்ஆனை யாராவது பிறகு கொண்டு வந்து இந்த சமுதாயத்திற்கு அறிமுகம் செய்வார்களா? என்று கேட்டார். அதற்கு அலி அவர்கள். ஆம். எனது சந்ததியில் வரும் பன்னிரண்டாவது இமாம் இதைக்கொண்டு வருவார். மக்களுக்கு அதைப் பிரச்சாரம் செய்வார். அதன்படி மக்களை வாழவைப்பார் என்றார். (பார்க்க: அல் இஹ்திஜாஜ், அல் காபி பில் உஸூல்)

ஷீஆக்கள் அலி(ரழி) அவர்கள் மீது இட்டுக்கட்டியிருக்கும் இந்த அறிவிப்பு தவறான தகவலைச் சொல்கிறது என்பதற்கு அதிலேயே நிறைய சான்றுகள் உள்ளன: அலி(ரழி) சொன்னாராம் நான் இதை உங்களிடம் காட்டுவதற்கே கொண்டுவந்தேன். அப்படியென்றால் மக்கள் அதைப் பின்பற்றுவதற்காகவும் அதைக் கற்று அதன்படி வாழ்வதற்காகவும் அவர் அந்தப் பணியைச் செய்யவில்லை.

இதை மலக்குகளும் என்னுடைய பிள்ளைகளுமே தொடுவார்கள். அப்படியென்றால் அது மக்களுக்குரியது அல்ஹது மலக்குகளுக்கும் அலியவர்களின் பிள்ளைகளுக்கும் உரியது. ஆனால், அல்லாஹ்வின் அருள்மறை உலகத்தார் அனைவருக்குமுரியது

நி∴மதுல்லாஹ் அல் ஜஸாயிரி அவர்கள் தனது “அல் அன்வாருன்னு∴மானிய்யா” எனும் நூலில் பின்வருமாறு

குறிப்பிடுகின்றார்: "தொழுகையிலும் அவை அல்லாத இடங்களிலும் இப்போது மக்களிடம் உள்ள குர்ஆனை பன்னிரண்டாவது இமாம் வரும்வரை ஓதுமாறும் அதன் சட்டங்களை நடைமுறைப்படுத்துமாறும் இமாம்கள் ஷீஆக்களுக்கு ஏவியிருப்பதாக பல அறிவிப்புக்கள் வந்துள்ளன. பன்னிரண்டாவது இமாம் உண்மையான குர்ஆனை கொண்டு வந்த பின்பு மக்களிடம் உள்ள குர்ஆன் வானத்திற்கு உயர்த்தப்படும். அலி அவர்கள் எழுதிய குர்ஆனை இமாம் வெளியாக்குவார். அதை ஓதுவார். அதன் சட்டங்களை நடைமுறைப்படுத்துவார்."

ஐஸாயிரி அவர்கள் சொல்வதாக குலைனி அவர்கள் தனது அல் காபி எனும் நூலில் பதிவு செய்திருக்கும் அறிவிப்பைப் பாருங்கள்: ஷீஆக்களின் இமாம்கள் ஒருவரிடத்தில் அவரின் தோழர்கள் "இமாமவர்களே! அல்-குர்ஆன் வசனமென்று நீங்கள் சொல்லும் பல வசனங்களை நாம் பார்க்கிறோம் ஆனால் அது எம்மிடமுள்ள குர்ஆனில் இல்லை. அதனால் உங்களிடமிருந்து வந்ததைப் போல எம்மால் அந்த வசனங்களை சரியாக ஓதவும் முடியவில்லை. இதற்காக நாம் குற்றம் பிடிக்கப்படுவோமா? என்று கேட்டனர். அதற்கு இமாமவர்கள்: இல்லை நீங்கள் எவ்வாறு கற்றீர்களோ அவ்வாறே ஓதுங்கள். உங்களுக்கு அதைக் கற்பிக்கும் ஒருவர் வருவார்." என்று கூறினார்கள்.

ஷீஆக்களின் அறிஞர்களில் ஒருவரான ஹாயிரி அவர்கள் தனது "அத்தீனு பைனஸ்ஸாயிலி வல் முஜீப்" எனும் நூலில் இது தொடர்பாக பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:
"நபியவர்களின் மரணத்தின் பின்பு அலி அவர்கள் குர்ஆனைத் தொகுத்தார்கள். பின்பு அதை தனது மகன் ஹஸனிடம் கொடுத்தார்கள். அவர் ஹுஸைனிடம் கொடுத்தார். அவர் அவரது மகனிடம் என்று (ஷீஆக்கள் ஏற்றுக்கொள்ளும்) இமாம்கள் ஒருவர் பின் ஒருவராக அது வந்தது. கடைசியாக பன்னிரண்டாவது இமாம் அதனைக்கொண்டு வருவார். அல்லாஹ் அவரின் வருகையை துரிதப்படுத்துவானாக."

ஸாலிம் பின் ஸலமா எனும் ஷீஆ அறிவிப்பாளர் ஒருவர் சொல்கிறார்: “நான் அபூ அப்தில்லாஹ் (ஷீஆக்களின் இமாம்களில் ஒருவர்) அவர்களிடம் இருந்தேன். அப்போது ஒருமனிதர் அவரிடம் அல்குர்ஆனை ஓதிக்காட்டினார். மனிதர்கள் ஓதும் குர்ஆனில் இல்லாத பல வாசகங்களை அவர் ஓதுவதை நான் செவியேற்றுக் கொண்டிருந்தேன். அப்போது அபூ அப்தில்லாஹ் அவர்கள்: இவ்வாறு நீ ஓதாதே பன்னிரெண்டாவது இமாம் வரும்வரை மனிதர்கள் ஓதுவதைப்போன்று ஓது அவர் (பன்னிரெண்டாவது இமாம்) வந்த பின்பு உண்மையான அல்குர்ஆனை ஓதுவார். என்று கூறினார்கள்”
(அல் அன்வார் அந்நுஃமானிய்யா)

இதற்குப்பிறகாவது ஷீஆக்களின் தந்திரங்கள் திருகுதாளங்கள் விளங்கவில்லையா? இவைகளை நன்கு சிந்திக்கும்போது நிச்சயமாக இதை ஒரு முஸ்லிம் சொல்லியிருக்க முடியாது என்பது தெளிவாகத் தெரிகிறது. நன்கு பயிற்றப்பட்ட யூதர்களால் இச்செய்திகள் உருவாக்கப்பட்டு முஸ்லிம் பெயர்களில் இஸ்லாம் என்ற போர்வையில் முஸ்லிம்களுக்கு மத்தியில் பரப்பப் பட்டிருக்கிறது. அதனைப் பரப்புவதற்காக ஷீஆ என்ற மதத்தை அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள்.

சகோதரர்களே! அல்குர்ஆன் விடயத்தில் இத்தகைய கருத்துக்களை ஒருவர் உள்வாங்கிவிட்டால் பிறகு அவர் முஸ்லிம் என்று சொல்வதற்கு என்ன இருக்கிறது? மற்றைய சமூகங்களிலிருந்து நாங்கள் முஸ்லிம்கள் என்று வித்தியாசப்படுவதற்கு என்ன அடிப்படை? முஸ்லிம்களின் அடிப்படைகளை சிதைக்க நன்கு திட்டமிடப்பட்டு இந்தப் பிரச்சாரம் செய்யப்படுகிறது என்பது தெளிவாகத் தெரிகிறது.

அல்லாஹ் எம்மனைவரையும் இத்தகைய யூத
சிந்தனைகளிலிருந்து பாதுகாப்பானாக.

அஸ்ஸுன்னா பற்றிய ஷீஆக்களின் நம்பிக்கை.

01. வரைவிலக்கணம்:

நபி (ஸல்) அவர்கள் சொன்னது, செய்தது, அங்கீகரித்தது என்பவற்றையே நாம் ஸுன்னா என்று அழைக்கின்றோம், இஸ்லாமிய அறிஞர்களும் அப்படியே வரைவிலக்கணப்படுத்து கிறார்கள். ஆனால் ஷீஆக்களோ இதற்கு முரண்படுகின்றனர்.

ஷீஆக்களின் கருத்துப்படி ஸுன்னா என்பது, நபியவர்களின் சொல் செயல் அங்கீகாரம், மற்றும் தமது இமாம்களின் சொல், செயல், அங்கீகாரம் என்பவற்றைக் குறிக்கும். (பார்க்க: ஈரான் குடியரசின் இஸ்லாமிய யாப்பு)

ஏன் இமாம்களின் கருத்துக்களையும் ஸுன்னா என்று சொல்லவேண்டும் என்பதற்கு ஷீஆக்கள் காரணம் சொல்லும்போது: "ஏனெனில் அவர்கள் அல்லாஹ்விடமிருந்து நபியின் வாயிலாக செய்திகளை அறிவிப்பதற்கு பொறுப்புச்சாட்டப்பட்டவர்கள், அவ்வப்போது இடம்பெறும் நிகழ்வுகளுக்கெல்லாம் சட்டம் சொல்லும் பொறுப்பு அவர்களுக்கே உரியது. எனவே, இத்தகைய சட்டங்கள் அல்லாஹ்விடம் எப்படி இருக்குமோ அப்படியே அவர்கள் தீர்ப்பு வழங்குவார்கள்." (பார்க்க: உஸூலுல் பிக்ஹில் முகாரன்) எனவே, ஷீஆக்களில் ஒருவர், ஹதீஸ் என்றோ அல்லது ஸுன்னா என்றோ ஒன்றைச் சொன்னால் அதை நாம் நபியவர்கள் சொன்னதாக நினைப்போம் ஆனால், அது அவர்களின் இமாம்கள் சொன்னதாக இருக்கும். இது மிகவும் அபாயகரமான ஒரு சிந்தனை

02. ஸஹாபாக்கள் அறிவித்த செய்திகளை ஏற்பதில்லை:

நபி (ஸல்) அவர்களின் விடயங்களை ஸஹாபாக்கள் அறிவிக்கிறார்கள். அதை தாபிஈன்கள் அவர்களிடமிருந்து அறிவிக்க அவர்களிடமிருந்து அவர்களைத் துயர்ந்தவர்களும் (தபஉத்தாபியி) பின்பு இமாம் மாலிக், புஹாரி, முஸ்லிம் போன்ற அறிஞர்கள் தங்கள் நூல்களிலும் பதிவு செய்துள்ளனர். இவ்வாறே நாம் ஹதீஸ்களை ஏற்றுக்கொள்கின்றோம்.

ஆனால், ஷீஆக்களோ ஸஹாபாக்கள் அறிவிக்கின்ற செய்திகளை ஏற்றுக்கொள்வதில்லை. அலி (ரழி) அவர்கள் வாயிலாக வந்த செய்திகளையே ஏற்கின்றனர், தூதராக நபியவர்கள் இருந்தபோதிலும் அவருக்கு சொல்லப்படும் விடயங்களை அலி (ரழி) அவர்களிடத்தில் நபியவர்கள் ஒப்படைத்துவிட வேண்டும் என்பது ஷீஆக்களின் நம்பிக்கையாகும். பின்பு அலி அவர்கள். தான் விரும்புகின்றவிதத்தில் தேவையான சந்தர்ப்பத்தில் குறித்த விடயங்களை ஐத்திவைப்பார், இப்போது இவைகளை சொல்லத்தேவையில்லை என்று காணும் விடயங்களை தனக்குப் பின்னால் வரும் இமாமிடம் ஒப்படைப்பார். அவரும் பொருத்தமானதைச் சொல்லிவிட்டு அவருக்கு பின்னால் வருபவரிடம் மீதியை ஒப்படைப்பார். இவ்வாறு மார்க்கத்தை எத்திவைக்கும் பொறுப்பு இமாம்களிடத்தில் இருக்கிறது. இதனால் ஸஹாபாக்கள் அறிவிக்கும் செய்திகளை அவர்கள் ஏற்பதில்லை. அவர்களது இமாம்களுக்கும் நபியவர்களுக்கும் எவ்வளவு கால வித்தியாசம் இருந்தபோதிலும் நபியவர்கள் சொன்னதாக இமாம் சொன்னால் அதை அப்படியே நம்பிவிடுகின்றனர்.

மூடத்தனத்தின் உச்சத்தை இதில் ஷீஆக்கள் தொட்டிருக்கிறார்கள். ஒரு இமாம் நபி சொன்னதாக ஒன்றை சொன்னால் அதில் அறிவிப்பாளர் வரிசையெல்லாம் பார்க்கமாட்டார்கள். இமாம் சொன்னால் சரி என்று மறு கேள்வியில்லாமல் பின்பற்றுவார்கள். உலகத்தில் இவர்களைவிட மடமையான ஒரு கூட்டத்தைக் காணமுடியாது.

03. பிரதானமான ஹதீஸ் நூல்களை ஏற்பதில்லை:

நாம் ஹதீஸ்களை புஹாரி, முஸ்லிம், திர்மிதி, அபூதாவூத், நஸஈ, இப்னுமாஜா, முவத்தா போன்ற இஸ்லாமிய வரலாற்றில் தோன்றிய ஹதீஸ் கலை வல்லுனர்கள் எழுதிய நூல்களிலிருந்து பெறுகிறோம். ஆனால் இவற்றையெல்லாம் ஷீஆக்கள் ஏற்பதில்லை, நாம் ஆரம்பத்தில் சொன்ன அந்த 08அல்லது 05நூல்களையும் வேறு சில நூல்களையும் அவர்களுக்கென்று உருவாக்கியிருக்கிறார்கள். ஆயினும் தங்களது எண்ணங்களுக்கு சார்பாக ஏதாவது செய்திகள் மேற்படி அஹ்லுஸ்ஸுன்னாக்களின் ஹதீஸ் நூல்களில் இருக்குமாயின் அவற்றுக்காக மட்டும் இந்நூல்களைப் பயன்படுத்துவார்கள்.

04. தரம்பிரித்தல் இல்லை:

நாம் ஒரு ஹதீஸைக் கண்டால் அது பலமானதா அல்லது பலவீனமானதா என்பதை ஆய்வு செய்த பின்பு அதனை ஹதீஸ் என நம்புகின்றோம். ஷீஆக்களிடம் இத்தகைய பாகுபாடுகள் கிடையாது. ஹதீஸ் என்று வந்துவிட்டால் பின்பு அதில் பலம் பலவீனம் அவர்கள் பார்ப்பதில்லை. அப்படியே அதனை ஏற்றுக் கொள்வார்கள். ஷீஆக்களின் சில நூல்களில் இது பலமானது இது பலவீனமானது என்று மிகவும் குறைவான செய்திகளுக்கு சொல்லப்பட்டிருக்கும் அவைகளெல்லாம் அஹ்லுஸ்ஸுன்னாக்கள் சொல்கிறார்கள் என்பதற்காக நாங்கள் சொல்லிக்கொண்டது என ஷீஆ அறிஞர்களே குறிப்பிடுகின்றனர். மற்றப்படி அவர்களிடம் தரம்பிரித்தல் என்பது கிடையாது. வருவது போவது எல்லாம் அவர்களிடம் மார்க்கமே.

இதனாலேயே முஸ்லிம்களுக்கு முரணான பல கொள்கைகள் அவர்களிடம் இருப்பதைக் காண்கிறோம்.

05. பலமான ஹதீஸின் நிபந்தனை:

ஒரு ஹதீஸ் பலமானதா? பலவீனமானதா? என்பதைத் தீர்மானிப்பதற்கு அஹ்லுஸ் ஸுன்னாக்களாகிய நாம் ஐந்து நிபந்தனைகளை வைத்திருக்கின்றோம்.

01. அறிவிப்பாளர் இஸ்லாத்தைப்பின்பற்றி வாழ்பவராகவும், பருவ வயதை அடைந்தவராகவும், புத்தி குழம்பாதவராகவும், பாவமான காரியங்களில் ஈடுபடாதவராகவும், மனிதத்துவத்தை முறிக்கும் காரியங்களில் ஈடுபடாதவராகவும் இருத்தல்.
02. ஞாபக சக்தி உள்ளவராக இருத்தல்.
03. அறிவிப்பாளர் வரிசை தொடர்ச்சியாக இருத்தல், இடையில் எவரும் விடுபடாமல் இருத்தல்.
04.தன்னைவிட நம்பகமானவருக்கு அல்லது அதிகமானவர்களுக்கு முரண்படாமல் இருத்தல்.
05. ஹதீஸில் எத்தகைய குறையும் இல்லாதிருத்தல்.

இவைகளே ஒரு ஹதீஸை பலமானது, பலவீனமானது என பாகுபடுத்துவதற்கான அடிப்படைகள். ஷீஆக்களிடம் ஹதீஸ் கலை என்ற ஒன்று இல்லை. ஆனாலும், அஹ்லுஸ்ஸுன்னாக்களிடம் இருப்பது தங்களிடம் இல்லை என்றால் அது பொதுமக்களிட்ம குறையாகத் தெரிந்துவிடும் என்பதனால், அஹ்லுஸ்ஸுன்னாக்கள் சொன்ன அந்த நிபந்தனைகளை அப்படியே பிரதி செய்து அத்தோடு இன்னுமொரு நிபந்தனையையும் சேர்த்து ஸஹீஹான ஹதீஸுக்கு 06நிபந்தனைகள் என்று குறிப்பிடுகின்றனர். அதாவது ஹதீஸை அறிவிப்பவர் இமாம்களை ஏற்றுக்கொண்ட ஒரு ஷீஆவாக இருக்க வேண்டுமாம்.

இந்த அடிப்படையில் அவர்களது நூல்களில் உள்ள ஹதீஸ்களை அவர்கள் ஆய்வு செய்தால் ஒரு ஹதீஸைக்கூட அவர்களால் நம்பகமானது என்று சொல்ல முடியாது. காரணம் எல்லா ஹதீஸ்களும் அவர்கள் இமாம்களாக சொல்பவர்களிடம்

போய் நிற்கிறது அவர்கள் இமாம்களாக சொல்லும் எவரும் தன்னை ஒரு ஷீஆ என சொன்னது கிடையாதுமாறாக ஷீஆக்களை எதிர்த்தவர்களாகவும், அவர்களுக்கு தண்டனை வழங்கியவர்களாகவுமே காணப்படுகின்றனர். (இது தொடர்பான மேலதிக விளக்கங்களை பார்க்கவிரும்புவோர் இமாம்களின் பார்வையில் ஷீஆக்கள் என்ற எனது நூலை வாசிக்கவும்.)

எனவே, நம்பகமான ஹதீஸுக்கு அவர்கள் சொல்லும் இந்த நிபந்தனைகளை வைத்துக்கொண்டு அவர்களது நூல்களில் மறுமை நாள் வரை தேடினாலும் ஒரு நம்பகமான ஹதீஸையேனும் பெற்றுக்கொள்ள முடியாது. எனவே முழுக்கமுழுக்க மற்றவர்களை ஏமாற்றுவதற்காக உருவாக்கப்பட்ட நிபந்தனைகளாகவே இவை காணப்படுகின்றன.

06.அவர்களின் கிரந்தங்களில் ஹதீஸ்கள் அரிது:

ஷீஆக்கள் தங்களின் பிரதான நூல்கள் என்று குறிப்பிட்டிருப்பவற்றில நபியவர்கள் சொன்னதாக வரும் செய்திகள் இல்லை என்றே சொல்லலாம், மேலும் பாதிமா, அலி (ரழி) சொன்னதாக வரும் அறிவிப்புக்களும் மிகக் குறைவாகவே இருக்கிறது. காரணம் அலி(ரழி) அவர்கள் சொன்ன மார்க்கத்தில் அவர்கள் இல்லை. அலி(ரழி) அவர்களின் பெயரால் சொல்லப்பட்ட மதத்திலேயே இருக்கிறார்கள்.

07. சீர்செய்ய முடியாத கருத்துக்களும் நிராகரிக்கப்பட வேண்டிய அறிவிப்பாளர்களும்:

எமக்கு ஹதீஸ்களை அறிவித்தவர்கள் பற்றி இஸ்லாமிய வரலாற்றில் வாழ்ந்த அறிஞர்கள் என்ன சொன்னார்கள் எனும் தகவல் நம்மிடமுள்ளது. கிட்டத்தட்ட 10இலட்சம் அறிவிப்பாளர்களின் வரலாறுகள் முஸ்லிம்களால் பாதுகாக்கப்பட்டுள்ளது. இவற்றில் சிலருடைய கருத்துக்கள் சிலர் விடயத்தில் ஒன்றுக்கொன்று

முரணாக இருக்கும். இந்த நேரத்தில் ஹதீஸ் கலை விதிகளின்படி நாம் அந்த முரண்பாடுகளைத் தீர்த்துக்கொண்டு காரண காரியங்க்ளின அடிப்படையில் அந்த அறிவிப்பாளர் விடயத்தில் இறுதி முடிவை எடுப்போம். அதையே நடைமுறைப்படுத்துவோம்.

ஷீஆக்களின் அறிவிப்பாளர்களில் பெரும்பான்மையானவர்கள், மோசமான நடத்தையுடையவர்களாகவும், யூத கிறிஸ்தவர்கள் மற்றும் பொய்யர்கள் என்று விமர்சிக்கப்படுபவர்களாகவுமே இருக்கின்றனர். இதில் ஆச்சரியம் என்னவென்றால் இத்தகைய கருத்துக்களை ஷீஆக்களே குறிப்பிட்டுவிட்டு அவர்கள் அறிவிக்கும் செய்திகளை நம்பகமானது என்கின்றனர்.

அஹ்லுஸ்ஸுன்னாவாகிய நம்மிடம் நபியவர்களின் ஹதீஸ்களை அறிவித்த பிரதானமான அறிவிப்பாளர்கள் பலர் இருக்கின்றனர். உதாரணமாக ஸஹாபாக்களில் அபூஹுரைரா (ரழி), அனஸ் பின் மாலிக் (ரழி), அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரழி), அப்துல்லாஹ் பின் அம்ரிப்னு ஆஸ் (ரழி), ஆயிஷா (ரழி) போன்றோர். இதுபோன்று தாபிஈன்கள் அவர்களுக்கு பின்பு வந்தவர்கள் என்று எல்லோரிலும் மிகச் சிறந்த அறிவிப்பாளர்கள் நம்மிடம் உள்ளனர். இவர்களே கூடுதலான ஹதீஸ்களை அறிவித்தவர்களாகக் கருதப்படுகின்றனர். இவர்களின் நம்பகத்தன்மையில் விமர்சனம் உருவாகிவிட்டாலோ அல்லது சந்தேகம் ஏற்பட்டுவிட்டாலோ அவர்கள் அறிவித்த செய்தியில் சந்தேகம் தோன்றிவிடும். எனவே, யாரை மிக மிக நல்லவர்கள் என்று எமது ஹதீஸ் திறனாய்வுக்கலை வல்லுனர்கள் சொன்னார்களோ அவர்களையே மிகச் சிறந்தஅறிவிப்பாளர்களாக நாம் சுட்டிக்காட்ட முடியும்.

இன்று நாம் மார்க்க ரீதியான ஒரு விடயத்தைக் கேள்விப்படும்போது பெரும்பாலும் அதன் அறிவிப்பாளர்கள், அதை பதிவு செய்திருப்பவர்களைப் பார்க்க மறந்துவிடுகிறோம் இதனால் பொய்யர்கள் நிறைய தங்களின் வேலையைக் காட்டுகின்றனர்.

எனவே, அறிவிப்பாளர்கள் பற்றிய அறிவும் தெளிவும் மிக முக்கியமான விடயமாகும்.

இதனடிப்படையில் ஷீஆக்களின் பிரதானமான அறிவிப்பாளர்கள் யார் என்பதை அவர்களின் நூல்கள் தெளிவுபடுத்துகின்றன. அவர்கள் யார் என்பதையும் அவர்கள் பற்றிய ஷீஆ ஆய்வாளர்களின் கருத்துக்களையும் தெரிந்துகொள்வது ஷீஆ மதம் பற்றிய உண்மை நிலையைத் தெரிந்துகொள்வதற்கு மிகவும் துணைபுரியும் என்று நினைக்கிறேன்.

ஷீஆக்களின் முக்கியமான அறிஞர்களில் ஒருவரான அல்கிஷ்ஷி என்பவர் அறிவிப்பாளர்கள் பற்றி எழுதிய “அர்ரிஜால்” எனும் நூலில் தங்களின் பிரதானமான அறிவிப்பாளர்கள் நான்குபேர் என்று குறிப்பிடுகின்றார்.

01. ஸுராரதுப்னு அஃயுன்.
02. அபூபஸீர் லய்த் அல்முராதி.
03. முஹம்மதிப்னு முஸ்லிம்.
04. புரைத் பின் முஆவியா அல்அஜ்லி.

பிரதானமான இந்த நான்கு அறிவிப்பாளர்கள் பற்றியும் ஷீஆக்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை அவதானிப்பது மிகவும் பொருத்தமானது என நினைக்கின்றேன்.

ஸுராரதுப்னு அஃயுன்:

ஷீஆக்களின் இமாம்களில் ஒருவர் சொல்கிறார்: “ஸுராராவே உனது பெயர் சுவனவாசிகளின் பெயர்களில் உள்ளது.” (பார்க்க: ரிஜாலுல் கிஷ்ஷி)

“ஸுராராவை விட உண்மை பேசுபவர் ஒருவரை நீ கண்டாயா? ” (பார்க்க: ரிஜாலுல் கிஷ்ஷி)

''ஸுராராவுக்கு அல்லாஹ் அருள்புரிவானாக அவரும் அவரைப்போன்றவர்களும் இல்லை என்றால் எங்கள் செய்திகள் அழிந்துபோயிருக்கும்'' (பார்க்க: ரிஜாலுல் கிஷ்ஷி)

நஜ்ஜாஸி சொல்கிறார்: "ஸுராரா அவருடைய காலத்தில் எங்கள் தோழர்களின் ஆசிரியராகவும், அவர்களில் முதன்மையானவராகவும் இருந்தார், அல்குர்ஆனை நன்கு ஓதும் காரியாகவும், சட்டக்கலை மேதையாகவும், கவிஞராகவும் இலக்கியவாதியாகவும் இருந்தார். அவரில் சிறப்புக்குரிய விடயங்களும் மார்க்க விடயங்களும் ஒருங்கே அமைந்திருந்தன." (பார்க்க: ரிஜாலுல் கிஷ்ஷி)

ஹாயிரி என்பவர் சொல்கிறார்: "அவர் உண்மையாளர் என்பதில் எல்லோரும் ஏகோபித்த முடிவில் இருக்கின்றனர்.'' (பார்க்க: ஜாமிஉர்ருவாத்)

இவ்வளவு புகழப்பட்ட ஸுராராவைப் பற்றி அதே ஆசிரியர்களால் சொல்லப்பட்டுள்ள ஏனைய கருத்துக்களைப் பாருங்கள்.

ஷீஆக்களின் இமாம்களில் ஒருவர் சொல்கிறார்: "ஸுராரா யூதர்கள், கிறிஸ்தவர்களை விடவும் கெட்டவர்." (பார்க்க: ரிஜாலுல் கிஷ்ஷி)

ஷீஆக்களின் இன்னொரு இமாம் ஸுராராவை சபிக்கிறார்: "ஸுராராவின் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாவதாக, ஸுராராவின் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாவதாக, ஸுராராவின் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாவதாக" (பார்க்க: ரிஜாலுல் கிஷ்ஷி)

''ஹிஷாம் பின் அப்துல் மலிகின் உளவாளிகளில் ஒருவராக ஸுராரா இருந்தார் என்று சந்தேகிப்பவராக முஹம்மதுல் பாதிர் இருந்தார்.'' (பார்க்க: ரிஜாலுல் கிஷ்ஷி)

எனவே, ஸுராரா பின் அஃயுனைப் பற்றி இங்கே சொல்லப்படும் கருத்துக்கள் ஒரு முடிவுக்கு வரமுடியாத அளவு மிகவும் முரண்பாடுடையதாகக் காணப்படுகின்றது. அவ் சட்டக்கலைமேதை,

இலக்கியவாதி, கவிஞர், ஷீஆக்களின் ஆசிரியர், உண்மையாளர், சுவர்க்கவாதி, மார்க்கத்தின் நிறைய விடயங்கள் அவரிடம் இருந்தன என்று புகழப்படும் அதே ஸுராரா: பொய்யன், நரகவாதி, யூதனை விடவும் கிறிஸ்தவனை விடவும் கெட்டவன், அவன் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டும்.

இந்த செய்திகளில் ஷீஆக்கள் எதை உண்மைப்படுத்துவார்கள்? அவர் அறிவிக்கும் செய்திகளை எப்படி உண்மையானது என்று நம்புவார்கள்? பாவம், இதனால்தான் இவைகளைப் பற்றியெல்லாம் நாங்கள் பேசுவதில்லை என்று அவர்கள் சொல்வார்கள்.!!!

அபூபஸீர் லய்த் பின் அல்புஹ்திரி அல்முராதி:

ஷீஆக்களின் இமாம்களில் ஒருவர் சொல்கிறார்: “புரைத் பின் முஆவியா அல் அஜ்லி, அபூ பஸீர் லய்த் பின் அல்புஹ்திரி அல்முராதி, முஹம்மத் பின் முஸ்லிம், ஸுராரா இவர்கள் அனைவரும் சுவர்க்கத்திற்குரியவர்கள். அல்லாஹ்வினால் தடைசெய்யப்பட்ட விடயங்களையும், ஆகுமாக்கப்பட்ட விடயங்களையும் பாதுகாப்பதற்காக அவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். அவர்கள் இல்லையென்றால் நபியவர்களின் செய்திகள் அழிந்துபோயிருக்கும்.” (பார்க்க: ரிஜாலுல் கிஷ்ஷி)

ஷீஆக்களின் இமாம்களில் ஒருவருடைய தோழர் அவரிடம் கேட்கிறார்: எனக்கு ஏதாவது விடயத்தைக் கேட்கவேண்டி ஏற்பட்டால் யாரிடம் கேட்பது? அதற்கு இமாம் சொல்கிறார்: “நீ அபூபஸீரிடம் கேள். அவர் அறிவிக்கும் செய்திகள் மிகவும் நம்பகமானவை.” (ரிஜாலுல் குனா வல் அல்காப்)

ஷீஆ இமாம்களில் ஒருவரிடத்தில் அபூபஸீர் தன்னை சுவர்க்கத்தில் நுழைவிப்பதாக உத்தரவாதம் தரும்படி கேட்கிறார். அதற்கு அந்த இமாம் அவ்வாறே நான் செய்கிறேன் என்றார். (பார்க்க: ரிஜாலுல் கிஷ்ஷி)

இவ்வாறு புகழப்பட்ட அபூ பஸீரைப் பற்றி வரும் மற்றைய அறிவிப்புக்களைப் பாருங்கள்:

“அவர் பெரிய தொடக்குடன் இமாம்களின் வீட்டுக்கு வருபவராக இருந்தார்.” (பார்க்க: ரிஜாலுல் கிஷ்ஷி)

“அபூபஸீர் குழம்பிப்போனவராக (ஒன்றுக்கு ஒன்று முரணாகச் சொல்பவராக) இருந்தார்” (பார்க்க: ரிஜாலுல் கிஷ்ஷி)

இப்னுல் கழாயிரி சொல்கிறார்: “அபூஅப்தில்லாஹ் அவர்கள் அவர் விடயத்தில் எச்சரிப்பவராக இருந்தார். அவரிலிருந்து நீங்குபவராகவும் இருந்தார், அவருடைய தோழர்கள் அபூபஸீர் விடயத்தில் கருத்து முரண்பாடுடையவர்களாக இருந்தனர்.” (ஜாமிஉர் ரிவாயாத்)

இதில் யாரின் கருத்தை உண்மைப்படுத்துவது? அபூபஸீர் உண்மையானவர், நல்லவர் எனும் கருத்தையா? அல்லது அவர் கெட்டவர், பொய்யர் எனும் கருத்தையா? விடை தெரியாக் கேள்விகளுக்குள் மாட்டிக்கொள்கிறார்கள் ஷீஆக்கள். இவ்வாறான ஒருவருடைய செய்தியை ஏற்றுக்கொள்ளலாமா?

முஹம்மது இப்னு முஸ்லிம்:

ஷீஆக்களின் ஒரு இமாமிடம் அவருடைய தோழர்களில் ஒருவர் கேட்கிறார். ஏதாவது நான் கேட்க வேண்டிய தேவை ஏற்பட்டால் யாரிடம் கேட்பது.? இமாம் சொல்கிறார். “முஹம்மத் பின் முஸ்லிமிடம் நீ கேட்பதற்கு என்ன தடை.? அவர் எனது தந்தையிடமிருந்து கேட்டிருக்கிறார். மேலும் எனது தந்தையிடம் மிகவும் முக்கியமான ஒருவராக அவர் இருந்தார்.” (பார்க்க: நக்துர்ரிஜால்)

நஜாஷி சொல்கிறார்: “கூபாவில் எங்கள் தோழர்களில் சிறப்புமிக்கவராக இருந்தார், சட்டக்கலை மேதையாகவும், பேணுதல் உள்ளவராகவும் இருந்தார். அபூஜ.்பர், அபூஅப்தில்லாஹ் இருவருடனும இருந்தார். அவர்கள் இருவரைத் தொட்டும் அறிவித்துள்ளார்.

மேலும் அவர்கள் இருவருக்கும் மனிதர்களில் மிகவும் நம்பகமானவராக இருந்தார்.'' (பார்க்க: ரிஜாலுல் கிஷ்ஷி)

இவ்வாறு சொல்லப்பட்டவரைப் பற்றி வந்திருக்கும் எதிர்மறையான கருத்துக்களைப் பாருங்கள்:

ஷீஆக்களின் இமாம்களில் ஒருவர் சொல்கிறார் ''அல்லாஹ் முஹம்மது பின் முஸ்லிமை சபிப்பானாக ஒரு விடயம் நடக்கும் வரை அல்லாஹ் அதை அறியமாட்டான் என்று சொல்பவராக அவர் இருந்தார்.'' (பார்க்க: ரிஜாலுல் கிஷ்ஷி)

"தங்கள் மார்க்கத்தில் பின் நின்றவர்கள் அழிந்துபோனார்கள். முஹம்மத் பின் முஸ்லிம் இவர்களில் ஒருவரே" (பார்க்க: ரிஜாலுல் கிஷ்ஷி)

இந்தக் கூற்றுக்களில் ஷீஆக்கள் எதை உண்மைப்படுத்தப் போகிறார்கள்?. இவ்வாறு விமர்சிக்கப்பட்டவருடைய செய்திகளை எப்படி ஏற்றுக்கொள்ளப்போகிறார்கள்.?

புரைத் பின் முஆவியா அல்அஜ்லி.

ஷீஆக்களின் இமாம்களில் ஒருவர் சொல்கிறார்: ''பூமியின் முளைக்காம்புகள், மற்றும் மார்க்கத்தின் முக்கியமானவர்கள் நால்வர். இதில் ஒருவர் புரைத் பின் முஆவியா அல் அஜ்லி.'' (பார்க்க: ரிஜாலுல் கிஷ்ஷி)

இப்படி புகழப்பட்ட பின்பு சபிக்கப்படாமல் இருப்பதற்கு இவர் மட்டும் என்ன விதிவிலக்கா?

''புரைதின் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாவதாக, ஸுராராவின் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாவதாக.'' (பார்க்க: ரிஜாலுல் கிஷ்ஷி)

விடைபெறுமுன்:

அன்புக்குரிய சகோதரர்களே! ஷீஆக்களின் முக்கியமான மற்றும் முதன்மையான அதிகமான அறிவிப்புக்களின் ஆணிவேராகத் திகழ்கின்ற நான்கு அறிவிப்பாளர்கள் பற்றிய ஷீஆக்களின் கருத்துக்களை நாம் அவதானித்தோம். இவர்கள் விடயத்திலேயே ஷீஆக்களின் கருத்துக்கள் இந்தளவிற்கு முரண்பாடுடையனவாக இருக்கிறது என்றால் மற்ற அறிவிப்பாளர்கள் பற்றி கேட்கவா வேண்டும்.?

அறிவிப்பாளர்கள் பற்றிய இவ்வாறான கருத்துக்கள் அந்த அறிவிப்பாளர்கள் பலவீனமானவர்கள், கெட்டவர்கள் என்பதை எடுத்துக்காட்டுகின்றன. அறிவிப்பாளர்கள் மோசமானவர்கள் என்றாகும் போது அவர்களின் அறிவிப்புக்கள் நிராகரிக்கப்பட்டவையாகின்றன. அவ்வாறானவர்களின் அறிவிப்புக்களை அதிகமக பதிவுசெய்துள்ள நூல்களும் நிராகரிக்கப்படவேண்டியவையே. இவ்வாறான இந்த அறிவிப்புக்களில் தங்கியிருக்கும் ஷீஆ மதமும் நிராகரிக்கப்பட வேண்டியதாகும்.

உண்மையில் இஸ்லாத்தின் எதிரிகளான யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்களால் உருவாக்கப்பட்ட கொள்கைதான் ஷீஆ என்பதற்கு இதைவிடப்பெரிய சான்று இருக்க முடியாது.

அல்லாஹ் எம்மனைவரையும் பாதுகாப்பானாக.

08. வரலாறுகள் இல்லை:

முஸ்லிம் சமூகத்திடம் இருக்கும் மிகப்பெரிய பொக்கிஷம், அதன் கலாசாரங்கள் எல்லாம் சந்தேகத்திற்கு இடமில்லாமல் உறுதிசெய்யப்பட்டு பாதுகாக்கப்பட்டிருப்பதாகும். இது உலகில் எந்த மதத்திற்கும் கிடையாது. இதில் முக்கிய பங்கு வகிப்பது அறிவிப்பாளர்கள் பற்றி நமக்குத் தேவையான முழுத்தகவல்களும்

பாதுகாக்கப்பட்டிருப்பதாகும். கிட்டத்தட்ட பத்து இலட்சம் அறிவிப்பாளர்களின் வரலாறுகள் முஸ்லிம்களிடம் பாதுகாப்பாக உள்ளன.

ஆனால், ஷீஆக்களிடம் அவர்களின் மதத்தை அறிவிக்கும் அறிவிப்பாளர்கள் முகவரியில்லாதவர்களாக காணப்படுகின்றனர். அவர்களின் வரலாறுகள் பாதுகாக்கப்படவில்லை. ஷீஆக்களிடம் அறிவிப்பாளர்களின் வரலாறுகளை எழுதியுள்ள சில நூல்கள் இருக்கின்றன. அவற்றில் சில அறிவிப்பாளர்களின் வரலாறுகள் உள்ளன. ஆனால் அவை ஒருவரை நம்பகமானவர் என்று சொல்வதற்குப் போதியதாக இல்லை. அறிவிப்பாளரின் பெயரும் அவரின் ஊருமே பெரும்பாலும் பதியப்பட்டுள்ளன. இது அந்த மனிதர் நம்பகமானவரா, பலவீனமானவரா என்று முடிவு செய்வதற்கு போதுமானதல்ல. மேலும் ஒரு பெயரைச் சொல்லி அவர் இந்த ஊரில் இருந்தார் என்று யார் வேண்டுமானாலும் சொல்லலாம் அதற்கு கஷ்டப்படவேண்டியதில்லை. இதில் அதிகமாக பொய்யுரைப்பதற்கு வாய்ப்புள்ளது.

ஷீஆ அறிஞர்கள் எல்லோராலும் மதிக்கப்படுகின்ற, போற்றப்படுகின்ற, ஷீஆக்களின் முதன்மையானதும் முக்கியமானதுமான காபி என்ற நூலின் ஆசிரியர் குலைனிக்குக் கூட ஷீஆக்களிடம் முழுமையான வரலாறு இல்லை, அவரைப்பற்றிய தகவல்கள் ஷீஆக்களுக்குத் தெரியாது. மற்றவர்களை பற்றிக் கேட்கவா வேண்டும்.? எனவே, ஷீஆக்களின் கொள்கைகள் கண்டவர்கள் எல்லாம் விளையாடுவதற்கு மிகவும் ஏற்புடையவை. மேலும், நம்பகத்தன்மை அற்றவை என்பதை நாம் தெளிவாகப் புரியலாம்.

09. கனவுகளும் ஹதீஸ்களே:

ஷீஆ அறிஞர்களின் நூல்களிலும் சரி, அவர்களின் சொற்பொழிவுகளிலும் சரி ஆதார நூல்களை அவர்கள் குறிப்பிடுவது மிகவும் அரிது, அறிஞர் சொல்வதை அவரின் தோழர்கள் கேட்டுப் பின்பற்றுவதே அவர்களின் வழமை.

ஷீஆக்களுக்கு மத்தியில் மர்ஜஃ என்று சொல்லப்படும் அனைத்துச் சட்டங்களுக்குமான வழிகாட்டல் மையங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு ஷீஆவும் ஏதாவது ஒரு மர்ஜஃ ஐப் பின்பற்றுவது அவனது கடமை, ஒரு மர்ஜஃ ஐப் பின்பற்றுபவர் மற்றைய மர்ஜஃ ; குறித்த பிரச்சினை தொடர்பாக என்ன சொல்கிறது என்பதைப் பார்ப்பதோ, கேட்பதோ தடை செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொருவரும் அவரின் மர்ஜஃ அவருக்கு என்ன சொல்கிறதோ அதை அவர் பின்பற்றுவதே கடமையாகும். சில வேளை ஒருவரின் மர்ஜஃ இல் சொல்லப்படும் தீர்ப்பு மற்ற மர்ஜஃ இன் தீர்ப்புக்கு முரணாக இருக்கலாம். அவைகளைப் பார்க்கக்கூடாது தன்னுடைய மர்ஜஃ எதுவோ அதன் தீர்ப்பைப் பின்பற்றுவதே தனது கடமை.

இவ்வாறான ஒரு விதிமுறையை ஷீஆக்கள் உருவாக்கிக் கொண்டதனால் ஷீஆ அறிஞர்கள் ஒவ்வொருவரும் தன் வாய்க்கு வரும் ஒவ்வொரு விடயத்தையும் அவர்களின் மதத்தின் பெயரால் சொல்வர். மற்றவருக்கு அவர் முரண்படுகிறாரே என்பது பற்றி அவர் கவலைப்படுவதுமில்லை அவரைப் பின்பற்றுபவர் கவலைப்படுவதுமில்லை.

ஷீஆக்களுடைய தற்போதைய அறிஞர்கள் தாங்கள் கனவில் அலி (ரழி) அவர்களையும் ஏனைய இமாம்களையும் கண்டதாகவும் அவர் சில விடயங்களை ஏவியதாகவும் சொல்கிறார்கள். அதை ஹதீஸ் என்று சொல்கிறார்கள். தான் இமாமிடமிருந்து நேரடியாக அறிவிப்பதால் மற்றவர்களை விடவும் தனக்கு அதிக சிறப்பு இருப்பதாகவும் நினைக்கின்றனர். ஷீஆக்களின் ஒலி ஒளி நாடாக்களைப் பார்ப்பவர் ஷீஆக்களிடம் இவ்வாறானஅறிவிப்புக்கள் மலிந்துபோயிருக்கின்றன என்பதை அறிவார்.

ஸஹாபாக்கள் பற்றிய நம்பிக்கை.

இறுதி நபியாக முஹம்மத் (ஸல்) அவர்களை அனுப்பிய அல்லாஹ் அவரது சமுதாயத்தில் சிறந்தவர்களை அவரின் தோழர்களாக தேர்வு செய்தான். அவரின் இன்பத்திலும் துன்பத்திலும பங்கெடுக்கக்கூடிய வல்லமையை அவர்களுக்குக் கொடுத்தான். அவர்கள் இறைவன் உதவியால் இந்த மார்க்கம் நிலை பெறுவதற்காக தங்கள் உயிர், பொருள், மானம், குடும்பம், நாடு, கோத்திரம் என்று எல்லாவற்றையும் தியாகம் செய்தார்கள். இதனால் அல்லாஹ் அவர்களைப் பொருந்திக்கொண்டதாகஅல்குர்ஆனில் குறிப்பிடுகிறான். அதுபோல் அவர்களின் சிறப்புப் பற்றி நபி (ஸல்) அவர்களும் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார்கள். இது எமது முஸ்லிம்களின் ரத்தத்தில் ஊறிப்போன ஒரு விடயம். இதனால்தான் ஸஹாபாக்களின் பெயரைக்கேட்டதும் எம்மை அறியாமலேயே அவர்களுக்காகப் பிரார்த்திக்கிறோம்.

ஸஹாபாக்கள் பற்றி வந்துள்ள சில குர்ஆன் வசனங்களையும் ஹதீஸ்களையும் இனி அவதானிப்போம்.

‘‘முஹாஜிர்களிலும், அன்ஸார்களிலும் (இஸ்லாத்தை ஏற்க) முதலாவதாக முந்திக்கொண்டவர்களும், (அவர்களின் சொல், செயல்களாகிய) நற்கருமத்தில் அவர்களைப் பின்பற்றினார்களே அவர்களும் அவர்களை அல்லாஹ் பொருந்திக்கொண்டான்,

அவர்களும் (அல்லாஹ்வாகிய) அவனைப் பொருந்திக்கொண்டனர். அன்றியும் சுவனபதிகளை அவர்களுக்கென அவன் தயாராக்கி வைத்திருக்கின்றான், அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும். அவற்றிலேயே அவர்கள் நிரந்தரமாக (த் தங்கி) இருப்பவர்கள், இது மகத்தான வெற்றியாகும். (9:100)

“முஹம்மது, அல்லாஹ்வின் தூதராவார், அவருடன் இருப்பவர்களோ நிராகரிப்போர் மீது மிகக் கண்டிப்பானவர்கள், தங்களுக்கிடையே மிக்க அன்புடையவர்கள், (குனிந்து) ருகூஉ செய்பவர்களாகவும், (சிரம் பணிந்து) ஸுஜூது செய்கிறவர்களாகவும் அவர்களை நீர் காண்பீர், அல்லாஹ்விடமிருந்து பேரருளையும் (அவனுடைய) பொருத்தத்தையும் தேடுவார்கள், அவர்களுடைய அடையாளம், சிரம்பணிவதன் அடையாளத்தினால் அவர்களுடைய முகங்களில் இருக்கும், இதுவே தவ்றாத் (என்னும் வேதத்) தில் உள்ள அவர்களின் உதாரணமாகும், இன்னும் இன்ஜீலில் அவர்களுக்குள்ள உதாரணமாவது, ஒரு பயிரைப்போன்றதாகும், அது தன் முளையை வெளிப்படுத்தி பின்னர் அதை பலப்படுத்துகின்றது. பின்னர் அது (தடித்து) கனமாகின்றது. பின்னர் அது தன் தண்டின் மீது நிமிர்ந்து நிற்கின்றது, விவசாயிகளை ஆச்சரியமடையச்செய்கிறது, இவர்களைக்கொண்டு நிராகரிப்போருக்கு அவன் கோபமூட்டுவதற்காக (இவ்வாறு உதாரணங்கள் கூறுகிறான்) அவர்களில் விசுவாசங்கொண்டு நற்கருமங்களும் செய்கின்றவர்களுக்கு அல்லாஹ் மன்னிப்பையும், மகத்தான கூலியையும் வாக்களித்திருக்கின்றான். (48:29)

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்; “என் தோழர்களைத் திட்டாதீர்கள். ஏனெனில், உங்களில் ஒருவர் உஹுது மலையளவு தங்கத்தை (இறைவனின் பாதையில்) செலவு செய்தாலும், என் தோழர்கள் (இறை வழியில்) செலவு செய்த இரண்டு கைக் குவியல் அல்லது அதில் பாதியளவைக் கூட (அவரின்) அந்த தர்மம் எட்ட முடியாது.”
அறிவிப்பவர்: அபூ ஸயீத் அல்குத்ரீ (ரழி), நூல்:புஹாரி.

“மக்களில் சிறந்தவர்கள் என் தலை முறையினர். அவர்களுக்குப் பிறகு (சிறந்தவர்கள்) அவர்களையடுத்து வருபவர்கள். அவர்களுக்குப் பிறகு (சிறந்தவர்கள்) அவர்களையடுத்து வருபவர்கள். பின்னர், ஒரு சமுதாயத்தார் வருவார்கள். அவர்களின் சாட்சியம் அவர்களின் சத்தியத்தை முந்திக் கொள்ளும். அவர்களின் சத்தியம் அவர்களின் சாட்சியத்தை முந்திக் கொள்ளும்.” என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத்(ரழி), புஹாரி 3651

“அன்ஸார்களை (மக்காவாசிகளை வரவேற்ற, மதீனாவில் வாழ்ந்த ஸஹாபாக்கள்) இறைவிசுவாசியைத் தவிர வேறு எவரும் நேசிக்கமாட்டார். நயவஞ்சகனைத் தவிர வேறு எவரும் கோபிக்க மாட்டார். யார் அவர்களை நேசிக்கிறாரோ அவரை அல்லாஹ் நேசிக்கிறான். யார் அவர்களைக் கோபிக்கிறாரோ அவரை அல்லாஹ்வும் கோபிக்கிறான்” என நபியவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர்: பறாஉ (ரழி) புஹாரி, முஸ்லிம்.

ஸஹாபாக்களின் சிறப்பு, அவர்களுக்கு மத்தியில் நடந்த பிரச்சினைகள், அதில் அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத்தின் நிலைப்பாடு, மேலும் ஸஹாபாக்கள் பற்றிய மேலதிக தகவல்களை தெரிந்துகொள்ள விரும்பும் சகோதரர்கள், எமது முந்திய வெளியீடான “இஸ்லாத்தின் பார்வையில் ஸஹாபாக்கள்” எனும் நூலை வாசிக்கவும்.

அல்குர்ஆனும் அஸ்ஸுன்னாவும் ஸஹாபாக்களை இவ்வாறு புகழ்ந்திருந்தபோதிலும், அவர்கள் விடயத்தில் ஷீஆக்களின் நிலைப்பாடு மிகவும் கேடுகெட்டதாகவும் மோசமானதாகவும் இருப்பதை நாம் அவதானிக்கலாம். அவர்களின் இளையோர் முதல் முதியோர்வரை சகலரும் ஸஹாபாக்களை ஏசுகின்றவர்களாகவும் நிந்திக்கின்றவர்களாகவும் இருப்பதைக் காணலாம்.

பொதுவாக இஸ்லாமிய வரலாற்றில் தோன்றிய அல்குர்ஆன் அஸ்ஸுன்னாவிற்கு முரண்பட்ட குழுக்கள் எல்லாமே ஸஹாபாக்களைத் திட்டுவதின் மூலமும் அவர்களை நம்பிக்கையில்லாதவர்களாக ஆக்குவதின் மூலமும் தங்களின் கொள்கையை நியாயப்படுத்திக் கொள்ள முயற்சித்திருக்கின்றனர். ஏனெனில், அல்குர்ஆன் அஸ்ஸுன்னாவுக்கான முதலாவது சாட்சிகள் அவர்கள்தான் அவர்களை விமர்சிப்பதின் மூலம் இஸ்லாத்தின் அடிப்படைகளை தகர்ப்பது அவர்களின் குறிக்கோளாகும். இத்தகைய குழுக்களுக்கெல்லாம் தலைமை தாங்கியவர்கள் ஷீஆக்கள் என்ற காரணத்தினால் ஸஹாபாக்கள் விடயத்தில் மற்றக் குழுக்களை விடவும் அதிகமான கருத்துக்களை ஷீஆக்கள் குறிப்பிட்டிருக்கின்றனர்.

ஸஹாபாக்கள் பற்றிய ஷீஆக்களின் கொள்கைகளைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள பின்வரும் நான்கு தலைப்புக்களில் அவதானிப்போம்.

01. அபூபக்ர், உமர், உஸ்மான் (ரழி) அவர்கள் விடயத்தல் ஷீஆக்களின் கருத்து
02. நபி (ஸல்) அவர்களின் மனைவியர்கள் பற்றி ஷீஆக்கள்.
03. ஏனைய ஸஹாபாக்கள் பற்றிய ஷீஆக்களின் கருத்து.
04. இவர்களால் அறிவிக்கப்படும் ஹதீஸ்களை ஏற்பதில்லை.
05. ஷீஆக்கள் கூறும் உண்மையான ஸஹாபாக்கள் யார்?

அபூபக்ர்(ரழி), உமர்(ரழி), உஸ்மான் (ரழி) அவர்கள் விடயத்தல் ஷீஆக்களின் கருத்து.

நபி (ஸல்) அவர்களுக்குப்பிறகு வந்த முப்பெரும் ஹலீபாக்கள் இவர்கள், நபியவர்கள் விட்டுச்சென்ற பணியை சிறப்பாக முன்னெடுத்து இஸ்லாத்தை இந்த உலகின் கணிசமான பகுதிகளுக்கு கொண்டு சென்ற பெருமை அல்லாஹ்விற்குப் பிறகு இவர்களையே சாரும், இஸ்லாத்திற்காக தங்களையே

அர்ப்பணித்த இவர்களைப் பற்றி முஸ்லிம்கள் மட்டுமல்ல முழு உலகும் இன்று புகழ்ந்து சொல்கிறது.

ஆனால், இஸ்லாத்தை விட்டு வெகுதூரம் சென்று விட்ட ஷீஆக்களிடம் மிகப்பெரும் விரோதிகளாக இவர்கள் கணிக்கப் படுகிறார்கள். சாதாரண மனிதன் விடயத்தில் நாம் சொல்வதற்கு வெட்கப்படுகின்ற விடயங்களை எல்லாம் இப்பெரும் ஸஹாபாக்கள் விடயத்தில் ஷீஆக்கள் குறிப்பிடுகின்றனர்.

நபியவர்களுக்குப்பின்பு இந்த சமுதாயத்தில் சிறந்தவரான அபூபக்ர் (ரழி) அவர்களைப் பற்றி ஷீஆக்களின் நூல்கள் சொல்லும் செய்திகளைப் பாருங்கள்:

“அபூபக்ர் அவர்கள் தனது வாழ்நாளில் அதிகமானவற்றை நிராகரிப்பிலேயே கழித்தார்கள், சிலைகளை வணங்குபவராகவும் அதன் சேவகனாகவும் இருந்தார்கள். அவரது ஈமான் யூத கிறிஸ்தவர்களின் ஈமானை ஒத்தது.” (பிஹாருல் அன்வார், ஸிராதில் முஸ்தகீம், இல்முல் யகீன்)

“அபூபக்ர் அவர்கள் ஜாஹிலிய்யாக்காலத்தில் வணங்கி வழிபட்டு வந்த ஒரு சிலை அவரிடம் இருந்தது, இஸ்லாத்தை ஏற்றபின்பு நபியவர்கள் மரணிக்கும் வரை அதற்கு ரகசியமாக வணக்க வழிபாடுகளை செலுத்தி வந்தார். நபியவர்கள் மரணித்ததும் அவரது உள்ளத்தில் மறைத்திருந்ததை வெளிப்படுத்தினார்.” (அல்-அன்வாருன்நு.:.மானிய்யா)

அபூபக்ர் அவர்களிடம் ஒரு சிலை இருந்தது. அதை அவர் நெஞ்சில் தொங்கவிட்டிருந்தார், அவர் நபியவர்களுக்குப்பின்னால் தொழுவார், ஸுஜூது செய்வார், ஆனால், அந்த சிலைக்காகவே செய்வார். (பார்க்க: அல்-அன்வார் அந்நு.:.மானிய்யா)

ஷீஆக்களின் அறிஞர்கள் அவரின் மறைவான விடயங்களை ஆய்வுசெய்ததில் அவர் காபிர் என்பது அவர்களுக்குத் தெளிவானது. (அல்இஸ்திகாதா பீ பிதயித் தலாதா)

நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்யும்போது அபூபக்ரை குகைக்கு அழைத்துச் சென்றது அவர் முஸ்ரிக்களுக்கு நபியவர்களின் இடத்தை காட்டிக்கொடுத்துவிடுவார் என்ற பயத்தினாலாகும். (அத்தராயிப் பீ ம.்.ரிபதி மத்ஹபித் தவாயிப்)

அலி (ரழி) மற்றும் அஹ்லுல் பைத்தின் முக்கியமானவர்கள் எல்லாம் புகழ்ந்து பேசிய ஒருவர் விசயத்தில் இந்த யூதக் கும்பல் எவ்வாறு கதை சொல்கிறது பாருங்கள். அல்லாஹ் எம்மனைவரையும் இத்தீய கூட்டத்திலிருந்து பாதுகாப்பானாக.

இனி, உமர் (ரழி) அவர்கள் பற்றி ஷீஆக்கள் சொல்லும் சில கருத்துக்களைப் பாருங்கள்.

“உமர் இஸ்லாத்தை வெளியில் காட்டிக்கொண்டு நிராகரிப்பை மறைத்து வாழ்ந்தார், அவர் காபிராகவே இருந்தார்.” (அஸ்ஸிராத் அல்முஸ்தகீம்)

“இப்லீஸின் நிராகரிப்பை விட கடுமையானதாக உமரின் நிராகரிப்பு இல்லாவிட்டாலும் இப்லீஸின் நிராகரிப்புக்கு நிகரானதாகும்.” (பிஹாருல் அன்வார், தப்ஸீருல் புர்ஹான்)
“உமர் காபிர் என்பதில் எந்த புத்திசாலியும் சந்தேகப்படுவதற்கு இடமில்லை, அல்லாஹ்வுடையவும் அவனுடைய தூதருடையவும் சாபம் அவர்மீதும், அவரை முஸ்லிமாக கணிக்கும் ஒவ்வொருவர் மீதும் அவரை சபிப்பதைத் தடுப்பவர்கள் மீதும் உண்டாவதாக.” (ஜலாஉல் உயூன்)

அல்குர்ஆனில் ‘ஷைத்தான் கூறினான்’ என்று வந்தால் அதன் கருத்து உமர் கூறினான் என்பதாகும். (தப்ஸீருல் அய்யாஸி, தப்ஸீருல் புர்ஹான், பிஹாருல் அன்வார்)

முஸ்லிம்களின் மாவீரர் உமர் (ரழி) கொலை செய்யப்பட்ட நாளை ஷீஆக்கள் பெருநாளாகக் கொண்டாடுகின்றனர், எழுபத்தி

இரண்டுக்கும் மேற்பட்ட சிறப்புப் பெயர்கள் அந்த நாளுக்கு அவர்களிடம் உள்ளது. ''அநியாயக்காரன் கவலை அடைந்த நாள், கஸ்டங்கள் நீங்கிய நாள், சந்தோச தினம்... என்பன அவற்றில் சிலவாகும். (பிஹாருல் அன்வார், அன்வாருன்நு.ஃ. மானிய்யா, பஸ்லுல் ஹிதாப்)

உமர் (ரழி) அவர்களைக் கொலை செய்த நெருப்பு வணங்கியான அபூ லு.ஃ.லுஆ அல் மஜூஸியை, சன்மார்க்க வீரன் என்றும் விடிவைப் பெற்றுத் தந்தவர் என்றும் புகழ்கின்றனர். அவனுக்காக ஈரானின் காஸான் எனும் கிராமத்தில் ஆடம்பர கப்ரைக் கட்டி அதில் வணக்கவழிபாடுகளில் ஈடுபடுகின்றனர், அவர்களை அந்த அபூலு.ஃ.லுஆவுடன் எழுப்புமாறும் பிரார்த்தனை செய்கிறார்கள். (பார்க்க: பிஹாருல் அன்வார், அல்குனா வல் அல்காப்)

உமர், காபிர் என்பதில் ஷீஆக்கள் எல்லோரும் ஏகோபித்த முடிவில் உள்ளனர், என்று ஷீஆக்களின் முக்கிய அறிஞர் மஜ்லிஸி அவர்கள் தனது ''அல்உயூன் வல் மஜாலிஸ்'' எனும் நூலிலே குறிப்பிடுகிறார்.

ஷீஆக்களின் கல் நெஞ்சைப் பாருங்கள். சாதாரண மனிதன் விடயத்தில் நாம் சொல்லுவதற்கு அருவருப்பாக நினைக்கும் விடயத்தை நபியின் முக்கிய தோழர், மாமனார் விடயத்தில் சொல்லியிருக்கிறார்கள்.

"உமருக்கு அவரின் பித்தட்டிலே ஒரு நோய் இருந்தது, ஆண்களின் இந்திரியம் படுவதினால்தான் அதன் வலி சற்றுத் தணியும் இதனால் பித்தட்டில் புணர்ச்சியில் ஈடுபடப்படும் ஒருவராக அவர் இருந்தார்.'' (அல்-அன்வாருன் நு.ஃ.மானிய்யா)

வாசகர்களே, என்னை மன்னித்து விடுங்கள். ஷீஆக்களின் விபரீதமான கொள்கைகளை விளங்கப்படுத்த வேண்டும், அவர்களைப் பற்றிய மாயையில் உளன்று கிடப்பவர்கள் அவர்களைப் பற்றிப்

புரிந்து கொள்ள வேண்டும் என்ற ஒரு அவசியம் இல்லை என்றால் கண்டிப்பாக நான் இவ்வாறான கருத்துக்களை மொழி பெயர்த்திருக்க மாட்டேன்.
இறைவா! இந்த யூதக் கும்பலிலிருந்து எம்மையும் எம் சமுதாயத்தையும் பாதுகாப்பாயாக.

அபூபக்ர், உமர் இருவரையும் சபிப்பது கடமை என்பதில் ஷீஆக்கள் ஏகோபித்த முடிவில் உள்ளனர். அவர்கள் இருவரை விட்டும் நீங்குவதும் அவசியமாகும், மேலும் அது ஷீஆ மதத்தின் தவிர்க்க முடியாத கொள்கையாகும். (பார்க்க: அல்இ∴. திகாதாத்) ஷீஆ மதத்தில் தவிர்க்க முடியாத ஒரு கொள்கையை யார் நிராகரித்தாரோ அவர் காபிராவார்.

யார் அவர்கள் இருவரையும் (அபூபக்ர் ரழி, உமர் ரழி) மாலை வேளையில் சபிக்கிறானோ அவனுக்கு காலையாகும் வரை எந்தப்பாவமும் எழுதப்படமாட்டாது. (ழியாஉஸ்ஸாலிஹீன்)

அபூபக்ரும் உமரும் காபிராகவே இருந்தார்கள் அவர்கள் இருவரையும் நேசிப்பவரும் காபிரே. (ஹக்குல் யகீன், கொமைனி அவர்களின் கஸ்புல் அஸ்ரார்)

ஷீஆக்களின் முக்கிய அறிஞரான குலைனி அவர்கள் தனது அல்காபி எனும் நூலில் அபூபக்ருக்கும் உமருக்கும் இந்த இஸ்லாத்தில் பங்கிருக்கிறது என்று நம்பியவரை அல்லாஹ் மறுமை நாளில் பார்க்கமாட்டான், மேலும் அவரை தூய்மைப்படுத்தவுமாட்டான், அவருக்கு நோவினை தரும் வேதனை இருக்கிறது. என்று குறிப்பிடுகிறார்.

காலையிலும் மாலையிலும் ஓதுவதற்கென்று ஷீஆ அறிஞர்களிடம் காணப்படும் “துஆஉ ஸனமை குரைஸ்” எனும் பிரபல்யமான ஒரு துஆ உள்ளது. அந்த துஆ முழுமையாக அபூபக்ர் (ரழி),

உமர் (ரழி), ஆயிஷா (ரழி), ஹப்ஸா (ரழி) ஆகியோரை சபிப்பதற்கே உருவாக்கப்பட்டுள்ளது.

அபூபக்ர் (ரழி), உமர் (ரழி) ஆகியோரை பிர்அவ்ன், ஹாமான் என்றும், இரு சிலைகள் என்றும், லாத், உஸ்ஸா என்றும் ஷீஆக்களின் நூல்கள் கொச்சைப்படுத்தியுள்ளன. (பார்க்க: குர்ரதுல் உயூன், தப்ஸீருல் அய்யாஸ், இக்மாலுத்தீன், முகத்திம்துல புர்ஹான்)
அல்லாஹ் இக்கூட்டத்தாருக்கு கூலி வழங்கப் போதுமானவன்.

மிகப்பெரும் ஸஹாபாக்களான இவர்கள் இருவர் பற்றியும் ஷீஆக்கள் சொல்வதை அவதானித்த எமக்கு உஸ்மான் (ரழி) விடயத்தில் இவர்கள் என்ன சொல்லியிருப்பார்கள் என்பதைப் பார்க்கவா வேண்டும் அதே பல்லவிதான்.

உஸ்மான் (ரழி) அவர்கள் இஸ்லாத்தை வெளிப்படுத்திக்கொண்டு நிராகரிப்பை மறைத்து வைத்திருந்தவர்களில் ஒருவராக இருந்தார். (அல்-அன்வாருன் நு:.மானிய்யா)

“யார் உஸ்மானுக்கு எதிரான விரோதத்தை தனது உள்ளத்தில் பெற்றுக்கொள்ளவில்லையோ, அவருடைய மரணத்தை ஹலாலாக்கவில்லையோ, மேலும் அவர் காபிர் என்பதை யார் நம்பவில்லையோ அவர் அல்லாஹ்வினதும் அவனது தூதரினதும் விரோதியாவார், மேலும் அல்லாஹ் இறக்கியதை நிராகரித்தவரு மாவார்.” (நபஹாதுல் லாஹூத் பீ ல:.னில் ஜிப்தி வத்தாகூத்)

நபி (ஸல்) அவர்களின் இரண்டு பிள்ளைகளைத் திருமணம் செய்கின்ற மிகப்பெரும் பேற்றைப் பெற்றவர் உஸ்மான் (ரழி) அவர்கள். ஆனால், நபியவர்களின் அந்தப் பிள்ளைகளின் எலும்புகளை உடைத்து உஸ்மானே அவர்களைக் கொன்றதாகவும், அவர்கள் உஸ்மானிடமிருந்து பாதுகாக்குமாறு இறைவனிடம்

பிரார்த்தனை செய்ததாகவும் சொல்கிறது இந்த சீ ஷீயாக்கள் கூட்டம். (பார்க்க: ஸீரதுல் அயிம்மா, ஸிராதுல் முஸ்தகீம், தப்ஸீருல் கும்மி, அல்காபி, தப்ஸீருல் புர்ஹான்)

இவர்களின் சிந்தனைகள் எந்தளவுக்கு அழுக்கானவை என்பதை பின்வரும் அறிவிப்பு படம்பிடித்துக் காட்டுகிறது: “உஸ்மான் அவர்களிடம் விபச்சாரத்தில் ஈடுபட்ட ஒரு பெண் கல்லெறிந்து கொலை செய்யப்படுவதற்காக கொண்டுவரப்பட்டாள். அவளுடன் உஸ்மான் விபச்சாரத்தில் ஈடுபட்டார் பின்பு அவளை கல்லெறிந்து கொல்லுமாறு ஏவினார். ” (அஸ்ஸிராதுல் முஸ்தகீம்) இந்த யூத சிந்தனையிலிருந்து அல்லாஹ் எம்மனைவரையும் பாதுகாப்பானாக.

அபூபக்ர் (ரழி), உமர் (ரழி), உஸ்மான் (ரழி) மூவருக்கும் நரகத்தில் ஒரு ஓடை இருக்கிறதாம் அதில் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்று நம்புகின்றனர் ஷீஆ அறிஞர்கள். (பார்க்க: அல்புஸூலுல் முஹிம்மா)

இந்த நாசகாரக் கும்பலிலிருந்து அல்லாஹ் எம்மைப் பாதுகாப்பானாக.

அபூபக்ர் (ரழி), உமர் (ரழி), உஸ்மான் (ரழி) மூவரிலிருந்தும் யார் நீங்கவில்லையோ அவன் விரோதியாவான் அவன் அலியை நேசித்தாலும் சரியே, (வஸாயிலுஸ்ஷீஆ)

அபூபக்ர் (ரழி), உமர் (ரழி), உஸ்மான் (ரழி) போன்றவர்களை ஒவ்வொரு தொழுகையின் பின்பும் சபிப்பது கடமையாகும். (அல்காபி, வஸாயிஷ்ஷீஆ)

எவர் ஒருவர் அபூபக்ர் (ரழி), உமர் (ரழி), உஸ்மான் (ரழி) அவர்களிலிருந்து ஒரு இரவில் நீங்குகிறாரோ, அவர் அந்த இரவில் மரணித்தாலும் சுவர்க்கம் நுழைவார். (அல்காபி)

அல் மஜ்லிஸி அவர்கள் தனது “ஹக்குல் யகீன்” எனும் நூலில் ‘நீங்குதல்’ எனும் ஷீஆக்களின் கொள்கை பற்றித் தெளிவுபடுத்தும்போது: “இதில் எமது கொள்கை அபூபக்ர், உமர், உஸ்மான்… எனும் நான்கு சிலைகளைவிட்டும் அவர்களைப் பின்பற்றுபவர்கள் அவர்களை நேசிப்பவர்கள் அனைவரை விட்டும் நீங்குவதாகும், மேலும் அவர்கள் அனைவரும் இந்தப்பூமியில் அல்லாஹ்வின் படைப்பில் மிகவும் கெட்டவர்களாகும்.”

இந்த ஷீஆக்களின் இமாம் கொமைனி, அபூபக்ர் (ரழி), உமர் (ரழி) போன்றவர்கள் மடையர்கள் என்று சொல்லி விட்டு சொல்கிறார் இவர்களைப் போன்ற மடையர்கள், அறிவீனர்கள், மடமையின் உச்சத்திற்கு சென்றுவிட்டவர்கள், பாவிகள், இட்டுக்கட்டுகின்றவர்கள தலைமைத்துவத்தில் இருப்பதற்கு தகுதியற்றவர்கள். மேலும் தலைவர்களுடன் சேர்த்துச் சொல்வதற்கும் தகுதியற்றவர்கள். (ஹத்தா லா நன்ஹதி.'.)

நபி (ஸல்) அவர்களின் மனைவியர்கள் பற்றி ஷீஆக்கள்.

நபி (ஸல்) அவர்களின் மனைவியர் எமது தாய்மார்கள். அவர்களை திருமணம் செய்வது எமக்குத் தடை. எம் உயிரினும் மேலாக அவர்கள் மதிக்கப்படவேண்டும். அவர்கள் அனைவரும் சுவர்க்கவாதிகள். இப்படியே நாம் நபியவர்களின் மனைவியர் பற்றி நம்பியிருக்கின்றோம் நம்பவும் வேண்டும். ஆனால் கேடுகெட்ட ஷீஆக்கள் நபியவர்களின் மனைவியர்கள் பற்றிச் சொல்வதைப் பாருங்கள். எந்தளவுக்கு அவர்கள் அரக்கர்கள் என்பதற்கும் ஒழுக்கமில்லாத இழி பண்புடையோர் என்பதற்கும் இது போதிய சான்றாக இருக்கின்றது.

நபியவர்களின் மனைவியர்கள் பொதுவாக அவரது குடும்பத்தினர் அல்ல என்று சொல்லும் ஷீஆக்கள், அவர்கள் காபிர்கள் என்று குறிப்பிடுவதுடன் குறிப்பாக ஆயிஷா (ரழி), ஹப்ஸா (ரழி) போன்றோரை கடுமையாக வசைபாடியுள்ளனர்.

நபியவர்களின் பாசத்திற்குரிய மனைவியர்களான ஆயிஷா (ரழி) அவர்களும், ஹப்ஸா (ரழி) அவர்களும் காபிர்கள் என ஷீஆக்கள் நம்புகிறார்கள். (அஸ்ஸிராதுல் முஸ்தகீம், பஸ்லுல் கிதாப்)

ஆயிஷா (ரழி), ஹப்ஸா (ரழி) அவர்களின் தந்தைகள் இவர்கள் அனைவரும்தான் நபி (ஸல்) அவர்களைக் கொன்றார்கள் என்பது ஷீஆக்களின் நம்பிக்கையாகும்.
ஷீஆக்களின் முக்கியமான அறிஞர்களில் ஒருவர் சொல்கிறார்: "நபியவர்கள் மரணித்தார்களா அல்லது கொலை செய்யப்பட்டார்களா என்பது உங்களுக்குத் தெரியுமா? அல்லாஹ் அல்குர்ஆனில் சொல்கிறான்: "அவர் மரணித்துவிட்டாலோ அல்லது கொலை செய்யப்பட்டாலோ நீங்கள் புறமுதுகிட்டு ஓடிவிடுவீர்களா? " நிச்சயமாக நபியவர்கள் மரணிப்பதற்கு முன்னால் நஞ்சூட்டப் பட்டார்கள், ஆயிஷாவும், ஹப்ஸாவும் நபியவர்களுக்கு அதைப் புகட்டினார்கள். இதனால் நாம் சொல்கிறோம் அவர்கள் இருவரும் அவர்கள் இருவரின் தந்தைகளும் அல்லாஹ்வின் படைப்பில் மிகவும் கெட்டவர்கள்." (தப்ஸீருல் அய்யாஸி)

ஷீஆக்களின் அறிஞர்களில் ஒருவரான மஜ்லிஸி சொல்கிறார்: "நிச்சயமாக ஆயிஷா, ஹப்ஸா அவர்கள் மீதும் அவர்களின் தந்தைகள் மீதும் அல்லாஹ்வின் சாபம் உண்டாவதாக, இருவருமே திட்டமிட்டு நபியவர்களுக்கு நஞ்சூட்டிக் கொலை செய்தார்கள். இந்த செய்தியை அய்யாஸி அவர்கள் ஸாதிகைத் தொட்டும் நம்பகமான அறிவிப்பாளர் வரிசையினூடே அறிவித்திருக்கிறார்." (ஹயாதுல் குலூப்)

ஆயிஷா (ரழி) அவர்களும் ஹப்ஸா (ரழி) அவர்களும் விபச்சாரத்தில் விழுந்ததாக ஷீஆக்களின் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். ஷீஆக்களின் முக்கிய அறிஞர்களில் ஒருவரான அல்கும்மி என்பவர்: அவர்கள் இருவரும் விபச்சாரத்தில் ஈடுபட்டார்கள் என்பதை சத்தியமிட்டுச் சொல்கிறார். (தப்ஸீருல் கும்மி)

அல்லாஹ் எம்மைப்பாதுகாப்பானாக. அன்புக்குரிய சகோதரர்களே இதை நாம் நமது தாய், மனைவி, சகோதரிகள் விசயத்தில் சொல்வோமா! நிச்சயமாக சொல்லமாட்டோம். நபியவர்களின் மனைவியர்கள் விடயத்தில் சொல்லலாமா? அப்படிச் சொல்பவரை நாம் ஆதரிக்கலாமா? அவரை அறிஞர் என்று போற்றலாமா? அவ்வாறு போற்றும் கூட்டத்திற்கு பின்னால் செல்லலாமா?...

ஆயிஷா (ரழி) அவர்களை விபச்சாரி என்று வசைபாடும் ஷீஆக்கள் நரகத்தில் அவருக்கென்று தனியான ஒரு வாயில் இருப்பதாகவும் குறிப்பிடுகின்றனர். (பார்க்க: தப்ஸீருல் அய்யாஸி)

அல்லாஹ் எம்மனைவரையும் இந்த யூதப்
பரம்பரையிலிருந்து பாதுகாப்பானாக.

ஷீஆக்களின் அறிஞர் ரஜப் அல்புர்ஸி என்பவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: "நிச்சயமாக ஆயிஷா தவறான உறவின் மூலம் 40தீனார்களை சேகரித்து வைத்திருந்தார். அதை அலி(ரழி) அவர்களின் எதிரிகளுக்கு பங்கிட்டுக்கொடுத்தார்." (மஷாரிபு அன்வாரில் யகீன்) அஸ்த.்.பிருல்லாஹ்.

இந்த யூதர்களின் இன்னுமொரு அறிஞர் குறிப்பிடுகின்றார்: "மஹ்தி வந்தால் நிச்சயமாக அவர் ஆயிஷாவை உயிர்ப்பிப்பார், அவருக்குரிய தண்டனையை வழங்குவார்." (ஹக்குல் யகீன்)

நபியவர்களின் மனைவியர்களை வசைபாடிய ஷீஆக்களின் உள்ளங்கள் எவ்வளவு மோசமானதாக இருக்கிறது என்பதை பின்வரும் அறிவிப்பு தெளிவுபடுத்துகிறது.

"நிச்சயமாக நபியவர்களின் அபம் நரகத்தில் நுழையும். ஏனெனில் அவர் சில முஷ்ரிக்கான பெண்களுடன் குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிறார்." (கஷ்புல் அஸ்ரார்)

ஸுப்ஹானல்லாஹ். இதற்குப்பிறகும் ஒரு வழிகேடு இருக்கவே முடியாது. முறையான ஆண் பெண் தொடர்பை கற்றுத் தந்த நபியவர்களுக்கே ஷீஆக்களிடம் இந்த நிலையா!

நிச்சயமாக இதைச் சொன்னவர்கள் முஸ்லிம்களாகவே இருக்க முடியாது. அல்லாஹ் எம்மனைவரையும் இத்தகைய நம்பிக்கை களிலிருந்து பாதுகாப்பானாக!

நபியவர்கள் ஆயிஷா (ரழி) அவர்களின் வீட்டில், அவரிடம் தங்கும் நாளில், அவருடைய மடியில், அவருடைய உமிழ் நீருடன் கடைசியாக மரணித்தார்கள். நிச்சயமாக இது இந்த உலகத்தில் ஆயிஷா (ரழி) அவர்களுக்குக் கிடைத்த பெரும் பாக்கியம். அவர் நல்லவர் என்பதற்கு அப்பால் நல்லவர்களில் எல்லாம் சிறந்தவர் என்பதற்கான ஆதாரமாக இது இருக்கிறது.

ஏனைய ஸஹாபாக்கள் பற்றி ஷீஆக்கள்...

நபி(ஸல்) அவர்கள் உயிருடன் இருக்கும்போது ஸஹாபாக்கள் நபியவர்களுடன் நடித்துக்கொண்டு முனாபிக்குகளாக இருந்ததாகவும், நபியவர்களின் மரணத்தின்பின்பு அவர்கள் அனைவரும் காபிர்களாக மாறிவிட்டதாகவும் ஷீஆக்களின் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஷீஆக்களின் முக்கியமான அறிஞர்களில் ஒருவரான துஸ்திரி என்பவர் 'இஹ்காகுல் ஹக்கி வ இஸ்ஹாகுல் பாதில்' என்ற நூலிலே பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: "நிச்சயமாக அவர்கள் (ஸஹாபாக்கள்) உண்மையாக இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளவில்லை, மாறாக நபியவர்களின் தலைமைத்துவத்தில் ஆசை கொண்டதின் காரணமாகத்தான் அதிகமானவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள், அவர்கள் அனைவரும் நயவஞ்சகத்துடனேயே இருந்தார்கள்."

காஷானி என்பவர் குறிப்பிடும்போது: "ஸஹாபாக்களில் அதிகமானவர்கள் நயவஞ்சகத்தை மறைத்து வைத்துக்கொண்டே இருந்தார்கள், அல்லாஹ்வின் மீது இட்டுக்கட்டுபவர்களாகவும், நபியவர்கள் மீது இட்டுக்கட்டுபவர்களாகவும் இருந்தார்கள்." (தப்ஸீருஸ்ஸாபி)

இவர்களின் குமைனி தனது ‘அல்ஹுகூமா அல்இஸ்லாமிய்யா’ என்ற நூலில் ஸஹாபாக்கள் முனாபிக்குகள் என்று குறிப்பிடுகின்றார்.

நபியவர்கள் வாழும்போது இப்படி இருந்தவர்கள்: நபியவர்கள் மரணித்த பின்பு காபிர்களாக மாறிவிட்டனராம்.
ஷீஆக்களின் அறிஞர்களில் ஒருவரான முஹம்மது ரிழா அல்முழப்பர் சொல்கிறார்: “நபியவர்கள் மரணித்தபோது ஸஹாபாக்கள் அனைவரும் இஸ்லாத்தை விட்டு சென்றுவிட்டனர்.” (அஸ்ஸகீபா)

துஸ்துரி எனும் ஷீஆக்களின் மற்றுமொரு அறிஞர் குறிப்பிடுகின்றார்: “நபி(ஸல்) அவர்கள் வந்தார்கள் அதிகமான மனிதர்களுக்கு நேர்வழி காட்டினார்கள், என்றாலும் அவரின் மரணத்தின் பின்பு அவர்கள் மதம் மாறிவிட்டனர்.” (இஹ்காகுல் ஹக் வ இஸ்ஹாகுல் பாதில்)

முக்கிய குறிப்பு:

அன்புக்குரிய சகோதரர்களே, ஒரு மனிதன் எதற்காக நடிக்கவேண்டும்? தலைமைத்துவத்திற்காக நடிக்கலாம், புகழுக்காக நடிக்கலாம், சுய பாதுகாப்புக்காக நடிக்கலாம், தனது சொத்துக்காக அல்லது பிறருடைய சொத்தை அபகரிப்பதற்காக நடிக்கலாம், அல்லது தனது இடத்தில் இருப்பதற்காக நடிக்கலாம். இதற்கப்பால் நடிப்பதற்கு ஒரு காரணம் இருக்க முடியாது.

ஸஹாபாக்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதன் காரணமாக ஒரு மனிதன் நடிப்பதற்குரிய அத்தனையையும் இழந்தார்கள் தலைமைத்துவம், மானம், பொருள், உயிர், சொந்தங்கள், நாடு என்று எல்லாம் இஸ்லாத்தை ஏற்றதினால் அவர்களிடம் இல்லாமல் போனது என்பதை ஸஹாபாக்களின் வரலாற்றை சிறிதளவு வாசிப்பவர் கூட தெளிவாக அறிந்துகொள்வார்.
ஆனால் இந்த நாசகாரக்கூட்டம் இஸ்லாம் என்று பொதுமக்களிடம் எத்தகைய கருத்துக்களை விதைக்கிறது பாருங்கள்! இதையும்

எமது சமுதாயத்தில் பலர் ஆதரிப்பதுதான் விந்தையாக இருக்கிறது. அல்லாஹ் இவர்களுக்கு நேர்வழிகாட்டப்போதுமானவன். உண்மையில் ஸஹாபாக்களுக்கு எதிரான இவர்களின் இத்தகைய கருத்துக்கள் நிச்சயமாக இவர்கள் முஸ்லிம்களாக இருக்கவே முடியாது, முஸ்லிம்களைக் குழப்புவதற்கு முஸ்லிம்களாக நடிக்கும் வேடதாரிகளாகவும், அப்படியானவர்களின் கைக்கூலிகளா-கவுமே இருக்கமுடியும் என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

ஸஹாபாக்களின் சிறப்புக்கள், அவர்களுக்கு எதிரான ஷீஆக்களின் கருத்துக்கள், அதன் உண்மை நிலை என்பவற்றை விரிவாகத் தெரிந்துகொள்ள விரும்பும் சகோதரர்கள், எனது முந்திய வெளியீடான ‘இஸ்லாத்தின் பார்வையில் ஸஹாபாக்கள்” என்ற நூலை வாசிக்கவும்.

இவர்களால் அறிவிக்கப்படும் ஹதீஸ்களை ஏற்பதில்லை:

ஷீஆக்களின் கருத்தின்படி ஸஹாபாக்கள் இவ்வாறு மோசமானவர்களாக இருப்பதன் காரணமாகவும். காபிர்களாக இருப்பதனாலும், அவர்கள் நபியவர்கள் சொன்னதாகச் சொல்லும் எந்த செய்தியையும் ஷீஆக்கள் ஏற்பதில்லை. மாறாக அஹ்லுல் பைத்துகள் சொன்னதாகச் சொல்லப்படும் செய்திகளையே ஏற்றுக்கொள்கின்றனர்.

ஸஹாபாக்கள் பற்றி ஷீஆக்கள் அதிகமதிக பொய்யுரைத்திருப்பதன் இலட்சியமே இதுதான். அதாவது தங்களின் கொள்கையை விதைக்கவேண்டும் என்பதற்காக, இருக்கும் கொள்கையை இல்லாமலாக்கவும், அதைச் சொல்பவர்களை குற்றவாளிகளாக்கவும் முயற்சிக்கின்றனர்.

ஸஹாபாக்கள்தான் அல்குர்ஆன் அல்ஹதீஸுக்கான எமது ஆதாரங்கள். அவர்கள் பிழை என்று ஆகிவிடுமானால் நாம்

அல்குர்ஆனையோ ஹதீஸையோ ஆதாரமாகக் கொள்ள முடியாது. இதையே ஷீஆப் போக்கிரிகள் எதிர்பார்க்கின்றனர். இதனால்தான் ஸஹாபாக்களில் யாரெல்லாம் கூடுதலாக ஹதீஸை அறிவித்திருக்கின்றார்களோ, அவர்களை சற்று கூடுதலாக ஷீஆக்கள் விமர்சிக்கின்றனர்.
யாஅல்லாஹ்! இவர்களின் முகத்திரையைக் கிழித்து இவர்களின் உண்மை நிலையை உனது அடியார்களுக்கு தெளிவுபடுத்துவாயாக ஆமீன்..

உண்மையான ஸஹாபாக்கள் யார்?

எல்லா ஸஹாபாக்களையும் பற்றி இவ்வளவு தரக்குறைவாக பேசிய ஷீஆக்களுக்கு வேறொரு பிரச்சினையும் தோன்றுகின்றது. ஏனெனில் ஷீஆக்களின் அறிஞர்கள் எல்லா ஸஹாபாக்களையும் பற்றி மோசமானவர்கள் என்று சொல்லியிருப்பதனால் நாம் மதிக்கின்ற அலி, மற்றும் அவரின் குடும்பத்தினரும் அந்த ஸஹாபாக்களில் அடங்குகின்றனர் இதனால் இவர்களை அந்தப் பட்டியலிலிருந்து பாதுகாப்பதற்காக இன்னும் சில அறிவிப்புக்களை இட்டுக்கட்டவேண்டிய தேவை அவர்களுக்கு ஏற்படுகிறதுஇதனால் முழுமையாக அஹ்லுல் பைத்தினரை மட்டும் குறிப்பிட்டால் தப்பபிப்பிராயம் ஏற்பட்டுவிடும் என்று பயந்து அவர்களுடன் சில ஸஹாபாக்களையும் இணைத்து அவர்கள் அனைவரும் உண்மையான மு.ஃ.மீன்களாக இருந்ததாகக் குறிப்பிடுகின்றனர். இந்ததலைப்பின் முழுமை கருதி அது பற்றிய ஷீஆக்களின் சில அறிவிப்புக்களையும் இங்கு இணைத்துக்கொள்வோம்.

“நபி (ஸல்) அவர்கள் மனிதர்களில் ஒருவரைத் தவிர மற்ற எவரும் ஈமான் கொள்ளவில்லை: அவர்தான் தன் நாட்டிலிருந்து உண்மையை தேடி வெளியேறிய ஸல்மானுல் பாரிஸி (ரழி) யாகும்.” (கிதாபுஸ்ஷீஅது வஸ்ஸுன்னா பில் மீஸான்)

“நபி (ஸல்) அவர்களுக்குப்பிறகு மனிதர்களில் மூன்றுபேரைத்தவிர மற்ற அனைவரும் மதம்மாறிவிட்டனர், அப்போது அவரிடம் அந்த மூவரும் யார் என்று கேட்டதற்கு: மிக்தாத் பின் அஸ்வத், அபூதர் அல்கிபாரி, ஸல்மானுல் பாரிஸி ” என்றார். (பார்க்க: ரிஜாலுல் கிஸ்ஸி, அல்காபி)

அபூ ஜஃபர் சொல்வதாக வரும் மற்றொரு அறிவிப்பில்: “நபி (ஸல்) அவர்கள் மரணித்தபோது, மனிதர்களில் நான்குபேரைத் தவிர மற்ற எல்லோரும் மதம்மாறிவிட்டனர்.: (அந்த நான்குபேரும்) அலி, மிக்தாத், ஸல்மான், அபூதர்” (தப்ஸீருல் அய்யாஸி, பிஹாருல் அன்வார்)

எனவே, ஷீஆக்களின் கருத்தின்படி உண்மையான ஸஹாபாக்களாக பின்வருவோரைக்குறிப்பிடலாம்:
அலி (ரழி), பாத்திமா (ரழி), ஹஸன் (ரழி), ஹுஸைன் (ரழி), ஸல்மான் (ரழி), மிக்தாத் (ரழி), அபூதர் (ரழி), இன்னும் சில அறிவிப்புக்களில்: அப்பாஸ் (ரழி), ஹம்ஸா (ரழி) போன்றவர்களையும் குறிப்பிடுகின்றனர்.

ஒரு இலட்சத்தையும் தாண்டிய நபியவர்களின் தோழர்களில், தங்களின் கொள்கைக்கு ஏற்ற விதத்தில் சிலரைமாத்திரம் ஸஹாபாக்கள் என்று ஷீஆக்கள் குறிப்பிடுகின்றனர்.

அல்பதா∴.

அல்பதா∴. என்ற அரபுச்சொல்லுக்கு புதிதாகத் தோன்றுதல், தெரியாமல் இருந்த ஒன்று தெரியவருதல். ஆரம்பத்தில் இருந்ததை பின்பு தவறு என்று ஒப்புக்கொண்டு மாற்றுதல் எனும் கருத்துக்கள் உண்டு

உதாரணமாக, ஒரு விடயத்தில் கருத்துச்சொல்லும் ஒருவர் பின்பு அதை மாற்றி அதற்கு எதிரான கருத்தை சரிகாணுதல் இதற்கு பதா∴. என்று சொல்லலாம். அவருக்கு தெரியாமல் இருந்தது பின்னால் தெரிய வருகிறது.

இதை, சாதாரண மனிதர்கள் விடயத்தில்தான் சொல்ல முடியும். முக்காலமும் அறிந்த இறைவன் விடயத்தில் சொல்லமுடியாது. அல்லாஹ் முக்காலமும் பற்றிய அறிவுடையவன். எனவே, அவனது அறிவில், தெரியாமல் இருந்து தெரிய வருதல் என்ற பேச்சுக்கே இடமில்லை. அவ்வாறு ஒருவர் நம்பினால் அவர் இஸ்லாமியனாகவும இருக்க முடியாது.

ஷீஆக்களைப் பொறுத்தவரை அல்லாஹ்விற்கு இப்படி இருக்கிறது என்று நம்புகின்றனர். (அல்லாஹ் எம்மைப் பாதுகாப்பானாக.)

இது தொடர்பாக அவர்களது பிரதானமான நூல்களில் வந்திருக்கும் சில அறிவிப்புக்களைப் பாருங்கள்.

“அல்லாஹ் எந்தவொரு நபியை அனுப்பினாலும் மதுவை ஹராமாக்குமாறும், அவனுக்கு பதா∴. இருக்கிறது என்பதை

ஏற்றுக்கொள்ளுமாறும் சொல்லியே அனுப்பியிருக்கிறான்.'' (அல்காபி)

“பதா.·. எனும் கொள்கையைவிட சிறப்பான ஒரு கொள்கையை கொண்டு அல்லாஹ் வணங்கப்படவில்லை.'' (அல்காபி)

''ஷீஆ அறிஞர்கள் அனைவரும் அல்லாஹ்வுக்கு பதா.·. இருக்கிறது என்பதில் ஏகோபித்த முடிவில் உள்ளனர்.'' (அவாயிலுல் மகாலாத்)

உருவாக்குவதற்கான காரணம் என்ன:

உண்மையில் இக்கொள்கை, அல்லாஹ்வுக்கு தெரியாத விடயங்களும் இருக்கிறது என்று சொல்வதுடன் அப்படிச்சொல்வதற்கு அளப்பரிய கூலி இருப்பதாகவும் சொல்கிறது. அல்லாஹ் எம்மைப்பாதுகாப்பானாக.

அல்குர்ஆன், அஸ்ஸுன்னாவிற்கும், முஸ்லிம்களுக்கும் முரணாக இவ்வாறான ஒரு கொள்கையை ஷீஆக்கள் உருவாக்குவதற்கு என்ன காரணம்?

ஷீஆக்களைப் பொறுத்தவரைக்கும் இஸ்லாத்திற்கு முரணான அதிகமான விடயங்களை இட்டுக்கட்டிக்கொண்டனர். அது அல்குர்ஆனுக்கு முரணாகவும் ஹதீஸுக்கு முரணாகவுமுள்ளது இவைகளை மறைப்பதற்கும் அவற்றை ஆகுமாக்குவதற்குமான ஒரு உபாயமாக 'அப்போது அல்லாஹ்வுக்கு அப்படித் தோன்றியது பின்பு இவ்வாறு தோன்றியது' என்று சொல்கின்றார்கள்.

இதுபோல் தங்களின் இமாம்களை, முக்காலமும் பற்றிய அறிவுடையவர்கள் என்று சொன்னார்கள். ஆனால், அவர்களின் பேச்சுக்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்டன. முக்காலமும் பற்றிய அறிவுடையவரின் பேச்சில் இப்படி முரண்பாடு வரமுடியாது.

எனவே, அவ்வாறு முரண்படும்போது அல்லாஹ்வுக்கு பின்பு இப்படித்தோன்றியது என்று சொல்லித் தப்பித்துவிடுகின்றனர்.

நாளைக்கு இவ்வாறு நடக்கும் என்று சொல்வார்கள் அப்படி நடந்தால் நாம் சொன்னோம் பார்த்தீர்களா? ஏனெனில், நாம் அல்லாஹ்விடமிருந்தே அறிவிக்கிறோம் என்று சொல்வார்கள் சொன்னது நடக்கவில்லை என்றால்,அது அல்லாஹ்வின் நாட்டம்தான் நேற்று அவனுக்கு அப்படித்தோன்றியது இன்றைக்கு அவனுக்கு இவ்வாறு தோன்றியிருக்கிறது எமது கையில் எதுவுமில்லை என்று தப்பி விடுவார்கள். எனவே, அவர்களின் பொய்களையும், இஸ்லாத்திற்கு முரணான கொள்கைகளையும் மறைப்பதற்கான ஒரு போர்வையாக இதை எடுத்துக் கொள்கிறார்கள்.

"ராபிழாக்களின் இமாம்கள் அவர்களுக்கு இரண்டு கொள்கைகளை வைத்துள்ளனர். இதனால் அவர்கள் ஒருக்காலும் பொய்யர்களாக தெரியமாட்டார்கள். ஒன்று பதா.:., மற்றயது தகிய்யா (நடிப்பு)" (பிரகுஷ்ஷீஆ)

உதாரணமாக: ஷீஆக்களின் நம்பிக்கைப்படி அந்த மதத்தின் பிரதான கொள்கையான இமாமத் அதாவது தலைமைத்துவம், ஒவ்வொரு இமாமின் பின்பும் அவரது மூத்த பிள்ளைக்கு அவரது வஸிய்யத்தின் பெயரில் அது செல்லும். ஆனால் ஷீஆக்களின் ஆறாவது இமாமான ஜ.்.பர் ஸாதிக் என்பவரின் பிள்ளை இஸ்மாயில் என்பவர் (ஜ.்.பரினால் தனக்கு பின்பு இமாம் என்று வஸிய்யத் செய்யப்பட்டவர்) தந்தை உயிர் வாழும்போதே மரணித்துவிட்டார். இது ஷீஆக்களிடம் பெரும் கருத்து முரண்பாட்டைத் தோற்றுவித்தது. வஸிய்யத் பெற்ற பிள்ளை இமாமாக வருவது அல்லாஹ்வின் விதி என்றால் அந்த விதியில் மாற்றம் வர முடியாது. எனவே, வஸிய்யத் செய்யப்பட்ட பிள்ளை மரணிக்க முடியாது, இல்லை என்றால் இந்தக் கொள்கை பொய்யானதாக இருக்க வேண்டும்.

இதனால் அவர்களுக்கு மத்தியில் பிளவுகளும் பிரிவுகளும் தோற்றம் பெற்றன. இதைச்சீர் செய்து கொள்வதற்கு ஷீஆக்கள் இந்த பதா.'. கொள்கையைப் பயன்படுத்திக்கொண்டனர். அல்லாஹ்விற்கு அப்போது அவ்வாறு தோன்றியது, இப்போது இவ்வாறு தோன்றியுள்ளது என்று சொல்லி அடுத்த இமாமாக ஜ.'.பர் அவர்களின் அடுத்த மகன் மூஸாவை அறிவித்தனர். (பார்க்க: அத்தூஸி என்பவரின் தல்ஹீஸுல் முஹஸ்ஸல்)

சகோதரர்களே, எல்லாவற்றிலும் கைவைத்து ஷீஆக்கள் அல்லாஹ்விலும் கைவைத்திருப்பதைப் பார்த்தீர்களா? இவர்களை முஸ்லிம்கள் என்று சொல்லலாமா?

அல்லாஹ் எம்மனைவரையும் இக்கொள்கையிலிருந்து பாதுகாப்பானாக!

அர்ரஜ்ஆ.

வெற்றி மனதுக்கு பிடித்த ஒரு விடயம். அதுபோல் தோல்வியும் அநியாயமும் மனது வெறுக்கின்ற ஒரு விடயம். அநியாயம் இழைத்தவர்களையும் அல்லது அநியாயம் இழைத்தவர்கள் என்று மனிதன் நினைப்பவர்களையும் பழிவாங்குவது அவனுக்கு சந்தோசத்தை ஏற்படுத்தும்.

ஷீஆக்கள் இஸ்லாத்திற்கு எதிரான கருத்துக்களைக் கொண்டவர்களாக இருந்ததினால் அலி(ரழி) அவர்கள் தொடக்கம் பின்னால் வந்த சில ஆட்சியாளர்களாலும் ஷீஆக்கள் தண்டிக்கப்பட்டார்கள். இது எல்லாவற்றுக்கும் மேலாக மற்றவர்களின் அனுதாபங்களைப் பெறுவதற்காக மிகவும் அதிகமாக உமைய்யாக்கள், அப்பாஸிய்யாக்கள் மற்றும் ஏனைய ஆட்சியாளர்களால் தாம் துன்புறுத்தப்பட்டதாக பிரச்சாரம் செய்கின்றனர். ஷீஆக்களின் சில குழுக்கள் ஆட்சிக்கு வந்தபோதும் தங்களுக்கு மற்றவர்கள் அநியாயம் செய்துவிட்டதாகவே பிரச்சாரம் செய்தார்கள்.

'ஷீஆ' தலைவர்களின் இத்தகைய பிரச்சாரங்கள் அதை ஏற்றுக்கொள்பவர்கள் மத்தியில் அவநம்பிக்கையைஏற்படுத்தியது ஷீஆக்களின் பரவலாக்கத்தில் அது பாதிப்பைஉருவாக்கியது. இதனால் அவர்களை ஆறுதல்படுத்தி ஷீஆக்களின் தொடர்ச்சியான

வளர்ச்சியை தக்கவைத்துக்கொள்வதற்காகவே ரஜ்ஆ என்ற கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது.
அப்துல்லாஹ் பின் ஸப.ஃ. என்பவனால்தான் இக்கொள்கை இஸ்லாமிய சமுதாயத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. நபி (ஸல்) அவர்கள் இவ்வுலகிற்கு மீண்டு வருவார்கள் என்று அவன் பிரச்சாரம் செய்துகொண்டிருந்தான். அவன் அலி (ரழி) அவர்களை மையப்படுத்தி தன் பிரச்சாரத்தை மேற்கொண்டபோது அலி (ரழி) அவர்கள் மரணித்துவிட்ட செய்தி அவனிடம் சொல்லப்பட்டது. அப்போது அவன் "இல்லை அவர் கொலை செய்யப்பட்ட இரத்தம் துவைந்த ஆடையை என்னிடம் நீங்கள் கொண்டுவந்தாலும் நான் அதை உண்மைப்படுத்தமாட்டேன். அவர் மரணிக்கவில்லை. மறைந்துள்ளார் உலகம் அழிவதற்கு முன்னால் இந்த உலகத்தை நீதியால் அவர் நிரப்புவார்." என்று சொன்னான் (அல்மகாலாது வல் பிரக்) அன்று முதல் அது ஷீஆக்களின் வேத வாக்கியமாகிப் போனது. பின்பு அது பல வளர்ச்சிகளைக் கண்டு இன்றும் ஷீஆக்களால் ஆராதிக்கப்படும் ஒரு கொள்கையாக பரிணமித்துள்ளது.

அர்ரஜ்ஆ என்ற அரபுப்பதத்திற்கு மீளுதல் என்ற அர்த்தம் உள்ளது. ஷீஆக்களின் கொள்கைப்படி மரணித்தவர்கள் மறுமை வருவதற்கு முன்னர் இவ்வுலகிற்கு மீண்டு வருவதை இக்கொள்கை குறிப்பிடுகின்றது. (முபீத் என்பவருக்குரிய அவாயிலுல் மகாலாத்)

ஷீஆக்களின் நம்பிக்கைப்படி, அவர்களின் 12வது இமாம் மஹ்தி அவர்கள் வந்து இந்த உலகத்தை அஹ்லுல் பைத்துகள் ஆட்சி செய்வதற்கு ஏற்ற இடமாக மாற்றுவார். பின்பு அஹ்லுல் பைத்துகளின் இமாம்கள் அலி (ரழி) அவர்கள் தொடக்கம் ஒருவர் பின் ஒருவராக இந்த உலகத்தில் மீண்டும் வருவார்கள். குறிப்பிட்ட ஒரு காலம் ஒவ்வொருவரும் ஆட்சி செய்வ கடைசியாக

மஹ்தி மீண்டும் வருவார். பின்பே மறுமை நாள் உருவாகும். (அஷ்ஷீஅது வத்தஸ்ஹீஹு)

ஷீஆக்களின் நம்பிக்கைப்படி தங்களின் இமாம்களே நபிமார்களைவிட சிறந்தவர்கள். அவர்களுக்காகவே நபிமார்கள் அனுப்பப்பட்டார்கள். இதனால் கடைசியாக வந்த நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் தொடக்கம் எல்லா நபிமார்களும் எழுப்பப் படுவார்கள். அவர்கள் அஹ்லுல் பைத் இமாம்களின் ஆட்சியை நிலைநாட்டுவதற்காக அவர்களின் பின்னால் போராடுவார்கள். (பிஹாருல் அன்வார்)

இதுபோல் இந்த ஆட்சியைக் கண்டுகளிப்பதற்காக ஷீஆக் கொள்கையை ஏற்றுக்கொண்டிருந்தவர்களும் எழுப்பப்டுவார்களாம். (பார்க்க: அஷ்ஷீஅது வத்தஸ்ஹீஹு)

இதுபோல் ஷீஆக்களுக்கு அநீதி இழைத்தவர்களாக குறிப்பிடப்படும் ஒவ்வொருவரும் இந்த உலகத்திற்கு மீண்டு வருவார்கள். அவர்களுக்கான தண்டனை ஷீஆக்களால் மறுமை வருவதற்கு முன் வழங்கப்படும். இவர்களில் முக்கியமாக அபூபக்ர் (ரழி), உமர்(ரழி) மற்றும் அவர்களின் தோழர்கள் எல்லாம் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள். (பார்க்க: அஷ்ஷீஅது வத்தஸ்ஹீஹு, முஹ்தஸரு பஸாயிரித்தரஜாத், தலாயிலுல் இமாமா, பிஹாருல் அன்வார்)

‘‘ஷீஆக்களின் இமாம்களைக் கண்டு கண் குளிர்ச்சி அடைவதற்காகவும், அவர்கள் ஆட்சிசெய்வதைக் கண்டு களிப்பதற்காகவும் அல்லாஹ் மஹ்தியின் காலத்தில் அல்லது அதற்கு சற்று முன்னர் ஷீஆக்களில் ஒரு கூட்டத்தாரை எழுப்புவான். மேலும் ஷீஆக்களை நிராகரித்தவர்களுக்கும், அவர்களுடன் முரண்பட்டவர்களுக்கும், இந்த உலகத்திலேயே தண்டனை வழங்குவதற்காக அவர்களில் ஒரு கூட்டத்தாரையும் அல்லாஹ் எழுப்புவான்.’’ (அல்இ∴திகாதாத்)

ஷீஆக்களிடம் காணப்படும் இந்த நம்பிக்கையில் அவர்களின் அறிஞர்கள் எல்லோரும் ஏகோபித்த முடிவில் உள்ளனர்.

“மரணித்தவர்களில் அதிகமானவர்கள் இந்த உலகிற்கு மீண்டு வருவது கடமை என்பதில் ஷீஆக்கள் எல்லோரும் ஒருமித்த கருத்தில் உள்ளனர்.” என்று ஷீஆக்களின் அறிஞரான முபீத் என்பவர் குறிப்பிடுகின்றார். (பார்க்க: அவாயிலுல் மகாலாத்)

எல்லாக் காலத்திலும் எல்லா இடங்களிலும் வாழ்ந்த ஷீஆ அறிஞர்கள் ரஜ்ஆ எனும் கொள்கையை ஏற்றுக்கொண்டுள்ளனர் என்று ஷீஆக்களின் முக்கிய அறிஞர்களான மஜ்லிஸி, அல்ஹுர்ருல் ஆமிலி, இப்னுல் முழப்பர், தப்ரஸீ போன்ற பலரும் குறிப்பிட்டுள்ளார்கள். (பார்க்க: பிஹாருல் அன்வார், மஜ்மஉல் பயான், அல்ஈகாழு மினல் ஹஜ்ஆ)

இவ்வாறு, தங்களின் எல்லா அறிஞர்களாலும் ஏற்றுக்கொள்ளப் பட்ட மறு பிறவியை ஏற்றுக்கொள்ளாதவனின் நிலை என்ன? ஷீஆக்களின் நூல்கள் அதற்கு பதில் சொல்கின்றன.

ஷீஆக்களின் இமாம்களில் ஒருவர் பெயரில் சொல்லப்படும் ஒரு அறிவிப்பில்: “எங்களின் மீள் வருகையை யார் நம்பவில்லையோ அவன் எங்களைச் சேர்ந்தவனல்ல.” என்றுள்ளது. (பார்க்க: மன்லா யஹ்லுருஹுல் பகீஹ், வஸாயிலுஷ் ஷீஆ)

விடைபெறுமுன்:

அன்புக்குரிய வாசகர்களே, இந்த உலகத்தில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் ஒரு முறைதான் இங்கு வாழமுடியும். பின்பு அவன் மறுமையில் எழுப்பப்பட்டு அவனது செயற்பாடுகள் பற்றி விசாரிக்கப்பட்டு அதற்கான தீர்ப்பு வழங்கப்படும். என்பது முஸ்லிம்களில் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை இருக்கும் நம்பிக்கையாகும்.

மரணித்தவர்கள் இந்த உலகிற்கு மீண்டும் வருவதில்லை என்பதை அல்குர்ஆனின் ஏராளமான வசனங்களும் நபி(ஸல்) அவர்களின் ஏராளமான செய்திகளும் குறிப்பிடுகின்றன.

“முடிவாக, அவர்களில் ஒருவனுக்கு மரணம் வந்துவிட்டால், அவன் ‘எனது இரட்சகனே! என்னை நீ (உலகிற்கு) திருப்பி அனுப்புவாயாக!’ எனக் கூறுவான். நான் விட்டு வந்ததில் நல்லறம் புரிவதற்காக (திருப்பி அனுப்புவாயாக!). அவ்வாறன்று நிச்சயமாக அது அவன் கூறும் வெற்று வார்த்தையேயாகும். அவர்கள் எழுப்பப்படும் நாள் வரை அவர்களுக்கு முன்னால் ஒரு திரை இருக்கின்றது.” (23: 99,100)

“அவர்களுக்கு முன்னர் எத்தனையோ சமூகங்களை நாம் அழித்திருக்கின்றோம். நிச்சயமாக அவர்கள் இவர்களிடம்திரும்பி வரவேமாட்டார்கள் என்பதை இவர்கள் பார்க்கவில்லையா”?. (36:31)

அல்முத்ஆ.

பெண்களை அவர்களுடைய விருப்பத்துடன் தாங்கள் விரும்பும் விதத்தில் பயன்படுத்திக் கொள்ள இந்த கொள்கையை ஷீஆக்கள் வைத்திருக்கிறார்கள். அதுபோல் இஸ்லாமியர்களுக்கு மத்தியில் பிரச்சினைகளை உருவாக்கி அவர்களைக் குழப்புவதற்கு கெட்டவர்கள் அனைவரையும் தங்கள் அணியில் ஒன்று சேர்ப்பதற்காக இக்கொள்கையைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள்.

மொழிவழக்கில் முத்ஆ என்றால் இன்பம், இன்பமனுபவித்தல் போன்ற அர்த்தங்களில் பிரயோகிக்கப்படுகிறது.

ஷீஆக்கள் அறிமுகம் செய்வதின்படி: ஒருவர் ஒரு பெண்ணுடன் குறிப்பிட்ட ஒரு சந்தர்ப்பம் அல்லது ஒரு நாள் அல்லது சில நாட்கள் இன்பம் அனுபவிப்பதற்காக குறிப்பிட்ட ஒரு தொகையை வழங்கி செய்து கொள்ளும் உடன்படிக்கை. (அல்காபி) அதாவது கட்டணம் செலுத்தப்படும் விபச்சாரம் என்று சொல்லலாம்.

இதற்கு சாட்சிகள் தேவையில்லை. (அல்காபி)

இதற்கு பெண்ணின் பொறுப்பாளரின் அனுமதி தேவையில்லை: ‘‘கன்னிப் பெண்ணுடன் முத்ஆவில் ஈடுபடுவதற்கு அவள் பொருந்திக்கொண்டால் போதுமானது அவளது பெற்றோரின் அனுமதி தேவையில்லை.’’ (தஹ்தீபுல் அஹ்காம்)

“பருவ வயதை அடைந்த பெண் திருமணம் முடித்தவராக இருப்பினும் திருமணம் முடிக்காதவராக இருப்பினும் அவளாகவே முத்ஆவில் ஈடுபடலாம். அவளது பொறுப்பாளருக்கு இதில் தலையிட அனுமதி இல்லை.” (ஷராயிஉல் இஸ்லாம்)

எத்தனை பெண்களுடன் வேண்டுமென்றாலும் இவ்வாறு ஈடுபடலாம் இதற்கு வரையறை இல்லை:
“முத்ஆவுக்கு (திருமணத்தைப் போல) நான்கு. எனும் வரையறை இல்லை. ஏனெனில் அந்தப் பெண்கள் தலாக் சொல்லப்படுவதில்லை. அவர்கள் மற்றவர்களிடமிருந்து அனந்தரச் சொத்தைப் பெறுவதுமில்லை, மற்றவர்கள் அவர்களிடமிருந்து அனந்தரச் சொத்தைப் பெறுவதுமில்லை. மாறாக அவர்கள் கூலிக்கு அமர்த்தப்பட்டவர்கள்.” (அல் இஸ்திப்ஸார்)

மற்றொரு அறிவிப்பில்: அவர்களில் 1000பேருடன் வேண்டுமென்றாலும் முத்ஆவில் ஈடுபடலாம் ஏனெனில் அவர்கள் கூலிக்கு அமர்த்தப்படுபவர்களே..” (அல்இஸ்திப்ஸார்)

அந்த முத்ஆவுக்கு எவ்வளவு கூலி கொடுக்க வேண்டும் என்ற வரையறை கிடையாது. ஒரு திர்ஹம் கொடுக்கலாம், அல்லது ஒரு அள்ளு கோதுமை, ஈத்தம் பழம் போன்ற எதுவாக இருந்தாலும் கொடுக்கலாம். (அல்காபி, தஹ்தீபுல் அஹ்காம்)

இவ்வளவு காலம் இருக்க வேண்டும் என்ற வரையறைகளும் இல்லை. ஒரு தடவை ஈடுபடுவதற்கு வேண்டுமானாலும் வாடகைக்கு அமர்த்தலாம். அல்லது ஒரு வருடத்திற்கு வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம். அவன் விரும்பிய விதத்தில் அதைச் செய்யலாம்...(அல்காபி)

இவைகளைப் பார்க்கும்போது முழுமையாக மனோ இச்சைக்கு கட்டுப்படுவதை வணக்கம் என்று சொல்லும் கொள்கை ஷீஆ கொள்கைதான் என்பதை சந்தேகமின்றி தெரிந்துகொள்ள முடிகின்றது.

ஒரு பெண் பத்து வயதை அடைந்து விட்டாலே இந்த முத்ஆவில் அவள் ஈடுபடுவதற்கு அவளுக்கு அனுமதி இருக்கிறது. (அல்இஸ்திப்ஸார், அல்காபி, தஹ்தீபுல் அஹ்காம்.)

இவர்களுடன்தான் முத்ஆவில் ஈடுபடவேண்டும் என்ற கட்டுப்பாடு கிடையாது. யாருடனும் ஈடுபடலாம்.

நிச்சயமாக ஒரு ஆண் நெருப்பை வணங்கும் ஒரு பெண்ணுடன் முத்ஆவில் (விபச்சாரத்தில்) ஈடுபடுவதில் தப்பில்லை. மற்றும் அந்தப் பெண் யூதப் பெண்ணாகவோ கிறிஸ்தவப் பெண்ணாகவோ இருந்தாலும் தப்பில்லை. ஒரு மோசமான நடத்தையுடைய பெண்ணாக இருந்தாலும் சரியே. (தஹ்தீபுல் அஹ்காம், அல் இஸ்திப்ஸார்)

கொமைனியின் கருத்துப்படி விபச்சாரத்தை தொழிலாகக் கொண்டுள்ள பெண்ணுடனும் முத்ஆ செய்ய முடியும். (தஹ்ரீருல் வஸீலா)

ஹாஷிம் குலத்தைச் சேர்ந்த பெண்ணாக இருப்பினும் அவளுடனும் முத்ஆ உறவை வைக்கலாம். (தஹ்தீபுல் அஹ்காம்.)

இதையெல்லாம்விட ஒரு படி மேலே சென்று நாமெல்லாம் ஆச்சரியப்படும்படியான விடயங்களைக் கூட இந்த முத்ஆ விடயத்தில் சொல்லியிருக்கிறார்...
ஒரு ஷீஆ ஜ∴பர் ஸாதிகிடம் கேட்டார்: “நான் ஒரு பெண்ணை முத்ஆவுக்காக அமர்த்தினேன். பின்பு அவளுக்கு கணவன் இருக்குமோ என்று என் உள்ளத்தில் தோன்றியது. அது தொடர்பாக நான் ஆய்வு செய்தேன், அவளுக்கு கணவன் இருக்கிறான் என்பதை அறிந்து கொண்டேன். இப்போது நான் என்ன செய்வது? அதற்கு இமாம் கேட்கிறார்! நீ ஏன் ஆய்வு செய்தாய்?.. (தஹ்தீபுல் அஹ்காம்)

மற்றுமொரு அறிவிப்பில்: உனக்கு அது கடமையில்லை. அவளது கூலியைக் கொடுத்துவிடுவதே உனது கடமையாகும். (அல்காபி)

இதே கருத்தைச் சொல்லும் இன்னுமொரு அறிவிப்பைப் பாருங்கள்: அபான் பின் த.்.லப் என்ற ஷீஆ தன் இமாமிடத்தில் சொல்கிறார், நான் பாதையில் செல்கிறேன், அவ்வேளை ஓர் அழகான பெண்ணைக் காண்கிறேன். ஆனால், அவள் திருமணம் முடித்து கணவனுடன் இருக்கலாம் அல்லது அவள் விபச்சாரத்தில் ஈடுபடும் ஒரு பெண்ணாக இருக்கலாம் என்று நினைக்கிறேன். (இந்த நிலையில் நான் அவளுடன் முத்ஆச் செய்யலாமா?) அதற்கு அந்த இமாம் சொன்னாராம்: உனக்கு இப்படி ஆய்வு செய்வதெல்லாம் கடமை இல்லை உனது கடமை அவளுக்குரிய கூலியைக் கொடுத்து அவளுடன் முத்ஆ செய்வதாகும்.” (அல்காபி)

ஆக சுருக்கமாகச் சொன்னால் முத்ஆ என்பது குறிப்பிட்ட ஒரு நேரத்தில் ஒரு தொகையை வழங்கி அப் பெண்ணை அனுபவிப் பதைக் குறிக்கிறது. இதற்கு சாட்சிகள் தேவையில்லை, பொறுப்பாளர் தேவையில்லை. குறித்த பெண்ணின் பொருத்தம் போதுமானது, எத்தனை பெண்களுடன் வேண்டுமானாலும் இப்படியான உறவை வைத்துக்கொள்ளலாம். அவள் எப்படிப்பட்ட பெண்ணாக இருந்தாலும் பரவாயில்லை. மதம், திருமணம் முடித்து கணவனுடன் இருப்பவள், நடத்தை கெட்டவள், சிறியவள் என்பதை எல்லாம் பார்க்க வேண்டிய அவசியமோ அது பற்றி யோசிக்க வேண்டிய தேவையோ இல்லை.

ஒப்பந்தத்தின்படி அப்பெண் ஒரு தடவையோ அல்லது இரண்டு தடவையோ வீடு கூட மறுத்தால் பேசிய தொகையில் வராத நாட்களை கழித்து மீதிக்கு கூலி கொடுக்கலாம். (அல்காபி)

அன்புக்குரிய சகோதரர்களே இதற்கும் ஐரோப்பாவிலும் இன்னபிற நாடுகளில் நடக்கும் விபச்சாரத்திற்கும் என்ன வேறுபாடு.?

ஹோட்டலில், லொச்சில், பீச்சில், விபச்சார விடுதிகளில் நடக்கும் சல்லாபங்களுக்கும் இதற்கும் என்ன வித்தியாசம்.?

ஆக விபச்சாரத்தை மார்க்கம் என்று சொல்லும் கூட்டம் இவர்கள், இஸ்லாமிய திருமணத்தையே இல்லாமல் செய்கிறார்கள்.

எவ்வளவு பெரிய ஒழுக்கத்தை கற்றுக்கொடுத்த மார்க்கத்தின் பெயரால் இந்தக்கயவர்கள் உருவாக்கியிருக்கும் கட்டுக்கதைகளைப் பாருங்கள். இதனால்தான் ஷீஆக்கள் தப்பான வழிக்குழந்தைகள் என்று சில அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். ஷீஆக்களின் அறிஞர் ஒருவரின் கூற்றுப்படி ஈரானிலே தற்போது சுமார் இரண்டரை இலட்சம் வீதி ஓரக் குழந்தைகள் வாழ்கிறார்களாம்.

ஒரு வழியில் எமது சமுதாயத்தை அடக்கி எமது பெண்களைச் சீரழிக்கும் யூதர்கள் இன்னொரு வழியில் எமது சமுதாயத்தின் அறிவீனத்தையும் அவர்களின் மடமையையும் பயன்படுத்தி எமது பெண்களை சீரழிக்கிறார்கள்.

இந்த விபச்சாரம் முக்கியமானதா? இதற்கு சிறப்புக்கள் உண்டா?

முத்ஆ எனும் விபச்சாரத்தை இந்த ஷீஆக்கள் தங்களின் மதக் கடமையாகக் கொள்வது மாத்திரமல்லாமல் அதன் சிறப்புக்களைப்பற்றியும் அதிகமாகக் குறிப்பிட்டுள்ளனர். அது தொடர்பாக வந்துள்ள சில அறிவிப்புக்களை இனி அவதானிப்போம்.

“யார் முத்ஆவில் ஈடுபடாமல் மரணிக்கிறாரோ அவர் மறுமையில் குருடராக எழுப்பப்படுவார்.” (தப்ஸீரு மன்ஹஜிஸ்ஸாதிகீன்)

“யார் ஒரு தடவை முத்ஆவில் ஈடுபடுகிறாரோ அவரின் மூன்றில் ஒரு பகுதி நரகத்திலிருந்து விடுதலை செய்யப்படுகிறது, மேலும் யார் இரண்டு தடவைகள் முத்ஆவில் ஈடுபடுகிறாரோ அவரது

மூன்றில் இரண்டு பகுதி நரகத்திலிருந்து விடுதலை செய்யப்படுகிறது, மேலும் யார் மூன்று தடவைகள் முத்ஆவில் ஈடுபடுகிறாரோ அவர் முழுவதுமாக நரகத்திலிருந்து விடுதலை செய்யப்படுகிறார்." (தப்ஸீரு மன்ஹஜிஸ்ஸாதிகீன்)

ஸுப்ஹானல்லாஹ்! நமது மார்க்கம் ஒழுக்கம், பண்பாடு, வெட்கம், வணக்க வழிபாடுகள் என்பவற்றை உள்ளடக்கிய மார்க்கம். அந்த மார்க்கத்தை பின்பற்றுவதாகச் சொல்லிக்கொண்டு அதன் பெயரால் விபச்சாரம் செய்தால் நரகத்திலிருந்து விடுதலை என்கிறார்களே! கண்டிப்பாக இது முஸ்லிம்களால் உருவாக்கப்பட்டதாக இருக்காது..

"யார் ஒரு தடவை முத்ஆ செய்தாரோ அவர் அல்லாஹ்வின் கோபத்திலிருந்து பாதுகாக்கப்படுகிறார், யார் இரண்டு தடவைகள் முத்ஆவில் ஈடுபடுகிறாரோ அவர் நல்லவர்களுடன் எழுப்பப்படுவார், யார் மூன்று தடவைகள் முத்ஆ செய்கிறாரோ அவர் என்னோடு சுவனத்தில் நுழைவதற்கு போட்டி போடுவார்." (தப்ஸீரு மன்ஹஜிஸ்ஸாலிஹீன்)

அஸ்த.்.பிருல்லாஹ்! ஒரு மனிதர் மூன்று தடவை விபச்சாரத்தில் ஈடுபட்டால் சுவனம் செல்வதில் அவர் நபிக்கு சமனாகிறார்...? (நஊதுபில்லாஹ்)

அன்புக்குரியவர்களே இவ்வாறான அறிவிப்புக்களை நான் மொழி பெயர்ப்பதற்காக அல்லாஹ்விடம் மன்னிப்புக்கோருகிறேன். ஷீஆக்களின் கேவலமான சிந்தனைகளை இந்த சமூகத்திற்கு தெளிவுபடுத்த வேண்டும் என்ற ஒரு தேவை இல்லை என்றால் நிச்சயமாக இவைகளை மொழிபெயர்த்திருக்க மாட்டேன்.

"நிச்சயமாக நபி (ஸல்) அவர்கள் வானத்திற்கு கொண்டு செல்லப்பட்டபோது: ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபியை சந்தித்து, முஹம்மதே! உனது சமுதாயத்தில் முத்ஆவில் (விபச்சாரத்தில்)

ஈடுபடும் பெண்களின் பாவங்களை நிச்சயமாக நான் மன்னித்துவிட்டேன் என இறைவன் கூறுகிறான். என்று கூறினார்." (மன் லா யஹ்லுருஹுல் பகீஹ்) அஸ்த.்.பிருல்லாஹ்.

"எந்தவொரு மு.்.மினாக இருப்பினும் அவன் முத்ஆ செய்யாவிட்டால் அவனது ஈமான் முழுமை பெறாது." (அஸ்லுஷ்ஷீஅதி வ உஸூலுஹா)

ஷீஆக்களின் ஒரு இமாமிடத்தில் ஒருவர் கேட்கிறார்: முத்ஆ செய்பவருக்கு கூலி இருக்கிறதா? அதற்கு இமாம் சொல்கிறார்: அவர் அந்த முத்ஆவின் மூலம் இறைவனின் திருப்தியை நாடினால் அதற்கு கூலி உண்டு. அவர் அவளுடன் பேசும் ஒவ்வொரு வார்த்தைக்கும் அல்லாஹ் ஒரு நன்மையை எழுதுகிறான், அவளின்பால் தன் கையை நீட்டினால் அல்லாஹ் அதற்காக அவருக்கு ஒரு நன்மையை எழுதுகிறான். அவளிடம் அவர் நெருங்கினால் அவருடைய பாவத்தை அல்லாஹ் மன்னிக்கிறான். அவர் குளித்தால் அவரது உடம்பில் உள்ள முடிகள் ஒவ்வொன்றிலும் தண்ணீர் படும் போது ஒவ்வொரு தீமைகளையும் அல்லாஹ் மன்னிக்கிறான். அப்போது கேள்விகேட்டவர், முடியின் எண்ணிக்கை அளவா? என்று கேட்கிறார். அதற்கு இமாம்: ஆம் அவரின் முடியின் எண்ணிக்கையளவு என்கிறார். (மன்லா யஹ்லுருஹுல் பகீஹ்)

"முத்ஆ செய்வது இணைவைப்பிலிருந்து எம்மைப் பாதுகாக்கிறது. அதன் மூலம் கிடைக்கும் குழந்தை திருமணத்தினால் கிடைக்கும் குழந்தையை விட மேலானது. அதை நிராகரிப்பவர் காபிர் மேலும் மதம் மாறியவர், அதை ஏற்றுக்கொண்டவர் இறை விசுவாசி, ஏனெனில் முத்ஆவில் இரு கூலிகள் உண்டு, ஒன்று முத்ஆவில் ஈடுபடும் பெண்ணுக்கு வழங்கும் தர்மத்தின் கூலி, மற்றையது முத்ஆவில் ஈடுபட்டதற்கான கூலி." (துப்ஸீரு மன்ஹஜிஸ்ஸாலிஹீன்)

அன்புக்குரிய சகோதரர்களே! இதை வாசிக்கும் உங்களுக்கு உண்மையாகவே ஷீஆக்கள் இவ்வாறு சொல்கிறார்களா? என்ற சந்தேகம் எழலாம். நீங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இன்றளவும் இதை ஷீஆக்கள் பிரச்சாரம் செய்யவே செய்கிறார்கள். இதில் ஈடுபடுகிறார்கள், அதை ஊக்குவிக்கிறார்கள். ஆனால் இலங்கை போன்ற ஷீஆக்களின் பிரச்சாரம் எடுபடாத நாடுகளில் இதை நடைமுறைப்படுத்துவதற்கும், பேசுவதற்கும் அஞ்சுகிறார்கள்.

(அல்லாஹ் எம்மனைவரையும் இந்த யூத சிந்தனையிலிருந்து பாதுகாப்பானாக.)

அல் – ஹுமுஸ்.

அல்-ஹுமுஸ் எனும் அரபுப் பதத்திற்கு ஐந்தில் ஒன்று என்று பொருளாகும். ஷீஆ மதத்தில் உள்ள ஒருவர் தனது பொருளாதாரத்தில் ஐந்தில் ஒன்றை தனது இமாமுக்கு கொடுத்துவிடவேண்டும் என்பது அவர்களின் முக்கியமான கொள்கைகளில் ஒன்றாகும். அதாவது ஒருவரிடம் ஒரு இலட்சம் ரூபாய் உள்ளது என்றால் அவர் அதில் இருபது ஆயிரம் ரூபாவினை இமாமுக்கு வழங்கிவிட வேண்டும். இது அவரின் கடமையாகும் இது ஸகாத் பங்கு அல்ல என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக ஷீஆக்களின் நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒரு அறிவிப்பில் "எங்களுக்கு ஹுமுஸை தருவது (ஷீஆக்களின்) கடமையாகும்" என்று ஷீஆ இமாம்களில் ஒருவர் சொல்வதாக உள்ளது (பார்க்க: வஸாயிலுஷ்ஷீஆ, மன் லா யஹ்லுருஹுல் பகீஹ்)

அதுபோல் இவ்வாறு வழங்குவது உங்கள் பொருளாதாரத்தில் அபிவிருத்தியை ஏற்படுத்தும் என்று "அல்இஸ்திப்ஸார்" எனும் நூலில் பதியப்பட்டுள்ளது.

அல்குர்ஆனில் இஸ்லாத்தின் எதிரிகளுடன் நடத்தும் போராட்டத்தில் எதிரிகளால் விட்டுச்செல்லப்படும் பொருட்களில் ஐந்தில் ஒன்றை அல்லாஹ்விற்கும் அவனது தூதருக்கும், சொந்தக்காரர்களுக்கும்,

அனாதைகளுக்கும், ஏழைகளுக்கும் வழிப்போக்கர்களுக்கும் வழங்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (அல்அன்பால் 41) எனவே, இங்கு ஐந்தில் ஒரு பகுதி என்பது ஐந்து சாராருக்கு வழங்கப்படுகின்றது என்பது தெளிவாகின்றது. இதற்கும் ஷீஆக்கள் சொல்லும் ஐந்தில் ஒன்று ஹுமுஸ் கோட்பாட்டிற்கும் எந்தவிதமான தொடர்புமில்லை. இஸ்லாத்தில் ஹுமுஸ் என்பதுபோராட்டத்தில் இஸ்லாத்தின் எதிரிகள் விட்டுச் செல்பவற்றிலிருந்து பெறப்படுவது, ஷீஆக்கள் சொல்வது அதுவல்ல. அதுபோன்று இஸ்லாம் சொல்லும் ஹுமுஸ் ஐந்து சாராருக்கு பகிரப்படவேண்டும்ஆனால் ஷீஆக்களின் ஹுமுஸ் ஒரு சாராருக்கே வழங்கப்படுதல் வேண்டும்.

உருவாகுவதற்கான காரணம்: ஷீஆக்களிடம் இப்படி மற்றவர்களின சொத்தை சூறையாடும் ஒரு கொள்கை உருவாகுவதற்கு என்ன காரணம் என்று அறிஞர்கள் குறிப்பிடும்போது. ஷீஆக்களைப் பொறுத்தவரை முற்றிலும் இஸ்லாத்திற்கு முரணான பல அடிப்படைகளைக் கொண்டுள்ளனர். இதற்கான பிரச்சாரகர்களை உருவாக்குவதும், அவர்களை தக்கவைப்பதும் மிகவும் கஸ்டமான ஒரு விடயம், அதுபோல் பிரச்சாரக் களத்திற்குத் தேவையான நிதி வளத்தைப் பெறுவதிலும் பல சிரமங்கள் எதிர்நோக்கப்பட்டன. இத்தேவையை நிவர்த்திக்கும் வகையில், மற்றவர்களின் பொருளாதாரத்தை சூறையாடுவதில் கைதேர்ந்த யூத குழுவினரால் நன்கு திட்டமிட்ட அடிப்படையில் இக்கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது. இங்கு ஒரு சமுதாயத்தை எந்த செலவுமில்லாமல் அவர்களின் பொருளாதாரத்தைக் கொண்டே சிதைக்கும் கைங்கரியத்தை யூதர்கள் உருவாக்கியுள்ளனர், இவ்வாறானதொரு கொள்கை இருந்தால் மாணவர்களுக்கும், அறிஞர்களுக்கும் பொருளாதாரத்தை தேடிக்கொள்வது இலகுவாகிவிடும். இதனாலேயே இக்கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக ஷீஆ அறிஞர்கள் மிகப்பெரும் செல்வந்தர்களாக விளங்குவது உலகறிந்த விடயம். இதனால் இலகுவில் அக்கொள்கையிலிருந்து அவர்கள் விடுபடுவதும் தவிர்க்கப்படுகிறது.

உருவாக்கப்பட்ட முறை: ஆரம்பத்தில் ஐந்தில் ஒன்று என்பது நபி (ஸல்) அவர்களின் குடும்பத்தினரான அஹ்லுல் பைத் இமாம்களுக்கே வழங்கப்பட வேண்டும் என்பது அவர்களின் கொள்கையாக இருந்தது.

ஆனால், ஷீஆக்களின் 11வது இமாமான ஹஸன் அல் அஸ்கரி அவர்கள் இளம் வயதில் பிள்ளை எதுவும் இல்லாமல் மரணித்துவிட்டார்கள், இந்த சந்தர்ப்பத்திலே யாரிடம் ஹுமுஸை வழங்குவது என்ற பிரச்சினையும் உருவாகிறது. இதனால் ஷீஆக்கள் புதியதொரு பொய்யை இட்டுக்கட்டிக்கொண்டனர். ஹஸன் அல் அஸ்கரி அவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்ததாகவும் அது இன்று வரை உயிருடன் இருக்கிறது என்றும் அவருக்கே நமது ஹுமுஸை கொடுக்க வேண்டும் என்றும் கூறினர்.

ஆனால், இது அவர்களுக்கு மத்தியில் பெரும் பிரச்சினையாக மாறியது. ஏனெனில், மக்களிடம் இந்த பன்னிரெண்டாவது இமாமை சந்தித்ததாகவும் அவர் அவருக்கு சேரவேண்டிய பங்கை தன்னூடாக அனுப்பிவைக்குமாறு சொன்னதாகவும், எனவே, எங்களிடம் அந்தப் பங்கைத் தாருங்கள் இமாமிடம் நாங்கள் ஒப்படைத்துவிடுகிறோம் என்று பலரும் பிரச்சாரம் செய்தனர். ஷீஆக்களின் பொருளாதாரத்தைச் சூறையாடும் முயற்சியில் இறங்கினர். இவ்வாறு சுமார் 20பேர் ஈடுபட்டனர்.

இது ஷீஆக்களுக்குள் பெரும் பிரச்சினையைத் தோற்றுவித்தது. ஏனெனில் குறித்த நபர்கள் இமாமை சந்திக்கவில்லை என்று பொய்ப்பிக்கவும் முடியாது. அவர்கள் செய்யும் வேலையை அங்கீகரிக்கவும் முடியாது. இதனால் இந்த நபர்களிடம் பொருளாதாரத்தை ஒப்படைக்காமல் இமாமுக்குரிய பங்கை பொருளாதாரத்திலிருந்து எடுத்து பூமியில் புதைத்துவிட வேண்டும் என்றும் இமாமவர்கள் வந்து அதை எடுத்துச் செல்வார் என்றும் கூறினர்.

பின்பு, இவ்வாறு புதைப்பதற்கு தடைவிதிக்கப்பட்டது. குறித்த தொகை அந்தக் காலத்தில் வாழும் அறிஞரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் அவர் அதைப் பாதுகாத்து இமாமுக்கு அனுப்ப வேண்டும் என்றும் ஒரு கொள்கையை உருவாக்கினர்.

பின்பு, அறிஞர்களிடம் கட்டாயம் அந்தத் தொகை வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் அதை நபியவர்களின் குடும்பத்தில் காணப்படும் ஏழைகளுக்கு பகிர்ந்தளிக்க வேண்டும் என்றொரு கொள்கையை உருவாக்கினர்.

பின்பு, இல்லை அறிஞர்களிடம் அது ஒப்படைக்கப்படவேண்டும் என்றும் அதிலிருந்து அறிஞர்கள் ஒரு தொகையை தங்களுக்கு எடுத்துக்கொண்டு மீதமானவற்றை தான் விரும்பும் விதத்தில் பகிர்ந்தளிக்கலாம் என்றொரு கொள்கையையும் உருவாக்கினர்.

இவ்வாறு காலத்திற்கு காலம் இக்கொள்கைகள் மாறுபட்டுச் சென்றதனால் ஷீஆக்களிடம் ஒரு பிடிப்பற்ற தன்மை உருவாகியது. இத்தொகையை வழங்கத் தேவையில்லை என்றொரு சிந்தனை உருவானது. இதனால் இதை வலியுறுத்தும் விதத்தில் அஹ்லுல் பைத்துகளின் பெயரிலும் நபியவர்களின் பெயரிலும் பல அறிவிப்புக்களை இட்டுக்கட்டியதுடன் அவர்களிடமிருந்த மதச் சபைகளினூடாகவும் அதை கட்டாயப்படுத்தினர். இது தொடர்பாக அவர்களின் நூலில் பதியப்பட்டுள்ள ஒரு அறிவிப்பில்.

“யார் இந்த ஹுமுஸில் ஒரு திர்ஹம் அல்லது அதைவிடக் குறைந்த அளவேனும் கொடுக்காமல் தடுத்தானோ அவன் அஹ்லுல் பைத்தினருக்கு அநியாயம் செய்பவர்களில் சேர்வான், அவர்களது உரிமைகளைப் பறித்தவர்கள் பட்டியலில் சேர்ந்து கொள்வான், யார் இவ்வாறு செய்யலாம் என்று சொல்கிறாரோ அவர் காபிராவார்.” (அல்உர்வதுல் புத்கா)

இந்த ஹுமுஸை அறிஞர்களிடம் ஒப்படைக்கவேண்டும் என்பதே ஷீஆக்களிடம் இப்போது நடைமுறையிலுள்ள விடயம். இதனால்

ஷீஆ அறிஞர்களிடம் இதைப் பெற்றுக்கொள்வதில் பலத்த போட்டி உள்ளது. ஒவ்வொருவரும், பெரும் ஒரு தொகையைப் பெற்றுக்கொள்வதற்கு முயற்சிகளை செய்கின்றனர். தங்களிடம் இந்த ஹுமுஸை வழங்குபவர்களுக்கு கூடுதலான கழிவுகளை சிலர் ஏற்படுத்துகின்றனர். உதாரணமாக: ஒருவர், என்னிடம் ஹுமுஸை வழங்குபவர்களுக்கு 20வீத கழிவு உள்ளது என்று அறிவிக்க, மற்றவர் 50வீதக் கழிவு என்று அறிவிக்கிறார். அதாவது தன்னிடம் ஹுமுஸை ஒப்படைக்கும் ஒருவருக்கு 50வீதத்தை நான் மீளவும் அவரிடம் ஒப்படைத்துவிடுவேன் என்று அறிவிக்கிறார். 100000ரூபாவை ஒருவர் ஹுமுஸாக வழங்கினால் 50000 ரூபா அவருக்கே நன்கொடையாக வழங்கப்படும் என்றெல்லாம் அறிவிக்கின்றனர். அல்லாஹ் போதுமானவன்.

அநியாயமாக ஒருவரின் பொருளாதாரத்தை உண்பதை தங்கள் வழமையாக ஆக்கிக் கொண்ட ஷீஆ அறிஞர்கள் அதை மத விடயமாகவும் மக்களிடம் சித்தரித்துள்ளனர். அல்லாஹ் எம்மைப் பாதுகாப்பானாக.

“அல்லாஹ் அல்லாதவரிடம் இருந்து அது வந்திருந்தால் நிறைய முரண்பாடுகளை அதிலே அவர்கள் பெற்றுக்கொண்டிருப்பார்கள்.” (4:82)

அல்லாஹ் அல்குர்ஆனிலே: “நீங்கள் உங்களுக்கு மத்தியில் அநியாயமான முறையில் மற்றவர்களின் பொருளாதாரத்தை உண்ணாதீர்கள்.” (2:188)

“அநாதைகளின் சொத்துக்களை அநியாயமான முறையில் உண்பவர்கள் தங்கள் வயிற்றில் நெருப்பையே நிரப்புகிறார்கள், மேலும் சுட்டெரிக்கும் நரகத்தை சென்றடைவார்கள்.” (4: 10)

“நிச்சயமாக அல்லாஹ் தூய்மையானவன் அவன் தூய்மையானத்தத தவிர வேறு எதையும் ஏற்றுக்கொள்வதில்லை.” (முஸ்லிம்)

ஏனைய முஸ்லிம்கள் பற்றிய நம்பிக்கை.

ஷீஆக்கள் தவிர்ந்த ஏனைய முஸ்லிம்கள் என்று சொல்லும்போது குறிப்பாக அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத்தினரையே இங்கு நாம் குறிப்பிடுகின்றோம். ஷீஆக்கள் இஸ்லாத்திற்கு முரணான ஒரு கொள்கையை விதைப்பதின் காரணமாக தங்களை ஏற்றுக் கொள்ளாதவர்களின் அடிப்படைகளை தகர்ப்பதற்கும் தங்களை ஏற்றுக்கொண்டவர்களை தக்கவைத்துக்கொள்வதற்கும் முயற்சிக்கின்றனர். அந்த அடிப்படையில்தான் ஏனைய முஸ்லிம்்கள பற்றிய அவர்களது கருத்துக்களும் அறிஞர்களால் நோக்கப்படுகின்றது. ஷீஆக்களுக்கும் ஏனையவர்களுக்கும் இடையில் ஒரு நிரந்தர பகையை உருவாக்குவதினால்தான் மற்றவர்களின் சிந்தனைகளை ஷீஆக்கள் ஏற்றுக்கொள்வது கடினமாகும் என்பதனால் சிறிய விடயங்கள் தொடக்கம் பெரிய விடயங்கள் வரை எல்லாவற்றிலும் பிரிவினையைப் பாதுகாத்து வருகின்றனர்.

ஷீஆக்கள் இஸ்லாமிய வரலாற்றில் முஸ்லிம்களுக்கு எதிராக யூத, கிறிஸ்தவர்களுடன் இணைந்துகொண்டு முஸ்லிம்களைக் கொலை செய்ததற்கும் அவர்களின் மதமே காரணமாக இருக்கிறது. எனவே, இந்தப் பின்னணியில் ஏனைய முஸ்லிம்களைப் பற்றி ஷீஆக்களினால் சொல்லப்படும் கருத்துக்களை அவதானிப்பது முக்கியமானதாகும்.

01. அவர்கள் காபிர்கள்:

ஸஹாபாக்களையே காபிர்கள் இணைவைப்பாளர்கள் என்று சொல்லும் ஷீஆக்கள் ஏனைய முஸ்லிம்களை நல்லவர்கள் என்றா சொல்லப்போகிறார்கள்.?
ஷீஆக்களால் ஸதூக் எனும் சிறப்புப்பெயரால் அழைக்கப்படும் முஹம்மத் பின் அலி அல்கும்மி என்ற ஷீஆக்களின் முக்கிய அறிஞர் குறிப்பிடுகிறார்:
“அலி (ரழி) அவர்கள் தொடக்கம் ஏனைய எமது இமாம்களை மறுத்தவர்கள் விடயத்தில் எமது நம்பிக்கை: எல்லா நபிமார்களையும மறுத்தவன் போன்றாவான். அமீருல் மு.ஃ.மினீன் அலி அவர்களை ஏற்றுக்கொண்டு மற்ற இமாம்களில் ஒருவரை நிராகரித்தவர் எல்லா நபிமார்களையும் ஏற்றுக்கொண்டு முஹம்மது நபி (ஸல்) அவர்களை நிராகரித்தவர் போன்றாவார்.” (அல்இ.ஃ.திகாதாத்)

ஷீஆக்களின் முக்கிய அறிஞர்களில் ஒருவரான முஹ்ஸின் அத்தபதபாஇ என்பவர் தனது ‘முஸ்தம்ஸிகுல் உர்வா அல்வுத்கா’ என்ற நூலில் ஷீஆக்களுக்கு முரண்படும் அனைவரும் காபிர்கள் என்பதில் ஷீஆ அறிஞர்களுக்கு மத்தியில் எந்தக் கருத்து முரண்பாடும் இல்லை என்று குறிப்பிடுகின்றார்.
அப்துல்லாஹ் அஷ்ஷிப்ர் எனும் ஷீஆ அறிஞர் சொல்கிறார்: “ஷீஆக்களுக்கு அநியாயம் செய்யாத அவர்களுடன் பகைத்துக் கொள்ளாத ஆனால் ஷீஆக்களுக்கு முரண்படும் ஏனையவர்களைப பொறுத்தவரைக்கும் அவர்கள் உலகத்திலும் மறுமையிலும் காபிர்களே. அவர்கள் மறுமையில் நரகத்தில் நிரந்தரமாக இருப்பார்கள் என்பதுதான் பிரபல்யமானதும் அதிகமான ஷீஆ அறிஞர்களின் கருத்துமாகும்.” (ஹக்குல் யகீன்)

ஷீஆக்களின் மற்றும் சில அறிஞர்கள்: அஹ்லுஸ்ஸுன்னாக்கள் விடயத்தில் வெளிப்படையில் நாம் இஸ்லாமிய சட்டங்களையே பேண வேண்டும். ஆனால் அவர்கள் மறுமையில் நரகத்தில்

நிரந்தரமாக இருப்பார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (பார்க்க: பிஹாருல் அன்வார்)

02. அஹ்லுல் பைத்தின் எதிரிகள்:

ஷீஆக்களின் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளாத ஏனைய முஸ்லிம்களை அதாவது அஹ்லுஸ்ஸுன்னாக்களை அஹ்லுல் பைத்தின் எதிரிகளாக சித்தரிக்கின்றனர்.

ஷீஆக்களின் அறிஞர்களில் ஒருவரான ஹுஸைன் பின் அஷ்ஷெய்க் முஹம்மது அல் பஹ்ரானி அவர்கள் குறிப்பிடுகிறார்கள்:
"அஹ்லுல் பைத்தினருக்கு அநியாயம் செய்வோர் அவர்களின் எதிரிகள் என்று வந்திருப்பது அஹ்லுஸ்ஸுன்னாக்களைப் பற்றித்தான் என்பதில் எந்த கருத்து முரண்பாடும் இல்லை." (அல்மஹாஸின் அந்நப்ஸானிய்யா)

அஹ்லுஸ்ஸுன்னா என்றாலே அலிபின் அபீதாலிப் அவர்களைக் கோபிப்பதும் அவருக்கு இறைவனின் சாபம் வேண்டிப்பிரார்த்திப்பதும் அவரிலிருந்து நீங்குவதுமாகும் என்று தற்கால ஷீஆ அறிஞர்களில் ஒருவரான அத்தீஜானி என்பவர் தனது "அஷ்ஷீஅது ஹும் அஹ்லுஸ்ஸுன்னா" என்ற நூலிலே குறிப்பிடுகின்றார்.

03. நஜீஸானவர்கள்:

ஷீஆக்களின் கருத்தின்படி அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத்தினர் நாயையும் விட நஜீஸானவர்களாகும். இது தொடர்பாக அவர்களது நூல்களிலே ஏராளமான செய்திகள் காணப்படுகின்றன.
ஷீஆக்களின் முக்கிய அறிஞர்களில் ஒருவரான நிஃமதுல்லாஹில் ஜஸாயிரி என்பவர் குறிப்பிடும்போது: "அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத்தினர் நஜீஸானவர்களாகும் மேலும், அவர்கள் யூதர்கள் கிறிஸ்தவர்கள், நெருப்பு வணங்கிகளைவிடவும் கெட்டவர்கள்,

நிச்சயமாக அவர்கள் நஜீஸானவர்கள் என்பது ஷீஆக்களின் உலமாக்கள் அனைவரினதும் ஏகோபித்த முடிவாகும்." (அல்அன்வார் அந்நு'.மானிய்யா)

மேலும்: யூசுபுல் பஹ்ரானி அவர்களும் தனது 'அல்ஹதாயிக் அந்நாழிரா' என்ற நூலில் இதே கருத்தைச் சொல்லியிருக்கிறார்.

04. அவர்களுக்காக தொழுகை நடத்தவோ அவர்கள் அறுத்தவற்றை உண்ணவோ முடியாது:

இந்த நூற்றாண்டின் பெரும் சீர்திருத்தவாதியாக ஷீஆக்களால் போற்றப்படும் கொமைனி அவர்கள் குறிப்பிடுகிறார்கள்: "மதம் மாறியவர் தொடக்கம் எவ்வகையான காபிராக இருப்பினும் அவர் மீது தொழுகை நடத்தமுடியாது. மேலும் அஹ்லுஸ்ஸுன்னாக்கள் போன்று யார் விடயத்திலெல்லாம் காபிர் என்று தீர்ப்பு வழங்கப் பட்டுள்ளதோ அவர்களுக்காகவும் தொழுகை நடத்த முடியாது." மேலும் அதே நூலில் சொல்கிறார்: "அஹ்லுஸ்ஸுன்னாக்கள் இஸ்லாமியர்களாக தங்களைக் காட்டிக்கொண்டபோதிலும் அவர்கள் அறுத்தவற்றை உண்ணுவது ஹராமாகும். ஆனால், இஸ்லாத்தில் உள்ள ஏனைய எந்தக் குழு அறுத்தவற்றையும் சாப்பிட முடியும்." (தஹ்ரீருல் வஸீலா)

05. தப்பான வழிக் குழந்தைகள்:

ஷீஆக்களின் பிரதான நூலான காபியில் அதன் ஆசிரியர் குலைனி அவர்கள் குறிப்பிடும் ஒரு அறிவிப்பில் பின்வருமாறு பதிவு செய்யப்பட்டிருக்கின்றது:
"அல்லாஹ்வின் மீது ஆணையாக நிச்சயமாக மனிதர்களில் எங்களது ஷீஆக்களைத் தவிர மற்ற எல்லோரும் தப்பான வழியில் பிறந்த குழந்தைகள்தான்."

"எந்தவொரு குழந்தை பிறக்கும்போதும் அந்த இடத்தில் ஒரு இப்லீஸ் இருக்கிறான். அந்தக்குழந்தை எங்களது ஷீஆ என்பதை

அவன் அறிந்தால் அந்தக்குழந்தையை அந்த ஷைத்தானை விட்டும் தடுக்கிறான், அந்தக்குழந்தை எங்களது ஷீஆவாக இல்லையென்றால் அந்த ஷைத்தான் அந்தக் குழந்தையின் பித்தட்டிலே தன் விரலை நுழைவிக்கிறான் அந்தக்குழந்தை மடையனாக ஆகிவிடுகிறது. (பெண் குழந்தையாக இருப்பின்) அதன் மர்ம உறுப்பிலே தன் விரலை நுழைவிக்கிறான். அவள் கெட்டவளாக ஆகிவிடுகிறாள்." (தப்ஸீருல் அய்யாஸி, தப்ஸீருல் புர்ஹான்)

06. குரங்குகள், பன்றிகள்:

அஹ்லுஸ்ஸுன்னாக்கள் குரங்குகளாகவும் பன்றிகளாகவும் இருக்கிறார்கள். (பார்க்க: பிஹாருல் அன்வார்)

07. அவர்களைக் கொலை செய்வது கடமை:

வரலாற்று நெடுகிலும் சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் முஸ்லிம்களைக் கொலை செய்வதையே தங்களின் கொள்கையாகக் கொண்டிருந்த ஷீஆக்கள் இது தொடர்பான அறிவிப்புக்களையும் தங்களது நூல்களிலே எழுதி வைத்திருக்கின்றனர்.

ஷீஆக்களின் இமாம்களில் ஒருவரிடத்தில் கேட்கப்பட்டதாக வரும் ஒரு அறிவிப்பில்: "அஹ்லுஸ்ஸுன்னாக்களைக் கொலை செய்வதைப் பற்றி என்ன சொல்கிறீர்கள் என்று சொன்னபோது, அவனைக் கொலை செய்ய வேண்டும். என்றாலும் உன் விடயத்தில நான் பயப்படுகிறேன், மற்றவர்கள் காணாத வகையில் அவன் மீது ஒரு சுவரைத் தள்ளி அல்லது தண்ணீரில் அவனை மூழ்கடித்துக் கொலை செய்ய முடிந்தால் அவ்வாறு செய்துகொள்." (பிஹாருல் அன்வார், இலலுஷ்ஷராயி.:.)

இப்னுல் அல்கமி தான் கொலைசெய்தவர்கள் பற்றி ஷீஆக்களின் இமாம்களில் ஒருவரிடத்தில் கேட்டபோது நீ ஆரம்பத்தில் இதற்கு

அனுமதி எடுத்துச் செய்திருந்தால் எந்தக் குற்றமும் உனக்கு வந்திருக்காது. இப்போதும் பரவாயில்லை, நீ கொலை செய்த ஒவ்வொருவருக்கும் பகரமாக ஓர் ஆட்டுக்குட்டியைக் கொடுத்துவிடு. அவர்களைவிடவும் ஆடு சிறந்தது என்றார். இதை ஏற்கனவே நாம் சேவைகளும் சாதனைகளும் என்ற தலைப்பில் கூறியிருக்கிறோம்.

08. அவர்களின் சொத்துக்களைத் திருடுவது கடமையாகும்:

''அஹ்லுஸ் ஸுன்னாக்களின் சொத்துக்களை எப்படி வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளுங்கள். எங்களுக்கு அதில் ஐந்தில் ஒன்றைக் கொடுத்துவிடுங்கள் என்று ஷீஆக்களின் இமாம்களில் ஒருவர் குறிப்பிட்டுள்ளதாக 'தஹ்தீபுல் அஹ்காம்' என்ற நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

“அஹ்லுஸ்ஸுன்னாவின் சொத்துக்களும் அவர்கள் சொந்தமாக்கிக் கொண்டிருக்கின்ற ஒவ்வொன்றும் ஹலாலானதாகும்.'' (வஸாயிலுஷ்ஷீஆ)

09. ஜிஹாத் செய்வது தடை:

ஏனைய முஸ்லிம்களைப்பற்றி இவ்வளவு மோசமான மற்றும் எதிரான கருத்துக்களைக் கொண்டுள்ள ஷீஆக்கள், ஏன் ஏனைய முஸ்லிம்களை எதிர்த்து பகிரங்கமாக போராடாமல் இருக்கிறார்க்ள என்ற கேள்வி உங்களுக்குள் எழலாம். நிச்சயமாக இவ்வாறு ஷீஆக்கள் அறிவிப்பார்கள் என்றால், அவர்கள் யார் என்பது மற்றவர்களுக்கு விளங்கிவிடும். அவர்களது சிந்தனையின் பரவலாக்கத்திலும் தொய்வு ஏற்படும். இதனாலேயே பின்னால் இருந்து குத்தும் வேலையை வரலாற்று நெடுகிலும் தங்களின் ஆயுதமாகக் கொண்டுள்ளனர்.

ஷீஆக்களின் மதத்தின் படி அவர்களின் பன்னிரண்டாவது இமாம் மஹ்தி வரும்வரை ஜிஹாத் செய்வது ஹராமாகும். அதுவரைக்கும் மற்றவர்களை எப்படி பழிதீர்ப்பது என்றால் தகிய்யாவை (நடிப்பை) முழுமையாகப் பயன்படுத்தி மற்றவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பது அவர்களின் பிரதான நூல்கள் சொல்லும் வேதமாகும்.

“இமாம் இல்லாத போராட்டம் என்பது: செத்தவற்றைஉண்பதைப் போல, இரத்தத்தைப்போல, பன்றியின் மாமிசத்தைப்போல ஹராமானதாகும்.” (அல்காபி, வஸாயிலுஷ்ஷீஆ)

ஷீஆக்களின் கொமைனி சொல்கிறார்: ஆட்சிக்குரியவர், மேலும் இந்தக்காலத்தின் அரசர், அல்லாஹ் அவரின் வருகையை துரிதப்படுத்துவானாக, அவர் மறைந்திருக்கும்போது, அவரின் பிரதிநிதிகளான தீர்ப்புச் சொல்வதற்கும், நீதி செலுத்துவதற்குமான நிபந்தனைகளைப் பெற்றவர்கள், அரசியல் விவகாரங்களில் அவருடைய இடத்திலிருந்து அதைப் பார்த்துக்கொள்வார்கள், இமாம் வந்ததும் அவர் ஜிஹாதை ஆரம்பிப்பார். (தஹ்ரீருல் வஸீலா)

அப்படியென்றால் வரலாற்று நெடுகிலும் முஸ்லிம்களின் எதிரிகளுடன் போராடி மரணிப்பவர்களின் நிலை என்ன? என்ற கேள்வி ஷீஆவாக இருக்கும் ஒவ்வொருவருக்கும் ஏற்படுவதற்கு இடமுள்ளது, அதற்கு ஷீஆக்களின் இமாம்களே பதில் சொல்கிறார்களாம்.

“நாசமாப்போவார்கள் அவசரப்படுகிறார்கள், இந்த உலகத்திலும் கொலை செய்யப்படுகிறார்கள், மறுமையிலும் வேதனையை அனுபவிக்கிறார்கள், அல்லாஹ் மீது ஆணையாக ஷீஆக்களைத் தவிர வேறு எவரும் ஷஹீதாக முடியாது, ஷீஆ அவனது படுக்கையில் மரணித்தாலும் அவன் ஷஹீதுதான்.” (தஹ்தீபுல் அஹ்காம்)

ஸுப்ஹானல்லாஹ், நிச்சயமாக ஷீஆக்களால் இஸ்லாத்தின் எதிரிகளுக்கே அதிக லாபம் என்பதற்கு இதுவும் ஒரு சான்று, முஸ்லிம்களால் இஸ்லாத்தின் எதிரிகள் அனுபவித்த இன்னல்களை குறைப்பதற்காகவே இந்த சிந்தனை அவர்களால் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை புரிந்துகொள்ள முடிகின்றது.

10. அவர்களின் பள்ளிவாயில்களை உடைப்பது ஷீஆக்களின் கடமை:

இன்று எமது நாட்டிலே பொதுபலசேனா போன்ற சில சிங்கள தீவிரவாத அமைப்புக்களின் செயற்பாடுகளினால், முஸ்லிம்களுக்கு அச்சுறுத்தல் இருப்பதையும் முஸ்லிம்களின் பள்ளிகள் தாக்கப்படுவதையும் பெரும் அபாயகரமான சூழ்நிலையாக நாம் உணருகிறோம். இதில் மறுப்பதற்கு ஏதுமில்லை. ஆனால், நமது பள்ளிகளைத் தகர்ப்பதற்காக நமக்குள்ளால் பதுங்கும் ஓர் ஓநாயை நாம் அறியாதவர்களாக இருக்கின்றோம்.

ஷீஆக்கள் எந்த நாட்டில் தலைதூக்குகிறார்களோ அந்த நாடுகளிலே அஹ்லுஸ்ஸுன்னாக்களின் பள்ளிவாயில்கள் தாக்கப்படுவது சாதாரணமான நிகழ்வாகும். ஈரானிலே அஹ்லுஸ்ஸுன்னாக்களின் பள்ளிவாயில்கள் தகர்க்கப்படுவது அன்றாட நிகழ்வாகும். உலகத்தில் சிறுபான்மையினராக யூதர்கள் வாழும் நாடுகளிலே யூதர்களின் நிலை பற்றி ஆய்வு செய்வதற்காக சென்ற யூதர்களின் பத்திரிகைக் குழுவொன்று ஈரானுக்கும் விஜயம் செய்தது. அதிலே சென்ற ஆமூஸ் அவ்ஸ் எனும் யூத பத்திரிகையாளரின் அறிக்கையில் அவர் சொல்கிறார்: “இங்குவாழும் அஹ்லுஸ்ஸுன்னத் வல்ஜமாஅத்தைச் சேர்ந்தவர்களைவிடவும் யூதர்களின் நிலை மிகவும் நன்றாகவுள்ளது, ஈரானின் தலைநகரான தெஹ்ரானில் மாத்திரம் யூதர்களுக்கான 12வணக்கஸ்தலங்களும், ஏனைய நகரங்களில் 85க்கும் மேற்பட்ட வணக்கஸ்தலங்களும் காணப்படுகின்றன, யூத முறைப்படி அறுக்கப்பட்ட இறைச்சிக்

கென்று தலைநகரத்திலே 10க்கும் மேற்பட்ட இடங்கள் உள்ளன. ஆனால் அங்கு அஹ்லுஸ்ஸுன்னாக்களின் நிலை மோசமாகவுள்ளது. தெஹ்ரானில் உள்ள பழமைவாய்ந்த ஒரு பள்ளியிலே சிறுவர்கள் காற்பந்து விளையாடுவதைக் கண்டேன், ஆச்சரியத்தோடு அது பற்றி விசாரித்தேன். அப்போது, அது அஹ்லுஸ்ஸுன்னாக்களின் பள்ளியென்றும் அங்கு ஜும்ஆத் தொழுகை, ஜமாஅத்துத் தொழுகை என்பவற்றுக்கு தடைவிதிக்கப்பட்டிருக்கிறது சிலர் தனித்தனியாக இங்கு வந்து தொழுதுவிட்டு செல்வார்கள் என்று எனக்கு சொல்லப்பட்டது.

கொமைனி ஈரானைக் கைப்பற்றியபோதும் முஸ்லிம்களின் வணக்கஸ்தலங்கள் அழிக்கப்பட்டன.

ஈராக்கை அமெரிக்காவின் உதவியுடன் ஷீஆக்கள் கைப்பற்றியபோது அஹ்லுஸ்ஸுன்னாக்களின் 40க்கும் மேற்பட்ட பள்ளிகள் ஒரே நாளில் அழிக்கப்பட்டன. ஈராக்கில் உள்ள அஹ்லுஸ்ஸுன்னாக்களின் பழமைவாய்ந்த பள்ளிகள் தற்போது ஷீஆ அறிஞர்களின் அருங்காட்சியகங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன.

நிச்சயமாக இவைகள் அனைத்தும் ஷீஆக்களின் மதம் அவர்களுக்குப் போதித்த பாடமாகும். அஹ்லுஸ்ஸுன்னாக்களின் பள்ளிகளை அவர்களின் போராட்டத் தளங்களாக ஷீஆ அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

தற்கால ஷீஆ அறிஞர்களின் ஒலி ஒளி நாடாக்களைப் பார்க்கும் எவரும் இவ்வுண்மையைத் தெரிந்துகொள்வர்.
அல்லாஹ் இந்த யூதக் கூட்டத்திலிருந்து எம்மனைவரையும் பாதுகாப்பானாக.

11. அஹ்லுஸ்ஸுன்னாக்களுக்கு முரண்படுவது கடமை:

ஷீஆக்கள் எப்போதும் தனியான, எல்லோருக்கும் முரண்படுகின்ற கொள்கைகளைக் கொண்டிருக்கவேண்டும் என்பது ஷீஆ

அறிஞர்களின் முடிவாகும். அதற்கேற்ற விதத்தில் தங்களது போதனைகளை அவர்கள் அமைத்திருக்கிறார்கள்.

ஷீஆ அறிஞர்களில் ஒருவரிடம் அவரின் மாணவர்களில் ஒருவர் கேட்கிறார்: “எனக்கு ஒரு காரியம் நடக்கிறது, அதன் சட்டம் என்ன என்பதை கட்டாயம் நான் அறிந்தாகவேண்டும். ஆனால், நான் வசிக்கும் ஊரில் அந்த விடயம் பற்றித் தெரிந்து கொள்வதற்கு ஷீஆ அறிஞர்கள் எவரும் இல்லை இந்த நேரத்தில் நான் என்ன செய்வது?”
அதற்கு அந்த அறிஞர் உலக மகா புத்திசாலித்தனமான ஒரு பதிலைச் சொல்கிறார்:
“அந்த நாட்டில் உள்ள அறிஞரிடம் அது பற்றி நீ கேள். உனக்கு அவர் சொல்லும் பதிலுக்கு முரணானதை நீ எடுத்துக்கொள். ஏனெனில் அதற்கு முரண்படுவதில்தான் சத்தியம் இருக்கிறது.” (தஹ்தீபுல் அஹ்காம், இலலுஷ்ஷராயி.ஃ.)

அஹ்லுஸ்ஸுன்னாக்களுக்கும் ஷீஆக்களுக்கும் இடையில் உருவாக்கப்பட்டிருக்கும் பகையையும் முரண்பாட்டையுநன்றாக வளர்க்கவேண்டும். அதன் மூலம் எமது எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற வேண்டும் என்ற யூதர்களின் திட்டம் ஷீஆக்களால் நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பது இப்போது எமக்கு தெளிவாகப் புரியும்.

இரண்டு செய்திகள் முரண்படும்போது எப்படி உண்மையைத் தெரிந்துகொள்வது எனும் கேள்விக்கு அற்புதமான ஒரு பதிலை ஷீஆ அறிஞர் சொல்கிறார். உலகத்தில் யாரும் அதைச் சொல்லவில்லை ஷீஆக்களைப் போன்ற புத்திசாலிகளால்தான் இவற்றைச் சொல்லவும் இவ்வாறு சிந்திக்கவும் முடியும். என்ன அந்த பதில்:

அஹ்லுஸ்ஸுன்னாக்களிடம் என்ன முடிவு இதில் இருக்கிறது என்று பார்க்க வேண்டும். அவர்களிடம் என்ன முடிவு உள்ளதோ அதற்கு முரணான செய்தியை எடுத்துக்கொள்ள வேண்டும். (பார்க்க: இலலுஷ்ஷராயி.ஃ., வஸாயிலுஷ்ஷீஆ)

எதிர்பார்க்கப்படும் மஹ்தி (12வது இமாம்).

உலகில் வாழும் ஒவ்வொரு சமுதாயமும் ஏதோவொரு அடிப்படையில் ஒருவரை எதிர்பார்த்திருக்கின்றது. யூதர்கள் தஜ்ஜாலை எதிர்பார்த்திருக்கின்றனர், கிறிஸ்தவர்கள் ஈஸா (அலை) அவர்களை எதிர்பார்த்திருக்கின்றனர், முஸ்லிம்களும் எதிர்பார்த்திருக்கின்றனர்.

அதுபோலவே ஷீஆக்களும் மஹ்தியை எதிர்பார்த்திருக்கின்றனர். ஷீஆக்கள் பல குழுக்களாகக் காணப்பட்டாலும் அவர்கள் எல்லோரும் மஹ்தி விடயத்தில் நம்பிக்கை வைத்திருக்கின்றனர். ஆனால் யார் அந்த மஹ்தி என்பதில் அவர்களிடம் பலமான கருத்துமுரண்பாடுகள் நிலவுகின்றன.

ஆரம்பம்:

ஷீஆக்களுக்கு மத்தியில் எதிர்பார்க்கப்படும் மஹ்தி எனும் கொள்கையை முதலில் விதைத்தவன் அவர்களின் தந்தை இப்னு ஸப.்.. எனும் யூதனாவான். ஆனால் அவன் நபியவர்களே இந்த உலகுக்கு மீண்டுவருவார் என்று வாதிட்டு வந்தான், பின்பு அலி (ரழி) அவர்கள் மரணித்தபோது அவர் மரணிக்கவில்லை. மறைந்திருக்கின்றார் என்றும், அவர் இந்த உலகுக்கு வருவார் நீதத்தால் இந்த உலகை நிறப்புவார் என்றும் வாதிட்டான். (பிரகுஷ்ஷீஆ)

இதன்பின்பு ஒவ்வொரு காலகட்டத்தில் வந்த ஷீஆக்களின் இமாம்கள் மரணித்த பின்பும், ஷீஆக்களில் சிலர் அவர் மரணிக்கவில்லை என்றும் எதிர்காலத்தில் மீண்டும் வருவார் என்றும் அவரே மஹ்தி என்றும் வாதிட்டனர். இதன்போது பல பிரிவுகளாகப் பிரிவது இவர்களின் வழமையாக இருந்தது. இவர்கள் அனைவரும் தங்களுக்கு மத்தியில் உயிருடன் வாழ்ந்த ஒருவர் விடயத்தில் இவ்வாறு வாதிட்டனர்.

ஆனால் ஷீஆக்களின் ராபிழா எனும் குழுவைப் பொறுத்தவரை (தற்போது இருப்பவர்கள்) அவர்கள் கற்பனையான ஒரு மஹ்தியைப பற்றிப் பேசுகிறார்கள். அது தொடர்பாகவே விரிவாக நாம் இங்கே எழுதுகின்றோம்.

யார் இந்த மஹ்தி:

முஹம்மத் பின் ஹஸன் என்பது அவரது பெயர் என்றும் அவரது குன்யத் அபுல் காஸிம் என்றும் அவரது சிறப்புப் பெயர் அல்ஹுஜ்ஜா, அல்காயிம், அல் முன்தழர் என்றும் குறிப்பிடுகின்றனர். (பார்க்க: கஷ்புல் கும்மா பீ ம.்.ரிபதில் அஇம்மா)

அவரது தாய் யார் என்பதில் ஷீஆ அறிஞர்களிடம் பலத்த கருத்து முரண்பாடு காணப்படுகிறது. சிலர் ஹகீமா என்றும், நர்ஜிஸ், ஸூஸன், ஹம்த் என்றெல்லாம் குறிப்பிடுகின்றனர். (பார்க்க: கஷ்புல் கும்மா, அல்இர்ஷாத்)

அவர் எப்போது பிறந்தார் என்பதிலும் ஷீஆக்களிடம் கருத்து முரண்பாடு உள்ளது:
அவர் பிறை 08 ரபீஉல்அவ்வல் 266ல் பிறந்தார் என்று சிலரும்,
23 ரமழான் 258ல் பிறந்தார் என்று சிலரும்
15 ஷ.்.பான் 255ல் பிறந்தார் என்று சிலரும் குறிப்பிட, குலைனி அவர்கள் தன்னுடைய காபியில் 265ல் பிறந்ததாகக் குறிப்பிடுகின்றார். (பார்க்க: தலாயிலுல் அஇம்மா, கஷ்புல் ஹுஃம்மா, அல்காபி, அல்ஹைபா)

மஹ்தி அவர்களின் பெயரையும் அவர் பற்றிய விபரங்களையும் அவர்களது அறிஞர்களே குறிப்பிட்டுள்ளனர். ஆனால் அவர்களின் நூல்களில் வரும் மற்றும் சில அறிவிப்புக்களைப் பாருங்கள்.

“நீங்கள் அவரை (மஹ்தியை) காணமாட்டீர்கள், மேலும் அவரின் பெயரைக் குறிப்பிடுவதும் உங்களுக்கு தடுக்கப்பட்டதாகும்.” (அல்காபி, இலலுஷ்ஷெராயி.˙.)

“காபிரைத்தவிர அவரது (மஹ்தியின்) பெயரைச் சொல்லி வேறு எவரும் அழைக்கமாட்டார்” (அல்காபி, கமாலுத்தீன்)

மஹ்தியின் பிறப்பைப் பற்றிக் குறிப்பிடும் ஷீஆக்கள் ஈஸா (அலை) அவர்கள் பிறந்ததை விடவும் அற்புதமான ஒரு முறையைக் குறிப்பிடுகிறார்கள்.

ரோமானிய அரசரின் மகள் தூங்கும்போது ஒரு கனவு கண்டாள். அதில் நபியவர்கள் ஷீஆக்களின் பதினோராவது இமாம் ஹஸனை (அபூமுஹம்மத்) அவளுக்கு திருமணம் முடித்துத் தருவதாக கூறினார்கள். இதற்கு ஈஸா (அலை) அவர்களை சாட்சியாக்கினார்கள். அன்றிலிருந்து அவள் பலவீனமடைய ஆரம்பித்தாள். தான் திருமணம் செய்த அபூமுஹம்மதைக் காணாத ஏக்கத்தில் தவித்தாள். பின்பு ஒருநாள் அவளது கனவில் பாத்திமா (ரழி) தோன்றினார்களாம். ஏன் என்னை இன்னும் அபூமுஹம்மத் பார்க்க வரவில்லை என்று அந்தப் பெண் பாதிமாவிடம் கேட்டாளாம். அதற்கு பாத்திமா நீ இணைவைப்பவராக இருக்கிறாய். அதனால் அவர் உன்னைப் பார்க்க விரும்பவில்லை என்று கூற அப்பெண் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டாளாம். அதன் பின்பு பாத்திமா அவர்கள் இனி மிக விரைவில் நீ அபூ முஹம்மதை சந்திப்பாய் என்று சொல்லிவிட்டுச் சென்றாராம். அதற்குப்பிறகு ஒவ்வொரு இரவும் அபூமுஹம்மதை கனவில் சந்திப்பவராக இருந்தாராம். இதன் மூலமே எதிர்பார்க்கப்படும் மஹ்தியான முஹம்மத் பிறந்தாராம். (பார்க்க: கமாலுத்தீன்)

மற்றொரு அறிவிப்பின்படி ஹஸன் அவர்கள் இன்றிரவு மஹ்தி பிறப்பார் என்று கூறினாராம். ஆனால், அவரது தாய்க்கு இது பற்றிச் சொல்லப்பட்ட போது அப்படி எந்த அடையாளமும் அவரில் காணப்படவில்லையாம். மற்றும் அதற்கான வலியும் இருக்கவில்லையாம். ஆனால் சரியாக ஸுபஹ் நேரத்தில் ஹஸன் சொன்னதைப் போன்று மஹ்தி பிறந்தாராம். பிறந்ததும் ஸலாம் சொன்னாராம். பின்பு ஸுஜூதில் வீழ்ந்தாராம், பின்பு அஸ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹ். என்னுடைய பாட்டன் அல்லாஹ்வின் தூதர். எனது தந்தை மு.'.மீன்களின் தலைவர் என்று சொன்னாராம். மற்றவர்கள் வளர்வதைப்போன்றில்லாமல் மற்றவர்கள் ஒரு வருடத்தில் வளரும் அளவு ஒரு மாதத்தில் வளர்ந்ததாகவும், மற்றவர்கள் ஒரு மாதத்தில் வளரும் அளவு ஒரு வாரத்தில் வளர்ந்ததாகவும், மற்றவர்கள் ஒரு வாரத்தில் வளரும் அளவு ஒரு நாளில் வளர்ந்ததாகவும் அற்புதம் பாடுகின்றார்கள் ஷீஆக்கள்.

இது மாத்திரமா அவரின் பிறப்பில் உள்ள இன்னுமொரு அற்புதத்தைப் பாருங்கள்: எல்லோரும் பிறப்பதைப் போன்று அவர்பிறக்கவில்லை -யாம் மாறாக தாயின் வலது காலின் தொடையிலிருந்துபிறந்தாராம். இதைவிட இன்னுமொரு அற்புதம் என்ன தெரியுமா? மஹ்தி பிறந்தபோது அவரின் தந்தையிடம் கொடுத்தார்களாம். அவரின் தந்தை அவருக்கு ஸலாம் சொல்லி அவருடன் பேசினாராம். அப்போது மஹ்தியின் தலைக்கு மேல் பறவைகள் வட்டமிட்டதாம் அந்தப்பறவைகளிடம் மஹ்தியைக் கொண்டு சென்று வளர்க்குமாறு அவரின் தந்தை கொடுத்தனுப்பினாராம் அவைகளே அவரை வளர்த்தனவாம்.

இதற்கு மேலும் சொல்லவேண்டுமா? ஷீஆக்களின் மஹ்தி பிறந்தபோது அல்லாஹ் அவரை அழைத்து வருமாறு இரண்டு மலக்குகளை அனுப்பினானாம். அந்த இரண்டு மலக்குகளும் அவரை அல்லாஹ்வின் அர்ஷுக்கு கொண்டு சென்றனராம். அல்லாஹ் அவரை வரவேற்றானாம். (அஸ்த.'.பிருல்லாஹ்)

(பார்க்க: கமாலுத்தீன், பிஹாருல் அன்வார், இத்பாதுல் வஸிய்யா, தலாயிலுல் இமாமா, அல்மனாகிப்)

ஆயிரத்தி ஓர் இரவு கதை வாசிப்பதைப்போன்று இருக்கிறதா? நிச்சயமாக இவற்றைச் சொன்னவர்கள் முஸ்லிம்களாக இருக்கவே முடியாது, ஒரு முஸ்ரிக்கான பெண்ணுக்கு நபியவர்கள் திருமணம் முடித்துக்கொடுத்தார்களாம், பாத்திமா அவர்கள் சொன்னதன் பின்புதான் அவள் இஸ்லாத்திற்கு வந்தாளாம், கனவில் குடும்ப வாழ்க்கை நடத்தி பிள்ளை பிறக்கிறதாம். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

இன்னும் கேளுங்கள். இந்தக்கூட்டம் மனோ இச்சையை கடவுளாக்கிக் கொண்டதைப் பாருங்கள்.

இவ்வாறு பிறந்த மஹ்தி மற்றவர்களின் பார்வைக்குப் படாமல் இன்றுவரை உயிர் வாழ்ந்துகொண்டிருக்கிறார் என்றும் அவர் இன்னும் எவ்வளவு காலம் வேண்டுமானாலும் உயிர்வாழ்வார் என்றும் நம்புகின்றனர். தற்போது அவரது வயது 1176 என்று 2011ல் குவைத்தில் அச்சிட்டு எமது பிரதேச ஷீஆக்கள் விநியோகம் செய்துள்ள "உண்மை உண்மையாக ஷீஆக்கள் யார்? அவர்கள் சொல்வதென்ன?" என்ற நூலில் 16ம் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

நபியின் சமுதாயத்தில் வந்த ஒருவர் இவ்வளவு காலம் எப்படி உயிர் வாழ முடியும்? இது பகுத்தறிவுக்கு சாத்தியப்படுமா? என்று கேட்டுவிடாதீர்கள், இவ்வளவு காலம் எப்படி மற்றவர்களின் கண்ணில் படாமல் வாழ்கிறார். அவருக்குத் தேவையான உணவுகளெல்லாம் எப்படிக்கிடைக்கிறது? மன்னித்துவிடுங்கள் இருப்பவரைப் பற்றித்தானே இப்படியெல்லாம் கேட்கவேண்டும்.

சரி இவ்வளவு காலம் ஏன் அவர் மறைந்திருக்கிறார் என்று ஷீஆக்களிடம் கேட்டால் அதிலும் நிறைய கருத்து முரண்பாடுகள் அவர்களிடம் காணப்படுகின்றது.

சிலர், இவ்வாறு மறைந்திருப்பதற்கு கண்டிப்பாக ஒரு காரணம் இருக்கும் என்று சொல்கின்றனர்.

இன்னும் சில அறிவிப்புக்களில் இமாம் மறைந்திருப்பது மனிதர்களுக்கு அன்பு செலுத்துவதாகவே உள்ளது. இமாம் இல்லாமல் இந்தப்பூமி இருக்க முடியாது. எனவே காரணம் பற்றி கேட்க முடியாது. அல்லாஹ்வின் நாட்டப்படி இது நடந்திருக்கிறது.

சிலரின் கருத்துப்படி, இந்த மறைவு என்பது அல்லாஹ் மக்களை சோதிப்பதற்காக செய்தான் அதனை எமது புத்தியால் தெரிந்து கொள்ள முடியாது.

ஷீஆக்களின் இன்னும் சில அறிவிப்புக்களின்படி அந்த இமாம் மறைந்திருந்தது, அவரை கொலை செய்துவிடுவார்கள் என்று பயந்ததினாலாகும். இதைத் தவிர வேறு காரணங்கள் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
(பார்க்க: இத்பாதுல் வஸிய்யா, அல்ஹைபா, தலாயிலுல் இமாமா, அஸ்லுஸ்ஷீஅதி வ உஸூலுஹா, அல்மஹ்தி, அல்காபி, அஷ்ஷாபி பில் இமாமா)

எனவே, இங்கே ஷீஆக்கள் பல கருத்துக்களை அதற்கு சொல்வதின் மூலம் ஒருவருக்கு ஒருவர் நேர் எதிராக முரண்படுகின்றனர். இதன் மூலம் இதற்குள் ஏதோ உட்சதி இருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகின்றது.

எதற்காக இந்த மஹ்தி:

ஒரு பொய் சொன்னால் அதை மறைப்பதற்கு ஒன்பது பொய் சொல்ல வேண்டும் என்று சொல்வார்கள். அதுபோல் ஷீஆக்கள் இமாம்களின் எண்ணிக்கை விடயத்தில் சொன்ன பொய்யை மறைப்பதற்காகவே இந்த மஹ்தி பற்றிய பொய்யும் தோற்றுவிக்கப் -பட்டுள்ளது.

ஷீஆக்களின் கருத்துப்படி அஹ்லுல் பைத்தைச் சேர்ந்த 12இமாம்கள் இந்த உலகத்தை ஆழாதவரை மறுமை நாள் வராது. ஒவ்வொரு இமாமும் அவருடைய தந்தையின் வஸிய்யத்தின்

அடிப்படையிலேயே பதவியேற்க வேண்டும். ஆனால், ஷீஆக்கள் தங்களின் 11வது இமாமாகக் குறிப்பிடும் ஹஸன் அல் அஸ்கரி அவர்கள் தனது இளம் வயதில் (28ம் வயதில்) மரணித்துவிடுகிறார். அவருக்கு குழந்தைகள் இல்லை. இதனால் ஷீஆக்களின் பிரதான கொள்கையில் பெரியதொரு இடைவெளி தோன்றியது. இதன் காரணமாக ஷீஆ என்ற மதமே அழிந்துபோகும் அபாயம் தோன்றியது. இதை நன்கு உணர்ந்துகொண்ட யூத பரம்பரையினரான ஷீஆக்களின் தலைவர்கள் திட்டமிட்ட அடிப்படையில் இந்தக் கொள்கையை உருவாக்கினர்.

ஹஸன் அல் அஸ்கரி அவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்ததாகவும் மற்றவர்களின் கண்களில் படாமல் அதை அவர் மறைத்ததாகவும் புதிய கதையை இட்டுக்கட்டினர். இதனால் சமகாலத்தில் வாழ்ந்தவர்களுக்கு ஒரு ஆறுதலையும் மறுமை வரை ஷீஆ மதத்தை ஏற்றுக்கொள்பவர்களிடம் ஒரு எதிர்பார்ப்பையும் உருவாக்கினர். (நிச்சமாக அல்லாஹ் சூழ்ச்சியாளர்களுக் கெல்லாம் சூழ்ச்சியாளனாக இருக்கின்றான்.)

ஷீஆக்களுக்கு மத்தியில் அவ்வப்போது ஏற்படும் குழப்பங்களைத் தணிப்பதற்காக மஹ்தி வந்து சொன்னதாகவும், அவருடைய பிரதிநிதிகள் அறிவித்ததாகவும் புதிய புதிய சட்டங்களையும் விதிகளையும் உருவாக்கிக் கொள்கின்றனர்.

இதனால், அதிகமான முன்பின் முரண்பாடுகளையும் காலத்திற்கு ஒவ்வாத பல சட்டங்களையும் கொண்டிருக்கின்ற ஷீஆ மதத்தை முற்றுப்பெறாத அவ்வப்போது புதுப்பிக்கப்படுகின்ற, புதிதாக சேர்க்கவும், நீக்கவும்படுகின்ற ஒரு கொள்கையாகப் பேணி வருகின்றனர்.

அவர் செய்யப்போவது என்ன?

தங்களின் பன்னிரண்டாவது இமாமான மஹ்தி வந்தால் சில வேலைகளைச் செய்வதாக ஷீஆக்கள் குறிப்பிடுகின்றனர். இந்த அறிவிப்புக்களை முழுமையாகப் பார்த்தால் ஷீஆக்கள்சொல்லும் மஹ்தி ஒரு யூதனாக இருக்க வேண்டும் அல்லது தஜ்ஜாலாக இருக்க வேண்டும். மூன்றாம் நபராக இருக்க முடியாது என்பது தெளிவாகின்றது. இதை நீங்களும் தெளிவாக அறிந்துகொள்ள அது தொடர்பாக அவர்களின் நூல்களில் வந்திருக்கும் அறிவிப்புகள் சிலவற்றைப் பாருங்கள்.

01. அபூபக்ர், உமர், ஆயிஷா (ரழி) போன்றவர்களைப் பழிவாங்கல்:

எதிர்பார்த்திருக்கும் மஹ்தி வந்தால் அபூபக்ரையும், உமரையும் உயிர்ப்பிப்பார். பின்பு அவர்கள் இருவரையும் ஈத்தம் குற்றியிலே அறைவார். பின்பு ஒவ்வொரு நாளும் அவர்கள் இருவருக்கும் ஆயிரம் கசையடிகளை வழங்குவார். (ஈகாமும் மினல் ஹுஜ்ஆ)

வேறொரு அறிவிப்பில் மூஸா (அலை) அவர்கள் ஸாமிரியின் மாட்டை எரித்ததைப்போல அவர்கள் இருவரையும் எரிப்பார், அவர்கள் இருவரையும் நேசிப்பவர்களையும் கொலை செய்வார் என்றுள்ளது.

ஷீஆக்களின் முக்கியமான அறிஞர் மஜ்லிஸி என்பவர் குறிப்பிடுகின்றார்: “எதிர்பார்க்கப்படும் மஹ்தி வந்தால் ஆயிஷாவை உயிர்ப்பிப்பார். அவருக்கு விபச்சாரத்திற்கான தண்டனையை வழங்குவார்.” (ஹக்குல் யகீன்)

02. அரேபியர்களைக் கொலை செய்வார்:

ஷீஆக்களின் இமாம்களில் ஒருவர் சொல்கிறார்: “எங்களுக்கும் அரேபியர்களுக்கும் மத்தியில் (அவர்களைக்) கொலை செய்வதைத் தவிர வேறெதுவும் இல்லை.” (பிஹாருல் அன்வார்)

நபியவர்கள், பாதிமா, அலி, ஹஸன், ஹுஸைன், அஹ்லுல் பைத்தில் வந்தவர்கள் அனைவரும் அரேபியராக இருக்க ஏன் இவர் அரேபியர்களை கண்டபடி கொலை செய்ய வேண்டும்...?

“அரேபியர்கள் பயந்துகொள்ளட்டும் (எங்கள் மஹ்தி வந்தால்) நிச்சயமாக அவர்களுக்கு மோசமான ஒரு செய்தி காத்திருக்கிறது.” (பிஹாருல் அன்வார்)

03. ஹுஜ்ஜாஜிகளை கொலை செய்வார்:

மஹ்தி வந்தால் அவர் ஸபா மர்வாவுக்கு இடையில் ஹுஜ்ஜாஜிகளை கொலை செய்வார் என்று பிஹாருல் அன்வார் என்ற நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனால் தான் என்னவோ இமாம்களின் பிரதிநிதிகள் என்று சொல்லப்படும் குழுவாக இவர்களது அறிஞர்கள் இருப்பதால், கொமைனியின் ஆட்சியில் மக்காவில் குண்டுகளை வைப்பதற்காக ஹி.1407ல் குண்டுகள் கொண்டுவரப்பட்டபோது அது பிடிபட்டது. பின்பு ஹி1409ல் மக்காவின் சில இடங்களில் ஷீஆக்களினால் குண்டுகள் வைக்கப்பட்டன. சில ஹுஜ்ஜாஜிகள் இதனால் பாதிக்கப்பட்டனர்.

04. மக்கா பள்ளிவாயல், மதீனா பள்ளிவாயல், நபியவர்களின் அறை என்பவற்றை உடைத்தல்:

மஹ்தியின் இன்னுமொரு முக்கிய பணியாக ஷீஆக்கள் குறிப்பிடுவது: அவர் வந்தால் இறைவனால் இந்த உலகத்தில் உருவாக்கப்பட்ட முதல் ஆலயம் க.்.பதுல்லாஹ்வையும், மதீனாவில் நபியவர்களால் உருவாக்கப்பட்ட அவரது பள்ளியையும், அவர் குடியிருந்த அறையையும் உடைப்பார் என்பதாகும். இது

தொடர்பாக அவர்களின் முக்கிய நூல்களில் வந்திருக்கும் செய்தியைப் பாருங்கள்.

“நிச்சயமாக மஹ்தி வந்தால் மஸ்ஜிதுல் ஹராத்தை (மக்காப் பள்ளியை) உடைப்பார், மேலும் மதீனாப் பள்ளிவாயலையும் உடைப்பார்” (தூஸி என்பவருக்குரிய அல்கைபா என்ற நூல்)

மஹ்தி வருவதற்கு காலதாமதமாகியதாலோ என்னவோ ஷீஆக்களின் ஒரு பிரிவான கராமிதாக்கள் ஹி:317ல் மக்காவுக்கு எதிராக படையெடுத்தபோது க.்.பாவை உடைத்தனர். அதிலிருந்து ஹஜருல் அஸ்வதை பஹ்ரைனுக்கு எடுத்துச் சென்றனர். 22ஆண்டுகள் அவர்களிடம் ஹஜருல் அஸ்வத் இருந்தது. ஷீஆக்களின் மஹ்தி சொல்வதாக சொல்கிறார்கள்: “நான் வந்தால் யத்ரிபுக்கு (மதீனாவுக்கு) செல்வேன். நபியவர்களின் அறையை உடைப்பேன்.” (பிஹாருல் அன்வார்)

இந்தக் கனவை நிறைவு செய்வதற்காகவோ என்னவோ கொமைனி ஆட்சியை கைப்பற்றியபோது முஸ்லிம்களின் இரண்டு க.்.பாவையும் (க.்.பதுல்லாஹ், பைதுல் மக்திஸ்) காபிர்களின் கரங்களிலிருந்து நாம் மீட்போம் என்பது அவரின் முக்கிய சுலோகமாக இருந்தது. அதாவது க.்.பதுல்லாஹ் காபிர்களின் கரங்களில் இருப்பதாக அவர் உணர்கிறார். அல்லாஹ் போதுமானவன்.

05. தாவூதின் சட்டங்களை நடைமுறைப்படுத்துவார்:

தற்போது யூதர்கள் தாவூதின் சட்டங்களைப் பின்பற்றுவதாகச் சொல்கின்றனர், ஆனால் முஸ்லிம்கள் முஹம்மது (ஸல்) அவர்களின் சட்டங்களைப் பின்பற்றுகின்றனர். ஷீஆக்கள் எதிர்பார்த்திருக்கும் மஹ்தி வந்தால் அவர் தாவூதின் சட்டங்களைத்தான் நடைமுறைப்படுத்துவாராம்.

இமாம் மஹ்தி வெளியேறினால் அவர் தாவூதின் சட்டத்தையும் தாவூதின் குடும்பத்தாரின் சட்டத்தையும் நடைமுறைப்படுத்துவார் (அல்காபி)

மற்றும் சில அறிவிப்புக்களில் எல்லாவற்றையும் நடைமுறைப் படுத்துவார் என்றுள்ளது.

மஹ்தி வந்தால் அவர் ஒரு முறை ஆதமின் சட்டத்தைக்கொண்டு அவர்களுக்கு மத்தியில் தீர்ப்பு வழங்குவார். மற்றொரு முறை தாவூதின் சட்டத்தைக் கொண்டு தீர்ப்பு வழங்குவார், இன்னுமொரு முறை இப்றாஹீமின் சட்டத்தைக்கொண்டு தீர்ப்பளிப்பார், இந்த ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் அவர்களின் தோழர்களில் சிலர் முரண்படுவார்கள்.. அவர்களின் கழுத்துக்களை துண்டிப்பார், நான்காவது தடவையாக முஹம்மத் (ஸல்) அவர்களின் சட்டத்தைக்கொண்டு தீர்ப்பளிப்பார். அதற்கு எவரும் முரண்படமாட்டார்கள். (பிஹாருல் அன்வார்)

மஹ்தி வந்தால் தவ்றாத்தையும் ஏனைய வேதங்களையும் அன்தாகியாவில் உள்ள ஒரு குகையிலிருந்து வெளியாக்குவார். தவ்றாத்தை ஏற்றுக்கொண்டவர்களிடம் தவ்றாத்தைக் கொண்டு தீர்ப்பளிப்பார், இன்ஜீலை ஏற்றுக்கொண்டவர்களிடம் இன்ஜீலைக் கொண்டு தீர்ப்பளிப்பார், ஸபூரை ஏற்றுக்கொண்டவர்களிடம் ஸபூரைக்கொண்டு தீர்ப்பளிப்பார், குர்ஆனை ஏற்றுக் கொண்டவர்களிடம் குர்ஆனைக்கொண்டு தீர்ப்பளிப்பார்.
(நு.ஃ.மானி என்பவருக்குரிய கைபா என்ற நூலில்)

க.ஃ.பதுல்லாஹ்வின் ருக்னுக்கும் மகாமுக்கும் இடையில் வைத்து புதியதொரு வேதத்தின் மீது மக்கள் மஹ்திக்கு பைஅத் செய்வார்கள். அது அரேபியர்கள் மீது மிகவும் கடுமையானதாக இருக்கும். (ஸிராதுல் முஸ்தகீம்.)

சகோதரர்களே! ஷீஆக்கொள்கை யூதர்களின் உருவாக்கம் என்பது இப்போதாவது புரிகிறதா?

06. நபி(ஸல்), அலி(ரழி), ஹஸன்(ரழி), ஹுஸைன்(ரழி) அவர்கள் போன்று அவர் நடக்கமாட்டார்:

“நிச்சயமாக அலியும், ஹுஸைனும் நபியவர்களின் வழிமுறையைப் பின்பற்றினர், நிச்சயமாக நபியவர்கள் இந்த சமுதாயத்திற்கு அருளாக அனுப்பப்பட்டார்கள் ஆனால் மஹ்தி இந்த சமுதாயத்திற்கு தண்டனையாக அனுப்பப்படுவார்.” (பிஹாருல் அன்வார்)

ஷீஆக்களின் இமாம்களில் ஒருவரிடத்தில் மஹ்தி நபியவர்களின் வழிமுறையைப் பின்பற்றுவாரா என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள்: இல்லை நபியவர்கள் மன்னிப்பு இரக்கம் என்பவற்றைப் பின்பற்றினார்கள் என்று கூறினார். (பிஹாருல் அன்வார்)

07. வாரிசுரிமை மாற்றப்படும்:

ஒருவர் மரணித்ததன் பின்பு அவரின் குடும்பத்தார் அவரின் சொத்துக்கு அனந்தரக்காரர்களாக மாறுகின்றனர் அவர்கள் வாரிசுகள் என்றும் அவர்களுக்கு அந்த சொத்திலிருந்து கிடைக்கவேண்டிய பகுதி அவர்களின் உரிமையாகவும் கருதப்படுகின்றது.

ஆனால், ஷீஆக்கள் எதிர்பார்த்திருக்கும் மஹ்தி வந்தால் இந்த முறை மாற்றப்படும் என்பது ஷீஆக்களின் நூல்கள் குறிப்பிடுகின்ற கருத்தாகும்: “அல்லாஹ் மனிதர்களைப் படைப்பதற்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் உயிர்களுக்கு மத்தியில் சகோதரத்துவத்தை ஏற்படுத்தினான். மஹ்தி வந்தால் பிறப்பின் மூலம் வந்த சகோதரர்கள் அன்றி அல்லாஹ் ஏற்படுத்திய சகோதரர்களே அனந்தரச் சொத்தைப் பெறுவார்கள்.”
(அல்இ.ஃ.திகாதாத்)

புனையப்பட்ட புனித மண்.

இக்கொள்கை ஷீஆக்களிடம் 'தீனா' என்ற பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது, எல்லாவிடயங்களிலும் முஸ்லிம்களின் அடிப்படைகளுக்கு முரணாக இருக்கும் ஷீஆக்கள் இந்த தீனா பற்றிய நம்பிக்கையிலும் மற்றவர்கள் எள்ளி நகையாடுகின்ற அளவுக்கு இருக்கின்றனர்.

'தீனா' என்றால் நன்றாகப் பிசைந்த களிமண் என்பதாகும். இதில் ஷீஆக்களிடம் விசித்திரமான ஒரு நம்பிக்கை உள்ளது.

முஸ்லிம்களாகிய நாம்: இந்த உலகத்தில் பிறந்த எல்லோரும் ஆதம் (அலை) அவர்களின் சந்ததியினரே என்று நம்புகின்றோம். ஆனால் ஷீஆக்கள் அப்படி நம்புவதில்லை. ஷீஆக்களாகிய அவர்கள் புனிதம் பொருந்திய மண்ணிலிருந்து படைக்கப்பட்ட தாகவும், அஹ்லுஸ்ஸுன்னாக்கள் இழிவான மோசமான மண்ணிலிருந்து படைக்கப்பட்டதாகவும் நம்புகின்றனர்.

"ஷீஆ விசேடமான ஒரு மண்ணிலிருந்து படைக்கப்பட்டுள்ளான், அஹ்லுஸ்ஸுன்னாவைச் சேர்ந்தவன் வேறொரு மண்ணிலிருந்து படைக்கப்பட்டான், அவர்கள் இருவரும் படைக்கப்பட்ட மண் இரண்டும் குறிப்பிட்ட ஒரு விதத்தில் கலக்கப்பட்டுள்ளது, ஷீஆக்களில் நடக்கும் தீமைகள், குற்றங்கள் அனைத்தும் அஹ்லுஸ்ஸுன்னாவைப் படைத்த மண்ணைக் கலந்ததினால் ஏற்பட்ட தாக்கமாகும், அஹ்லுஸ்

ஸுன்னாவைச் சேர்ந்தவரில் இருக்கும் நன்மைகள் ஷீஆவைப் படைத்த மண்ணைக் கலந்ததினால் ஏற்படுவதாகும், மறுமைநாள் வந்துவிட்டால், நிச்சயமாக ஷீஆக்களின் தீமைகளும், அவர்களின் பெரும் பாவங்களும் அஹ்லுஸ் ஸுன்னாக்கள் மீது சுமத்தப்படும், மேலும் அஹ்லுஸ் ஸுன்னாக்களின் நன்மைகள் அனைத்தும் ஷீஆக்களுக்கு வழங்கப்படும்.'' (பிஹாருல் அன்வார், இலலுஷ்ஷராயி.ஃ.)

ஸுப்ஹானல்லாஹ்! நிச்சயமாக ஷீஆ என்ற மதத்தின் சிந்தனைக்ள இஸ்லாத்தின் எதிரிகளாலேயே உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு இதுவும் ஒரு சான்றாக இருக்கிறது. இத்தகைய அறிவிப்புக்களை வாசிக்கும் ஒரு ஷீஆ நிச்சயமாக அதிகமாக தீமைகளைச் செய்வதில் ஈடுபாடு காட்டுவான். காரணம், அதனால் அஹ்லுஸ்ஸுன்னாக்கள் தண்டிக்கப்படுவார்கள் என்பது அவனது நம்பிக்கை. இதனால்தான் ஷீஆக்களில் ஹாபிழ்களைக் காண்பது அரிது, குர்ஆனை ஓதுவது அவர்களுக்கு சிரமமாக இருக்கும், மற்றும் தொழுகை இன்னபிற வணக்கவழிபாடுகளிலும் அவர்கள் ஈடுபாடுகாட்டுவதில்லை.

நாம் மேலே குறிப்பிட்ட அறிவிப்பைப் பற்றி, ஷீஆக்களின் மிகச்சிறந்த மேதைகளில் ஒருவரான ஜஸாயிரி என்பவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: "நிச்சயமாக இத்தகைய செய்திகளை எங்களது சகோதரர்கள் அதிகமான அறிவிப்பாளர்களால் அறிவித்துள்ளனர், இதை மறுப்பதற்கு எந்த வழியுமில்லை, மேலும் சந்தேகத்திற்கிடமானது என்று தீர்ப்பு வழங்கவும் முடியாது, மாறாக அது அதிகமான அறிவிப்பாளர்களைக் கொண்ட செய்திகளாகவும், யோசிக்கத் தேவையில்லாத அளவுக்கு உறுதியான செய்தியாகவும் உள்ளது.'' (அல்அன்வாருந்நு.ஃ.மானிய்யா)

நிச்யமாக படைக்கப்பட்ட மூலப்பொருளை வைத்து பெருமையடித்தவன் ஷைத்தான்தான். இதை அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது. எனவே, இவர்கள் ஷைத்தானின் பரம்பரைகள் என்பது தெளிவாகின்றது.

கப்ரடி மண்ணும் களைகட்டும் வியாபாரமும்.

ஹுஸைன்(ரழி) அவர்களின் விடயத்தில் ஷீஆக்களின் எல்லை மீறல் என்பது நாம் சிந்திக்க முடியாத அளவுக்கு எல்லை கடந்ததாக இருக்கிறது. அவரின் கப்ரடி மண்ணைக்கூட உண்ணும் அளவுக்கு அவர்கள் மடையர்களாக இருக்கிறார்கள். இந்த மண் விடயத்தில் ஷீஆக்களின் நூல்களில் வந்திருக்கும் நகைப்பிற்கிடமான சில அறிவிப்புக்களைப் பாருங்கள்:

''ஹுஸைனின் கப்ரில் இருக்கும் மண்ணிலே ஒவ்வொரு நோய்களுக்கும் நிவாரணம் உள்ளது. மேலும் அதுதான் மிகப்பெரிய நோய் நிவாரணியாகும்.'' (மன்லா யஹ்லுருஹுல் பகீஹ்)

''ஹுஸைனின் கப்ரடி மண்ணில் ஸுஜுது செய்வது ஏழு பூமிகள் வரை ஒளியை ஏற்படுத்தும்.'' (வஸாயிலுஷ்ஷீஆ)

''நோன்பாளியும் அவர் அல்லாதவர்களும் முதலில் உண்பதற்கு மிகவும் சிறந்தது ஹுஸைனின் கப்ரடி மண்ணாகும்.'' (பிஹாருல் அன்வார்)

பரவாயில்லை அமெரிக்கா இவர்களுக்கு பொருளாதாரத்தடை விதித்தாலும் ஹுஸைனின் கப்ரடி மண் அவர்களுக்கு இருக்கிறது. அதுதானே அவர்களிடம் சிறந்த உணவு.

“நீங்கள் உங்கள் குழந்தைகளுக்கு ஹுஸைனின் கப்ரடி மண்ணைக்கொண்டு தஹ்னீக் செய்யுங்கள் நிச்சயமாக அது அவரைப் பாதுகாக்கும்.” (கிதாபுல் மிஸார்)

தஹ்னீக் என்பது நல்ல ஒரு மனிதர் மூலம் பேரித்தம் பழத்தை மென்று பிறந்த குழந்தையின் வாயின் இரண்டு கொடுப்புக்குள்ளும் தடவிவிடுவதைக் குறிக்கிறது. ஷீஆக்கள் பிறக்கும்போதே மண்ணை தின்பவர்களாக இருக்கிறார்கள் பாருங்கள்!

ஷீஆக்கள் தொழும்போது விதவிதமான மண்கட்டிகளை வைத்துத் தொழுவதை அவதானிக்கலாம். அப்படி ஸுஜூது செய்வதை ஷீஆக்கள் பெரும் பாக்கியமாகவும் பெரும் கூலிகளைப் பெற்றுத்தரும் விடயமாகவும் நினைக்கின்றனர். இதனால் இந்தக் கற்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளும் ஷீஆக்களிடம் காணப்படுகின்றன. இதை அவர்கள் ஒரு வியாபாரமாகச் செய்கின்றனர். பலவிதமான மண்கட்டிகளை உருவாக்கி மக்களை வழிகெடுத்து வருகின்றனர். அல்லாஹ் நம்மனைவரையும் பாதுகாப்பானாக.

ஷீஆக்களின் நூல்களில் இவ்வாறான அறிவிப்புக்களை வாசிக்கும்போது: “ஷீஆக்கள் மிகப்பெரும் மடையர்கள்.” “அவர்கள் கால்நடைகளாக இருந்திருந்தால் கழுதைகளாக இருந்திருப்பார்கள்.” “உலகத்தில் அவர்களைவிட மதிகெட்டவர்கள் வேறுயாரும் கிடையாது” போன்ற எமது இஸ்லாமிய அறிஞர்களின் கருத்துக்கள் எவ்வளவு ஆழமானவை என்பதை தெளிவாகத் தெரிந்துகொள்ள முடியும்.

புகழ்பெறும் நகரங்கள்.

முஸ்லிம்களாகிய நம்மிடம் முக்கியமான இடங்களாக மூன்று இடங்கள் காணப்படுகின்றன: மக்காவில் உள்ள மஸ்ஜிதுல் ஹராம், மதீனாவில் உள்ள நபியவர்களின் பள்ளி,பலஸ்தீனத்திலிருக்கும் பைதுல் மக்திஸ். இந்த மூன்று இடங்கள் தவிர நன்மையை எதிர்பார்த்து எவரும் வேறு இடங்களுக்கு பிரயாணம் செய்ய முடியாது.

நபி (ஸல்) அவர்கள் குறிப்பிடுகிறார்கள்: "மூன்று பள்ளிவாயல்கள் தவிர வேறு எந்த இடங்களுக்கும் (நன்மையை நோக்காக் கொண்டு) பிரயாணம் செய்ய முடியாது: என்னுடைய இந்தப்பள்ளி, (மக்காவில் இருக்கும்) மஸ்ஜிதுல் ஹராம், (பலஸ்தீனிலிருக்கும்) பைத்துல் மக்திஸ்.'' (முஸ்லிம்)

இதுபோல் வேறொரு செய்தியிலே இந்தப் பள்ளிகளில் தொழுவதின் சிறப்புப் பற்றி நபியவர்கள் குறிப்பிடுகின்றார்கள். இது நம் அனைவருக்கும் தெரிந்தவிடயம், நம் அனைவரின் நம்பிக்கையிலும் இருக்கின்ற ஒரு விடயம்.

இது தவிர நாம் ஹஜ்ஜு செய்யச் செல்லும்போது செல்லும் மினா, அரபா, முஸ்தலிபா போன்ற இடங்களும் எம்மிடம் மிகுந்த மதிப்புக்குரிய இடங்களாக இருக்கின்றன.

ஆனால், ஷீஆக்களைப் பொருத்தவரை இவைகள் எதுவும் அவர்களிடம் சிறப்புப் பொருந்தியவை அல்ல, மாறாக ஈராக், ஈரான் போன்ற நாடுகளும், நஜப், கர்பலா, கும் போன்ற பிரதேசங்களுமே அவர்களிடம் மிகுந்த சிறப்புமிக்கவையாகக் கருதப்படுகின்றன. இதுதொடர்பாக அவர்களின் நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ள சில அறிவிப்புக்களைப் பாருங்கள்.

‘‘க.ஃ.பா அமைந்திருக்கும் அந்த நிலம் ஒரு முறை: என்னைப்போன்று (உலகில்) யார் இருக்கிறார்? அல்லாஹ்வின் (முதல்) ஆலயம் என்னில்தான் கட்டப்பட்டுள்ளது உலகின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் என்னை நோக்கியே வருகிறார்கள், நான் அல்லாஹ்வின் ஹரமாகவும் இரட்சிக்கப்பட்ட இடமாகவும் ஆக்கப்பட்டுள்ளேன் என்று சொன்னதாம். அதற்கு அல்லாஹு தஆலா அந்த நிலத்திடம் பின்வருமாறு சொன்னானாம்: மௌனமாக இரு. அமைதியாக இரு, கர்பலா அமைந்திருக்கும் இடத்தின் சிறப்புடன் உனது சிறப்பை ஒப்பிடும்போது கடலில் ஒரு ஊசியை நுழைத்து எடுக்கும்போது அதன் முனையில் வரும் நீர் அளவுதான் உள்ளது. மேலும் அந்த கர்பலா மண் இல்லையென்றால் உன்னை நான் சிறப்பித்திருக்கமாட்டேன், கர்பலா பொதிந்திருக்கின்ற எதுவும் அதில் இல்லையென்றால் உன்னை நான் படைத்திருக்க மாட்டேன், நீ பெருமைப்படும் அந்த இல்லத்தையும் (க.ஃ.பாவையும்) நான் படைத்திருக்கமாட்டேன், எனவே கர்பலா நிலத்துக்கு பெருமை அடிக்காமலும் அதைநையப்புடைக்காமலும் அதற்கு முற்றிலும் அடிபணிந்ததாக பணிவானதாக நீ மாறிவிடு. அமைதியாக இரு, அவ்வாறு நீ செய்யவில்லையென்றால் உன்னை நான் கோபிப்பேன், உன்னை ஜஹன்னம் எனும் நரகத்தில் போடுவேன்.’’ (வஸாயிலுஷ்ஷீஆ)

கர்பலா நிலம் சொன்னதாம்: ‘‘நான்தான் அல்லாஹ்வினால் தூய்மைப்படுத்தப்பட்ட, பரகத் செய்யப்பட்ட பூமி, என்னுடைய மண்ணிலும் நீரிலும் நோய் நிவாரணம் உள்ளது.’’ (பிஹாருல் அன்வார், காமிலுஸ்ஸியாராத்)

மீர்ஸா ஹுஸைன் அல் ஹாயிரி என்பவர் சொல்கிறார்: “அதுபோலவே, பரகத் செய்யப்பட்ட இந்தக் கர்பலா நிலம் இமாம் ஹுஸைன் அடக்கப்பட்டதற்குப் பிறகு முஸ்லிம்கள் தரிசிக்குமிடமாக மாறிவிட்டது, மேலும் ஷீஆக்களின் கஃபாவாகவும் ஆகிவிட்டது, அரசர்களும் ஆட்சியாளர்களும் தவாப் செய்யும் இடமாகவும் தொழுபவர்களின் பள்ளிவாயிலாகவும் மாறிவிட்டது.” (அஹ்காமுஷ்ஷீஆ)

கர்பலா என்பது இந்த உலகத்தில் இருக்கின்ற இடங்களில் மிகவும் சிறந்தது. கர்பலாவின் சிறப்புக்களை நிராகரிப்பது காபிராக்கிவிடும் செயலாகும் என்று ஆலு காஷிபில் கிதாஃ என்பவர் தனது ‘அல்அர்மு, வத்துர்பா அல் ஹுஸைனிய்யா’ எனும் நூலில் குறிப்பிடுகின்றார்.

இவைகளைவிடவும் மோசமான ஒரு அறிவிப்பைப் பாருங்கள்: “நிச்சயமாக ஹஜருல் அஸ்வத் எதிர்காலத்தில் கஃபாவிலிருந்து கழற்றப்படும், அது கூபாவில் உள்ள ஷீஆக்களின் ஹரத்தில் வைக்கப்படும்.” (அல்வாபி) இதைப்பின்பற்றித்தானோ என்னவோ ஷீஆக்களின் கராமிதாக்கள் எனும் குழு கஃபாவிற்கு எதிராக போர் தொடுத்தது அதை சிதைத்து ஹஜருல் அஸ்வதையும் எடுத்துச் சென்றது. (இதை நாம் சேவைகளும், சாதனைகளும் எனும் தலைப்பில் விரிவாக எழுதியுள்ளோம்)

இந்தக் கொலைகாரக் கும்பலிலிருந்து அல்லாஹ் எம்மனைவரையும் பாதுகாப்பானாக.

நூலின் சாரம்.

இந்நூலில் ஷீஆக்கள் தொடர்பாக நாம் மேற்கொண்ட ஆய்வில் பின்வரும் முடிவுகளுக்கு வரமுடியும்.

01. ஷீஆ என்ற பதம் அரபு மொழி வழக்கில் பின்பற்றுவோர் நேசர் என்ற கருத்தைக் கொண்டுள்ளது. இது எல்லாவற்றுக்கும் அஹ்லுல்பைத்தையே சார்ந்திருக்க வேண்டும், இம்மை மறுமையின் வெற்றியாளர்கள் அவர்களே நபியைப் பின்பற்றுவதையும்விட அவர்களைப் பின்பற்றுவதே முக்கியமானது என்று சொல்லும் ஒரு கூட்டத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றது.

02. யூத சிந்தனைகளை விதைப்பதற்கும் சடவாத சிந்தனைகளில் முஸ்லிம்களை ஈடுபடுத்தி அவர்களை குர்ஆன் ஸுன்னாவிலிருந்து தூரமாக்குவதற்கும் யூதர்களால் உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பே ஷீஆ இசமாகும்.

03. இஸ்லாமிய வரலாற்றில் ஷீஆக்கள் இஸ்லாத்திற்காகவோ, முஸ்லிம்களுக்காகவோ ஒரு ஜான் நிலத்தைக்கூட கைப்பற்றவில்லை. சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் முஸ்லிம்களின் எதிரிகளுடன் இணைந்துகொண்டு முடியுமான சேதங்களை முஸ்லிம்களுக்கு ஏற்படுத்தியுள்ளனர். அதை இன்றளவும் வரலாற்றில் தங்களின் சாதனைகளாகப் பிரஸ்தாபிக்கின்றனர்.

04. தற்காலத்தில் வாழும் ஷீஆக்களுக்கும் அன்றைய காலத்தில் வாழ்ந்த ஷீஆக்களுக்கும் இடையில் எந்த வித்தியாசமும் இல்லை. முன்சென்றவர்களைவிட யூத கிறிஸ்தவர்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்காக சற்று அதிகமாகவே உழைக்கின்றனர்.

05. மிகவும் அதிகமான உள்முரண்பாடுகளைக்கொண்ட குழுவாக ஷீஆக்கள் காணப்பட்டபோதும் ராபிழாக்களின்

சிந்தனையே இப்போது எல்லா ஷீஆக்களிடமும் காணப்படுகின்றது. எனவே இந்தக்காலத்தில் ஷீஆ என்று சொன்னால் அது ராபிழாக்களையே குறிக்கும்.

06. அல்காபி, மன்லாயஹ்ழுருஹுல் பகீஹ், அல் இஸ்திப்ஸார், தஹ்தீபுல் அஹ்காம், அல்வாபி, பிஹாருல் அன்வார், வஸாயிலுஷ் ஷீஆ, முஸ்தத்ரகுல் வஸாயில் போன்ற எட்டு நூல்களே ஷீஆக்களின் அடிப்படை மூலாதாரங்களாகக் கருதப்படுகின்றன. ஏனைய முஸ்லிம்களிடம் இருக்கும் நூல்களை அவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. ஆனால் சில நேரங்களில் கருவேப்பிலை போல் பயன்படுத்திக்கொள்கின்றனர்.

07. அல்லாஹ் பற்றி முஸ்லிம்களிடம் இருக்கும் நம்பிக்கைக்கு முற்றிலும் முரணான நம்பிக்கையை ஷீஆக்கள் கொண்டிருக்கின்றனர். அல்லாஹ்வுக்கு நிகராக தங்களின் இமாம்களைக் கருதுகின்றனர் அல்லாஹ்வுக்கு செய்ய வேண்டிய வணக்க வழிபாடுகள் அனைத்தையும் தங்கள் இமாம்களுக்கு செலுத்துகின்றனர்.

08. ஷீஆக்கள் தங்களின் மார்க்கத்திற்கும் ஏனைய விவகாரங்களுக்கும் அஹ்லுல் பைத்தில் வந்த 12பேரையே சார்ந்திருப்பதாகக் கூறிக்கொண்டு அவர்கள் பெயரில் இட்டுக்கட்டுகின்றனர்.

09. நபியவர்களின் குடும்பம் சொன்னதாக இல்லாத பொல்லாத பொய்களையும் இஸ்லாத்திற்கு முரணான விடயங்களையும் கூறி பொதுமக்களை ஏமாற்றுகின்ற இந்த ஷீஆக்களை மக்களுக்கு அறிமுகம் செய்வதன் மூலம், அஹ்லுல் பைத்தின் நற்பெயரைப் பாதுகாப்பதும், பொதுமக்களின் ஈமானைப் பாதுகாப்பதும் எமது கடமையாகும்.

10. ஷீஆக்களின் கருத்துப்படி இமாம்கள் பற்றிய நம்பிக்கை ஈமான் கொள்ளவேண்டிய விடயங்களில் மிகவும் முக்கியமானதாகும். இந்த நம்பிக்கை இல்லாமல் அல்லாஹ்வையும் அவன் தூதரையும்

நம்புவதில் எந்தப்பயனும் இல்லை இமாம்கள் பற்றிய நம்பிக்கை இல்லாமல் செய்யும், எந்த நல்ல காரியங்களுக்கும் கூலி வழங்கப்படுவதில்லை. இஸ்லாத்தில் உள்ள நம்பிக்கைகள் கொள்கைகள் வணக்கவழிபாடுகள் எல்லாவற்றையும்விட இமாமத் பற்றிய நம்பிக்கை மிகவும் முக்கியமானதாகும். அதை வைத்தே ஈருலக வெற்றியும் தீர்மானிக்கப்படுகிறது.

11. ஷீஆக்களின் கருத்துப்படி நபியவர்கள் உண்மையான தூதர் அல்லர். அவரது பொறுப்பு அவருக்கு சொல்லப்படுவதை அலி(ரழி) அவர்களுக்கு எத்திவைத்துவிடுவதுதான். அவர் முழுமையாக மார்க்கத்தை எற்றிவைக்கவில்லை, அவருடைய கொள்கையை மற்றவர்களுக்கு பரப்பும் விதத்தில் நல்ல தோழர்களும் அவருக்கு கிடைக்கவில்லை.

12. இறைவனால் பாதுகாக்கப்பட்டிருக்கும் இந்த அல்குர்ஆன் அது இறங்கிய அடிப்படையில் இல்லை என்றும் அதில் கூட்டல்கள் குறைத்தல்கள் நடந்திருப்பதாகவும் குறிப்பிடுகின்றனர். உண்மையான அல்குர்ஆன் தற்போது உலகத்தில் இல்லை என்றும், அது ஹி.250களிலேயே மறைந்துவிட்டது என்றும் 14க்கும் அதிகமான குர்ஆன்கள் இருப்பதாகவும் அது அனைத்தும் தங்களின் 12வது இமாமிடம் இருப்பதாகவும் அவர் உலகுக்கு வரும்போது அவைகளைக் கொண்டுவருவார் என்றும் குறிப்பிடுகின்றனர்

13. ஸுன்னா என்ற பதம் நபியவர்களின் வழிமுறையையும் தங்கள் இமாம்களின் வழிமுறையையும் குறிப்பதாக ஷீஆக்கள் குறிப்பிடுகின்றனர். ஸஹாபாக்கள் நபியவர்கள் பற்றி அறிவிக்கும் செய்திகளை அவர்கள் ஏற்பதில்லை. ஏனைய முஸ்லிம்கள் ஏற்றுக்கொள்ளும் எந்த ஹதீஸ் நூலையும் ஷீஆக்கள் ஏற்பதில்லை. ஹதீஸ்களில் நம்பகமானது, நம்பகமற்றது என்று பிரிப்பதற்கான எந்த அடிப்படைகளும் அவர்களிடம் இல்லை இதனால் இட்டுக்கட்டப்பட்ட செய்திகளைக் கூட பெரும் ஆதாரமாக்க கருதுகின்றனர்.

14. தங்களின் உயிர் பொருள் மானம் அத்தனையையும் விட மேலாக நபியவர்களை மதித்த ஸஹாபாக்களை, காபிர்கள் என்றும் நபியவர்களுடன் நடித்துக்கொண்டு வாழ்ந்ததாகவும் ஷீஆக்கள் குறிப்பிடுகின்றனர். நபியவர்கள் வாழும்போதும் அவர்கள் மரணித்த பின்பும் ஸஹாபாக்கள் அவரைப் பின்பற்றவில்லை என்றும் குறிப்பிடுகின்றனர்.

15. முக்காலமும் பற்றித் தெரிந்த அல்லாஹ்வுக்கு, தெரியாத விடயங்களும் இருப்பதாக ஷீஆக்கள் குறிப்பிடுகின்றனர். சிலவிடயங்கள் நடக்கும்போதுதான் அல்லாஹ்வுக்கு இது இப்படித்தான் என்று தெரியவருகிறதாம். (அல்லாஹ் எம்மனைவரையும் பாதுகாப்பானாக.) இத்தகைய நம்பிக்கைய்பயன்படுத்தி தாங்கள் சொல்லும் பொய்களை அல்லாஹ்வின் அறிவில் ஏற்பட்ட மாற்றமாகச் சொல்லி மறைத்துவிடுகின்றனர். அல்லாஹ் போதுமானவன்.

16. இந்த உலகம் அழிவதற்கு முன்னால் தங்கள் இமாம்களும் அவர்களை ஏற்றுக்கொண்டவர்களும் அவர்களுக்கு எதிரானவர்களும் இந்த உலகத்தில் வந்த அத்தனை நபிமார்களும் மீண்டும் ஒரு தடவை எழுப்பப்படுவார்கள் என்று ஷீஆக்கள் குறிப்பிடுகின்றனர். இதன்போது ஷீஆக்களுக்கு அநீதி இழைத்தவர்களுக்கு இமாம்கள் தண்டனை வழங்குவார்களாம். அந்த இமாம்களுக்குப் பின்னால் ஷீஆக்களும் ஏனைய நபிமார்களும் போராடி ஷீஆக்களின் ஆட்சியை இந்த உலகம் முழுக்க நிறுவுவார்களாம். (அவர்களும் சூழ்ச்சி செய்கிறார்கள் அல்லாஹ்வும் சூழ்ச்சி செய்கிறான்.)

17. இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் முற்றிலும் முரண்படுகின்ற ஏராளமான கொள்கைகளைக் கொண்டிருக்கும் போது தங்களுக்கு மிக மிக நெருக்கமானவர்கள் தவிர்ந்த மற்றையவர்களுடன் நடித்தே வாழ்கின்றனர். நடிப்பை மிகவும் முக்கியமான வணக்கமாக்கும் அவர்கள், நடிக்காதவர் ஷீஆ அல்ல என்றும் குறிப்பிடுகின்றனர்.

18. தங்கள் மனோ இச்சைப்படி பெண்களை அனுபவிக்கவும், கெட்டவர்கள் அனைவரையும் தங்கள் மார்க்கத்தில் இணைத்துக் கொள்ளவும், இருப்பவர்களைத் தக்கவைத்துக்கொள்வதற்கும் விபச்சாரத்தை முத்ஆ என்ற பெயரில் அமுல்படுத்துகின்றனர். ஐரோப்பாவிலும் இன்னும் பல நாடுகளிலும் நடக்கும் விபச்சாரத்திற்கும இதற்கும் எந்த வித்தியாசமும் இல்லை. ஆனால்அவ்வாறு முத்ஆ செய்வோருக்கு பெரும் கூலி கிடைப்பதாகவும். வாழ்க்கையில் ஒரு தடவையேனும் முத்ஆவில் ஈடுபடவேண்டும் என்றும் குறிப்பிடுகின்றனர்.

19. ஷீஆக் கொள்கையை ஏற்றுக்கொண்டவர்களின் பொருளாதாரத்திலிருந்து ஐந்தில் ஒன்றை கணக்கிட்டு தங்களுக்குத் தந்துவிடவேண்டும் என்று வசூலித்துக்கொள்ளும் ஷீஆ அறிஞர்கள் பெரும் செல்வந்தர்களாக ஊம் வருகின்றனர். இப்பொருளாதாரத்தின் ஒரு பகுதியையே அவர்களின் பிரச்சாரத்தை முன்னெடுப்பதற்குப் பயன்படுத்துகின்றனர். உழைக்காமலேயே உழைப்பாளிகளை விடவும் பெரும் செல்வந்தர்களாக இருக்கும் ஷீஆ அறிஞர்களுக்கு மத்தியில் அவர்களை ஏற்றுக்கொண்டவர்களிடமிருந்து இந்த ஐந்தில் ஒன்றை வசூலிப்பதில் பெரும் போட்டியும் நிலவுகிறது.

20. தங்களது கொள்கையில் உள்ள பலவீனங்களை மற்றவர்கள் இனங்காட்டி எமது அணியை சீர் குலைத்துவிடக் கூடாது என்பதனால், தங்களை ஏற்றுக்கொண்டவர்களுக்கும் ஏனையவர்களுக்கும் இடையில் நம்பிக்கை அடிப்படையிலும் செயற்பாட்டின் அடிப்படையிலும் பெரும் பகைமை உணர்வை உருவாக்கி இருக்கின்றனர். மற்றவர்கள் காபிர்கள் என்றும், அவர்கள் நிரந்தர நரகத்தில் இருப்பார்கள் என்றும் குறிப்பிடும் ஷீஆக்கள், அவர்கள் அல்லாதவர்கள் நாயைவிடவும் நஜீஸானவர்கள் அவர்களைக் கொல்வதும் அவர்களது பொருளாதாரத்தை சூறையாடுவதும் எமது கடமை என்று குறிப்பிடுகின்றனர்.

21. பிறக்காத ஒரு மனிதரை பிறந்ததாகச் சொல்லி மற்றவர்களை நம்பவைத்து அவர் இவ்வுலகத்திற்கு மீண்டும் வருவார் என்றும் சொல்கிறார்கள். அவர் வந்ததும் ஷீஆக்களே இந்த உலகத்தை ஆள்வார்கள் என்றும் அவர்கள் அல்லாதோர் அனைவரும் ஷீஆக்களினால் அழிக்கப்படுவார்கள் என்றும், அவர் இந்த இஸ்லாமிய சமுதாயத்திலிருக்கின்ற அதிகமான சட்டங்களை மாற்றுவார்மேலும் உண்மையான குர்ஆனைக் கொண்டுவருவார் என்றும் குறிப்பிடுகின்றனர். இதனால் ஷீஆக் கொள்கையை ஏற்றுக்கொண்டவர்கள் அவர் வரவை எதிர்பார்த்து கனவுலகில் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

22. ஷீஆக்கள் ஒரு உயர்வான மண்ணிலிருந்து படைக்கப் பட்டதாகவும் ஏனையவர்கள் மற்ற மண்ணிலிருந்து படைக்கப் பட்டதாகவும், ஷீஆக்கள் இந்த உலகத்தில் தீமைகள் செய்வது அஹ்லுஸ்ஸுன்னாக்களை படைத்த மண்ணின் தாக்கத்தினால்தான் என்றும் குறிப்பிடுகின்றனர். அதுபோல் மறுமையில் அல்லாஹ் ஷீஆக்களின் அனைத்துப் பாவங்களையும் எடுத்து அஹ்லுஸ் ஸுன்னாக்களுக்கு சுமத்துவதாகவும், அஹ்லுஸ் ஸுன்னாக்களின் நன்மைகள் அனைத்தையும் ஷீஆக்களுக்கு வழங்கிவிட்டு அஹ்லுஸ்ஸுன்னாக்களை நரகத்திற்கு அனுப்புவதாகும் ஷீஆக்கள் குறிப்பிடுகின்றனர்.

23. ஷீஆக்களின் மிகவும் உயர்ந்த உணவாக ஹுஸைன்(ரழி) அவர்களின் கப்ரடி மண்ணைக் குறிப்பிடுகின்றனர். அதில் ஸுஜுது செய்வது மிகவும் ஏற்றமானது என்றும், சிலபோது அதைக் கடமையாகவும் கருதுகின்றனர். இதனால் இந்த மண் கட்டிகளைத் தயாரிக்கும் நிறுவனங்களும் அவர்களிடம் அதிகமாக உள்ளன. தனிமனிதனின் மீது கொண்ட பக்தி அந்தளவுக்கு அவர்களை மடையர்களாக மாற்றியிருக்கின்றது.

24. முஸ்லிம் சமூகத்திடம் உலகில் மிகவும் முக்கியமான இடங்களாக மக்கா, மதீனா, பலஸ்தீன் போன்ற இடங்கள் காணப்படுகின்றன ஆனால், ஷீஆக்களிடம் மிகவும் மோசமான இடங்களாகவே இவைகள்

இருக்கின்றன. கர்பழா, நஜப், கும், ஈரான்ஈராக் போன்ற பகுதிகளே அவர்களிடம் முக்கியமான பிரதேசங்களாகக் கருதப்படுகின்றன

25. இஸ்லாத்திற்கு முற்றிலும் முரணான இந்தக் கொள்கை, இஸ்லாமிய சமுதாயத்திற்குள் இஸ்லாம் என்ற பெயரில் பிரச்சாரம் செய்யப்படுகின்றது. இதை அறிந்துகொண்டவர்கள் மற்றவர்களை இதிலிருந்து பாதுகாப்பது மிகவும் முக்கியமானதாகும். சில அல்குர்ஆன் வசனங்களையும் பொய்யான இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்களையும் கூறி பொதுமக்களை இவர்கள் வழிகெடுத்து வருகின்றனர், தங்களின் ஏனைய வளர்ச்சிகளைக் காண்பித்து மார்க்கம் அல்லாத வேறு துறைகளைக் கற்றவர்களிடமும், மார்க்கம் பற்றிய சரியான புரிதல் இல்லாதவர்களிடமும் ஆதரவைப் பெற்றுவருகின்றனர்.

அல்லாஹ் எம்மனைவரையும் பாதுகாப்பானாக!

உங்கள் கருத்துக்களுக்காய்...